461

A Commentary of the Gospel of St. John

…ITIZED

Q.b:21:9
MB
9.7136

# A COMMENTARY

ON THE

# GOSPEL OF ST. JOHN

BY THE

REV. H. A. POPLEY

*London Mission, Erode*

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS, ALLAHABAD, CALCUTTA AND COLOMBO

1913

Copies of this book may be had at depôts of the Christian Literature Society for India at:—

The Memorial Hall, Post Box 3, Madras
46, Dharamtollah Street, Calcutta
18, Clive Road, Allahabad
Dam Street, Colombo
35, John Street, Bedford Row, London, W.C.

கடவுள் துணை

# பரிசுத்த யோவான் எழுதின சுவிசேஷம்

மூலமும் உரையும்

வியாக்கியானம் H. A. பாப்லி ஐயரால்
எழுதப்பெற்றது

சென்னைக் கிறிஸ்தவ கல்வி அபிவிர்த்தி சங்கத்தாரால்
பிரசுரிக்கப்பட்டது
1913

PRINTED AT THE
S. P. C. K. PRESS, VEPERY, MADRAS
1913



This book has grown out of a course of lectures to catechists. It does not pretend to be an original contribution to the subject, but full use has been made of all the authorities available on Introduction and Exegesis.

The purpose of the author has been to bring out the ideas and thoughts of St. John in writing this Life of Jesus Christ, and to give a clear and concise exposition of the teaching of Jesus Christ found in this Gospel.

The difficult question of authorship has been discussed as fully as possible and the various views held by scholars stated. The author has felt it only right to give his own standpoint on this matter, though no special authority is claimed for this.

The author is specially indebted to the masterly commentary of Dr. Westcott and to Dr. McClymont's commentary in the Century Bible Series. In the interpretation of the Gospel from an Indian standpoint, much help has been received from the interesting commentary by the Hon. P. Ramanathan of Ceylon (Paranandar) and quotations frequently appear from this source. We can recommend this Indian study to all who wish to know the attitude of Indian religious thought to the sources of the Christian religion.

The author is very much indebted to the Rev. A. C. Clayton for many valuable suggestions and to the Rev. G. Gnanamuthu and Mr. D. Christian for their help.

H. A. P.

# பொருள் அட்டவணை

## முதலாம் பாகம்


| அதிகாரம் | | பக்கம் |
|---|---|---|
| I. | முகவுரை ... ... ... ... ... ... | 1 |
| II. | இந்நூல் இயற்றப்பட்ட காலம் ... ... ... ... | 2 |
| III. | இந்நூலின் விசேஷித்த லக்ஷணங்கள் ... ... ... | 5 |
| IV. | பொருள் அட்டவணை ... .. ... ... ... | 8 |
| V. | இந்நூலில் அடங்கிய இயேசுவின் சரித்திர வரலாறு ... | 14 |
| VI. | ஆசிரியனது கோட்பாடுகள் ... ... ... ... | 23 |
| VII. | பரம வாக்கைப்பற்றிய போதனை ... ... ... ... | 30 |
| VIII. | இந்தச் சுவிசேஷத்திலடங்கிய இயேசுவின் போதனை ... | 37 |
| IX. | திரியனுபந்த சுவிசேஷங்களுக்குள்ள வித்தியாசங்கள் ... | 41 |
| X. | இந்நூலின் சரித்திர உண்மை ... ... ... ... | 45 |
| XI. | ஆசிரியன் ... ... ... ... ... ... | 48 |
| XII. | யோவான் என்னும் மகானின் சரித்திரம் ... ... ... | 55 |


## இரண்டாம் பாகம்


வசனமும் வியாக்கியானமும் ... ... ... ... 61


## அனுபந்தங்கள்


| | | |
|---|---|---|
| I. | பூத விசாரணைக்குரிய ஒழுங்குகள் ... ... ... | 264 |
| II. | இயேசு மரித்தநாளும் கடைசி இராப்போஜனமும் ... | 265 |
| II. | உயிர்த்தெழுதல் ... ... ... ... ... ... | 268 |

OFFICE OF THE REGISTRAR ... 13 MAY 1913 MADRAS



# முகவுரை

இந்நான்காம் சுவிசேஷம் சிறந்த வேதாகம நூல். சில விஷயங்களிலே மற்றெல்லா வேதாகம நூற்களிலும் அதிக மாட்சிமையுடையது. இந்நூல் மற்ற மூன்று சுவிசேஷங்களுடன் இயேசுகிறிஸ்துவின் சரித்திரத்தை நமக்குத் தெரிவிக்கிறது. இந்நான்கு சுவிசேஷங்களைத்தவிர இயேசுகிறிஸ்துவின் சரித்திரத்தைக் காண்பிக்கும் நூற்கள் நமக்கு வேறேயில்லை. மற்ற மூன்று சுவிசேஷங்கள் தங்களுக்குள்ளே அநேக சம்பந்தங்களுடையனவாதலாலும் இந்நான்காம் சுவிசேஷம் அவைகளுக்கு அநேக விஷயங்களில் வித்தியாசமுடையதாதலாலும் அந்த மூன்று சுவிசேஷங்களையும் ஒரே பிரத்தியேகமான வகுப்பாக வைத்து அவைகளுக்குத் "திரியனுபந்த சுவிசேஷங்கள்" (Synoptic Gospels) என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பெயரினால் அவைகளுக்கும் இதற்கும் வித்தியாசமுள்ளதாகத் தோன்றுகிறது. அவ்வித்தியாசத்தைப்பற்றிப் பிறகு சொல்லுவோம். இந்நான்காம் சுவிசேஷம் கடைசியாக எழுதப்பட்டது. இந்த சுவிசேஷத்தில் அநேக சிறந்த லக்ஷணங்கள் விளங்கிப் பிரகாசிக்கின்றன. அவைகளாலும் அதின் சொற்றிறத்தாலும் இது விசேஷித்த ஸ்திதியைப் பெற்று எல்லா வேத நூற்களிலும் மிக்க மேன்மையாக எண்ணப்பட்டது. இந்நூலில் இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த ஜீவியம் மிக அருமையாகக் காணப்படுகிறது. ஜப்பான் தேசத்தானொருவன் இதை வாசித்து இதினால் இயேசுவின் மாட்சிமையுள்ள குணத்தை யறிந்து, பணிந்து, விழுந்து, நீர் என் ஆண்டவரே என் கடவுளே என்று வணங்கினானாம். இந்நூலாசிரியனது லக்ஷணங்களும் அதில் தெளிவாய்த் தோன்றுகின்றன. அவனது அபிப்பிராயங்களையும் நோக்கங்களையும் ஒவ்வொரு பக்கத்திலுங் காண்கிறோம். அவைகளும் மேன்மையுள்ளன. இந்தச் சுவிசேஷத்தை வாசிக்கும்போது நமது மனம் உன்னத ஸ்தலங்களில் உலாவிச் செல்லுகின்றது.

இந்தச் சிறந்த நூலைப்பற்றி கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அதிக தர்க்கம் நடந்தது. அதின் ஆசிரியன் இன்னானென்றும் அ[illegible] எழுதியது உண்மையான சரித்திரமோ இல்லையோவென்றும் [illegible] யனுடைய சுவிசேஷங்களுக்கும் வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இதற்குமுள்ள சம்பந்த மின்னதென்றும் அதிலே காண்பிக்கப்பட்ட இயேசு உண்மையாய் அப்படிப்பட்டவரோ அல்லவோ என்றும் பற்பல தர்க்கங்கள் வேத சாஸ்திரிகளுக்குள்ளே உண்டாயின. இப்போதுகூட இந்நான்காம் சுவிசேஷத்தைப்பற்றி அநேக விஷயங்களில் சமுசயங்களும் சந்தேகங்களும் இருக்கின்றன. எனினும் இந்நூல் மகா அருமையானது என்று யாவரும் ஒப்புக்கொள்கின்றார்கள். இந்நூலின் பிரயோஜனத்தையும் அதின் அருமையான பொருளையும் நாம் நன்குணர்ந்துகொள்ளும்படி, நாம் அதைப்பற்றிய காரியங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து கூடியமட்டும் தேர்ந்தறியவேண்டும். இந்தப் புஸ்தகத்தில் நாம் இதற்குரிய காரியங்களை வணக்கத்துடன் படிப்போமாக. வேத நூற்களுக்கடுத்த பற்பல விஷயங்களை இவ்விதமாய்க் கற்றறிதல் நமது நம்பிக்கைக்கும் பக்திக்கும் உத்தம சகாயம். இவ்விதமாய்க் கடவுளை அறிகிற அறிவில் வளருவோம்.

இப்படியிருக்க இயேசுவின் குணதிசயங்களையும் ஆசிரியனது மாட்சிமையான போதனையையும் அநேகர் இவ்வியாக்கியானத்தால் தெளிந்தறியவேண்டும் என்னும் வேண்டுதலுடன் கடவுளது திருவருளை முன்னிட்டு இதை இயற்றலுற்றோம்.

## II

## இந்நூல் இயற்றப்பட்ட காலம்.

இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் திவ்விய அதிகாரமுள்ளதாய் அங்கீகரிக்கப்பட்ட நான்கு சுவிசேஷங்களும் இருந்ததற்குப் போதுமான அத்தாட்சியுண்டு. அந்த நான்கு சுவிசேஷங்களைத்தவிர அங்கீகாரம்பெற்ற சுவிசேஷங்கள் வேறே இல்லை. இப்போது நமது வேதத்திலிருக்கின்ற நாலு சுவிசேஷங்கள் அவையே



என்பதற்கு சந்தேகமில்லை. ஐரேனியஸ், தியாப்பிலஸ், அலெக்சந்திரியா[illegible]ட்டணத்து கிலமெந்து, தெர்த்துல்லியன் முதலி[illegible]வர்களாகிய ஆதிச்[illegible]யின் பெரியோர்கள் எல்லாரும் நான்கு சுவிசேஷங்கள் இருக்[illegible]றனவென்று திட்டமாய் எழுதி அவைகளிலிருந்து அ[illegible] சம்பவங்களையும் வாக்கியங்களையும் எடுத்துக் காட்டி வெளியிட்டார்கள். இந்நான்காம் சுவிசேஷத்திலிருந்தும் அநேக உதாரணங்களையும் வார்த்தைகளையும் உபயோகித்துவந்தார்கள். ஆகையால் அந்தக் காலத்துக்கு முன்னமே இந்நூல் அநேகருக்குத் தெரிந்திருத்தல்வேண்டும். அந்தக் காலத்து வேத புஸ்தகங்களின் அட்டவணைகளிலும் இதன் பெயர் வருகின்றது. வேதப்புரட்டர்களும் இதை அங்கீகரித்தார்கள். இக்குறிப்புகளால் இந்நூல் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் எழுதியிருத்தல் வேண்டியது என்று அறியலாம்.

கி. பி. 1[illegible]0–130.

இன்னும் சில வேதநூலோர் அந்த முதல் பாகத்திலும் இதிலிருந்து உதாரணங்களையும் எடுத்துபயோகித்தனர்போலிருக்கிறது. [illegible]கையால் இது முதலாம் நூற்றாண்டின் கடைசிப்பாகத்தில் எழுதப்பட்டிருக்கவேண்டுமென்று நினைப்பதற்கு முகாந்தரமுண்டு. எனினும் இது சந்தேகமற்ற காரியமன்று. பெரும்பான்மையோர் நூலின் பேரைச் சொல்லாமல் சுவிசேஷத்தின் வார்த்தைகளையும் சம்பவங்களையும் எடுத்துக் கூறுகிறார்கள். ஜஸ்டின் மார்டர் இச்சுவிசேஷத்தின் முகவுரையில் சொல்லியிருக்கிற பரம வாக்கின் போதனையை அதிக நேர்த்தியாய் விவரித்து வியாக்கியானம் எழுதியிருந்தனர். யோவானதுபேர் சொல்லாதிருந்தும் அந்தப் போதனை இந்நான்காம் சுவிசேஷத்திலிருந்து எடுக்கப்பட்டதாக தெரியவருகின்றது. இவர் சுமார் கி. பி. 150–ம் வருஷத்தில் இ[illegible]த எழுதியிருப்பார்.

கி. பி. 75–100.

அப்போது இந்த நூற்கள் [illegible]ங்களாக ஏற்றுக்கொள்ளப்படாமல் அப்போஸ்[illegible]லர் எ[illegible]தினவைகளென்று விசேஷ[illegible]க எ[illegible]ணப்பட்டன. அவைகள் எங்கும் பிரசித்தம் பெறக்கூடிய அச்சிடப்[illegible]ற்ற [illegible]ஸ்தகங்கள் அல்லாமல் சிற்சில இடங்களில்மட்டும் கையெ[illegible]த்து நகல்களாகவேயிருந்தன. அந்தக்காலத்தின் கிறிஸ்தவர்கள் பு[illegible]தகங்[illegible]ளப்

ஆதிச்சபை நூற்கள்.

பார்த்தே எழுதாமல் அந்த வார்த்தைகளை மனப்பாடமாய்ப் படித்து எழுதுவார்கள். ஆகையால் பேர்சொல்லாமல் எழுதல் தேகத்துக்குரிய காரியமல்ல. ஜஸ்டின் மார்டர் மறுபிறப்படை... போது, மறுபடியும் தாயார் வயிற்றில் பிரவேசித்துப் ... பற்றியே எழுதினார். தாஷியன் என்பவன் நாலு சுவிசே...யும் சம்பந்தமாக்கி ஒரு சரித்திரத்தை எழுதினானென்று யூசிபஸ் என்னும் இதிகாச வித்துவான் நாலாம் நூற்றாண்டில் எழுதினான். தாஷியன் எழுதின அந்த நூலானது நாலு சுவிசேஷங்களுக்கும் சம்பந்தமான ஒரே சரித்திரமென்று காணப்படுகிறது. அது சுமார் கி. பி. 170-ம் வருஷத்தில் எழுதப்பட்டது. நமது நான்காம் சுவிசேஷமே அவைகளில் ஒன்றாயிருந்ததாக நிச்சயமாயறிவோம். ஆகையால் அந்தக் காலத்து கிறிஸ்தவர்களுள் இந்நான்காம் சுவிசேஷம் அதிகமாய்ப் பரம்பியிருந்ததாக நிச்சயமாய்த் தெரியவருகின்றது. இப்படியிருத்தலின் அந்தப் புஸ்தகம் அவ்விதமாய்ப் பிரசித்தமடைவதற்கு அநேக வருஷங்கள் செல்லும். ஆகையால் இரண்டாம் நூற்றாண்டின் துவக்கத்திலாகிலும் எழுதப்பட்டிருக்கவேண்டும். அன்றியும் போலிகார்ப், இக்னேஷியஸ் என்பவர்கள் (சுமார் கி. பி. 110.) இந்நான்காம் சுவிசேஷம் அக்காலத்தில் பரம்பியிருந்ததற்குச் சாட்சி கொடுக்கிறார்கள். அதின் வார்த்தைகளையும் உபயோகிக்கிறார்கள். போலிகார்ப்பின் சீஷனான ஐரேனியஸ் நான்காம் சுவிசேஷத்திலிருந்து அதிகமாய் எடுத்துக் கூறுவதோடு இந்த வேத நூற்கள் யாவும் போலிகார்ப்புக்கு தெரிந்தனவென்றும் சொல்லுகின்றான். இனி கி. பி. 100–110 வருஷங்களில் அநேக புஸ்தகங்களில் பற்பல இடங்களில் இந்நான்காம் சுவிசேஷத்தின் வார்த்தைகளும் அபிப்பிராயங்களும் உபயோகிக்கப்பட்டு வருகின்றனபோலிருக்கிறது. இந்த காரியங்களையெல்லாம் நாம் ஆராய்ந்துபார்த்தால் இந்நான்காம் சுவிசேஷம் இரண்டாம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் சபைகளுக்குள்ளே வெளிப்பட்டுவந்தது என்பது நிச்சயம். அதுவுமன்றி அது முதலாம் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தில் எழுதப்பட்டது என்று நாம் நம்பிக்கையுடன் நினைக்கலாம்.



# III

## இந்நூலின் விசேஷித்த லக்ஷணங்கள்

எல்லா நூற்களும் வெவ்வேறு லக்ஷணங்களுடையன. நாம் நூற்களை வாசித்துப் படிக்கும்போது அவைகளனைத்தும் வெவ்வேறு விதமாக நமது மனதுக்கு தோன்றுகின்றன. ஒருநூல் நமக்குப் பிரீதியுண்டாக்குகிறது, இன்னொன்று மனதைப் பரவசப்படுத்துகிறது. ஒன்றுக்குச் சொற்சுவையும் பொருளினிமையுமுண்டு; இன்னொன்றுக்குப் பொருள் மேன்மையுண்டு, சொற்சுவையில்லை. இன்னும் உலகம் பலவிதம் என்பதுபோலவே நூற்கள் பலபலவிதமாயிருக்கும். ஒரு நூலின் லக்ஷணங்களை நாம் நன்றாய் உய்த்துணரின் அந்த நூலின் பொதுத்தன்மை நமக்குத் தெளிவாய்க் காணப்படும். நாம் ஒருவனுக்குள்ள குணங்கள் இன்னின்னவென் றறிந்தால் அவனது மனவியல்பும் இன்னதென்றும் அறியலாம். ஆகையினால் நாம் முதலாவது இந்நூலின் விசேஷித்த லக்ஷணங்களைப் பார்ப்பது உத்தமம். இவ்விடத்தில் வாசக லக்ஷணங்களைமாத்திரம் கவனிப்போம். போதனையின் தன்மையை நாம் பிறகு ஆராய்ந்து பார்ப்போம். இந்நூலின் வாசக நடையும், அதின் வாக்கியங்களும் இதை அதிக மேன்மையான ஸ்திதியில் வைக்கும்படி செய்கின்றன. இந்நூலும் யோவான் நிருபங்கள் மூன்றும் தங்களை மற்ற நூற்களிலிருந்து பிரிக்கத்தக்க விசேஷித்த லக்ஷணங்களையுடையன. இதிலே உயர்தரப் போதனைகள் மிக்க தெளிவான வாசக நடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

(1) தெளிவு. ஆசிரியனின் கருத்தும், வாசகமும் தெளிவாய் வெளிப்படுகின்றன. இந்தத் தெளிவு இந்நூற்களுக்குச் சிறப்பான லக்ஷணம். பவுல் எழுதின வாசகத்தின் நடை அவன் மனோவேகத்தினால் அடிக்கடி கலக்கமுற்று அது பலகாலும் கொந்தளிக்கின்ற சமுத்திரத்தை யொக்கும். இந்நூலின் வாசக நடையோ எப்போதும் அமைதலும் அதிக ஆழமுமுள்ள ஒரு குளத்தை யொக்கும். தெளிந்த நீரிலுள்ளதெல்லாம் பிரகாசித்துத் தோன்றுகின்றதுபோல

இந்தத் தெளிந்த வாசகத்தில் மிக்க அமரிக்கையும் தெளிவுமுடைய ஆசிரியனது கருத்து விளங்குகிறது. அவன் விசுவாசித்ததெல்லாம் சந்தேகமற அறிந்துகொண்டு ஆழ்ந்த கருத்துடன் எழுதி அதை இலேசான வார்த்தைகளாலும் வசனங்களாலும் வெளிப்படுத்தியிருக்கிறான்.

(2) **சமநிலை.** வாசகமெல்லாம் சமநிலையுடையது. சில விசேஷித்த வார்த்தைகள் அடிக்கடி வருகின்றன. அவன் உபயோகிக்கின்ற வார்த்தைகளின் தொகை அதிகமல்ல. சில சொற்றொடர்களை எப்போதும் உபயோகிக்கிறான். நுட்பமான சொற்றொடர்களை அவன் உபயோகிக்காமல் சுலபமான வார்த்தைகளையும், தொடர்களையு மாத்திரங்கொண்டு தன் நூற்களை எழுதினான். ஆசிரியன் கிரேக்கு இலக்கணத்தைத் தேர்ந்தறிந்த வித்துவானல்லன். அந்தப் பாஷையில் பவுலைப்போல மிக்க பழக்கமுள்ளவனல்லன். அதின் வழக்கப் பேச்சுகளும், மரபு தொடர்களும், நுட்பமான இலக்கண வழிகளும் அவனுக்குத் தெரியாதுபோலிருக்கிறது. எனினும் எல்லாம் இலக்கண விதிகளுக்கிசைய, இலக்கண வழுக்களின்றி எழுதப்பட்டது.

அதிகமாய் வழங்கும் வார்த்தைகளாவன:—ஒளி, மகிமை, ஜீவன், சாட்சி, அறிய, உலகம், விசுவாசிக்க, கிரியை, பெயர், சத்தியம், அடையாளம் என்பவைகளே.

(3) **எதிரிடை தொடர்நிலை.** அவன் எதிரிடையான சொற்களையும், தொடர்களையும் அதிகமாய் வழங்கி எழுதினான். இந்த வேற்றுமையணி அவன் முக்கியமாய் உபயோகிக்கு மலங்காரம். ஒளி இருள் என்பதும், சத்தியம் பொய் என்பதும், ஜீவன் மரணம் என்பதும் இவைகளில் சில. வசனத்தின் ஒரு பகுதியில் ஒரு நோக்கத்தையும் மறு பகுதியில் எதிரிடையான நோக்கத்தையும் வைப்பான். இதுவும் மெத்த தெளிவுக்கு ஏதுவாகும்.

(4) **உருவகம்.** உருவகவணியை மிகவும் உபயோகிக்கிறான். இயேசுவின் உவமைகளை அதிகமாய்ச் சொல்லாவிடினும் அவர் சொன்ன உருவகவசனங்களை முக்கியமாய் எழுதுகிறான். ஆசிரியன் தனது சொந்த எண்ணங்களை வெளியிட விரும்பி இவ்விதமாய் எழுதினான். இதினாலே அவனுபயோகிக்கும் வார்த்தைகளின்



பொதுவான அர்த்தத்தைமாத்திரம் நினைக்காமல் என்ன விசேஷித்த கருத்து இருக்கிறதென்று நாம் எப்போதும் விசாரிக்கவேண்டும். உலகமென்றால் கடவுளை விரோதிக்கும் பிரபஞ்சமென்று அர்த்தமாம். இருள் என்றால் அஞ்ஞான இருளைக் குறிக்கிறது. அவன் உருவகமாய் நினைக்கிற மனமுடையவன். இப்பேர்ப்பட்ட உருவகவணி தமிழிலக்கியங்களுக்குரிய அலங்காரமென்று மிகவும் மதிக்கப்படுவதால் இந்நூல் நம் நாட்டாருடைய குணாதிசயங்களுக்குத் தக்கவிதமாய் எழுதியிருக்கிறது.

(5) **தொடர்ச்சி.** அவன் தொடர்ச்சியாக சரித்திர வரலாறுகளை எழுதினான். நடந்த சங்கதியை நேராய்ச் சொல்லி ஒவ்வொருவன் சொன்ன வார்த்தைகளைப் பேசின வகையாகவே எழுதுகிறான். சம்பவங்கள் எல்லாவற்றையும் நடந்தபடியே எழுதியிருப்பதால் அவைகளைக் கண்ணாரக் காண்பதுபோலிருக்கிறது.

(6) **எபிரேய பாஷைக்குரிய குறிப்புகள்.** எபிரேய பாஷைக்குரிய அநேக சொற்றொடர்களும், அணிகளும், எழுத்து வகைகளும் வருகின்றன. உருவகவணியும் வேற்றுமையணியும் விசேஷமாய் எபிரேய பாஷைக்குரியன. கிரேக்கு வசனங்களை மொழிபெயர்த்து எபிரேய பாஷை இலக்கண விதிப்படி எழுதியிருக்கிறான். ஒருவர் இந்த நூலின் வாசக நடையைப்பற்றிப் பின் வருமாறு எழுதினார். சுத்த கிரேக்கு பாஷைக்குரிய தெளிவும் அநேக வழிகளில் எளிதாய் மாற்றக்கூடிய தன்மையும் எபிரேய வாசக நடையோடு கலந்திருக்கிறது. எபிரேய வாசகத்தின் தெளிவும், துணிவும், உருவக மிகுதியும், வழக்குகளும் அதிகமாயிருக்கின்றன. ஆராய்ச்சியும் மனவருத்தமுமில்லை. உயிர்வாழ்க்கைபோலவே எல்லாம் மனநேர்மையுடன் இடையூறின்றி எழுதப்பட்டிருக்கிறது. எனினும் யுக்தியும், சரித்திர அலங்காரமும், வளர்ச்சியும் எங்கும் தோன்றுகின்றன. எல்லாவிடங்களிலும் இரகசியங்கள் ஒன்றுபோல வெளிப்படுகின்றன. அடையாளங்களும், உருவகங்களும் அநேகமிருக்கின்றன. நுட்பமான விஷயங்களும் அற்ப சம்பவங்களும் அதிக விசேஷமாக காண்பிக்கப்பட்டிருக்கின்றன. வருத்தம், துக்கம், வைராக்கியம், சினம், வஞ்சகப் புகழ்ச்சி என்பவைகளில் மனச்சந்தோஷம் அமைதி முதலிய சமரசமான குணங்கள் காணப்படுகின்றன. முடிவாக கடைசி விருந்

திலும் சிலுவையின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் சமாதானம், ஜெயமாகிய மகத்துவமானவைகள் விளங்கிப் பிரகாசிக்கின்றன.

(7) அவன் விசேஷித்தவிதமாய் எல்லாருடைய சிந்தனைகளையும் காட்டுகிறன். இயேசுவின் மனம் இன்னதென்றும், இயேசுவைப் பார்த்தவர் கேட்டவர் சந்தித்தவர்களின் மனமின்னதென்றும், நாம் தெளிவாய்ப் பார்க்கிறோம். அன்பும் பகையும் அதிசயமும் பொறுமையும், விசுவாசமும் அவிசுவாசமும் மாறி மாறி காணப்படுகின்றன. இயேசு செய்த பிரசங்கங்களின் பயனும், அவர் செய்த அற்புதங்களின் பயனும், நமக்கு எப்போதும் காண்பிக்கப்படுகிறது. ஆகையினால் இச்சுவிசேஷத்தின் மூலமாய் இயேசுவின் காரியங்களையெல்லாம் நடந்தவாறாகவே நாம் தெளிந் தறிந்துகொள்ளக்கூடும்.

(8) சரித்திரத்துக்குரிய நோக்கம். இந்நூலாசிரியன் முழுப் புஸ்தகத்தையும் நடந்த நடபடிகளுக் கேற்றவிதமாய் எழுதினனென்று நாம் மறக்காமலிருப்போமாக. யூதருக்கும் சீஷருக்கும் கொடுத்த வெளிப்படுத்துதலையும் அதினால் பகை நம்பிக்கை வளர்ந்த விதத்தையும் காட்டும்படி இந்நூல் எழுதியுளது என்று நாம் பின்பு கற்றுக்கொள்ளுவோம். இந்த நோக்கம் உண்மையான நடபடிக்குரிய நோக்கமே. நாம் இந்நூலை வாசிக்கும்போதெல்லாம் இதை நினைவு கூர்ந்திருத்தலவசியம். இல்லாவிடின் கருத்துகளைத் தப்பாக நினைத்துக்கொள்வோம்.

## IV

## பொருள் அட்டவணை


I. முகவுரை .... .... .... .... .... .... $1^{1-18}$.

இயேசு கடவுளின் வெளிப்படுதல்.

1. பரம வாக்கினது நித்தியதன்மை .... .... $1^{1-5}$.
2. பரம வாக்கின் வெளிப்படுத்தல் .... .... $1^{6-18}$.





II. இயேசு ஜனங்களுக்குக் கொடுத்த பொதுவான வெளிப்படுத்தல் .... .... .... $1^{19}$–$12^{50}$.

ஜனங்களுடைய சாட்சிகளாலும் இயேசுவின் செய்கைகளின் அத்தாட்சிகளாலும் அவரது பிரசங்கங்களாலும் முகவுரையில் கூறப்பட்ட நோக்கம் விளங்குகிறது.

1. அவரது மேன்மையைக்குறித்த மூன்று சாட்சிகள் .... .... .... .... .... .... $1^{19}$–$2^{12}$.
   (i) யோவான்ஸ்நானகன் கொடுத்த சாட்சி .... $1^{19-34}$.
   (ii) முதல் சீஷர் கொடுத்த சாட்சி .... .... $1^{35-51}$.
   (iii) தாம் செய்த முதல் அற்புதத்தின் சாட்சி.... $2^{1-11}$.
   அவர்கள் கப்பர்நகூமுக்குப் போனது .... $2^{12}$.
2. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் ஆரம்பம் .... .... .... .... .... .... $2^{13}$–$4^{54}$.
   (i) எருசலேம் பட்டணத்தில் .... .... $2^{13}$–$3^{22}$.
   பிரசங்கம்–பரமராஜ்யம் சின்மய தன்மையுள்ளது.
   ஆசிரியனது குறிப்பு – கிறிஸ்து தேவாட்சகர் .... .... .... .... .... $3^{16-21}$.
   அதன் பயனாவது–யூதருக்கு அவிசுவாசம்.
   யோவான்ஸ்நானகனின் இரண்டாம்சாட்சி. $3^{22-30}$.
   ஆசிரியனது குறிப்பு – கிறிஸ்துவே பரலோகத்தை வெளிப்படுத்தினவர் .... $3^{31-36}$.
   (ii) சமாரியாதேசத்தில் .... .... .... $4^{1-42}$.
   பிரசங்கம் — உத்தம திருப்தியும் உத்தம வணக்கமும் இன்னதென்பது.
   அதன் பயனாவது — சமாரியருக்கு விசுவாசம்.
   (iii) கலிலேயாநாட்டில் ஒரு அற்புதம் .... $4^{43-54}$.
   அதன் பயனாவது—அந்த ஜனங்கள் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டது.

3. **அந்தப் போதுவான வெளிப்படுத்தலின் வளர்ச்சிகள்** .... .... .... .... .... $5^{1}$–$12^{50}$.

(i) யூதேயாவில் தமது அதிகாரத்தை வெளிப்படுத்தினது .... .... .... .... $5^{1-47}$.

புராண சட்டங்களுக்கு மேலான அதிகாரம் தமக்குண்டென்று ஓர் அற்புதத்தால் காட்டினது.

அதன் பயனாவது — அவிசுவாசமும் விரோதமும்.

(ii) கலிலேயாவில் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தினது .... .... .... $6^{1-71}$.

எப்படியெனில்,

(*a*) ஐயாயிரம்பேர்களை அதிசயமாய்ப் போஷித்ததாலும்,

(*b*) கடலை அமர்த்தினதினாலும்,

(*c*) ஒரு பிரசங்கத்தாலும்,—அந்த பிரசங்கத்தின் பொருள் இயேசு உலகத்திற்கு ஜீவன் என்பதே.

அதன் பயனாவது.

ஜனங்களது பொய்பக்தியும், சீஷரது உள்ளான விசுவாசமும் தோன்றின.

ஜனங்களுடைய பொருளாசைக்கும் அவரது நோக்கத்துக்குமுள்ள விரோதமும் வெளிப்பட்டன.

(iii) எருசலேமில் நடந்த இரண்டு பண்டிகைகளில் தமது உன்னத நிலைமையை வெளிப்படுத்தினது .... .... .... $7^{1}$–$10^{42}$.

(*a*) கூடாரப்பண்டிகையில் அவரது போதனைக் காதாரமான அதிகாரத்தைப் பற்றி வாக்குவாதம் நடந்தது .... $7^{1-52}$.



அதன் பயனாவது — ஜனங்களுக்கு அதிசயமும் பரிசேயருக்கு அவரைப் பிடிக்க வேண்டுமென்ற தீர்மானமும்.

[விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணினது சரித்திரம். .... .... .... $7^{53}$–$8^{11}$.]

அவர் செய்த பிரசங்கம் .... .... .... $8^{12-59}$.

இது முன் சங்கதியுடன் பொருந்தியது.

அதன் பொருளாவது. தாமே உலகத்தில் பரம தந்தையைப்பற்றி நிச்சய போதனை செய்பவர்.

அதன் பயனாவது—யூதர் அவரைக் கொல்ல நினைத்தது.

(*b*) அவர் பரிசேயர் ஏற்படுத்திய பாரம்பரியத்திற்கு எதிரிடையாக தமது மேலான அதிகாரத்தைக் காண்பித்தார்.... .... .... .... .... $9^{1-41}$.

குருடனைப் பார்க்கப்பண்ணினார்.

அதன் பயனாவது—பரிசேயர் அவர் செய்தது நன்மையென்று ஏற்றுக்கொள்ள மனமில்லாமல் முன்னிலு மதிகமாய்ப் பகைத்ததும் அவரைச் சேர்ந்தவர்களைப் தள்ளிவிட்டதும்.

பிரசங்கம் இயேசு நல்ல மேய்ப்பரும் உலகத்திற்கு மேலான போதகருமானவர். $10^{1-21}$.

அதன் பயனாவது—யூதர் சிந்தனை செய்தது.

பின்வரும் சம்பவங்கள் முந்தின சம்பவங்களுக்கு மூன்றுமாதத்திற்குப்பின் நடந்தவை.

(*c*) பிரதிஷ்டை பண்டிகையில்.

பிரசங்கம்—அவர் கடவுளோடு விசேஷித்த சம்பந்தமுடையவர் .... .... .... $10^{22-42}$.

அதன் பயனாவது—பரிசேயர் அவரைக் கொல்லத் தீர்மானித்ததும் ஆதினிமித்தம் அவர் யோர்தான் நதியின் அப்புறத்திற்குப் போய்விட்டதும்.

(iv) ஓர் அதிசய கிரியையால் தமது வல்லமையை விளக்கினது .... .... .... $11^{1-57}$.

அதாவது—லாசரு உயிர்ப்பிக்கப்பட்டது. அதன் மூலமாக தாம் உலகத்திற்கு உயிரும் உயிரின் காரணமுமானவரென்று போதித்தது.

அதன் பயனாவது—பரிசேயர் அவரைக் கொல்லத் திட்டமாய்த் தீர்மானித்ததும் லாசருவின் குடும்பத்தார் தங்கள் நன்றியறிதலைக் காட்டினதும்.

4. அந்தப் போதுவான வெளிப்படுத்தலின் முடிவுகள் .... .... .... .... .... .... $12^{1-50}$.

அவையாவன.

(i) அவரை நேசித்த மரியாளது அன்பும் .... $12^{1-8}$.
(ii) பிரதான ஆசாரியரது பகையும் .... .... $11^{9-11}$.
(iii) ஜனங்கள் கொண்ட மனவெழுச்சியும் .... $12^{12-19}$.
(iv) புறஜாதியார் கொண்ட ஆவலும் .... .... $12^{20-22}$.
(v) இயேசு கடைசியாகச் செய்த பிரசங்கமும். $12^{23-36}$.
(vi) நூலாசிரியன் கொண்ட நிதானிப்பும் .... $12^{37-43}$.
(vii) இயேசு கொடுத்த போதனையின் சுருக்கத் தொகுதியும் .... .... .... .... $12^{41-50}$.

III. இயேசு சீஷருக்குக் கொடுத்த விசேஷித்த வெளிப்படுத்தல் .... .... .... .... $13^{1}-17^{26}$.

(1) அன்புள்ள ஊழியத்தின் மேன்மையைக் காண்பிக்கத் தம்முடைய சீஷரின் கால்களைக் கழுவினது .... .... .... .... .... $13^{1-17}$.



(2) கடைசி இராப்போசனம் .... .... .... $13^{18-38}$.

அதோடு சம்பந்தமானவை.

(i) யூதாசின் துரோகத்தை அறிவித்ததும் .... $13^{18-30}$.
(ii) பரம இராஜ்யத்திற்கேற்ற கட்டளையைக் கொடுத்ததும் .... .... .... .... $13^{31-35}$.
(iii) பேதுருவின் பலவீனத்தை முன்னறிவித்ததும் .... .... .... .... .... $13^{36-38}$.

(3) கடைசியான போதனைகள் .... .... .... $14^{1}-16^{33}$.

அவையாவன.

(i) ஆறுதலுக்குரிய விஷயங்கள்—பரிசுத்தாவியின் வருகை .... .... .... .... 14.
(ii) இயேசுவுடன் சின்மய ஐக்கியம் .... $15^{1-17}$.
(iii) இயேசுவின் சீஷருக்கும் உலகத்தாருக்குமுள்ள சம்பந்தம் .... .... .... $15^{18}-16^{3}$.
(iv) தாம் விட்டுப்போவதால் உண்டாகும் சந்தோஷங்கள் .... .... .... .... $16^{4-33}$.

(4) சீஷருக்காக இயேசு செய்த வேண்டுகோள். $17^{1-26}$.

அவர் உலகத்திற்குக் கொடுத்த சிறந்த வெளிப்படுத்தல் .... .... .... .... .... $18^{1}-19^{42}$.

இதிலே யூதர் பகை நிறைவேறிற்று.

அதற்குரிய சம்பவங்களாவன.

(1) அவரைக் கண்டுபிடித்தது .... .... .... $18^{1-11}$.

யூதாசின் துரோகம்.

(2) ஆசாரியர் செய்த விசாரணை .... .... .... $18^{12-27}$.

இதில் பேதுரு மறுதலித்தலும் ஆசாரியர் நிந்தித்தலும் காணப்படுகிறது.

(3) பிலாத்து செய்த விசாரணை .... .... .... $18^{28}-19^{16}$.

இதில் பிலாத்துவின் அநியாயமும் ஜனங்களின் நன்றியறியாமையும் காணப்படுகின்றன.

(4) சிலுவையில் அறைந்த மரணம் .... .... $19^{17-37}$.

மகா தாழ்மையில் அதிகபெருமை பிரகாசித்தது.

(5) அடக்கஞ்செய்தல் .... .... .... .... $19^{38-42}$.
நண்பர் விசனம்.

**V.** அவர் உயிரோடெழுந்து தமது முந்திய வெளிப்படுத்துதல்களை உறுதிப்படுத்தல் .... .... $20-21^{22}$.
இயேசுவின் ஜெயம்.
(1) உயிர்த்தெழுதல் நடந்ததாக தெரியவந்தது .... $20^{1-10}$.
(2) மரியாளுக்கு முதல் தரிசனம் .... .... .... $20^{11-18}$.
(3) சீஷர்களுக்கு இரண்டு தரிசனங்கள் .... $20^{19-30}$.
தோமாவின் சந்தேகம் நிவிர்த்தியானது.

**VI.** முடிவுரை .... .... .... .... .... .... $20^{30}-21^{25}$.
(1) சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கம் .... .... $20^{30.31}$.
(2) பேதுருவின் விசுவாசமும் அழைப்பும் .... $21^{1-22}$.
(3) கடைசி வார்த்தைகள் .... .... .... .... $21^{23-25}$.

---

# V

# இந்நூலில் அடங்கிய இயேசுவின் சரித்திர வரலாறு

---

அறிவோர் ஒருவரது சரித்திரத்தை எழுதி விவரிக்கும்பக்ஷத்தில் அவனவன் தன் தன் நோக்கத்தின்படியும் தன் தன் திறமைக்குத் தக்கதாயும் அதைப் பிரத்தியேகமானவிதமாய் எழுதுவான். நூலாசிரியனது குணாதிசயங்கள் அவன் எழுதின நூற்களில் விளங்கும். சான்றோர் ஒருவரது ஜீவிய சரித்திரத்திலுள்ள எல்லாக் காரியங்களையும் எந்த நூலாசிரியனும் ஒரு புஸ்தகத்தில் அடைத்துவைக்க முடியாது. ஒருவரது ஜீவிய சரித்திரத்தை நன்றா யறியவேண்டுமென்று விரும்பின் இரண்டு மூன்றுபேர் எழுதின சரித்திர வரலாறுகளை வாசிப்பது நன்றும் அவசியமுமானது. அதுபோல வேதத்தின் நான்கு சுவிசேஷகர் தங்கள் சுவிசேஷ நூற்களை வேறு வேறுவிதமா யெழுதி



னார்கள். ஒவ்வொருவனும் தன் தன் சொந்த நோக்கத்திற்கேற்க இயேசுவின் சரித்திரத்தை விவரித்து எழுதினான். அளவற்ற குணசெல்வம் நிறைந்த இயேசுவின் சரித்திர வரலாற்றையும் லக்ஷணங்களின் விவரிப்பையும் நான்கு சிறு நூற்களில் அடைத்து வைக்கக் கூடியவர் ஒருவருமிலர். ஈராயிர வருஷகாலமாய் அவர் திருச்சபையின் வரலாற்றில் பிரகாசித்துத் தோன்றினும் அவரை முழுவதுமாக அறிந்தோன் ஒருவனுமில்லை. அவ்வண்ணமிருக்க இந்த நாலு சுவிசேஷகர்கள் முழுவதையும் விவரமாய் எழுத முடியுமா? மத்தேயு, இயேசு யூதர் எதிர்பார்த்துவந்த மேசியாவென்றும்; மாற்கு, அவர் புறஜாதியார் நம்பக்கூடிய இரட்சகரென்றும்; லூக்கா, அவர் எல்லாருக்கும் சிறந்த சற்குருவென்றும்; இப்படி பற்பல நோக்கங்கள்கொண்டு அவனவன் தன் தனது சுவிசேஷ நூலை யெழுதினான். இந்நான்காம் சுவிசேஷத்தில் யூதருக்கும், புறஜாதியாருக்கும், வித்துவான்களுக்கும், பேதையருக்கும் சிறந்த குருவும் இரட்சகருமாகிய தெய்வீக மனுஷனைக் காண்கிறோம். எல்லாரும் இயேசுவை தேவகுமாரனென்று விசுவாசிக்கும்படியாக யோவான் தன் சிநேகிதனான இயேசுவின் சரித்திரத்தை எழுதினானும். அந்த விசுவாசமே கிறிஸ்தவர்களுக்கு விசேஷித்த லக்ஷணமென்பதையும் அந்த விசுவாசமில்லாமல் கிறிஸ்துமார்க்கமே யில்லையென்பதையும் அந்த விசுவாசமில்லாதவன் கிறிஸ்தவனல்லவென்பதையும் உறுதிப்படுத்திக் காட்டும்பொருட்டே இந்நான்காம் சுவிசேஷம் எழுதப்பட்டதாம்.

இதினாலே இச்சுவிசேஷத்தில் யூதர்கொண்ட பகையும் சிலரடைந்த விசுவாசமும் தெளிவாய்க் காணப்படுகின்றன. இந்நூலிலே இயேசு தம்மையும் தம் தந்தையையும் வெளிப்படுத்திவந்ததே முக்கியமான கருத்தாம். இதற்குச் சார்பாகவே மற்றெல்லாச் சங்கதிகளையும் ஆசிரியன் எழுதினான். அந்த வெளிப்படுத்தலை சிலர் சந்தோஷமா யேற்றுக்கொண்டதையும் யூதரதை விரோதமாய்த் தள்ளினதையும் நமக்குத் தெளிவாய்க் காண்பிக்கிறான். முக்கியமாக அந்த வெளிப்படுத்தலின் விவரிப்பும், யூதரது பகையின் வளர்ச்சியும் படிப்படியாய்த் தோன்றுகின்றன. இவைகளைப் படிப்படியாய் வளர வளர காட்டும்படியாய்த் தன்னோக்கத்திற்கேற்ற சில சம்பவங்களைமாத்திரம் அந்தச் சரித்திரத்தின் சம்பவத் தொகுதியிலிருந்து தெரிந்தெடுத்தெ

ழுதினுன். எனினும் இந்நான்காம் சுவிசேஷத்தில் இயேசுவினது முழுகுண வியல்பும் காணப்படுகிறது. சில படங்களிலே அநேக வரிகளுண்டு. சிலவற்றிலோ சில வரிகளால்மாத்திரம் பூரணப்படம் வரையப்பட்டுக் காணப்படுகிறதுபோல் இந்நான்காம் சுவிசேஷத்தில் சில சம்பவங்களால் இச்சரித்திர ஆசிரியன் இயேசுவின் முழு ஜீவியத்தின் தன்மையையும் காண்பிக்கத்தக்க படத்தை வரைந்தான். இதின் சரித்திர வரலாற்றை ஆராய்ந்து பார்க்குமிடத்து மேற்காட்டியவைகளை மனதில் வைப்போமாக. சரித்திர விவரமாவது.

**1. விசாரிப்பு.** இயேசுவின் சிறுபிராயம், வாலிபம் என்பவைகளைப்பற்றி நமது ஆசிரியன் ஒன்றையு மெழுதாமல் அவர் பிரசங்கம் செய்த காலந்தொடங்கி சரித்திர மெழுதியிருக்கிருன். இயேசுவைப் பற்றி அவர் சீஷர்கள்கொண்ட அபிப்பிராயத்தைப்
$1^{1-51}$. பார்க்கிறோம். யோவான்ஸ்நானகன் அவரைத் தன் னுடைய சீஷர்களுக்குக் காண்பித்து, தான் முன் தூதனுய் அறிவித்தவர் இவரேயென்று அவர்களுக்குச் சுட்டிக் காட்டினுன். அப்போது அவர்கள் யோவானிடம் படித்த போதனைகளால் உடனே அவரிடஞ்சென்று அவரது காரியங்களெல்லாவற்றையும் விசாரித்து அவரை அதிகமாய் விரும்பினுர்கள். அப்போது அவர்களுக்கும் இவருக்கும் முதலாவது சம்பந்தமுண்டாயிற்று. எனினும், அவர்கள் அக்காலத்தில் தங்கள் வேலைகளை விட்டு அவரை முழுவதுமாய்ப் பின்தொடர்ந்திலர். அப்பொழுது அவர் இவர்களுக்கு தமது காரியங்களைக் கொஞ்சமாய் வெளிப்படுத்தினுர்.

**2. ஆச்சரியம்.** அவர் அப்புறம் தமது தெய்வீக வல்லமையைக் காட்டினுர். பக்கத்தூரிலே கலியாணமிருத்தலின் அவரும் தாயாரும் சிநேகிதர் யாவரும் போயிருப்பார்கள். அந்தச் சமயத்தில் அவர் ஒரு சிறந்த அற்புதத்தைச் செய்தனர். அவரது
$2^{1-12}$. வெளிப்படுத்தல் கொஞ்சமாய் வளர்ச்சிபெற்றது. ஜனங்கள் இந்த மௌன வெளிப்படுத்துதலைக் கண்டு மிகவு மாச்சரியமடைந்தார்கள். சீஷர்களோ அவரை நம்பினுர்களென்று வாசிக்கிறோம். இதுவே அவரது முதல் அற்புதத்தின் பயன். பிறகு கலிலேயாவின் சுற்றுப்புறங்களில் அவர் தம்மைப் பிரசங்கத்தாலும் அற்புதங்களாலும் வெளிப்படுத்திவிட்டதாக மற்றச் சுவிசேஷங்களி



ஞல் தோன்றுகிறது. இதனுல் அவரது பிரஸ்தாபம் எங்கும் பரந்து எருசலேம்பட்டணத்திற்கும் எட்டிற்று. அந்தப் பட்டணத்தின் பெரியோர் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டுச் சமுசயமுற்றனர். அவர் கலிலேயாவில் செய்த காரியங்களால் அந்நாட்டு ஜனங்களோ அவரை யதிக சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு நம்பினுர்கள் என்பது தெரியவந்திருக்கிறது.

**3. நம்பிக்கையும் சந்தேகமும்.** ஆகையாலவர் எருசலேமுக்கு வந்துவிட்டார். அங்கே அவர் முதலாவது ஒரு கிரியையால் ஆசாரியரது துன்மார்க்கத்தையும் தமது மேலான அதிகாரத்தையும் தெளிவாய்க் காட்டினுர். அதென்னவெனில், தேவாலயத்தில்
$2^{13-22}$. கள்ள வியாபாரம் பண்ணினவர்களைத் துரத்திவிட்டது. அந்தப் பிரதான ஆசாரியர் இதுமுதலாக அவரைப் பகைக்கத் தொடங்கினுர்கள். அப்போதுதான் அவர்களுக்கும் இவருக்கும் விரோதம் உற்பத்தியாயிற்று. அவர்களது பொய்ப்பக்தியும் துன்மார்க்கமும் இவரது சிறந்த பக்தியோடும் பரிசுத்த நடக்கையோடும் ஒன்றோடொன்று முரண்பட்டது. அப்போது அவர் சாதித்த தமது மேலான ஸ்திதியையும் அதிகாரத்தையும் யூதர்கள் ஒப்புக்கொள்ளாமல் தள்ளிவிட்டார்கள். சீஷர்கள் அக்காரியத்தை மனதில் வைத்துக்கொண்டு அவரது சிறப்பைப்பற்றிச் சிந்திக்கலுற்றனர். இவைகளால் யூதருக்கு அவநம்பிக்கை உண்டானதாகவும் சீஷர்களுக்கு நம்பிக்கை வளர்ந்ததாகவும் காண்கிறோம்.

2-ம் அதிகாரத்தின் கடைசிப்பாகத்தில் ஆசிரியன் இயேசுவைப் பற்றி மற்றவர்கள் கொண்ட அபிப்பிராயங்களைக் காட்டுகிருன். ஜனங்களுடைய சந்தேகமும் இயேசுவினது நிச்சயமான விவேகமும் காணப்படுகின்றன. அவர்கள் இயேசுவைப்பற்றிச்
$3^{23}-3^{36}$. சந்தேகித்தும் இவரெல்லாருடைய மனங்களையும் நிச்சயமா யறிந்துகொண்டாரென்று எழுதியிருக்கிறது. இன்னெரு சம்பவத்தில் யூதருடைய விரோதமும் அவரது விஸ்தாரகீர்த்தியும் தெளிவாய்த் தோன்றுகிறது. யூதசாஸ்திரி ஒருவன் இராத்திரிகாலத்தில் வந்து அவரிடம் பேசினுன். அவன் யூதருக்குப் பயந்து இராக்காலத்தில் வந்ததால் யூதர்கள் அவரைப்பற்றிச் செய்த பயமுறுத்துதல் நமக்குத் தெரியும். இப்பேர்ப்பட்டவரின் வருகையால் இயேசு

வின் நற்கீர்த்தி விளங்குகிறது. இயேசுநாதர் இந்தச் சாஸ்திரிக்குப் பரம ராஜ்யத்தின் தன்மை இன்னதென்றும் அதை யடையும் வழி எது வென்றும் காட்டினார். அச்சாஸ்திரி கேட்டு இப்புதிய உபதேசத்தைப்பற்றி மிகவும் ஆச்சரியப்பட்டு மயங்கித் தீர்மானஞ்செய்யாமல் போய்விட்டான். இதற்குப் பிறகு யோவான்ஸ்நானகன் கூறின இன்னொரு சாட்சி எழுதியிருக்கிறது. யோவான் அப்போது மற்றைய ஜனங்களுக்குத் திட்டமாய் இயேசுவின் உயர்தர நன்மையைக் காண்பித்தறிவித்தான். எல்லாரும் யோவானைத் தீர்க்கதரிசியாக எண்ணினார்களாகையால் இந்தச் சாட்சி ஜனங்களுடைய எண்ணத்தில் மிகுந்த பலமான சாட்சியாகும்.

**4. நம்பிக்கையும் சந்தோஷமும்.** பின்பு பயணவழியில் அந்நிய நாட்டில் நடந்த சம்பவம் ஒன்றைக் காண்கிறோம். இயேசு சமாரியா நாட்டின் வழியாக கலிலேயா நாட்டுக்குப் போய்விட்டார். சமாரியா
நாட்டிலுள்ள ஒரு ஊரும் அதின் செழிப்பான சுற்றுப்
$4^{1-54}$. புறங்களும் ஜனங்களின் நம்பிக்கையும், ஓரழகான பட
மாகக் கூட்டப்பட்டன. யூதர்கள் இகழ்ந்த அச்சாதியாருக்கு இயேசு கடவுளின் உன்னத சத்தியங்களைப் போதித்தபோது அவர்கள் அவைகளை விசுவாசித்து ஏற்றுக்கொண்டார்கள். அங்கே சிலநாளாகத் தங்கி கலிலேயாவிற்குப் புறப்பட்டுப் போய்ச் சேர்ந்தார். கலிலேயாவில் மூன்று நான்கு மாதங்களாகவிருந்து ஜனங்களுக்குப் போதித்து அவர்களெல்லாரும் மிக்க உற்சாகம் கொள்ளும்படி அநேக அற்புதங்களைச் செய்தார். இந்நூலில் அவை யாவும் எழுதியுள்ளனவல்ல. இவ்வாசிரியன் சிலவற்றைமாத்திரம் தெரிந்துகொண்டு எழுதினான். கலிலேயாதேசத்தார் யூதர்களைப்போலல்லர். அந்நாட்டில் தெளிந்த பக்திமார்க்கம் சிறப்பா யெண்ணப்பெற்றதேயொழிய சட்டதிட்டமான விஷயங்களைப்பற்றி அவ்வளவாய்க் கவலையுள்ளோரல்லர். ஆகையினால் அந்நாட்டில் இயேசுவின் உபதேசம் தகுந்த நிலம்பெற்று அதிகமாய் விளைந்துகொண்டிருந்தது. நமதாசிரியன் இக்காலத்தின் சம்பவங்களைப்பற்றி யதிகமாய்ச் சொல்லாமல், கலிலேயா நாட்டாரது சந்தோஷ அங்கீகரிப்பைமாத்திரம் காண்பிக்கவுற்றான். இக்காலத்தில் நடந்த ஒரே அற்புதத்தைமாத்திரம் எழுதினான். யூத சபைத்தலைவன் ஒருவன் எவ்விதமாய் விசுவாசித்துத் தான்



கோரின நன்மையைப் பெற்றான் என்பதைக் காண்கிறோம். இந்தக் காரணங்களால் இதற்குள்ளே அவரது கீர்த்தி விஸ்தாரமாய்ப் பரந்தது. யூதர் யாவரும் அவரைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

**5. விரோதம்.** இயேசு மறுபடியும் எருசலேமுக்கு வந்து முப்பத்தெட்டு வருஷமாய் வியாதியாய்க்கிடந்த ஒருவனுக்கு ஒரு சிறந்த அற்புதத்தை ஓய்வுநாளில் நடப்பித்தார். யூதர்கள் அவர் செய்த
நன்மையை நினைக்காமல், அந்த நாளில் செய்தல் அநீதி
$5^{1-47}$. யென்று தங்கள் பாரம்பரிய சட்டங்களுக்கு இசை
யாம விருப்பதாகவே எண்ணி அவரை விரோதித்தார்
கள். அப்போது யூதர்கள் தங்கள் விரோதத்தைத் தெளிவாய்க் காண்பித்தார்கள். இச்சம்பவத்தில் இயேசுவின் சிறந்த அன்பும், அவரது தெய்வீக வல்லமையும் விளங்கிற்று. அப்போது முதலாவது அவர் தமது தெய்வீக அதிகாரத்தைச் சாதித்தபோது அந்த யூத சாஸ்திரிகள் அது தங்கள் சட்டதிட்டங்களுக்கேற்றபடி காணப்படாதிருந்ததின் அதை யேற்றுக்கொண்டிலர்.

**6. லௌகீக பக்தி.** விரோத மதிகரித்ததால் இயேசு எருசலேமை விட்டுக் கலிலேயாவுக்குத் திரும்பிப்போனார். அவர் செய்த பிரசங்கங்களையும், சீஷர்கள் பயணஞ்செய்து பிரசங்கித்ததையும் யோவான்
இச்சுவிசேஷத்தி லெழுதாமல் ஒரு சம்பவத்தைமாத்திர
$6^{1-71}$. மெழுதியிருக்கிறான். இச்சம்பவம் அதிக முக்கிய
மான சம்பவம். கலிலேயரது பக்தி பெருகிப் பெருகி
மிதமிஞ்சி விளைந்தது. ஐயாயிரம் ஜனங்களுக்கு அற்புத ஆகாரத்தையுண்டாக்கின அந்த அதிசயத்தை ஜனங்கள் கண்டு மிகுந்த மனவெழுச்சிகொண்டு அவரை இராஜாவாக்க நினைத்ததின்பேரில் அவர் தமது வேலையின் சின்மயத்தன்மையை அவர்களுக்குக் காண்பித்தார். அப்போது அநேகர் லௌகீக ஆசையுள்ளவர்களாதலின் அவரை விட்டு நீங்கிவிட்டார்கள். இது கலிலேயாநாட்டில் நடந்த சம்பவங்களில் முக்கியமானது. நாம் இவ்விதமாய் ஒவ்வொரு சமயத்திலும் இயேசு செய்த வெளிப்படுதலையும் ஜனங்களுக்குண்டான பயனையும் நாமறிந்துகொள்ளத்தக்கதாகவே நமது ஆசிரியன் எழுதினான் என்றறிக. அவருடைய சீஷர்கள் அவரில் கூர்ந்த அன்பு இனி மிக உறுதியும் தெளிவுமுடையதாகிறது.

**7. பகையும் வாக்குவாதமும்.** இயேசு இனி அடிக்கடி கலி
லேயாவுக்குப் போய்ப் பிரசங்கித்தபோதிலும் நமதாசிரியன் கலிலேயா
நாட்டின் சஞ்சாரங்களை அறிவிக்காமல் அவைகளை விட்டுவிட்டான்.
இயேசு கொடுத்த வெளிப்படுதல்களும், யூதரின் விரோ
7^1-52. தமும் கலிலேயருக்குள்ளே வளரவில்லை. எருசலேம்
பட்டணத்தில் இயேசு இன்னும் வரவரத் தமது பெரு
மையைக் காட்டவும் யூதர் அதிகமதிகமாக அவரைப் பகைத்தெதிர்க்க
வும் நடந்ததால் அதில் நடந்த சங்கதிகளைமாத்திரம் இனி யெழுதி
யிருக்கிறான்.

முதலாவது அவருடைய சகோதரர் அவரைப்பற்றிக் கொண்ட
அபிப்பிராயத்தைப் பார்க்கிறோம். அதற்குப்பிறகு பற்பல ஜனங்
கள் அவரைப்பற்றி எவ்விதமாய்ப் பேசுதலும், அவரது வார்த்தை
களைக் கேட்டு எவ்வண்ணம் நினைத்தலும், பரிசேயர் அதிக பொறாமை
கொண்டு அவரைப் பிடிக்கத் தீர்மானித்தலும், பிடிக்கப்போன
சேவகர் பயந்து வருதலும் காணப்படுகின்றன.

8. 9. 10-ம் அதிகாரங்களில் அவரோடு யூதரும் பரிசேயரும்
செய்த வாக்குவாதங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் எப்போ
தும் தமது பெருமையையும் தெய்வீக அதிகாரத்தையும் மனுஷரை
இரட்சிக்கும் சிரேஷ்டத்தையும் தமது பிரத்தியேக
8^13-10^21. மான நிலைமையையும் தெளிவாய்ச் சாதித்துக் காண்பித்
தார். யூதர்கள் வாக்குவாதமாடி தங்கள் குலப்பெருமை
யையும் சட்டதிட்டங்களையும் பாரம்பரையின் மகிமையையும் சாதித்
தெதிர்த்தார்கள். இந்த வாக்குவாதங்களினிடையில் இன்னுமதிக
விரோதத்திற்கும் பொறாமைக்கும் ஏதுகரமான ஒரு காரியம் நடந்தது.
ஓய்வுநாளில் அவர் ஒரு குருடனைப் பார்வையடையச்செய்து
இவ்விதமாய் வெளிப்படையாக அவர்கள் சட்டதிட்டத்திற்கு அவ
மானஞ்செய்தார். அவர்களது பகை மூண்டு அம்மனுஷனை தூரத்
தினதும் அவன் பெற்றோரின் பயமும் அவனது தைரிய விசுவாசமு
மாகிய எல்லாம் நமக்குத் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கின்றன.
எல்லாவற்றிலும் கிறிஸ்துவினது சிறந்த குணமும் அவர் நேசித்த
அன்பும் அவரது மன அமைதியும் கடவுளுக்குரிய மேலான மகிமை
யும் பிரகாசித்து விளங்குகின்றன.



முன் சொல்லிய காரியங்கள் யாவும் தொடர்ச்சியாய் நடந்ததில்
10^21.22 இனிடையில் மூன்று நான்கு மாதங்கள் சென்றன.

கடைசியாக முன்னிருந்த பகை இன்னு மிதமிஞ்சி யதிகரிக்கவும்
மற்றோர் யாவரும் அதிகமதிகமாய் ஆச்சரியப்படவுந் தக்கதாக ஒரு
விசேஷித்த கிரியை நடந்தது. அதென்னவெனில்: பெத்தானியா
வில் அவர் லாசருவை உயிரோடெழுப்பினார். எருசலேம்பட்டணத்
தார் யாவரும் அதைக் கேள்விப்பட்டு மெச்சினார்கள்.
10^22-11^57. அதில் நடந்த சங்கதிகளெல்லாம் விவரமா யெழுதப்பட்
டிருக்கின்றன. நாமந்த குடும்பத்தின் துக்கத்தையும்
இயேசுவை நேசித்த நேசத்தையும் தங்கள் சகோதரனை மறுபடியும்
பெற்றுக்கொண்ட சந்தோஷத்தையும் நன்றாய்ப் பார்க்கிறோம். பிறகு
பரிசேயர் தங்கள் பகைக்கு முத்திரைபோட்டு இயேசுவைக் கொலை
செய்யும்படி திட்டமாய்த் தீர்மானித்தார்கள்.

**8. இயேசுவின் சிறப்பு.** 12-ம், 13-ம் அதிகாரங்களில் சில
அழகான சம்பவங்கள் எழுதியிருக்கின்றன. இவைகளில் இயேசு
வின் சிறப்பு விளங்குகிறது.

முதலாவது மரியாளது நன்றியறிதலும் அன்பும் ஓரழகான
சம்பவத்தில் தோன்றின. அதேசமயத்தில் யூதாசின் மனப்பொறா
மையும் காணப்பட்டது. பிறகு ஜனங்கள் அவரை மெச்சினதையும்
பரிசேயர் அதினால் அவரை இன்னு மதிகமாய்ப் பகைத்
12^1-17^26. ததையும் ஆசிரியன் தெரிவிக்கிறான். அவர் பண்டி
கைக்குப் போனபோது பண்டிகைக்காரர் எல்லாரும்
மனமகிழ்ந்து செய்த கொண்டாட்டத்தையும் புறஜாதியார் அவரைப்
பார்க்கவேண்டுமென்கிற ஆசையையும் பார்க்கிறோம். கடைசியாக
ஆசிரியன் அவர் ஜனங்களுக்கு எச்சரித்துச்சொன்ன சில வார்த்தை
களை யெழுதி அவர் செய்த பிரசங்க ஊழியத்தின் சரித்திரத்தை
முடித்துவிட்டான். பிறகு அவர் தமது சீஷர்களுக்குத் தமது சிறந்த
குணத்தைக் காட்டி அவர்களுக்குத் தாழ்ந்த ஊழியத்தைச்
செய்து தமது பெருமையையும் உண்மையான மாட்சிமையையும்
வெளிப்படுத்தினார். இயேசுவினன்பும் கடைசி இராப்போஜனமும்
யூதாசின் துரோகமும் சீஷர்களது விசனமும் பேதுருவின் பதஷ்ட
குணமுமாகிய இவைகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய்க் காணப்

பட்டுக் கடந்துகொண்டே போகின்றன. கடைசியாகத் தம்மைப்பற்றியும் சீஷரைப்பற்றியும் சபையைப்பற்றியும் சிறந்த போதகம்பண்ணிச் சீஷர்களுக்காகவும் சபையாருக்காகவும் சிறந்த வேண்டுதல்செய்து மரணமடையப் புறப்பட்டுப்போனதாகக் காண்பிக்கப்பட்டது.

**9. இயேசுவின் மகிமை காண்பித்த விசேஷித்த காட்சி.**
பின்பு இயேசுவின் பாடுகளும் வியாகுலமும் மரணமும் சொல்லியிருக்கின்றன. இவைகளில் முன்வந்த பதினேழு அதிகாரங்களில் சொல்லப்பட்ட சத்தியங்களும் குணநிசயங்களும் சிறந்த
$18^1$–$21^{25}$. காரியங்களும் முற்றிலும் தெளிவாய் விளங்குகின்றன.
யூதரது பகை முற்றுப்பெறவும் யூதாசின் துரோகமனம் இயேசுவைக் காட்டிக்கொடுக்கவும் சீஷர்கள் ஓடிப்போகவும் பேதுரு சபித்து மறுதலிக்கவும் பரிசேயர் ஒரு நியாயமுமின்றிக் கொலைத் தீர்ப்புச் செய்யவும் பிலாத்து பயந்து மரண ஆக்கினை விதிக்கவும் இயேசு அடிபடவும் பரிசேயரும் யூதரும் சேவகரும் நிந்திக்கவும் சிலுவையிலறையப்பட்டு இயேசு அதிக வேதனையடைந்து மரிக்கவும், அன்பர் வந்து அவரை அடக்கஞ்செய்யவுமாக நடந்ததெல்லாவற்றையும் நாம் விவரமாய்ப் பார்க்கிறோம். எல்லாவற்றிலும் இயேசு மனக்கலக்கமில்லாமல் அமைதியும் மாட்சிமையும் மிகுந்த அன்புமுடையவராய் விளங்கி நிற்கிறார். இந்த அபஜெய சம்பவத்தில் அவருடைய மாட்சிமை விளங்கிற்று. இந்த மகாவேதனையில் அவரது மிகுந்த அன்பு பிரகாசித்தது. இந்த நிந்தையிலும் அவமானத்திலும் அவரது ஆச்சரியமான மகிமை அதிக சிரேஷ்டமாய்த் துலங்கிற்று. இயேசு இவ்விதமாய்க் கடைசியாகத் தம்மை வெளிப்படுத்தினார். இந்தக் கடைசியான வெளிப்படுத்தல் சிறந்த வெளிப்படுத்தல். இதற்குப்பிறகு இயேசு எல்லாவற்றையும் ஜெயித்து உயிரோடெழுந்ததைப் பார்க்கிறோம். நாம் அதின் நிஜத்தை யறிந்துகொள்ள ஆசிரியன் அதிக ஜாக்கிரதையாய் நடந்ததெல்லா மெழுதுகிறான். மரியாளின் விசனமும் தோமாவின் சந்தேகமும் சீஷர்களின் பயமும் பேதுருவின் மனஸ்தாபமும் மாறி, அன்புள்ள சந்தோஷமும் சிறந்த நம்பிக்கையும் தைரிய மகிழ்ச்சியும் சமாதான உறுதியுமாகிவிட்டன. இவ்விதமாய் இயேசு தமது வெளிப்படுதலுக்கு முத்திரைபோட்டு முன் வெளிப்படுத்தினவற்றை உறுதிப்படுத்தினார். இந்நான்காம் சுவிசேஷ முழுவதி

3|16



லும் இயேசுவின் குணத்தின் மாட்சிமை சிறந்து வெளிப்படுகிறது. கடைசியாக எல்லாப் பகையையும் தீமைகளையும் வென்று மேற்கொண்ட மாட்சிமையையே பார்க்கிறோம். அவர் உண்மையாகவே மாட்சிமையுள்ள இரட்சகர் என்பதை நாம் அறியும்படி ஆசிரியன் அவரது சரித்திரத்தை வரைந்தெழுதியிருக்கிற நோக்கம் கடைசியாக தெரிவிக்கப்பட்டது.

# VI

## ஆசிரியனது கோட்பாடுகள்

மற்றச் சுவிசேஷங்களைப்பார்க்கிலும் இந்தச் சுவிசேஷத்தில் ஆசிரியனது கொள்கைகள் அதிகமாய்க் கலந்திருக்கின்றன. ஆகையால் அவைகளைக் கவனமாய் ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்நூலின் முகவுரையில் ஆசிரியன் அபிப்பிராயங்கொண்ட முக்கியமான போதனை ஒன்றிருக்கிறது. அப்போதனையின் சாரம் முழு நூலிலும் பரந்திருக்கிறது. எப்படியெனில், பரமவாக்கைப்பற்றிய போதனையே ஆசிரியன் இயேசுவைப்பற்றிச் சிந்தித்த விதத்திற்குச் சாராம்சமாயிருக்கிறது. ஆகையால் அந்தப் போதனையைப்பற்றி வேறே அதிகாரத்தில் தனிமையா யாலோசித்துப்பார்ப்பது அவசியம். இப்போது அவன் எழுதின சுவிசேஷத்தில் தோன்றுகிற மற்ற நோக்கங்களையும் அபிப்பிராயங்களையும் நாம் எடுத்துக் கூறவேண்டும். இவைகளை அவன் இயேசுவின் போதனைகளைக் காட்டுகிற மாதிரியிலும் அவன் பிரத்தியேகமாயெழுதின அவனது நோக்கங்களிலும் நாம் கண்டுபிடிக்கலாம். அவன் $20^{30}$-ம் வாக்கியத்தில் தான் எழுதிய நோக்கத்தைத் திட்டமாய்த் தெரிவிக்கிறான். "நீங்கள் இயேசுவே கிறிஸ்துவாகிய தேவகுமாரன் என்பதை விசுவாசித்து அவரது நாமத்தைக்கொண்டு ஜீவன் பெறும்பொருட்டு" என்பதே. இந்த நோக்கத்தில் இரண்டு பாகங்களுண்டு. முதலாவது சத்தியத்தை மனப்பூர்வமாய் ஒப்புக்கொள்ளுதல். இரண்டாவது அதினால் ஒரு சிலாக்கியத்தை யடைதல். முதலாம் காரியம் மனதுக்கும், இரண்டாங்காரியம் ஜீவியத்துக்குமுரியது.

**தேவகுமாரன்** என்பது இந்நூலில் விசேஷித்த வார்த்தை. கிறிஸ்து என்னும் வார்த்தை யூதர்கள் எதிர்பார்த்த மேசியாவைக் குறிக்கிறது. தேவகுமாரன் என்பதும் அதற்குச் சமம். நமது ஆசிரியன் சில விடங்களில் அப்படியே இதை உபயோகித்துவருகிறான். அந்த வார்த்தை ஒரு பிரத்தியேகமான நிலையைக் காண்பிக்கிறது. $1^{49}$ $11^{27}$. எல்லாரையும் தேவகுமாரரென்று சொல்லினும் இயேசுவின் விஷயத்தில் அதை உபயோகிக்கும்போது விசேஷித்த அர்த்தத்தைக் குறிப்பிடுகிறான். அவர் விசேஷித்தவிதமாய்த் தேவகுமாரன் என்று சொல்லப்பட்டார். அவர் அவ்விதமாய்த் தம்மை அழைத்தலால் யூத சங்கத்தார் அவரை நியாயந்தீர்த்தார்கள். அவர் கடவுளுக்குப் பூரண புத்திரத்துவத்தை அடைந்தவராயிருந்தார். $1^{18.34}$ $3^{17.18.28.36}$ $4^{25.29}$ $5^{19.22.28}$ $6^{14.68}$ $9^{30}$ $10^{36}$ $11^{4}$ $12^{12-19.34-36.}$ $17^{1}$ $19^{7}$ பார்க்க.

**நித்தியஜீவன்.** $20^{30}$–ம் வாக்கியத்தின் இரண்டாம் பாகத்தில் நித்தியஜீவனைப்பற்றிப் பேசுகிறான். ஆசிரியன் எப்போதும் இந்த வார்த்தையால் மோக்ஷபதவியைக் குறிப்பிடுகிறான். இந்த நித்திய ஜீவன் மகா விசேஷித்தது. எல்லாரும் அதை அடையவேண்டுமென்று விரும்புவார்கள். இதை யடைவது எல்லாருடைய மனத் தாற்பரியமாதல் வேண்டும். இயேசுவை தேவகுமாரனென்று உண்மையா யறிந்துகொள்வது அந்த நித்தியஜீவனுக்கு சாராம்சமாயிருக்கிறது. அப்படிப்பட்ட அனுபோக அறிவு நித்தியஜீவனை யடைந்தவரது உணர்ச்சியாம். அவர்களது மனம் எப்போதும் இந்தச் சத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. அந்த நித்தியஜீவன் ஆத்துமாவின் நிலையாயிருக்கிறது. அது இவ்வுலகத்தில் ஆரம்பித்து பரலோகத்தில் பூரணத்தையடைகிறது. அதைப் பெற்றவர்களுக்கு அந்த நிச்சய உணர்ச்சி யிருக்கவேண்டும். $3^{15}$ $4^{36}$ $5^{39}$ $6^{54.68.}$ $10^{28}$ $12^{25}$ $17^{2.3}$ வசனங்களைப் பார்க்க. இந்த நித்தியஜீவன் கிறிஸ்துவினது ஈவானதேயல்லாமல், மனிதரது சொந்தக் கிரியையால் உண்டானதல்ல. முன்சொன்ன வாக்கியங்களை வாசித்துப் பார்த்தால் அதைப் பெறுவதற் கேதுவான நிபந்தனைகளையும் அதின் தன்மையையும் நன்கறியலாம்.

இந்த நான்காம் சுவிசேஷகன் முக்கியமாய் நான்கு விசேஷித்த வார்த்தைகளுக்குச் சார்பாக இயேசுவின் போதனையைக் காண்பிக்



கிறான். இந்த வார்த்தைகளை யதிகமாய் உபயோகித்துவருகிறான். அவைகளாவன: சத்தியம், ஜீவன், ஒளி, அன்பு என்பவைகளே. இந்த வார்த்தைகள் மூலமாய் ஆசிரியனது போதனை முழுவதும் காணப்படும். அவைகளுக்கு நேர்விரோதமான காரியங்களைக் காட்டும்படி இந்த வார்த்தைகளுக்கு எதிரிடையான வார்த்தைகளையும் உபயோகிக்கிறான். அதாவது—பொய், மரணம், இருள், பகை என்பவைகளே. முறையே அவைகளும் இவைகளும் அடிக்கடி ஜதை ஜதையாக வருகின்றன. $1^{5}$ $3^{15.16.19}$ $5^{24.25}$ $6^{50}$ $8^{44}$ $10^{10}$ $11^{9.10.25}$ $12^{35.46}$ $15^{19}$ இவைகளைப் பார்க்க.

நாம் ஒவ்வொரு வார்த்தையையும் எடுத்தாலோசித்து அது உபயோகிக்கப்பட்ட விதமின்னதென்று பார்ப்போம்.

**சத்தியம்.** இயேசு கடவுளின் சத்தியத்தை உலகத்துக்கு வெளிப்படுத்திவருகிறார். கடவுளே சத்தியமுள்ளவர். இயேசுவின் வார்த்தைகள் யாவும் சத்தியமுள்ளன. அவரே சத்திய சொரூபியானார் இதற்குச் சாக்ஷியாக அவர் பரம தந்தையையும் தம்மையும் தமது கிரியைகளையும் யோவான்ஸ்நானகனையும் பழைய முனிவர்களையும் பரிசுத்தாவியையும் சுட்டிக் காட்டினார். சத்தியம் என்பது நாமறியக் கூடிய விதமாத்திரமல்ல, அதை நாம் நடப்பிக்கவுங்கூடும். சத்தியம் நடப்பித்தல் என்பது யோவான் எழுதிய நூற்களில் வழங்குகிற வாசகம். இயேசுவைத் தள்ளினவர்கள் சத்தியமில்லாதவர்களானார்கள். அவருக்கு விரோதமானதெல்லாம் பொய். பிசாசு பொய்யின் தந்தையாம். கடவுளை வணங்கும்படி உண்மையான மனம் அவசியம். பரிசுத்தாவி சத்தியத்தின் ஆவியென்று சொல்லப்பட்டிருக்கிறது. $1^{14.17}$ $3^{21}$ $4^{23.24}$ $5^{33}$ $8^{32.40.44.45.46}$ $14^{6.17}$ $15^{26}$ $16^{7.13}$ $17^{17.19}$ $18^{37.38}$ இவைகளைப் பார்க்க.

**ஜீவன்.** இயேசுவே உலகத்திற்கு ஜீவனாயிருக்கிறார். அவரை விசுவாசித்தவன் ஜீவனையுடையவன். மனிதருக்கு பூரணமான ஜீவனைக் கொடுக்க உலகத்தில் வந்தார். மோக்ஷம் நித்தியஜீவன் என்று அழைக்கப்படுகிறது. இயேசுவே சுயம்புவாய் ஜீவனையுடையவர். அவரை ஆகாரமாக அடைவது உண்மையான ஜீவனைப் பெறும் வழியாம். உயிர்த்தெழுதல் அவரால் உண்டாகிறது. அவரை விசுவாசிப்பது நித்தியஜீவனுக்கேதுவாம். அவரைத் தள்ளிவிடுவது மர

ணத்திற் குட்படுத்தும். ஜீவனே மனுஷனுக்குச் சிறந்த பொருள். கடவுளை இயேசுகிறிஸ்துமூலமா யறிவதே நித்தியஜீவனை யடைவதாம். இயேசுவினது ஜீவன் உலகத்தின் இரட்சிப்பாம். $1^{4}$ $3^{15. 36}$ $4^{14. 36}$ $5^{24. 26. 29. 39. 40}$ $6^{27. 33. 35. 40. 47. 48}$ $6^{51. 53. 54. 63. 68}$ $8^{12}$ $10^{10. 28}$ $11^{25}$ $12^{25. 50}$ $14^{6}$ $17^{2. 3}$ $20^{31}$ பார்க்க.

$10^{11. 15. 17}$ $12^{25}$ $13^{37. 38}$ $15^{13}$. இவைகளில் இயற்கையான உயிரைக் குறிப்பிடுகிறான்.

**ஒளி.** இயேசு உலகத்திற்கு ஒளியானார். உலகமுழுவதும் இருளால் மூடப்பட்டு ஒளியைக் காணாமலிருந்தது. அவர் எக்காலத்திலும் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிற நித்திய ஒளிமயமாயிருக்கிறார். அந்த ஒளி மனுஷனது ஜீவனாயிற்று. இந்த ஞான ஒளி மனிதரது அறிவாயிற்று. இதுமூலமாய் மனிதர் யாவரும் கடவுளை யறிகிறார்கள். இயேசு கண்திறந்த அந்தக் குருடனைக்குறித்த சம்பவத்தினால் இந்தச் சத்தியத்தைக் காட்டினார். இயேசுவை யறிவோர் ஒளியின் மக்களாகி ஒளியில் நடக்கிறார்கள். மற்றோர், இருளின் மக்களாகி இருளில் நடந்து வழுவி இடறிப்போகிறார்கள். தீயோர் இருளை விரும்புவார்கள்; ஒளியில் நடப்பதும் கடவுளின் கட்டளைப்படி நடப்பதும் ஒன்று. $1^{4. 5. 7. 8. 9}$ $3^{19-21}$ $5^{35}$ $8^{12}$ $9^{5}$ $11^{9. 10}$ $12^{35. 36. 46}$ பார்க்க.

**அன்பு.** யோவான் அன்பின் அப்போஸ்தலன் என்னப்பட்டான். அவன் ஒரு சின்மய அன்பைப்பற்றி முக்கியமாய் எழுதினான். இயேசுவினன்பும் கடவுள் உலகத்தை நேசித்த அன்பும் அவன் எழுதின நூற்களில் பிரகாசித்து விளங்குகின்றன. கடவுள் அன்புமயமாகவேயிருக்கிறார். யோவான் தன்னை இயேசு நேசித்த சீஷனென்று சொல்லுகிறான். கடவுள் உலகத்தில் அன்புகூர்ந்து இயேசுவை யனுப்பினார். இயேசு உலகத்தாரை நேசித்து தமது ஜீவனைக் கொடுத்தார். மற்றவர்களை நேசிக்கவேண்டுமென்னும் புதுக் கட்டளையை அவர் தமது சீஷருக்குக் கொடுத்தார். சீஷர்களுக்கு முக்கியமான குணமாவது: இயேசுவையும் மற்றோரையும் நேசிக்குமன்பு. அன்புள்ளவர் ஊழியக்காரராவார். இயேசு பேதுருவுக்கு அன்புள்ள குணத்தின் சிரேஷ்டத்தைக் காண்பித்தார். அவர் தம்முடைய சீஷர்களை மிகவும் நேசிக்கிறாரென்று இச்சுவிசேஷத்தில் காணப்படுகிறது. கடவுள் தமது குமாரனை நேசிக்கிறார். $3^{16. 19. 35}$ $5^{42}$



$10^{17}$ $11^{5}$ $12^{43}$ $13^{1. 23. 34}$ $14^{15. 21. 23. 24. 28. 31}$ $15^{9. 12. 17}$ $17^{23. 24. 26}$ $19^{26}$ $21^{7. 15. 16. 20}$ $5^{20}$ $11^{3. 36}$ $12^{25}$ $15^{19}$ $16^{27}$ $20^{2}$ $21^{15. 17}$ வசனங்களைப் பார்க்க.

இவ்வாக்கியங்க ளெல்லாவற்றையும் நன்றாய்ப் பார்த்துச் சிந்திக்க வேண்டும். அவர் அதிகமாய் உலகத்தின் பகையைப்பற்றிப் பேசினார். உலகம் இயேசுவைப் பகைத்ததுபோல அவருடைய சீஷர்களையும் பகைக்கும். இவ்விதமாய் அந்த நான்கு வார்த்தைகளாலும் இந்நூலின் போதனை முழுவதும் விளங்குகிறது.

**இயேசுவைப்பற்றிய அபிப்பிராயம்.** இந்நூலின் ஆசிரியன் இயேசுவின் தெய்வீககுணத்தையும் மனுஷீகத்தையும் தெளிவாய்க் காட்டுகிறான். அவரது சின்மய தெய்வீகம் அவரது நேர்த்தியான மனுஷீகத்தை மறைக்க இடங்கொடுக்கிறதில்லை. தாகம் $4^{7}$ $19^{28}$, இளைப்பு $4^{6}$, நேசம் $20^{2}$, கண்ணீர்விடுதல் $11^{35}$, அறியாமை $11^{34}$ ஆகிய இவைகளெல்லாம் அவருக்கிருந்ததாகச் சொல்லியிருக்கிறது.

பவுல் பிரசங்கித்த கிறிஸ்துவே இச்சுவிசேஷ நூலின்மூலமாய் வெளிப்பட்டிருக்கிறார் என்று வித்துவான்கள் சொல்லுகிறார்கள். அவருக்கு உண்மையான மனுஷீகமிருக்கிறதாக இதில் தோன்றுகிறது. அவர் இளைப்படைதலும் அழுதலும் தாயாரை நினைத்தலும் இந்நூலிலேயே எழுதியிருக்கின்றன. எனினும் அவரது தெய்வீக மகிமையே பிரகாசித்துத் தோன்றுகிறது. உண்மையான மனுஷனானவர் சின்மய கிறிஸ்துவே. இயேசுவே உலகத்தின் இரட்சகராக காண்பிக்கப் பெற்றார். அந்த இரட்சிப்பில் அவரது மரணம் விசேஷித்த கிரியையாம். $1^{29}$ $3^{14}$ $4^{32. 42}$. $10^{11. 17. 18}$ $11^{9}$ $12^{32}$ $18^{14}$. மனிதர் இயேசுவாலேதான் நித்தியஜீவனை யடைவார். இயேசுவைச் சரியானபடி விசுவாசிப்பது முக்கியமான காரியம். அவரே கடவுளின் தூதனானார். இச்சத்தியங்கள் விசேஷமாய் யூதரோடு செய்த வாக்குவாதங்களில் வெளிப்பட்டன. 5—10 அதிகாரங்களை நன்காராய்ந்து பார்க்கின் இயேசுவின் உயர்தர ஸ்திதியை யறியலாம். இனி இயேசுவைப்பற்றிய போதனையை யறிய விரும்பின் பரம வாக்கைப்பற்றிய போதனையின் விவரத்தைப் பார்க்க.

**கடவுளைப்பற்றிய போதனை.** ஆசிரியன் கடவுளின் சின்மயத் தன்மையை நன்குணர்ந்து போதிக்கிறான். அவர் சொரூபமில்லாமல்

சுத்த பரமாத்மாவா யிருக்கிறாரென்பதை உணருகிறான். எனினும் மனிதர் சமீபிக்கக்கூடாதவரும் மனிதர் விஷயங்களில் சம்பந்தமில்லாதவருமானவராக எண்ணிக்கொண்டிலன். அவர் உலகத்தில் அன்புகூர்ந்து அதை மிகவும் கவனித்து முழுவதுமாய் இரட்சிக்கவேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறார். $3^{16}$ $4^{24}$. அவரது விசேஷித்த லக்ஷணங்களாவன: பரிசுத்தம், ஞானம், மாசின்மை, சத்தியம், அன்பு என்பவைகளே. $1^{4.5}$ $8^{56}$ $17^{11.25}$. இயேசு எப்போதும் கடவுளை தந்தை என்கிறார். கடவுளும் இயேசுவும் நித்தியமாய் தந்தை குமாரனுமாக ஒன்றாகவே அமைந்திருக்கிறார்கள். $10^{30-42}$.

**உலகத்தைப்பற்றிய அபிப்பிராயம்.** யோவான் தான் எழுதின நூற்களெல்லாவற்றிலும் உலகத்தை விசேஷித்தவிதமாய் எண்ணுகிறான். உலகம் என்பது இயேசுவைத் தேவகுமாரனென்று விசுவாசியாமல் இயேசுவுக்கு விரோதமாய் நடக்கும் ஜனத்தை எப்போதும் குறிக்கிறது. உலகத்தார் இயேசுவைப் பகைக்கிறார்கள். பிசாசானவன் இவ்வுலகத்தின் அதிபதி. உலகத்தார் இருளில் நடந்து பொய்யரும் அன்பிலரும் பொறாமைகொண்டவருமாவார்கள். இந்த நான்காம் சுவிசேஷத்தில் உலகம் என்னும் வார்த்தை 67 தரம் வருகிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களிலும் 13 தரம் மாத்திரம் வருகிறது. இது யோவானுக்கு விசேஷித்த வார்த்தையெனக் காணப்படுகிறது. அவன் எழுதின நிருபங்களில் இது 21 தரம் வருகிறது. இந்த விரோதமான உலகத்தில் அன்புகூர்ந்து கடவுள் அதைத் தமது குமாரன்மூலமாய் இரட்சிக்கப் பிரயாசைப்படுகிறார். $1^{9.29}$ $3^{16.17}$ $7^{7}$ $8^{23}$ $9^{5}$ $12^{31}$ $14^{17}$ $16^{11}$ $17^{9.21}$ $18^{33}$ முதலியவைகளைக் காண்க.

**இரட்சிப்பைப்பற்றிய போதனை.** இது முன்னே சொல்லிய குறிப்புகளிலும் வெளிப்பட்டது. இயேசுவை விசுவாசிப்பது இரட்சிப்புக்கேதுவாம். இரட்சிப்பைப் பெறுவதும் நித்தியஜீவனையடைவதும் ஒன்றுதான். முன்னே சொன்னபிரகாரம் இயேசுவின் மரணமே உலகத்திற்கு இரட்சிப்பை யுண்டாக்கின கிரியையாயிற்று. $1^{29}$ $3^{15-18}$ $1^{49}$ $12^{32}$ $18^{14.15}$. பூரண இரட்சிப்படைவதற்கு இயேசுவில் நிலைத்திருக்கவேண்டும்.

**கடைசிக்காலக் குறிப்புகள்.** கடைசிக்காலத்தைப்பற்றி இந்த நூலில் அதிகமாய்ச் சொல்லப்படவில்லை. ஆசிரியன் நியாயத்தீர்ப்பு



எப்போதும் நடக்கிறதாக நினைக்கிறான். இயேசுவை உண்மையாய் ஏற்றுக்கொள்ளுவது நிதானிக்கப்பட்ட குறிப்பு. அவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் தக்க பயனைப் பெறுவார்கள். எல்லாரும் தாங்கள் செய்கிற கிரியைகளுக்குத் தக்கதாகக் கடைசிக்காலத்திலாகிலும் பயனைப் பெறுவார்கள். கடைசிக்காலத்தில் எல்லாவிஷயங்களிலும் இயேசுவே ஜெயமடைவார். $8^{16}$ $15^{5}$ பார்க்க.

**பரிசுத்தாவியைப்பற்றிய போதனை.** இந்தப் போதனை விசேஷமாய் இந்நான்காம் சுவிசேஷத்தில் காணப்பட்டிருக்கிறது. கடவுளது ஆவியைப்பற்றி நாம் பழைய ஏற்பாட்டிலும் வாசிக்கிறோம். எனினும் மற்ற நூற்களில் அதின் போதனை தெளிவாய் உரைக்கப் பெறுகிறதில்லை. உலகத்தின் பற்பல கிரியைகளை இயக்குகின்ற தெய்வ சக்தியாகவும் எங்கும் வியாபித்து உயிர்ப்பிக்கிற அரூப வஸ்துவாகவும் மனிதரது மனங்களில் எல்லாவிதமான நன்மைகளையும் பிறப்பிக்கின்ற காரணமாகவும் பழைய ஏற்பாட்டில் இந்த ஆவி தோன்றப்படுகிறது. ஆதி $1^{2}$ யோபு $33^{4}$ சங் $33^{6}$ $104^{30}$. இந்த ஆவியாலேயே தீர்க்கதரிசிகள் கடவுளது வார்த்தைகளையுரைத்து அவர் வழிகளை ஜனங்களுக்குக் காண்பித்தார்கள். யோசு $9^{7}$ எசே $2^{2}$ $3^{12}$. அடிக்கடி அந்த ஆவி ஒருவனைப்போலக் குறிக்கப்பட்டது. ஆகையால் யோவானது திட்டமான போதனைக்கு முன்குறிப்புகள் பழைய ஏற்பாட்டிலிருக்கின்றன. கிரியனுபந்த சுவிசேஷங்களில் பரிசுத்தாவியைப்பற்றி அதிகம் பார்க்கிறதில்லை. இந்நான்காம் சுவிசேஷத்திலோ அதைப்பற்றித் திட்டமான போதனையைக் காண்கிறோம். நிக்கொதேமுடன் நடந்த சம்பாஷணையில் ($3^{5-8}$) கடவுளாவி சின்மய ஜீவியத்திற்குக் காரணமாகிறதென்றும், சமாரிய ஸ்திரீ சம்பாஷணையிலும் ($4^{10}$) கூடாரப்பண்டிகைப் பிரசங்கத்திலும் ($7^{37}$) இயேசுவே ஆவியின் உற்பத்தி யிடமென்றும் சொல்லப்படுகிறது. சீஷர்களுக்குக் கொடுத்த கடைசிப் போதனைகளிலே விசேஷமாய்க் கடவுளாவியைப்பற்றிக் கேட்கிறோம். பரிசுத்தஆவி என்னப்பட்டவர் உலகத்தில் கிறிஸ்துவின் பிரதிநிதியாயிருந்து சீஷர்களுக்குப் பரிந்து பேசுபவர் என்பதும் அவர் உயர்திணையுள்ள ஒருவரென்று சொல்லத்தக்கவரும் பரம தந்தையும் குமாரனுமல்லாதவராயிருக்கிறாரென்பதும் அவர் தந்தையிலிருந்து புறப்பட்டுவந்த தேவனோடு

நித்திய சம்பந்தமுடையவராவாரென்பதும் அவர் நித்தியமாய் சீஷர்களுடன் ஐக்கியமாகி குமாரனது வேலையாகிய போதனை, வெளிப்படுத்தல் என்பவைகளைச் செய்து, அவரை மகிமைப்படுத்தி, அவரைப்பற்றி உலகத்திற்கு சாட்சி கூறி, பாவம், பரிசுத்தம், நீதி என்பவைகளை உணர்த்துவாரென்பதும், அந்த போதனைகளிலிருந்து காணப்படுகிறது. $14^{16.17.26}$ $15^{26.27}$ $16^{7.8.13-15}$ பார்க்க. ஆகையினால் தெய்வ தத்துவத்தில் திரிமூர்த்திகளென்று சொல்லக்கூடிய மூவரைப் பார்க்கிறோம். அவர்கள் தந்தையானவர், வாக்கானவர், ஆவியானவர் என்பவர்களே.

# VII

## பரம வாக்கைப்பற்றிய போதனை

1. வார்த்தையென்பது சொல்லப்பட்ட உரையென்றும் ஒரு பிரசங்கம் என்றும் சாதாரணமாய் அர்த்தங்கொள்ளும். கடவுள் விஷயத்தில் வார்த்தையென்பது கடவுள் உரைத்த ஒரு காரியத்தையும் கடவுள் செய்த வெளிப்படுத்தலையும் கடவுளின் சித்தத்தை வெளிப்படுத்துகிற வேதவாக்கியங்களையும் குறிக்கிறது. யோவான் விசேஷித்த அர்த்தத்தோடு அதை உபயோகித்தனன். அவன் எழுதிய நூற்களில் அது தேவகுமாரனென்னும் பரம வாக்கைக் குறிக்கிறது. இவ்விடத்தில் யோவான் இயற்றின நூற்களில் விளங்கும் அந்த அர்த்தத்தைப்பற்றிமாத்திரம் சிந்திப்போம். இவைகளில் இந்த மொழியே விசேஷித்த அர்த்தத்துடன் ஆறுமுறை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. அதாவது நான்காம் சுவிசேஷம் $1^1$ (மூன்று முறை) $1^{14}$. இந்த இடங்களில் வார்த்தையென்றும், பிறகு முதல் நிருபம் $1^1$-ல் ஜீவ வார்த்தையென்றும் வெளிப்படுத்தின விசேஷம் $19^{13}$-ல் தேவனது வார்த்தையென்றும் எழுதியிருக்கிறான். யோவான் அதை உபயோகித்ததில் ஒரு விசேஷித்த குறிப்புண்டு. அதென்னவெனில்: அவன் எழுதிய நூற்களில் அஃறிணைப் பொருளைக் குறிக்கும் இம்மொழி உயர்திணைப் பொருளாக ஒருவரையே குறிக்கிறது. இந்தக் குறிப்பாலே யோ



வான் இம்மொழியை உபயோகித்துக்கொள்ளும் விதம் விசேஷித்ததாயிருக்கிறது. அவன் தேவகுமாரன் என்பவரை வார்த்தையல்லது பரம வாக்கு என்று சொல்லுகிறான். இது வேதத்திலிருக்கிற மற்ற இடங்களில் வந்தால் அஃறிணைப் பொருளையே குறிக்கிறது.

2. **இந்தப் போதனையின் உற்பத்தியும் வரலாறும்.** பரம வாக்கைப்பற்றிய போதனைக்குப் பழைய ஏற்பாட்டில் சில மூலாதாரங்களுண்டு. ஆதியாகமத்தில் கடவுள் ஏழு வார்த்தைகளினால் உலகத்தைச் சிருஷ்டித்தாரென்று சொல்லியிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் கடவுளின் வார்த்தையென்பது கடவுள் கொடுத்த வெளிப்படுத்தலைக் குறிக்கிறது. எபிரெய வேதத்தில் கடவுளின் வார்த்தை வந்தது (தமிழ் மொழிபெயர்ப்பில் வார்த்தை யுண்டாகி என்னப்பட்டது) என்றும், எசா $2^1$ மீகா $1^1$ ஆமோஸ் $1^1$ தரிசித்த வார்த்தையென்றும் சொல்லியிருக்கிறது. அநேக இடங்களில் கடவுள் யேகோவாவின் தூதன் என்னப்பட்டவரால் தம்மை வெளிப்படுத்தினாரென்று விளங்கிற்று. இன்னும் சில இடங்களில் ஞானம் என்பது உயர்திணைப் பொருளுடையதாய்க் கடவுளை வெளிப்படுத்தும் கருவியாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எபிரெய தள்ளுதலாகமங்களில் (அப்போகிரிப்பா) வாக்கு என்பது அடிக்கடி உயர்திணைப் பொருளுள்ளதாகிக் கடவுளின் கருவியாகக் காணப்படுகிறது. ஆகையால் எபிரெய சாஸ்திரத்தில் கடவுள் தம்மை வெளிப்படுத்தும் கருவியானது ஒருவராகவும் அடிக்கடி வாக்கென்னும் பெயருடையதாகவும் காணப்படுகிறது. கிரேக்கு சாஸ்திரத்திலும் விசேஷமாய்ப் பீலோவு என்னும் சாஸ்திரியாலேயே கடவுள் உலகத்தில் தமது கிரியைகளை இயக்காநின்ற சக்தியே வாக்கு என்னப்பட்டது. பீலோவு எழுதின நூற்களில் இந்த வாக்கு நிற்குணக் கடவுளினிடத்தினின்று நித்தியமாய்ப் புறப்பட்டு கடவுள் ஞான முழுவதுமுடையதாய் ரூபமடைந்து உலகத்தை யுண்டாக்கி அதை நடத்திவருகிற சக்தியுடையதென்று சொல்லியிருக்கிறது. அதற்கு உயர்திணைப் பொருளில்லையென்றதால் யோவானின் அபிப்பிராயம் இதிலிருந்து உண்டாயிற்றென்று சொல்லத்தக்கதன்று. அந்த சாஸ்திரம் அந்த கிரேக்கு தேசங்களில் பரம்பினதாகையினால் யோவானும் அநேக [illegible]யாரும் அதை அறிந்திருப்பார்கள். இதுவும் அந்தப் போதனையின் உற்

பத்திக்கு துணைக்காரணமாகலாம். ஆயினும் முதல்காரணம் எபிரெயவேதத்தின் கொள்கைகள்தான்; ஆகையால் இந்த சொல் எபிரெயருக்கும் மற்றோருக்கும் தெரிந்த சொல்லாதலின் யோவானின் நோக்கத்தை அவர்களுக்கு வெளிப்படுத்தத்தக்க சொல்லாகும்.

**3. யோவானது போதனையின் விவரம்.** இந்தப் போதனையின் உற்பத்திக்குக் காரணமான கொள்கைகளிலிருந்து யோவானடைந்த அபிப்பிராயம் யாதெனில்: கடவுள் தம்மை உலகத்தில் வெளிப்படுத்துங் கருவியும், கடவுளின் சக்தியின் ரூபமும் உலகத்தைப் படைத்தழிக்கும் கர்த்தாவுமாயிருக்கிற ஒரு வஸ்து வுண்டென்பதே. முன் சொன்னவைகள் முதல் துணைக் காரணங்களாயினும் இயேசுவே யோவானது போதனைக்கு நிமித்த காரணமாக விருந்தாரென்று அறியவேண்டும். யோவான் இயேசுவிடம் படித்ததென்னவெனில்: அந்த வஸ்து கடவுளின் குமாரனாகிய இயேசுகிறிஸ்து என்பதே. இந்தச் சத்தியத்தினாலும் தாம் இயேசுவினிடங் கேட்டும் பார்த்தும் வந்த விஷயங்களினாலும் முன்னே ரபிப்பிராயப்பட்ட அநேக காரியங்கள் யோவான் மனதில் அதிக மாறுதலையும் விருத்தியையும் பெற்றன. யோவானின் போதனை விசேஷமாய் சுவிசேஷத்தின் முகவுரையில் காணப்படுகிறது.

பரம வாக்கைப்பற்றிய போதனையின் விவரம் பின் வருமாறு.

**(i) அந்த வாக்கின் தன்மை.** இந்தப் பரம வாக்கு உயர்திணையுடையவராய்த் தெய்வத்தன்மை யுள்ளவராவார். அவர் கடவுளுக்குப் பிரத்தியேகமானவராயிருந்தும் எல்லாக் காரியங்களிலும் அவருக்குச் சரிசமானமானவர். அவரது குணம் கடவுளின் குணம். அவர் கடவுளைப்போலச் சுயம்புவாய் ஜீவனுள்ளவர்.

**(ii) அவரது வரலாறு.** அவர் "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்று சொல்லத்தக்கவராய்க் காலாகாலங்களிலும் இருப்பவரே. ஆதிகாலத்திலும் அவரிருந்ததாக யோவான் $1^1$-ல் சொல்லியிருக்கிறார். பரம வாக்கின் சரித்திரகாலத்திற்கு எல்லைகளில்லை. அவர் நித்திய காலமாய்க் கடவுளுடனிருக்கிறார். கடவுளோடு அவர் விசேஷித்த சம்பந்தமுமுள்ளவராம். அவர் எப்போதும் கடவுளை வெளிப்படுத்துபவரும் அவருடைய கருவி கர்த்தாவுமாயிருக்கிறார்.



உலகத்தோற்றத்தில் அவர்மூலமாய் கடவுள் உலகத்தை யுண்டாக்கினார். சகலமும் அவரிடத்தில் பிறப்பிடமும் நோக்கமும் முடிவும் பெறுகிறது. "மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபெறு, எப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகும்" என்று சொல்லத்தக்கதே. அவரே உலகத்தை யளித்து எப்போதும் அதற்குக் கடவுளை வெளிப்படுத்திக்கொண்டேயிருக்கிறார். அவர்மூலமாய் எக்காலத்திலும் கடவுளின் ஒளியும் ஜீவனும் வெளிப்பட்டுவருகிறது. மனுஷனுக்கிருக்கிற பரம ஞானமெல்லாம் அவராலே உண்டாகிறது. பற்பல மதங்களில் காணப்படும் சத்தியத்திற்கு அவரே காரணர். அவர் உலகத்தில் பிரகாசிக்காநின்ற ஒளியெனினும் மனிதர்கள் இருளினால் அந்த ஒளியைக் கண்டுபிடித்திலர். ஆகையால் ஒளியும் இருளும் ஒன்றுக்கொன்று மேற்கொள்ளாமல் உலகத்திலிருந்தன. இந்த பரம வாக்கு சின்மயத் தன்மையுடையவராய் எப்போதும் உலகத்தில் வியாபித்துக்கொண்டிருந்தனர். பரம வாக்கின் சரிதையில் ஒரு விசேஷித்த காலமுண்டு. அது அவர் மனுஷனான காலம். நித்தியமாய் இருந்திராநின்ற இந்தப் பரம வாக்கு கடவுளைப் பூரணமாய் வெளிப்படுத்தும்படி ஓர்காலத்தில் உலகத்தில் தோன்றி மனுஷனானார். அந்தப் பரம வாக்கே ஒரு உண்மையான மனுஷனானார். அவரது தெய்வீக குணம் மனுஷ குணமாயிற்று.

"அகளமா யாரு மறிவரி தப்பொருள்
சகளமாய் வந்ததென் றுந்தீபற"

என்றதுபோலும். தெய்வத்தன்மையுடைய இந்தப் பரமவாக்கான மனுஷன் இயேசுகிறிஸ்துவே. இயேசுகிறிஸ்துவைப் பரம வாக்கென்று சொல்லி இயேசுகிறிஸ்துவே கடவுளின் பூரண வெளிப்படுத்தலும் கடைசி வார்த்தையுமா யிருக்கிறாரென்பதையுங் காட்டுகிறான். காலத்தின் எல்லைக் குட்படாதவராகிய பரம வாக்கானவர் தம்மைக் காலத்தின் எல்லைக் குட்படுத்தி முன்னே கடவுளுடனிருந்த சம்பந்தத்தையே உலகத்திலும் பூரணமாய் நிறைவேற்றினார். இதினாலேதான் அவரது மகிமை ஏகாந்தமாய் ஏக புத்திரனது மகிமையாயிருந்தது. அவர் உண்மையான மனுஷனாயிருந்தார். எனினும் எப்போதும் பரம வாக்கின் உண்மையான அவதாரமானார். ஆகையினால் எல்லோரும்

அவர்மூலமாகவே கடவுளைத் தரிசிக்கவேண்டும். இன்னும் அவர் விசேஷமாய் இரட்சிப்பின் கர்த்தாவாயிருக்கிறார். உலகத்தின் இருளை நீக்கித் தாம் இயல்பாய்ப் பெற்றிராநின்ற சம்பந்தத்தில் மனுஷரையும் ஈவாகக் கொண்டுவரவேண்டுமென்கிற விசேஷித்த நோக்கத்தோடு அந்தப் பரம வாக்கு மனுஷனானார். கடவுள் அவர்மூலமாகவே இரட்சிப்பை ஏற்படுத்தினார். அவர் பரம வாக்காதலின் அவரது சுவிசேஷம் அவரது மனோதத்துவத்தின் வெளிப்படுத்தலாகவும், அவரது தெய்வ தத்துவத்தின் சாரமுமாயிருக்கிறது. அவரும் அவரது சுவிசேஷத்தின் பொருளும் ஒன்று. இந்தப் பரம வாக்கானவர் உலகத்திலிருந்த சரிதை யோவான் சுவிசேஷத்தி லெழுதப்பட்டது. முகவுரையில் போதித்த பொருளே சரித்திரத்தில் காணப்படுகிறது. பரம வாக்கு என்கிற வார்த்தையின் அர்த்தத்தில் கிறிஸ்துவின் முழுத்தன்மையும் அவர் சரிதையின் சாரமும் அவர் செய்த் தொழிலும் அவரிராநின்ற நிலைமையும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் யோவான் கடவுளாவியின் ஏவுதலால் இந்த வார்த்தையை உபயோகித்து இயேசுகிறிஸ்துவின் மகிமையை வெளிப்படுத்தினார் என்றறிக.

**4. இந்து சாஸ்திரங்களுக்குரிய சம்பந்தம்:** இந்தப் போதனை இந்து சாஸ்திரங்களுக்கு அதிக சம்பந்தமுள்ளது. "இந்திய ரிஷிகள் சர்வாண்டமும் பரிணமமும் பெறுமுன்னமே பரப்பிரம்மத்தினிடத்தில் எழுந்திருந்ததும், சின்மயமும், கேட்கப்படாததுமான சப்தத்தையே வாக்கென்றார்கள். அந்த வாக்கு கேட்கும்படியான சக்தியாகவேயிருந்து சர்வத்தையும் நடத்தவும் உருவப்படுத்தவும் வல்லமையாயிருந்து சர்வாண்டத்திற்கும் போதகராவார்" என்று பரானந்தர் எழுதினதைப் பார்க்க.

எல்லா இந்து சாஸ்திரங்களிலும் கடவுள் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்தினபோது ஒருவராலே தம்மை வெளிப்படுத்தினாரென்றும், கடவுள் ஒரு மனுஷாவதாரமாய் உலகத்தை இரட்சிக்கிறாரென்றும் சொல்லியிருக்கிறது. ஒரு வாக்காலே உலகத்தைச் சிருஷ்டித்தாரென்றும், தமது வாக்கினாலே மனுஷருக்குப் போதிக்கிறாரென்பதும் இந்து சாஸ்திரத்தின் கொள்கைகள். ரிக்வேதத்தில் X. 125-ம் சுலோகத்தில், வாக்குத்தேவி சொல்லுகிறதாவது:—"நான் பரம



தேவியே—பொருட்களைச் சேர்த்தனர்—ஞானமுள்ளவர். யாவரும் என்னை வணங்கவேண்டு" மென்பதே.

இந்த வாக்குத்தேவி பரமாத்துவாவுடன் சமவாயநிலையி லிருக்கிறதாகவும் தேவர்களும் மனிதரும் சந்தோஷத்துடன் அவள் சொல்லும் வார்த்தைகளை ஏற்றுக்கொள்வதாகவும் சொல்லியிருக்கிறது. சப்த பிரமாண சாஸ்திரத்திலே தேவர்கள் அவள் சம்பந்தத்துடன் இந்த வாக்குத்தேவியைப் பலியாக ஒப்புக்கொடுத்தார்கள் என்பதும் பிறகு உயிரோடு வந்தாள் என்பதும் காணப்படுகிறது. இந்துக் கொள்கையும் யோவான் போதனையும் சரிசமானமானதென்று சொல்வதற்கிடமில்லை. எனினும் யோவானது போதனை இந்துக்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத அந்நிய போதனையாகக் காணப்படவேமாட்டாது. பரம வாக்கைப்பற்றிய போதனை சித்தாந்த சாஸ்திரத்திலும் சொல்லிய சத்தியைப்பற்றிய போதனையைப் போலிருக்கிறது. அந்தச் சத்தியே கடவுளின் அருளாணையும் கடவுளின் வெளிப்படுத்தலும் கடவுள் இயக்காநின்ற கருவியும் அருட்குருவாகி இடைக்கிடையே மனுஷரூபம்பெற்று உலகத்தில் தோன்றி வருமாயிருக்கிறது என்பதாக அந்தச் சாஸ்திரத்தில் காணப்படுகிறது.

"அவையே தானே யாயிரு வினையிற்
போக்கு வரவு புரிய வாணையி
னீக்க மின்றி நிற்கு மன்றே" என்பது பார்க்க.

இதற்கு, "முதல்வன் ஆணையென்னும் பரியாயப் பெயரையுடைய தனது சிற்சத்தியான் வரும் இருவினைகளான் அவை இறத்தல் பிறத்தல்களைப் புரியும்வண்ணம் அவ்வாணையிற் பிரிப்பின்றி சமவேதமாய் நிற்பன்" என்கிற சிவஞான யோகிகள் எழுதின பொழிப்புரையையும் பார்க்க. நாயகனாணையாலே நடத்திடும் சகத்தையெல்லாம் என்று சிவஞானசித்தியார் சொல்லுதலையும் பார்க்க.

இந்து சாஸ்திரத்துடன் இந்தப் போதனையின் சம்பந்தத்தைக் காண்பிக்கும்பொருட்டாக ஸ்ரீ பரானந்தர் இயற்றிய வியாக்கியானத்தில் பரம வாக்கைக்குறித்து எழுதியதை நான் கீழே தமிழில் மொழிபெயர்த்தெழுதியுள்ளேன். அதாவது "பரப்பிரம்மத்திலே உலகத்தோற்றத்திற்கு முன்னே எழும்பியுள்ள சின்மயத்தன்மையும்

செவிக்குணரப்படாததுமான நாதத்தை இந்து ஞானிகள் வாக்கு என்கிறார்கள். வாக்கு என்னும் இந்த மொழியும் லோகஸ் என்னும் கிரேக்க மொழியும் Word என்னும் இங்கிலீஷ் மொழியும் சரிசமானமானவைகள். தோற்றப்பட்ட எல்லா வஸ்துக்களும் அதைக் கேட்டு (அதாவது அதற்கிணங்கி) நடக்கின்றதால் இந்து ஞானிகள் அந்த வாக்கை **எல்லாம் கேட்கத்தக்க சக்தியாக** எண்ணினார்கள். எங்கும் வியாபித்திருக்கிற இந்த ஆணைச்சக்தியானது நிஷ்களா சகளவஸ்துக்களெல்லாவற்றையும் உருவாக்கி எல்லாவற்றிலும் கம்பித்து நடத்திவருகிறது. பரம வாக்கானது சரீரமில்லாததும் ஒடுங்கினதுமான தெய்வசத்தமாகி மனிதரது ஆத்துமாக்களில் உலாத்துக்கொண்டேயிருக்கிறது. ஆகையால் உலகத்திற்கு இந்தப் பரம வாக்கு **சற்குருவாகவுமிருக்கிறார்.** மனுஷருக்குப் புறம்பான இந்தச் சற்குரு கடவுளது தத்துவத்தையும் வல்லமையையும் ஆத்துமா கடவுளை அறியும் வகை இன்னதென்பதையும் போதித்துவருகிறார். அப்படியே ஒருவனுக்கு புறம்பானவராகிய சற்குரு அவனுக்குள்ளான கடவுளைப் போதித்து அவன் ஆத்மா அறிவுற்றவனாகி அவருடன் சின்மய ஐக்கியம்பெற்று நித்தியஜீவனை யடையச் செய்கிறார். கடவுளிடத்தில் தோன்றிவரும் இந்தப் பரம வாக்கு கடவுளது பரிசுத்தாவியாகி மனிதரது பரிசுத்த ஆத்துமாவில் பிரகாசித்துக்கொண்டுவருகிறது.” இந்த வியாசம் அநேக வித்தியாசங்களைக் காண்பித்தபோதிலும் இதுவிஷயத்தில் இந்து போதனைக்கும் கிறிஸ்து போதனைக்கும் அநேக சம்பந்தங்களிருக்கின்றனவென்பது தெரியவருகிறது.

இந்தச் சம்பந்தங்கள் இந்துக்களும் யோவானின் போதனையை ஏற்றுக்கொள்ளும்படியான உதவிகளாயிருக்கின்றன.



# VIII

## இந்தச் சுவிசேஷத்திலடங்கிய இயேசுவின் போதனை

இந்த நான்காம் சுவிசேஷத்திலெழுதப்பட்ட இயேசுவின் போதனையை நூலாசிரியன் நடந்தபிரகாரமாக எழுதிவிட்டானோ இல்லையோ என்கிற காரியத்தை இவ்விடம் நாமாலோசிக்கிறதில்லை. பின்பு அதைப்பற்றிச் சிந்திப்போம். இவ்விடத்திலே இந்நூலில் நமக்குக் காணப்படும் இயேசுவின் உபதேசங்கள் இன்னனவென்று நாம் சிந்திக்கிறோம். இவற்றைச் சிந்திக்கும்போது சில காரியங்களை மனதில் வைக்கவேண்டும். பலபேர்கள் ஒரே மனிதன் கொடுத்த அதே உபதேசங்களைப் பலவிதமா யாலோசித்திருப்பார்கள். சங்கராசாரியார், ராமானுஜர் முதலிய ஆசாரியர்கள் வேதாந்த சூத்திரங்களாகிய ஒரே உபதேசத்தை வேறு வேறுவிதமாய் உத்தேசித்துக்கொண்டிருந்து, பலவிதமான சாஸ்திரங்களை ஏற்படுத்திவிட்டார்கள். சிலர் அதிலிருந்து துவிதத்தையும் சிலர் அத்துவிதத்தையும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த அபிப்பிராயங்களுக்கு ஆதாரமாக வேதங்களிலிருந்து தங்களுக்கு வேண்டியவிதமாக வாக்கியங்களை எடுத்தோதுகிறார்கள். அப்படியானால் இயேசு உலகத்தில் இருந்தபோது அதிகமாய்ச் செய்த உபதேசங்களெல்லாவற்றிலும் ஒரு சிறு பாகம்மாத்திரம் நமது நாலு சுவிசேஷங்களிலும் அடங்கியிருக்கின்றதென்றறிக. இந்தச் சுவிசேஷங்கள் நான்கிலும் எழுதியுள்ளதைத்தவிர இன்னும் அதிகம் அவரது சீஷர்களின் ஞாபகத்திலிருக்கும். அவர்கள் ஞாபகத்திலிருந்ததற்கு மேலாக அநேக காரியங்கள் திட்டமான உருவம்பெறாமல் அவர்கள் மனங்களிலேயே கிடந்து அவர்களது எண்ணங்களை உருவப்படுத்தி அவர்களது போதனையில் வெளிப்பட்டுவரும். இந்நான்காம் சுவிசேஷத்தில் எழுதியுள்ள இயேசுவின் போதனையைப்பற்றி யோசிக்கும்போது இந்தக் குறிப்புகள் யாவற்றையும் மனதில் நினைத்துக் கொள்ளவேண்டும். ஆகையால் ஒவ்வொரு சுவிசேஷத்திலும் மற்றச்

சுவிசேஷங்களில் இல்லாத உபதேசங்கள் வருகின்றனவேயல்லாமலும் ஒவ்வொன்றிலும் கிறிஸ்துவின் உபதேசம் வெவ்வேறு லக்ஷணங்களுடையதாகவும் தோன்றுகிறது. இந்நூலாசிரியனும் தன் மனவியல்புக்கேற்றதாக இயேசுவின் போதனையைச் சிந்தித்தெழுதினான். இந்நூலில் எழுதிய இயேசுவின் போதனை சில விஷயங்களில் திரியனுபந்த சுவிசேஷங்களிலெழுதிய போதனைகளோடு ஒக்கும். சில விஷயங்களிலே அதற்கு வேறாம். இப்போதிந்த போதனை இன்னதென்று நாம் ஆராயவேண்டும். ஆசிரியனது கொள்கைகளையும் இயேசுவின் போதனையையும் பிரித்துவைப்பது அநேக இடங்களில் சுலப்மான காரியமல்ல; எனினும் கூடியமட்டும் அப்படிச் செய்யப் பிரயாசைப்படுவோம்.

**1. கடவுள் சின்மயச் சொரூபியாயிருக்கிறார்.** கடவுளது குணம் சின்மயத்தன்மையுடையது; அவர் பரமாத்துமாவாயிருக்கிறார். அவரை ஒரு உருவத்திலாவது, ஒரு இடத்திலாவது, ஒரு சாஸ்திரத்திலாவது வகிக்க முடியாது. $4^{19-25}$ கடவுள் அன்னாராதலின் அவரைச் சின்மய விதமாய் உணரவும் வணங்கவும் வேண்டும். கடவுள் ஒருவராயிருக்கிறார். $17^{3}$. இந்த ஏகத்தன்மைக்குரிய எண்ணம் எல்லா சம்பாஷணைகளிலும் பிரகாசித்தாக் காணப்படுகிறது. இந்தச் சின்மயக் கடவுளுக்கு, சத்தியம் பரிசுத்தம் நீதி என்பவைகள் முக்கியமான குணங்களாம். $8^{26}$ $17^{11, 25}$.

**2. கடவுள் பரம தந்தையாவார்.** இந்நான்காம் சுவிசேஷத்தில் கடவுள் விசேஷமாய் தந்தை என்கிற பேர்பெற்றிருக்கிறார். இயேசு வழங்கும் பெயர் இதுதான். என் தந்தை என்றும் தந்தையென்றும் சொல்லுகிறார். $2^{16}$ $3^{35}$ $5^{17-45}$ $8^{16-56}$ 14, 15, 16. மற்றச் சுவிசேஷங்களைப்பார்க்கிலும் இந்தச் சுவிசேஷத்திலே இந்தப் பெயர் மெத்த அதிகமாய் வருகிறது. இந்தப் பெயரால் முதலாவது கடவுளுக்கும் தமக்குமுள்ள விசேஷித்த சம்பந்தத்தைக் குறிப்பிட்டார். மனிதரெல்லாரும் கடவுளின் பிள்ளைகளெனினும் இயேசு பிரத்தியேக நிலைக்கேற்ற விதமாய் கடவுளின் மகனானார். கடவுளது தந்தைத்துவம் நான்கு சுவிசேஷங்களிலும் இயேசுவின் போதனைக்கு மூலாதாரமாகத் தோன்றுகிறதெனினும், இந்நான்காம் சுவிசேஷத்திலே அது மிக்க தெளிவாய்க் காணப்படுகிறது.



**3. தாமே கடவுளது பூரண வெளிப்படுத்தல்.** இயேசு தமது விரோதிகளுக்கு முன்பாகவும், சீஷர்களுக்கு முன்பாகவும் இந்தச் சத்தியத்தை அதிக பலமாய்ச் சாதித்துவருவதை இந்நான்காம் சுவிசேஷத்தில் காண்கிறோம். இந்தச் சுவிசேஷத்தை அவர் தம்மை வெளிப்படுத்தின சரித்திரமென்று சொல்லக்கூடும். நிக்கொதேமுடன் நடந்த சம்பாஷணை தொடங்கிச் சீஷர்களுடன் பேசின கடைசி வார்த்தைகள்வரைக்கும் இயேசு இந்தச் சத்தியத்தை மிகச் சிறப்பித்துக் காண்பிக்கிறதைப் பார்க்கிறோம். $3^{13}$ $14^{9}$. அவரது சித்தம், மனம், புத்தி முதலியவை எல்லா விஷயங்களிலும் கடவுளுடையவைகளுக்குச் சமமானவையாம். அவர் செய்கிறவையெல்லாம் கடவுளது செய்கைகளாம். அவரிலேயே கடவுள் உலகத்தில் கிரியை செய்துவருகிறார். கடவுளுடன் இந்த விசேஷித்த ஒற்றுமையிருத்தலின் அவர் உலகத்தில் விசேஷித்த நிலைமையுடையவரானார். இந்த விசேஷித்த நிலைமையை ஏழு வாக்கியங்களால் குறிப்பிட்டார்.

அவையாவன:

i. நானே ஜீவாகாரம். $6^{35}$.
ii. நானே உலகத்தின் ஒளி. $8^{12}$.
iii. நானே ஆடுகளின் வாசல். $10^{7}$.
iv. நானே நல்ல மேய்ப்பன். $10^{11}$.
v. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். $11^{25}$.
vi. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாகிறேன். $14^{6}$.
vii. நானே மெய் திராட்சச்செடி. $16^{1}$.

இந்த வாக்கியங்களால் உலகத்தின்விஷயமாய்த் தமக்கிருந்த விசேஷித்த நிலையை அவர் காண்பித்தார். அந்த விசேஷித்த நிலையைக் காட்டும்பொருட்டு அடிக்கடி அவர் தம்மை விசுவாசிப்பது மெய் ஜீவனுக்கு அவசியமென்றும் தம்மைத் தள்ளுவது ஆக்கினைக்கேதுவானதென்றும் திட்டமாய்ச் சொன்னார். $8^{24}$ $12^{49}$.

**4. மனுஷகுமாரன்.** இயேசு தம்மைப் பெரும்பான்மையாய் மனுஷகுமாரனென்கிறார். எசேக்கியேல் தானியேல் என்ற தீர்க்கதரிசனங்களில் இந்தப் பெயர் முதலாவது வந்தது. அவ்விடங்களில் அப்பெயர் மனிதருடைய சிறந்த பிரதிநிதியையும் மேசியாவையும் குறிப்பிடுகிறது. தானி $7^{13}$ எசே $1^{26}$. அப்போஸ்தலரும் சுவிசேஷகரும்

இந்தப் பெயரை வழங்கிவருகிறதில்லை. அது நடபடி $7^{56}$-ல் மட்டும் வருகிறது. இயேசு இந்தப் பெயரை ஏன் உபயோகித்துவருகிறாரென்றால், அவர் தானியேல் உபயோகித்த பெயரைக்கொண்டு, தம்மை இவ்விதமாய் மேசியாவென்று தெரிவிக்கிறதாகச் சிலர் சொல்லுகிறார்கள். இப்பெயர் யூத நூல்களில் அப்படிப்பட்ட அர்த்தம் அடைந்தும் சுவிசேஷங்களில் அதே அர்த்தங்கொள்ளும் என்பதற்கு முகாந்தரமொன்றுமில்லை. அடிக்கடி இந்த இரண்டு நோக்கங்களும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைக்கப்பட்டிருக்கின்றன. மத் $16^{13, 16}$ யோவா $12^{34}$ பார்க்க. அதுமாத்திரமல்ல பழைய ஏற்பாட்டு நூற்களிலும் மனுஷகுமாரனென்பது ஒரு மனிதன் என்கிற அர்த்தத்தையுடைய பெயராய் வருகிறது; இயேசு மனுஷகுமாரனென்பதைத் தனித்து வழங்குகிறார். பழைய ஏற்பாட்டில் அவ்வண்ணமாய் உபயோகிக்கப் பட்டிருப்பதால் இயேசு வழங்குவதற்குச் சற்று இடங்கொடுத்திருக்கலாம். அவர் வழங்கினது முக்கியமாகத் தமது உண்மையான மனுஷீகத்தைத் தெரிவிக்கிறதற்காகவே என்றறிக. பின்பு அந்த மனுஷீகத்தின் சிறப்பை அது காட்டுகிறது.

அவரது மனுஷீகத்தன்மை சரியான மனுஷீகத்தன்மையானதோடுகூடச் சிறந்த மனுஷீகத்தன்மையுமாயிற்று, அவர் உண்மையான மனிதன். அதோடு அவர் மனிதரது உண்மையான பிரதிநிதியாயுமிருந்தார். ஆகையால் இந்தப் பெயர் அவர் மனுஷர்மேல் பெற்ற ராஜரீகத்தையும் வெளிப்படுத்துகிறது.

**5. கடவுளை யறிந்துகொள்ளுவதற்கு சின்மயக்குணம் வேண்டும்.** கடவுளது ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கும் தம்மை யுணர்ந்து விசுவாசிப்பதற்கும் தமக்குரிய சின்மயக்குண மவசியமென்றும், இந்தச் சின்மயக்குணம் உலகத்தின் திறத்தாலல்ல கடவுளாவியாலேயே உண்டாகியிருக்கிறதென்றும் போதித்தார். இந்தப் போதனை விசேஷமாய் நிக்கொதேமுடன் செய்த சம்பாஷணையில் காணப்படுகிறது $3^{1-13}$ $8^{23}$. ஆகையால் மனிதரிருவகுப்புளர். எப்படியெனில், ஆவிக்குரியவர், லோகத்துக்குரியவர் என்பவர்களே. இந்த லோகத்துக்குரிய மனம் இயேசுவுக்கு விரோதமாயிருக்கிறது. அவரைத் தள்ளுபவர் அந்த ஆவியால் நடத்தப்படுகின்றனர். $8^{33-51}$. சின்மயக்குணம் பெறுவது புதிய பிறப்பாகவேயிருக்கிறது.



**6. உலகத்தில் கடவுளாவி அவரது வேலையைச் செய்கிறது.** அந்தக் கடவுளாவி மனிதரிருதயத்திலும் தமது மனத்திலும் கிரியை நடப்பித்ததென்றும், தாம் உலகத்தைவிட்டுப் போனபிறகு தமது காரியங்களை வெளிப்படுத்துமென்றும் இயேசு போதித்தார். $3^{8, 16}$.

இந்தப் போதனை யோவானுக்கு விசேஷமானதாலும் அவனது மனத்தில் அதிக விஸ்தாரமடைந்ததாக காணப்பட்டதாலும் ஆசிரியனது போதனைகளில் வைத்திருக்கிறோம்.

இவைகளே இந்நான்காம் சுவிசேஷத்திலெழுதிய இயேசுவின் போதனைக்குள்ள முக்கியமான குறிப்புகளாம்.

---

# IX

## திரியனுபந்த சுவிசேஷங்களுக்குள்ள வித்தியாசங்கள்

---

மற்ற மூன்று சுவிசேஷங்களும் ஒன்றோடொன்று சம்பந்தமுள்ளவாதலின் அவைகள் திரியனுபந்த சுவிசேஷங்கள் (Synoptic Gospels) என்றும் பெயர்பெற்றன. நான்காம் சுவிசேஷம் பிரத்தியேகமாயிருக்கிறது. மற்ற மூன்று சுவிசேஷங்களில் அப்போஸ்தலர் இயேசுவின் சரித்திரத்தைப்பற்றிக் கொடுத்த சாட்சி அடங்கியிருக்கிறதாக எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆகையால் இந்தச் சுவிசேஷத்தில் அவைகளுக்கு விசேஷித்த வித்தியாசங்களிருந்ததால் இந்தச் சுவிசேஷம் சொல்லும் சரித்திரம் மெய்யல்லவென்று சொல்லுதலால் அந்த வித்தியாசங்களை நாம் நன்காராய்வோமாக.

**1. கிறிஸ்து பிரசங்கம் செய்த நாடு.** திரியனுபந்த சுவிசேஷங்கள் கலிலேயாநாட்டையும் இந்தச் சுவிசேஷம் யூதேயாதேசத்தையும் முக்கியமாய்க் குறிப்பிக்கின்றன. பொதுவாய்ப் பார்த்தால் இது மெய்தான்; திரியனுபந்த சுவிசேஷங்கள் கலிலேயாவில் நடந்த விஷயங்களைப்பற்றிச் சொல்லுகின்றன. நான்காம் சுவிசேஷம் யூதேயாவிலும் எருசலேமிலும் நடந்த காரியங்களைச் சொல்லுகிறது.

அப்படியிருந்தபோதிலும் இரண்டிலும் மற்றொன்றின் சங்கதியுடன் சம்பந்தங்களநேகமுண்டு. திரியனுபந்த சுவிசேஷங்களாலும் அநேக குறிப்புகளால் யூதேயாதேசத்தில் நடந்த பிரசங்கத்தைப்பற்றி அனுமானிக்கலாம். லூக் $4^{66}$ $5^{17}$ $10^{38}$ $13^{31.33.34}$ மத் $23^{37}$ $26^{17}$. அதுமாத்திரமல்ல, நான்காம் சுவிசேஷத்தால் கலிலேயாநாட்டில் அவர் அதிகமான பிரசங்கம்பண்ணினதை நாமறிந்துகொள்ளலாம். $2^{12}$ $4^{3}$ இவைகள் நடந்தபின்பு $7^{13}$. மற்ற மூன்று சுவிசேஷங்கள் எழுதப்பட்டபிறகு இந்த நான்காம் சுவிசேஷம் எழுதப்பட்டதென்பதை நாம் நினைவுகூரவேண்டும். அவைகளில் எழுதப்பட்டதை நமதாசிரியன் பெரும்பான்மையாய் எழுதவில்லை. இந்த விஷயத்தில் அதிக வித்தியாசமிருந்தபோதிலும் ஒன்றுக்கொன்று விரோதம் ஒன்றுமேயில்லை.

**2. இயேசு ஊழியஞ்செய்த காலம்.** திரியனுபந்த சுவிசேஷங்களின் சரித்திரம் பார்த்தால் இந்தக் காலம் ஒரு வருஷம்மாத்திரம்போலிருக்கிறது. நான்காம் சுவிசேஷத்தில் அது இரண்டரை வருஷமென்று தோன்றுகிறது. எப்படியெனில், அவைகளில் இரண்டு பஸ்காபண்டிகைகள்மாத்திரம் சொல்லப்பட்டிருக்கின்றன. இதிலோ மூன்று பண்டிகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலிலும் கடைசியிலும் வந்த பண்டிகைகளோடு ஒன்று நடுவில் வருகிறது ($6^{4}$). திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லிய காரியங்களை ஒரு வருஷத்திலடக்க முடியாது. திட்டமாய்ச் சொல்லாவிடினும் இரண்டரை வருஷ காலமுண்டு என்பதற்கு விரோதமானதொன்றும் திரியனுபந்த சுவிசேஷங்களிலில்லை. ஆகையால் இந்த வித்தியாசம் ஒன்றுக்கொன்று விரோதம் விளைவிக்கிறதில்லை. திரியனுபந்த சுவிசேஷங்களில் யாதுகாரணத்தினாலோ ஒரு பண்டிகை சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது.

**3. சரித்திரத்தின் பேர்களும் சம்பவங்களும்.** நான்காம் சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட சில பெயர்கள் திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்படவேயில்லை. நிக்கொதேமு, நாத்தான்வேல், லாசரு என்பவர்கள் இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் காணப்படுகிறார்கள். இன்னும் கானாவூரின் அற்புதம், பெதஸ்தாக் குளத்தில் சுகப்படுத்துதல், எருசலேமில் குருடனைப் பார்க்கச்செய்தல், லாச



ருவை உயிர்ப்பித்தல் முதலியவை திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்படவேயில்லை. அதுபோலவே இயேசுவின் பிறப்பு, ஞானஸ்நானம்பெற்றது, மறுரூபமாதல், இராப்போஜனம் நியமித்தல், தோட்டவேதனை முதலியவை இந்தச் சுவிசேஷத்தில் விடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்தன் நோக்கத்தின்படி அநேக சம்பவங்களிலிருந்து சிலவற்றைமாத்திரம் தெரிந்துகொண்டு எழுதினான். ஆகையினால் இந்தக் காரியத்தினால் நான்காம் சுவிசேஷத்திற்கு விரோதமானதொன்றும் நினைக்கவேண்டியதில்லை.

**4. கிறிஸ்துவின் போதனை.** திரியனுபந்த சுவிசேஷங்களில் தெளிவான உவமைகளும் லேசான போதனைகளும் பரம இராஜ்யத்தின் விஷயங்களும் விசேஷமாய் வரும். நான்காம் சுவிசேஷத்திலோ சின்மய போதனையும் கிறிஸ்துவின் தன்மையைப்பற்றிய சாஸ்திரமும் அதிகமாய் வருகிறது. இந்தப் போதனையின் வித்தியாசம் முக்கியமாய் இடத்தின் வித்தியாசத்தினால் உண்டாயிற்று என்று சொல்லக்கூடும். கலிலேயா தேசத்தாருக்கு இந்தச் சின்மய போதனை கொடுக்கலாகாது. அதுபோலவே தம்மை நேர்ந்து விரோதித்த யூதர்களுக்குத் தெளிவாய்த் தம்முடைய காரியங்களைக் காட்டவேண்டும். அதுமாத்திரமல்ல அந்தந்தச் சுவிசேஷங்களை வாசிப்பவர்கள் வித்தியாசமாயிருந்தார்கள். திரியனுபந்த சுவிசேஷங்கள் ஆதிக் கிறிஸ்தவர்களுக்கு எழுதியிருக்கின்றன. நான்காம் சுவிசேஷமோ கிறிஸ்துமார்க்கத்தைப்பற்றி யதிகமாய் எண்ணிக்கொண்டவர்களுக்கும் கிரேக்கு சாஸ்திர மறிந்தவர்களுக்கும் எழுதப்பட்டது. இரண்டையும் ஆராய்ந்துபார்க்கின் போதனையின் பொருளில் ஐக்கியமுண்டென் றறியலாம். அதுமாத்திரமல்ல போதித்த வகை சில குறிப்புகளில் இரண்டிலும் ஒரேமாதிரியாயிருக்கிறது. இயேசு இரண்டிலும் உவமைகளாலும் உருவகங்களாலும் சம்பவங்களைக்கொண்டும் போதிக்கிறதைப் பார்க்கிறோம். வித்தியாசங்களிருந்தும் இதுவிஷயமாய்த் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும், இந்நான்காம் சுவிசேஷத்திற்கும் நேர் விரோதமிருக்கிறதென்று சொல்ல இடமில்லை. நான்காம் சுவிசேஷத்தில் இயேசுவின் தன்மையைக்குறித்த போதனை அதிகமாயிருத்தற்கு ஆசிரியனெழுதிய நோக்கமே காரணமென்றும், அவன் அந்தத் தன்மைக்குரிய போதனை

யெல்லாம் எடுத்துச் சிறப்பித்து எழுதியுள்ளதேயல்லாமல் அவன் கட்டுக்கதைமாதிரியாய் எழுதவில்லையென்று மறிந்துகொள்ளலாம். இந்தப் போதனைக்கும் திரியனுபந்த சுவிசேஷத்திலெழுதிய பரம இராஜ்யத்தைக்குறித்த போதனைக்கும் நேர் விரோதமொன்றுமில்லையென்பதைக் கவனிக்கவேண்டும்.

**5. நேர்வித்தியாசங்களிருப்பதாக** இன்னும் இரண்டொரு விஷயங்களில் தோன்றுகிறது. இயேசு மரணமடைந்த நாளைக் குறித்தும் தாம் மேசியாவென்று சாதித்துக் கூறும் விஷயத்தைக் குறித்தும் சந்தேகமுண்டு. முன்னதைப்பற்றி 2–ம் அநுபந்தம் பார்க்க. பின்னதைப்பற்றி 9–ம் அதி. பார்க்க.

**6. சம்பந்தங்கள்.** முன் சொன்ன வித்தியாசங்களிருப்பினும் திரியனுபந்த சுவிசேஷங்களும் இந்தச் சுவிசேஷமும் அநேக விஷயங்களில் சம்பந்தமுள்ளன. இயேசுவினது சரித்திரத்தின் முக்கியமான சம்பவங்கள் இரண்டிலும் விரோதமின்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. இயேசுவின் குணம் இரண்டிலும் ஒரேதன்மையுடையது. தயவும் வல்லமையும் பரிசுத்தமுமான சிறந்த இரட்சகரை இரண்டிலும் பார்க்கிறோம். இயேசு அவருடைய சீஷர் நடுவில் அன்பும் பொறுமையும் சாந்தமுமுள்ள குருவாக நடக்கிறதை இரண்டிலும் காண்கிறோம். அதுமாத்திரமல்ல, போதனையின் முக்கியமான கொள்கைகள் இரண்டிலும் வித்தியாசப்படவில்லை. கடவுள் பரம தந்தை என்பதும் சின்மயச் சொரூபியென்பதும் இயேசு கடவுளின் பிரதிநிதியும் மனுஷகுமாரனும் என்னப்பட்டவரென்பதும் இரட்சிப்புக்கு விசுவாச மவசியமென்பதும் இரண்டுக்கும் பொதுவான போதனைகளாம்.

பரிசுத்தாவியைப்பற்றிய போதனை இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் வருகிறது. போதனைகள் கொடுக்கப்பட்ட காலத்தைப்பற்றிச் சில வித்தியாசங்களுண்டு. ஆகையினால் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும் இந்த நான்காம் சுவிசேஷங்களுக்கும் வித்தியாசங்களிருப்பினும் வார்த்தைகளிலும் உருவகங்களிலும் பிரசங்கங்களிலும் அநேக சம்பந்தங்களிருத்தலால் அவைகளிலுள்ள இரண்டு சரித்திரங்கள் இசையக்கூடாத வண்ணமா யிருக்கின்றனவென்பதற்கு யாதொரு முகாந்தரமுமில்லை.



# X

## இந்நூலின் சரித்திர உண்மை

இந்தச் சுவிசேஷத்தின் சிறந்த லக்ஷணங்களையும் அதின் உயர்ந்த நோக்கத்தையும் நாம் கண்டிருக்கிறோம். இந்தச் சுவிசேஷத்தின் போதனை விசேஷமானதும் மாட்சிமை பொருந்தியதுமாயிருக்கிறதாக யாவரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது இதற்குரிய இன்னொரு கேள்வியுண்டு. இந்தச் சரித்திர முழுவதும் உண்மையாகவேயிருக்கிறதா என்கிற கேள்வியே. இது இதிகாசக் கதையென்பார் சிலர். ஆசிரியன் தனது நோக்கத்திற்கேற்க இயேசுவின் காரியங்களை எடுத்து மாற்றிப் பிரசங்கங்களையும் வாக்குவாதங்களையும் தானே தனது மனத்திலிருந்து எழுதிவைத்தான் என்பார் வேறு சிலர். இப்படிச் செய்தும் இது கிறிஸ்துமார்க்கத்திற்கும் கிறிஸ்துவுக்கும் விரோதமாய்ச் செய்யாமல் அவரது சுவிசேஷத்திற்குச் சார்பாகவே எழுதினனென்பது திண்ணம். இதன் சங்கதிகள் உண்மையான சரித்திர சம்பவங்கள் அல்லவெனினும், இது எப்போதும் சிறந்த சுவிசேஷமும் ஆவிக்குரியவிதமாய் கிறிஸ்துவின் உண்மையான போதனையை வெளிப்படுத்தும் நூலுமாகவே எண்ணப்படவேண்டுமென்றறிக. இது திட்டமான சரித்திர உண்மையில்லாத நூலென்று சாதித்ததற்கு பின்வரும் காரணங்கள் சொல்லப்பட்டன. முதலாவது திரியனுபந்த சுவிசேஷங்களுக்கு அதிக வித்தியாசப்பட்டிருப்பது ஒரு காரணம். இதன் விஷயத்தில் முந்தின அதிகாரத்தில் சொல்லியபிரகாரம் சிலர் ஒரே உண்மையான காரியத்தைப் பலவிதமாயெண்ணி வெளிப்படுத்தக்கூடும். திரியனுபந்த சுவிசேஷத்திற்கும் இந்நூலுக்கும் அவ்விதமாய்ச் சொல்லப்பட்ட பேதங்கள் இல்லையென்று விளங்கிற்று. எல்லாவிஷயங்களிலும் அவைகளைச் சமாதானப்படுத்த முடியாதென்று ஒப்புக்கொள்ளினும் சற்று ஞாபகப் பிசகாலும் ஆசிரியன் தனது நோக்கத்திற்கேற்கக் காரியங்களை யெழுதினதாலும் பேதங்களுண்டானதேயொழிய மற்றப்படியல்ல.

இரண்டாவது இந்நூலில் காணப்படுகிறதாகிய இயேசுவைக் குறித்த நோக்கங்களும் கோட்பாடுகளும் ஆதிச் சபையிலும் சீஷர்

களுக்குள்ளும் தோன்றாத மற்றொரு காரணம். ஆகையால் சின்மய சாஸ்திரத்துக்குரிய இந்த உன்னத போதனை அந்தக் காலத்திலுண்டாகாமல் பிற்காலத்திலே உண்டாயிருந்ததாகச் சொல்லுகிறார்கள். இப்படியிருந்தால் பவுல் செய்த போதனையும் பிற்காலத்தில் உள்ளதாதல்வேண்டும். ஏனென்றால், இந்நூலின் போதனை அதற்கு ஒத்தது. இது தன் மனதிற்குரிய ஆட்சேபனையல்லாமல் நியாயமாய் ருஜுப்படுத்தக்கூடிய ஆட்சேபனையன்று. அப்படி யிருக்கலாகாதெனின் இருக்கவுங் கூடுமென்றும் சொல்லலாம். அதுமாத்திரமல்ல இந்நூல் முதல் நூற்றாண்டின் கடைசிப் பாகத்தி லிருந்ததாக முன்னே சொல்லப்பட்டது. இது உன்னத போதனை யென்பதைப்பற்றிச் சந்தேகமில்லை யெனினும் இயேசு இவ்வண்ணமான உன்னத போதனையைக் கொடுத்திருக்கலாமென்று திரியனுபந்த சுவிசேஷங்களினாலும் அனுமானித்துக்கொள்ளலாம்.

முக்கிய ஆட்சேபனை கடைசிச் சம்பாஷணையைக் குறித்தது. அதிலுள்ள சங்கதிகளும் அதின் நோக்கங்களும் அக்காலத்துச் சீஷர்களுக்குக் கிஞ்சித்தேனும் பொருந்தியதல்லவென்று சாதிப்பார். அதைப் பற்றிச் சில விஷயங்கள் கவனிக்கத்தக்கது. எப்படியெனில், கிழக்குத் தேச ஜனங்களுக்கே ஞாபகசக்தி மிக்க வலிமையுள்ளது. வார்த்தைகள் யாவும் தப்பிதமற ஞாபகப்படாவிடினும் பொருளையும் அநேக வார்த்தைகளையும் ஞாபகப்படுத்தி யெழுதுவது கூடாதகாரியமல்ல. அந்தக் கடைசியான பிரசங்கங்கள் எழுதினபிரகாரமே சொல்லப்படவில்லை என்று ஒப்புக்கொள்ளினும் பெரும்பான்மையான பொருட்களும் விஷயங்களும் அவ்வண்ணமா யிருந்தனவென்று நம்பத்தக்கது.

இன்னும் இந்நூலை ஆராய்ந்துபார்க்கின் எல்லாம் உண்மைத் தோற்ற முடையதாகக் காணப்படுகிறது. பிந்தின அதிகாரத்தில் சொல்லுவதுபோலவே நடந்ததைக் கண்ணாரக் கண்டவன் எழுதினான்போலிருக்கிறது. (50-ம் பக்கம் பார்க்க.) பிரசங்கத்தையும் சம்பாஷணைகளின் வரலாறுகளையும் கவனித்துப்பார்த்தால் அவைகளும் சம்பந்தத் தொடர்ச்சியாய் நடக்கின்றனவென்று காணப்படுகிறது. இவ்வண்ண உண்மைத்தோற்றத்தைத் தானாக உண்டாக்கத்தக்கவன் மிக்க திறமையுள்ளவனாவான். இக்காலத்திலுங்கூட இவ்வண்ணமாகச் சிறந்த புஸ்தகத்தை மனோபாவனையால் கட்டி எழுதலரிது. ஆகை



யால் இது உண்மையான சரித்திரமேயல்லாமல் ஆசிரியன் தனக்குத் தெரிந்த இயேசுவின் ஜீவிய சரித்திர விஷயங்களிலிருந்து சிலவற்றைச் சேர்த்து இதைக் கதையாகக் கட்டினானென்பது நம்பத்தக்கதன்று.

பின்னும் ஆட்சேபிக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி இரண்டொரு காரியங்களை நினைவுகூரவேண்டும். இயேசுவின் பிரசங்கங்களையும் சம்பாஷணைகளையும் ஆசிரியன் சுருக்கமாக எழுதினதாகத் தோன்றுகிறது. அன்றியும் இயேசு எப்போதும் ஒருவகை எபிரெய பாஷையில் பேசியிருக்க ஆசிரியன் கிரேக்கு பாஷையில் மொழிபெயர்த்தெழுதவேண்டியதாயிற்று. மொழிபெயர்ப்பில் சில மாறுதல்களுண்டாயிருக்கவேண்டும். யோவானே இந்நூலை எழுதியிருக்கிறானென்று நம்பினால் இன்னொரு காரியத்தையுங் கவனிக்கவேண்டும். அவன் மிகவுந் தியானஞ்செய்து கடைசிநாட்களில் இதை எழுதினதாகப் பாரம்பரியமிருக்கிறது. இயேசுவின் சரித்திரத்தையும் சங்கதிகளையும் அநேக வருஷகாலமாய்த் தியானம் செய்துகொண்டே இதை யெழுதியிருப்பான். இயேசுவின் பிரசங்கங்கள் அந்தத் தியான நோக்கங்களால் சற்று மாறுதலடைந்து பிந்திவந்த சில போதனைகள் முந்தின பிரசங்கங்களில் கொஞ்சம் கலந்திருக்கக் கூடும். சில இடங்களில் இயேசுவின் வார்த்தைகளையும் யோவானது சிந்தனைகளையும் பிரிக்க முடியாது. இயேசு பேசினபோது தோன்றாதிருந்த சத்தியம் அவர் உயிர்த்தெழுந்தபின்பு அதேவார்த்தைகளில் உண்மையாய்த் தோன்றினதால் அந்தச் சத்தியத்தைத் தெளிவாய்க் காண்பிக்கத்தக்கதாய் அந்த வார்த்தைகளைக் கொஞ்சம் வேறுபாடுள்ளதா யெழுதியிருக்கக்கூடும். என்னவென்றால், யோவான் தன் மனதில் அந்த வார்த்தைகளை அதேவிதமாக வெகுகாலமாய் உணர்ந்துகொண்டிருக்க, அவைகளை வேறுவிதமாய் நினைக்க அவராலு முடியாது. அதுபோலவே, சம்பவங்கள் நடந்தபோதே காணப்படாத ஒரு சத்தியம் பிறகு அதிலே தோன்றினது. அப்பொழுது அது சீஷர்களுக்குத் தெரியாமலிருந்தும் இப்பொழுது அதை விலக்குவது நியாயம். இந்த நான்காம் சுவிசேஷம் ஆசிரியன் செய்த இயேசுவின் ஜீவிய சரித்திர விவரிப்பாம். முன் சொன்னபடி கொஞ்சம் மாறுதலடைந்ததால் இது உண்மையான சரித்திரமல்லவென்று சொல்லுவதற்கு நியாயமில்லை. இது உண்மையான சரித்

திரமென்று ஆசிரியனே சாட்சியிடுகிறான். பிற்காலத்தில் அவ னுக்குள் தோன்றின எண்ணங்களும் கருத்துகளும் கலந்திருந் தால் உண்மையான சரித்திரத்திற்குக் கெடுதியில்லை. இயேசுவின் ஜீவியத்தில் சீஷர்களுக்குத் தெரியாத அநேக காரியங்க ளிருந்தன. அவைகளின் அர்த்தம் பிற்காலத்தில் பரிசுத்தாவியால் விளங்கினது. பரிசுத்தாவி யோவான் மனதிற்கு இயேசுவின் ஜீவிய சம்பவங்களில் அவனுக்கு முன்னே தெரியாத அநேகக் குறிப்புகளை வெளிப்படுத்தி அந்த வெளிப்படுத்தலைக்கொண்டு அவன் சுவிசேஷ மெழுதும்படி ஏவினதற்கு ஆட்சேபனை ஏது? பரிசுத்தாவியால் யோவானடைந்த வெளிப்படுத்தல் மூலமாய் அவன் இந்தச் சுவிசேஷத்தை விவரித் தெழுதலால் இது பொய்ச் சரித்திரமென்று சொல்வதற்கு யாதொரு நியாயமுமில்லை. சிற்சில விஷயங்களில் மனவியல்பினாலே எந்த மனுஷீகநூலும் பேதப்பட்டிருக்குமெனினும் இந்தப் பேதங்களால் அந்தச் சரித்திரத்தைப் பொய்யென்று சொல்லுவது ஞாயமல்ல. இயேசுவின் தெய்வீக வல்லமையை மறுக்க விரும்புவோர் எப்படி யாவது இந்நூலின் சரித்திர உண்மையைக் கெடுக்கப் பிரயாசைப் படுவார்கள். ஏனென்றால், அந்த வல்லமை இந்த நூலின் சரித்திரத் தால் தெளிவாய்க் காணப்படுகிறது. மற்றப்படி இதன் சரித்திர உண்மையை மறுக்கத்தக்க போதுமான முகாந்தரங்க ளில்லையென்று நாம் சாதிக்கலாம்.

# XI

## ஆசிரியன்

இந்நூலின் ஆசிரியன் இன்னானென்னும் விஷயத்தைப்பற்றி அதிக தர்க்கம் நடந்தது. இது சரித்திர உண்மையுடைய நூலல்ல வென்று சொல்வோர் இயேசுவின் சீஷனை யோவானே ஆசிரிய னென்பதைப் பல வழிகளாலும் மறுக்கப் பிரயாசப்படுகிறார்கள். கிறிஸ்தவர்களுக்குள்ளே பெரும்பான்மையான கோட்பாடு யாதெ னில், இயேசுவின் சீஷனை யோவானே ஆசிரிய னென்பதே. இதற்குப் பின்வரும் ஆதாரங்களைக் கூறுகிறார்கள்.



### A. ஆதிச்சபையில் யோவானே ஆசிரியனென்று பெரும்பான் மையோர் ஒத்துக்கொண்டார்கள்.

1. இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப்பாகத்தில் வேதசாஸ்திரி களும், வேதப்புரட்டர்களும், இந்நான்காம் சுவிசேஷம் அப்போஸ் தலர்களில் ஒருவர் இயற்றின நூலாக ஏற்றுக்கொண்டார்கள் என்ப தாகக் கண்டோம். இது தப்பிதமான கொள்கையானால் அக்காலத்தி லுள்ள எவனாவது அதைக் காட்டியிருப்பான்.

2. சபை வித்துவான்கள் அநேகர் யோவா னிதை எழுதினா னென்று சாதிக்கிறார்கள். இவர்களுக்குள் தேயோப்பிலஸ் (180 ஐரேனியஸ் (180) என்பவர்கள் முக்கியமானவர்கள்.

ஐரேனியஸ் விசேஷித்த சாட்சி. இவனெழுதிய நூலில் கி. பி. 69–ல் பிறந்து, கி. பி. 155–ல் இறந்த போலிகார்ப்பைப்பற்றி பின் வருமாறு எழுதியிருக்கிறது. தான் போலிகார்ப்புக்குச் சீஷனானதும் போலிகார்ப்பு எபேசுபட்டணத்தில் யோவானுக்குச் சீஷனாகி யோவா னும் ஆண்டவரைக் கண்ட மற்றோரும் சொன்ன சங்கதிகளை அடிக் கடி யெடுத்துத் தனக் கறிவித்ததாகவும் “அவரப்படி ஊடாடின இடத் தையும் நான் இப்பொழுது பார்க்கிறேன். அவர் சொன்ன வார்த்தை களையும் இப்பொழுது நினைவுகூருகிறேன்” என்றும், “அவர் சொன் னது வேதங்களில் எழுதின பிரகாரமாகவே இருக்கிறது” என்றும் திட்டமாய் எழுதியிருக்கிறான். வேதங்களென்பது நான்கு சுவிசே ஷங்களென்றறிக. இந்தச் சாட்சி உண்மையல்லாத சாட்சியாயின் அக்காலத்தில் யாராவது மறுத்திருப்பர். ஒருவரு மப்படி செய்யாத தால் அது மறுக்கத்தக்க சாட்சி யல்லவென்று ஒப்புக்கொள்ளவேண் டும். போலிகார்ப்புக்குப் பின் சீஷனை பாப்பியாவும் யோவா னைப்பற்றி சாட்சியிட்டிருக்கிறான்.

3. மூன்றாம் நூற்றாண்டில் யாவரும் சந்தேகமில்லாமல் இது யோவானால் எழுதப்பட்டதாக ஒப்புக்கொண்டார்களென்று யூசேப் பியஸ் எழுதியிருக்கிறான். யோவான் எபேசு பட்டணத்தில் இந்நான் காம் சுவிசேஷத்தை எழுதியிருக்கிறான் என்பது ஆதிகாலத்துச் சபை யில் எங்கும் பிரஸ்தாபமாயிருந்தது. இந்தப் பிரஸ்தாபம் போலி கார்ப்பு காலத்திலிருந்து வந்தது. அது பொய்யாயின் யோவானது சீஷரில் யாராவது அதை மறுத்திருப்பார்.

ஆகையால் ஆதிச்சபையில் கொடுக்கப்பட்ட சாட்சியெல்லாம் யோவானே ஆசிரியனென்பதற்கு சார்புள்ளது. அதோடு அச்சாட்சியின் மொத்தத்தொகையும் நம்பிக்கைக்குப் போதுமானது என்கிறார்கள்.

**B. பின்னும் இந்த நூலின் உட்குறிப்புகளாலும் அப்படியே நிரூபிக்கலாமென்கிறார்கள்.** அக்குறிப்புகளாவன:

1. ஆசிரியன் அக்காலத்துக் குறிப்புகளையும் பலஸ்தீனுதேசத்து விஷயங்களையும் நன்கறிந்தவனும் யூதனுமாயிருந்தானென்பதும்; எப்படியெனில் அவன் யூத வழக்க பழக்கங்களையும் பழைய ஏற்பாட்டின் வார்த்தைகளையும் பொருளையும் யூத ஆசாரங்களையும் $2^{6}$ $3^{25}$ $11^{55}$ $11^{44}$ $19^{40}$, பண்டிகைகளையும் $7^{2. 37}$ $10^{22}$ $19^{31}$, தேவாலயத்துக்குரிய விஷயங்களையும் $18^{20}$ $2^{13-16}$, யூதரின் கொள்கைகளையும் $1^{19-28}$ $4^{9. 20}$ $6^{14}$ $7^{23. 25-44}$ $9^{2. 16}$ $10^{19}$ $11^{45-53}$ $18^{26}$ $19^{7}$ திட்டமாய் வெளிப்படுத்தினான். மேலும் அவன் பலஸ்தீனுதேசத்தின் இடங்களையும் கட்டடங்களின் குறிப்புகளையும் $4^{11. 20}$ $5^{2}$ $8^{20}$ $9^{7}$ $10^{23}$ $11^{54}$, பெத்தானியா பெத்சாயிதா என்னும் பேர்கள் இரண்டிடங்களுக்குக் கொடுக்கப்பட்டதையும் $1^{28}$ $2^{1}$, வழிகளின் வித்தியாசங்களையும் அளவையும் $6^{5. 19}$ $11^{18}$ $18^{1}$ அறியும் அறிவுள்ளவன்; யாக்கோபின் கிணற்றண்டையிருந்த பூமியின் காட்சியைக் கண்டவன்மட்டுமே நாலாம் அதிகாரத்திலிருக்கிற விபரத்தை எழுதக்கூடியவன். அன்றியும் அவனுக்கு அந்தக்காலத்தின் சம்பவங்கள் நன்றாய்த் தெரிந்திருந்தன $2^{20}$ $18^{13-28. 31}$. அதுவுமல்லாமல் எழுதினவிதம் எபிரெய பாஷைநடைக்கொத்தது. எபிரெய வார்த்தைகளை மொழிபெயர்த்து எழுதுகிறதுபோலிருக்கிறது. மூன்று, ஏழு என்கிற எபிரெயரின் திருஎண்களை அடிக்கடி உபயோகிக்கிறான். பழைய ஏற்பாட்டின் உதாரணங்களை கிரேக்கு மொழிபெயர்ப்பின்படி எழுதாமல் எபிரெய வேதத்தின்படி திருத்தி எழுதியிருக்கிறான்.

2. ஆசிரியன் தான் எழுதின சம்பவங்களையும் பேர்களையும் பார்த்திருந்தவனும், இயேசுவின் சீஷரில் ஒருவனுமாயிருந்தவனென்பதும்; எப்படியெனில், இயேசு சீஷர்களை அழைத்த விதத்தையும் இயேசு பிடிக்கப்பட்ட மாதிரியையும் $1^{35-51}$ 18, சம்பவ சமயங்களையும் $1^{40}$ $4^{6\ 40. 52}$ $5^{5}$, இடங்களையும் $8^{20}$ $10^{23}$ $11^{30}$, எண்களையும் $2^{6}$ $19^{23. 39}$ $21^{8}$ ஆகிய எல்லாவற்றையும் திட்டமாய்க் குறிப்பிட்டெழுதுகிறான். அவன் ஒவ்வொன்றையும் பார்த்த ஒருவனைப்போலவே விவரித்தெழுதியிருக்கிறான். இன்னும் இயேசுவும் தமது சீஷரும் ஒழிய மற்றெவரும் அறியக்கூடாத காரியங்களை எழுதியிருக்கிறான்; அவர்களுக்குள் நடந்த சம்பாஷணைகளையும் $6^{5-8}$ $11^{7-16}$ $12^{22}$, சீஷர்களின் எண்ணங்களையும் அபிப்பிராயங்களையும் $2^{11. 17. 21. 22}$ $4^{27. 32}$ $11^{11}$ $13^{27}$ $20^{8. 12}$, இயேசுவினுடைய எண்ணங்களையும் $2^{24}$ $4^{1}$ $5^{6}$ $6^{6. 15. 61. 64}$ $7^{1}$ $11^{33}$ $13^{1. 3. 11. 21}$ $16^{9}$ அறிந்தவனைப்போல எழுதியிருக்கிறான். அதோடு தான் கண்டவனென்று தன்னைக்குறித்துத் தானே திட்டமாய் எழுதியிருக்கிறான். $1^{14}$ $19^{35}$.



ஆசிரியன் இயேசு நேசித்த சீஷனென்னப்பட்ட யோவானென்று அனுமானிக்கலாம் $19^{35}$. தானே இயேசுவின் மரணத்தைக் கண்டவனென்று சொல்லுகிறான். அந்தச் சரித்திரத்தில் அந்த ஒரேசீஷன் அதைக் கண்டதாகச் சொல்லியிருக்கிறது. ஆகையினால் இயேசு நேசித்த சீஷன்தான் இதை எழுதினவன். அன்றியும் உயிர்த்தெழுதலின் சரித்திரம் அதைக் கண்டவனால் எழுதப்பட்டதாகத் தோன்றுகிறது. அப்படியானால் பேதுருவாகிலும் இயேசு நேசித்த சீஷனாகிலும் இதை எழுதியிருக்கவேண்டும். கடைசியான இராப்போஜனத்தின் சரித்திரமும் $13^{21-27}$, இயேசுவுடன் நடந்த கடைசி சம்பாஷணையின் சரித்திரமும் $21^{19-22}$ அப்படிப்பட்டது. அச்சரித்திரத்தால் பேதுரு இதற்கு ஆசிரியனாயிருக்க முடியாதென்று தோன்றுகிறது. $21^{24}$ல் இயேசு நேசித்த சீஷன் இதை எழுதினானென்று திட்டமாய் எழுதியிருக்கிறது. நாம் மற்றக் குறிப்புகளைக் கொண்டு எழுதினவன் யோவானென்று நினைக்கலாம். ஏனென்றால், பேதுருவும் யாக்கோபும் யோவானும் இயேசுவுக்கு நெருங்கிய சிநேகிதர்கள். எழுதினவன் இவர்களுக்குள் ஒருவனாயிருத்தல்வேண்டும். யாக்கோபு 44-ம் வருஷம் இறந்துபோனான். பேதுரு ஆசிரியனல்லவென்று நாம் மேலே பார்த்தோம். ஆகையினால் யோவானே இயேசு நேசித்த சீஷனும் இதன் ஆசிரியனுமாயிருக்கிறானென்று சொல்லலாம். இதை இன்னும் சில குறிப்புகளால் நிச்சயித்துக்கொள்ளலாமென்கிறார்கள். யோவானுடைய பெயர் ஒருபோதும் இந்தச் சுவிசேஷத்தில் காணப்படுகிறதில்லை. கடைசி அதிகாரத்தில் செபெதே

யுவின் குமாரர் என்னும் வார்த்தை வருகிறது. அச்சரித்திரத்தால் அக்குமாரரில் இயேசு நேசித்த சீஷன் ஒருவனுயிருக்கவேண்டும் என்றறியலாம். அந்த அதிகாரத்தில் $21^{2}$ அவர்கள் பேர் கடைசியாக வருகிறது. மற்றச் சுவிசேஷங்களில் பேதுருவுக்குப் பிறகு இவர்களுடைய பேர்களும் வரும். அன்றியும், திரியனுபந்த சுவிசேஷங்களில் யோவான்ஸ்நானகன் என்னப்பட்டவன் இந்த சுவிசேஷத்திலே ஸ்நானகன் என்னும் வார்த்தையில்லாமல் யோவானென்று அழைக்கப்படுகிறான். யோவானே ஆசிரியனென்றால், யோவானென்னும் பெயரையுடைய இருவரையும் தான் பிரித்துக் காட்டல் அவசியமில்லையென்று நினைத்து அவ்வண்ணமாய் எழுதியிருக்கலாம். இவைகளெல்லாவற்றையு மாராய்ந்துபார்த்தால் யோவானே இந்த நான்காம் சுவிசேஷத்திற்கு ஆசிரியனென்பதற்கு தகுந்த அத்தாட்சி அந்நூலிலேயே இருக்கிறதாக பெரும்பான்மையோர் சாதிக்கிறார்கள்.

**யோவான் ஆசிரியனல்ல வென்பது**—வேறு சிலர் யோவான் இந்நூலை எழுதவில்லையென்றும், எபேசுபட்டணத்தான் ஒருவன் இரண்டாம் நூற்றாண்டில் எழுதினனென்றும் சாதிக்கிறார்கள். அதற்கிசைவாக பின்வரும் நியாயங்களைச் சொல்லுகிறார்கள். அவையாவன:—

1. போலிகார்ப்பு, கிளமந்து, இக்னேஷியஸ் முதலிய வேறு சிலர் ஆதிச்சபையில் தாங்களெழுதின நூற்களில் திட்டமாய் யோவானை ஆசிரியனாகக் காட்டுகிறதில்லை. இந்த நூலிலிருந்து சில வாக்கியங்களை யெடுத்துரைத்தும் யோவானது பெயரைச் சொல்லுகிறதில்லை. எனினும் யோவானை ஆசிரியனென்று அக்காலத்தோர் அநேகர் சொன்னதால் இவர்களதை யறிந்தும் மறுக்காமலிருந்ததே யோவானே ஆசிரியனென்பதற்குப் பலத்த சாட்சியாமென்று இந்நியாயத்தை மறுக்க.

2. இந்நூலின் ஆசிரியன் பேதுருவிலும் யோவானை அதிகமாய் உயர்த்தலால் பவுலைச்சார்ந்தவன் ஒருவன் எழுதியிருக்கவேண்டுமென்கிறார்கள். இதற் குதாரணமாக யோவான் இயேசுவின் மார்பில் சாய்ந்துகொண்டிருந்ததையும் யோவான் இயேசுவினிடம் பேதுருவின் கேள்வியைக் கேட்டதையும் எடுத்துரைக்கிறார்கள். இவைகளில் யோவானது பெருமை காணப்படுகிறதில்லையென்று அந்தவிடத்து வியாக்கியானத்தாலறிக. இத்துடன் எல்லாவற்றிலும்



பேதுருவின் பெருமை ஒப்புக்கொள்ளப்பட்டதால் இந்நியாயத்தையும் மறுக்க. $1^{42}$ $6^{68}$ $13^{6}$ $18^{10.16}$ $20^{2.7}$ $21^{7.11.15}$ பார்க்க.

3. யோவான் தன்னையே இயேசு நேசித்த சீஷனென்று சொல்லமாட்டான் என்கிறார்கள். இது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், இந்தப் பெயர் இயேசுவின் கடைசியான சம்பவங்களைக்குறித்த சரித்திரத்தில்மாத்திரம் வருகிறதென்றறிக. பெருமை பாராட்டும்படியல்ல, தான் கொடுத்த சாட்சிக் குறுதிசொல்லும்படிக்கே எழுதப்பட்டதுபோலிருக்கிறது. $13^{23}$ $21^{7}$ பார்க்க.

4. சாஸ்திரக் கல்வியில்லாத யூதக் கிறிஸ்தவ னொருவன் இவ்வண்ணமான சின்மய போதனையுடைய நூலை எழுத முடியாதென்கிறார்கள். இது மனச்சார்புக்குரிய நிதானிப்புமாத்திரமாதலால் இதை மறுக்கலாம். இயேசு தம்முடைய சீஷர்களை நடபடியாகமத்தில் சொல்லியிருக்கிறபடி சபைத்தலைவர்களாக்கினாரென்றால், யோவானை இந்நூலை இயற்றக்கூடியவனாக்கலாமென்பது திண்ணம். யோவான் சின்னாசியா நாடெங்கும் அதிக மதிப்புப்பெற்ற குருவாக எண்ணப்பட்டானும். அப்படியிருந்தால் அவன் மனம் அநேகவிஷயங்களில் விருத்தியடைந்து கிரேக்கு சாஸ்திரத்தில் சற்றுப் பழகியிருக்கவேண்டும்.

5. பாம வாக்கைப்பற்றிய போதனை. அலக்சாந்திரியாபட்டணத்தில் உண்டானதால் ஆசிரியன் அப்பட்டணத்தானென்கிறார்கள். அந்தப் போதனைக்கும் இந்நூலின் போதனைக்குமுள்ள பெரிய வித்தியாசங்களை முன்னமே கண்டறிந்தோம். ஆகையால் இது உறுதியான ஆட்சேபனையன்று. யோவான் ஆசியாவிலிருந்தபோது இந்த விசேஷித்த போதனையைக் கற்றறிந்து பிறகு பரிசுத்தாவியின் வல்லமையால் இந்நூலின் போதனை அவனது மனதில் வெளிப்பட்டது என்பது நம்பக்கூடிய காரியமே. அன்றியும் கடவுளாவியின் வல்லமையால் ஏனோதானோவென்று அசைந்தாடின பேதுரு ஆதிச்சபையின் பலத்த தலைவராதலும், தற்பெருமையும் யூதஜாதி வைராக்கியமும் நிறைந்த சவுல் எல்லாருக்கும் அடியானும் புறஜாதிக்கு மிக்க அன்புள்ள குருவுமாதலும், அற்ப தகரவேலைக்காரனும் படிப்பில்லாதவனுமாகிய ஜான் பனியன் பற்பல பாஷைக்காரரான கோடாகோடி ஜனங்களுக்கு ஆத்தும போதகராதலும், சக்கிலிவேலை செய்த

வனும் உயர்தர படிப்பில்லாதவனுமான வில்லியம் கேரி இந்தியா தேசத்திற்குப் புகழ்பெற்ற மிஷனரியாதலும் கூடுமானல் அற்பபுத்தியும் செம்படவத் தொழிலுமுள்ள யோவான் இந்நூலுக் காசிரியனுதலும் அவ்வல்லமையாலே கூடுமென்று நினைக்கத்தக்கது.

6. திரியனுபந்த சுவிசேஷங்களுக் குண்டான வித்தியாசங்கள் அநேகமாதலின், இது இயேசுவின் சீஷனுல் எழுதப்பட்டிருக்கக் கூடாதென்கிறார்கள். அந்த வித்தியாசங்கள் சரித்திர உண்மையை மறுக்கத் தக்கதன்று என்பதைக் கண்டோம். ஆகையால் இந்நியாயம் பலத்த ஆட்சேபனையல்ல.

7. வெளிப்படுத்தின விசேஷத்திற்கும் இந்நூலுக்கும் அதிக வித்தியாசமிருத்தலின் இவ்விரண்டும் யோவானுல் எழுதப்பட்டிருக்கலாகாதென்றும் வெளிப்படுத்தின விசேஷம் யோவானுல் எழுதப்பட்டதென்பதற்குப் போதுமான சாட்சி யிருக்கிறதால் அதிலும் கொஞ்சம் பலவீன சாட்சியுடையதாகிய இந்நூல் அவனுல் எழுதப்பட்டிருக்க மாட்டாதென்றும் சொல்வர். அநேக விஷயங்களில் அதிக வித்தியாசம் இவ்விரண்டிற்கும் இருப்பினும் அவைகள் ஒருவராலேயே எழுதப்படக் கூடாதென்று நிச்சயித்துச் சொல்லத்தக்கதல்ல. அது மாத்திரமல்ல, அநேகவிஷயங்களில் சம்பந்தமு முண்டு. பொதுவான நோக்கங்களும், வார்த்தைகளும், வார்த்தைகளை உபயோகிக்கும் வகைகளும் இவ்விரண்டிற்கு முண்டு. இருக்கிற வித்தியாசங்களை நாம் முழுவதுமாய்ச் சமாசப்படுத்த முடியாதெனினும் அதற்குக் காரணமா யிருக்கக்கூடிய சில குறிப்புகளைக் காட்டலாம். அவர் முதலாவது வெளிப்படுத்தின விசேஷத்தையும் பெரிய வயதில் சுவிசேஷத்தையும் எழுதியிருக்கலாம். அல்லது இரண்டையும் வெவ்வேறு குமஸ்தாக்கள்மூலமாய் இயற்றியிருக்கலாம். அல்லது வெளிப்படுத்தின விசேஷத்தை வேறே யூத புஸ்கத்தை ஆதாரமாகக்கொண்டு அதின் நடையை அநுசரித்துக்கொண்டு எழுதி யிருக்கலாம். இம்மூன்று காரியங்களும் உண்மையாயிருந்தால் இவ்விரண்டு புஸ்தகங்கள் அநேகவிஷயங்களில் வேறுபாடுடையதாக இருக்குமென்று அனுமானிக்கலாம். ஆகையால் இது பலத்த ஆட்சேபனையாயினும் யோவான் இவ்விரண்டிற்கும் ஆசிரியனென்பதை இது மறுக்கக் கூடிய ஆட்சேபனையன்று. இக்குறிப்புக ளெல்லாவற்றையு மாலோ



சித்துக்கொள்ளுமிடத்து எப்படி நிதானிக்கவேண்டுமெனில், ஆட்சேபனைக ளநேகமாயிருந்தாலும் யோவானை ஆசிரியனென்று ஆதிச்சபையின் நம்பிக்கையும் பாரம்பரியமும் புறச்சாட்சியும் அகச்சாட்சியும் பலமாய்ச் சாதிப்பதை இவைகள் மறுக்கத்தக்கவை யல்லவென்று பெரும்பான்மையோர் சொல்வதை ஒப்புக்கொள்ளலாம். கவனிக்க வேண்டிய இன்னொரு குறிப்புண்டு. யோவானே இச்சுவிசேஷத்தை எழுதாமலிருந்தால்—மிகச் சிறந்த இந்நூலை எழுதத் தக்கவன் வேறொருவனு யிருப்பானென்று நினைக்க இடமில்லை. எப்படியெனில், வேறொரு அப்போஸ்தலன் எழுதியிருக்கமாட்டான். அப்படி எழுதியிருந்தால், அப்பேர்ப்பட்டவனது பெயர் முழுவதுமாய் மறைந்துபோதல் முடியாது. பின்னும் இரண்டாம் நூற்றூண்டில் இப்பேர்ப்பட்ட சுவிசேஷத்தை எழுதக்கூடியவனொருவன் காணப்படவுமில்லை. இதற்கும் அக்காலத்தி லெழுதின நூற்களெல்லாவற்றிற்கும் அதிக வித்தியாசமுண்டு; இது மிகவும் சிறப்புள்ளது. சபை வித்துவான்களது பெயர்கள் யாவும் தெரிந்திருக்கும்போது இதை எழுதினவனது பெயர் எப்படித் தெரியாமலிருக்கலாம். ஆகையால் நாம் கடைசியாய்ச் சொல்லவேண்டியது என்னவென்றால், யோவான் இதை எழுதினனென்பதற்குப் போதுமான நியாயங்களுண்டென்றும், வேறொருவன் எழுதினனென்று சாதிப்பதற்குச் சரியான நியாயமில்லையென்றும் சொல்லக்கூடும். ஆகையால் யோவான் எழுதினனென்பதை நம்புவது நன்று.

## XII

## யோவான் என்னும் மகானின் சரித்திரம்

1. சுவிசேஷ சரித்திரங்களில் எழுதப்பட்டிருப்பதாவது. யோவான், செபெதேயு சலோமே என்பவர்களின் இளைய குமாரன். செபெதேயு கலிலேயா தேசத்தானும் மீன்பிடிக்கிறவனுமானவன். அவன் பெதஸ்தாக் குளத்தின் கரையில் குடியிருந்தான். மாற் $1^{20}$ $15^{40}$ $16^{1}$ மத் $27^{56}$ யோவா $1^{41}$. சலோமே இயேசுவின் தாயாருக்கு

சகோதரி. $19^{25}$. செபெதேயுவுக்கு அநேக கூலியாட்க ளிருந்ததால் அவன் கொஞ்ச நல்ல அந்தஸ்தை யுடையவன்போலிருக்கிறது. சலோமே இயேசுவுக்குப் பின்சென்று அவருடைய தேவைகளுக்கு உதவிசெய்துவந்தாள். யோவானுக்கு எருசலேமில் வீடு இருந்ததென்றும், அவன் பிரதான ஆசாரியரை அறிந்தவனென்றும் சொல்வார் சிலர். மாற் $1^{20}$ $15^{40}$ லூக் $8^{3}$ $19^{27}$ $18^{15}$. அவன் மற்ற கலிலேயரைப்போலவே நியாயப்பிரமாணத்தின் நுட்பமான விஷயங்களில் பயிற்சியடைந்தவனல்ல. எனினும் எல்லா யூதப்பிள்ளைகளைப்போலப், பழைய ஏற்பாட்டின் விஷயங்களைக் கற்றறிந்தவனாயிருப்பான். கலிலேயாதேசத்தார் மனவெழுச்சியும் பக்தியுமுள்ளவர்கள். அவன் யோவான்ஸ்நானகன் செய்த பிரசங்கத்தினால் இழுக்கப்பட்டு அவனுக்குச் சீஷனானான். அப்போது யோவானது வார்த்தையினால் அவன் அந்திரேயாவுடன் இயேசுவினிடம் வந்தான். $1^{40}$. பிறகு அவன் தன் சகோதரனாகிய யாக்கோபையும் இயேசுவினிடங் கூட்டிக்கொண்டு வந்தான் என்பதாகத் தோன்றுகிறது. அவன் கானாவூருக்குப் போய் இயேசு செய்த முதலதிசயத்தைப் பார்த்து உறுதியான நம்பிக்கைபெற்றான். $2^{11}$. பிறகு ஒருவேளை இயேசுவுடன் எருசலேமுக்குப் போய் அவருடன் சமாரியாவழியாய்க் கலிலேயாவுக்குத் திரும்பி வந்திருப்பான். அதற்குப்பின் மீண்டும் மீன்பிடிக்கும் வேலை செய்துகொண்டிருந்து கொஞ்சக்காலஞ் சென்றபின் இயேசுவுக்கு உறுதியான சீஷனாகும்பொருட்டு வரவழைக்கப்பெற்று எல்லாவற்றையும் விட்டு இயேசுவைச் சேர்ந்தான். மத் $4^{21.22}$ மாற் $1^{19.20}$ லூக் $5^{8-11}$. பிறகு அப்போஸ்தலருக்குள் அவன் ஒருவனாக நியமிக்கப்பெற்றான். மத் $10^{1}$ மாற் $3^{14}$. இவனும் பேதுரு யாக்கோபு என்பவர்களும் மூன்று பிரதான சீஷர்களானார்கள். இயேசு யாக்கோபு யோவானென்பவர்களுக்கு பொவனெர்கேஸ் என்னும் பெயர் கொடுத்தார். பொவனெர்கேஸ் என்பதற்கு இடிமுழக்கத்தின் மக்கள் என்று அர்த்தமாம். மாற் $3^{17}$. இந்தப் பெயரால் அவர் இவர்களுடைய அதிவைராக்கியத்தைக் குறிப்பிட்டார். மேற்சொன்ன மூன்று பிரதான சீஷர்கள் யவீருவின் மகளை எழுப்பின சமயத்திலும் ரூபமாறின மலையிலும் கெத்செமனே தோட்டத்திலும் இயேசுவுடன் இருந்தார்கள். மாற் $5^{37}$ லூக் $8^{51}$ மத் $17^{1}$ மாற் $9^{2}$ லூக் $9^{28}$ மாற் $14^{33}$. யாக்கோபும் யோவானும்



தங்கள் ஆண்டவருக்கு இடங்கொடுக்காத சமாரியா கிராமத்திற்கு அக்கினி பற்றுவிக்கவேண்டுமென்று கேட்டார்கள். லூக் $9^{54}$. இன்னொருசமயத்தில் அவர்கள் தாயார் இயேசுவின் இராஜ்யத்தில் தன் இரண்டு மக்களுக்கும் முக்கியமான ஸ்தலத்தைக் கேட்டாள். மாற் $10^{35}$. பேதுருவுடன் யோவான் பஸ்காவை ஆயத்தம்பண்ணப் போயிருந்தான். லூக் $22^{8}$. அவனொருதடவை இயேசுவினிடம் பிசாசுகளைத் துரத்தின ஒரு மனுஷனைப்பற்றி வைராக்கியத்துடன் பேசினான். மாற் $9^{38}$, லூக் $9^{49}$. நான்காம் சுவிசேஷத்தில் அவனுடைய பெயர் வராவிடினும் இயேசு நேசித்த சீஷனென்று சொல்லப்பட்டவன் அவன்தானென்று நிச்சயிக்கத்தக்க பல காரணங்களுண்டு என்றறிந்தோம். கடைசி இராப்போஜனத்தில் ஆண்டவர் சமீபத்திலுட்கார்ந்திருந்து "அவன் யார்" என்கிற கேள்வியைப் பேதுருவின் ஏவுதலால் இயேசுவிடங் கேட்டான். $13^{25}$. பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவ னிவனே. $18^{16}$. பேதுருவும் ஆசாரியனது அரமனைக்குள் வரும்படி இவனே உத்தரவு வாங்கினான். இயேசுவோடிருந்து அவர் சிலுவையின் பக்கத்தில் நின்று இயேசுவின் தாயாரை அவரது வார்த்தையால் தன் வசத்தில் பெற்றுக்கொண்டான். $19^{26}$. மூன்றாம்நாள் பேதுருவும் அவனும் மரியாள் சொன்ன செய்தியைக் கேட்டு கல்லறைக்குப் போய்ப் பார்த்தார்கள். அவன் பார்த்து நம்பினானென்று சொல்லியிருக்கிறது. $20^{2}$. கடைசியாக செபெதேயுவின் குமாரரும் பேதுருவும் இன்னும் சிலரும் ஒரு விசேஷித்த தரிசனம் அடைந்ததாகச் சொல்லியிருக்கிறது. இயேசு அவனது மரணத்தைப் பற்றிச் சொன்ன வார்த்தை $21^{2}$. அவன் சாகாமலிருப்பானென்று சொன்னதுபோல எல்லாரும் நினைக்கும்படி நேரிட்டது. இயேசு பரத்துக்கு ஏறினபிறகு பேதுருவும் யோவானும் எருசலேமில் கிறிஸ்துவின் உபதேசத்தைப் பிரசங்கித்தார்கள். இவ்விரண்டுபேரும் தேவாலயத்தின் வாசற்பக்கத்தில் முடவனைச் சுகப்படுத்தினார்கள். அப்பொழுது யூத நியாயசங்கத்திற்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு அங்கே அதிக தைரியமாய் உத்தரவு கொடுத்தார்கள். அப் 3, 4. பின்பு சமாரியாவுக்குப் போய் புதுச்சபையாருக்கு பரிசுத்தாவியின் வரத்தைக் கொடுத்தார்கள். அப் $8^{15}$. இவ்விருவரும் எருசலேம் சபைக்குத் தலைவரானார்கள். கலா $2^{3}$.

பவுல் ஸ்தாபித்த புறஜாதிச் சபைகள் யூத அதிகாரங்களைக் கைக்கொள்ளக்கூடாது என்பதை பேதுருவுடன் அவனும் ஒப்புக்கொண்டான். அவன் சகோதரனான யாக்கோபு, முதல் நூன்பத்தில் எருசலேமில் உயிர்ச்சேதமுற்றனன்.

அவனது குணமின்னதென்று ஆராயின் புதிய ஏற்பாட்டில் காண்பிக்கப்பட்ட யோவான், இயேசுவை அதிகமாய் நேசித்தவனும் அவருக்காக அதிக பக்தியுடையவனுமாக காணப்படுகிறது. அவனது அன்பில்லாத வைராக்கியத்தை இரண்டு மூன்று சமயங்களில் ஆண்டவர் கண்டித்தார் எனினும் அவனது குணம், அமைதியுஞ் சாந்தமுமுள்ளது. அவன் இயேசுவின் மனதை நன்றாயறிந்த சீஷன்; அவன் அதிக பேச்சுடையவனும் எதற்கும் முந்துகிறவனுமல்ல; அவனைப் பற்றி வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது இவ்வளவுதான்.

**2. பாரம்பரிய சரித்திரங்கள்.** இப்போது பாரம்பரையான கதைகள் அவனைப்பற்றிச் சொல்லுவதையும் ஆராய்ந்தறியவேண்டும். அது பின்வருமாறு தோன்றுகிறது. யூதக் கிறிஸ்தவர்களுடன் ரோமான் யுத்தம் ஆரம்பித்த வருஷமாகிய கி. பி. 66-ல் அவனும் மலைகளுக்குப் போயிருந்திருக்கலாம். பிறகு அவன் எபேசுபட்டணத்திற்குப் போய்ச் சாகும்பரியந்தம் அங்கேயிருந்தான். எருசலேம் அழிந்தபிறகு யோவான் அங்கே போய்ச் சேர்ந்திருப்பான்போலிருக்கிறது. அப்போது பவுலுடைய வேலை முடிந்தது. பவுல் சின்னாசியாநாட்டில் எங்கும் சபைகளை ஸ்தாபித்துவிட்டு ரோமாபுரியில் இறந்துபோனான். பின்பு கிரேக்கு கலைஞானங்களைப் படித்த அந்தச் சபைகளுக்கு யோவான் தகுந்தவிதமாய் ஊழியம் செய்தான். அவன் அவர்கள் ஞானத்திற்கேற்றபடி கிறிஸ்துவின் மாட்சிமையை விளக்கிக் காட்டினான். யோவான் எபேசுபட்டணத்திலிருந்து அந்த நாட்டின் சபைகளுக்குப் பிரதான குருவாகி அங்கே நான்காம் சுவிசேஷத்தை எழுதினானென்கிற பாரம்பரிய சரித்திரம் உண்மையாயிருக்கிறதென்பதற்குப் பொதுவான அத்தாட்சிகளுண்டு. அவனங்கே முதல் நூற்றாண்டின் கடைசிப்பாகத்தில் மரணமடைந்தானென்றுஞ் சொல்லுகிறார்கள். அவன் அந்த ஊரில் தங்கியிருந்ததைப்பற்றிய அநேக பாரம்பரைகளிருக்கின்றன. சிலவற்றைச் சொல்லலாம். ஒருநாள் அவன் தனக்கு மிகவும் பிரியமான ஒரு வாலிபனை ஒரு ஊரின்



சபைத்தலைவன் வசத்தில் விட்டான். மீண்டும் அந்த ஊருக்குத் திரும்பி அவனைப்பற்றி விசாரிக்க அவன் சபையைவிட்டு துன்மார்க்க வழிகளில் நடந்து வழிப்பறிகாரனாய் ஜனங்களது பொருட்களை அபகரித்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டான். அதைக்கேட்டுக் கோபப்பட்டு உடனே அந்தக் கொள்ளைக்காரனிருந்த மலைக்குப் போய் அவனைப் பார்த்து தன் அன்பான வார்த்தைகளால் மறுபடியுமவனை நல்ல வழிக்குக் கொண்டுவந்தான். அன்றியும், இன்னொரு சமயத்தில் கிறிஸ்து தேவகுமாரனல்லவென்று சொன்ன வேதப்புரட்டனாகிய செரிந்தஸ் தானிருந்த பொதுஸ்நான மண்டபத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டுச் சத்தியத்திற்கு விரோதியான செரிந்தஸ் உள்ளே யிருத்தலின் இந்தக் கட்டடம் நம்பேரில் விழும், ஆகையால் நாம் ஓடிப்போகலாமென்று சொல்லி உடனே ஸ்நானம்பண்ணாமல் போய்விட்டான். அவன் விருத்தாப்பியமான காலத்தில் எப்போதும் சபையாரை அன்புகூர எவிவிவானாம். நீங்கள் ஏன் அப்படிச் சொல்லுகிறீர்களென்று மற்றோர் கேட்கும்போது அவன் இது ஆண்டவரது கற்பனை; இதைமட்டும் நிறைவேற்றினால் போதுமென்று சொல்வானாம். இந்தப் பாரம்பரிய சரித்திரங்கள் மெய்யாயிருக்கலாம். ஆதிகாலத்தில் அப்படி நம்பினார்கள்; இன்னம் நம்பக்கூடாத அநேகக் கதைகளுமுண்டு. யோவான் ஏதோ ஒருகாலத்தில் பத்முதீவுக்குக் கொண்டுபோகப்பட்டானென்று வெளிப்படுத்தின விசேஷத்தாலறியலாம். அதில் சொல்லியிருக்கிறதைத்தவிர இந்தச் சஞ்சாரத்தைப் பற்றி வேறொன்றும் நமக்குத் தெரியவில்லை. அவனது சரித்திரத்தைப்பற்றி இவ்வளவுதான் நாமறிவோம். அவனது மாட்சிமையான எண்ணங்களை நாம் அவன் எழுதின சுவிசேஷத்திலும் நிருபங்களிலும் காண்கிறோம்.

யோவானது குணாதிசயங்களை விசாரிக்குமிடத்து முதலாவது இயேசுவுக்கு விரோதமான கொள்கைகளைக் கிஞ்சித்தேனும் சம்மதிக்காத பக்தி அவனது முக்கியமான லக்ஷணமென்பது வேதத்தின் சரித்திரத்தினாலும், அவன் எழுதின நூற்களாலும் பாரம்பரைகளாலும் தெளிவாய்த் தெரிகிறது. இத்துடன் அமைதியான சிந்திப்பு என்னும் லக்ஷண மிருந்ததாகத் தோன்றுகிறது. இயேசுவின்விஷயத்தில் அவன் அதிக வைராக்கியமுள்ளவன் எனினும் மற்றவிஷயங்களில்

மிக்க சாந்தகுணமுள்ளவன். அவன் அதிக தியானஞ்செய்கிறவனும் ஆலோசனைக்காரனும் அன்புடன் இயேசுவைச் சார்ந்துகொண்டவனுமானான். இதினால் இயேசுவுக்கு மிக்க பிரீதியுள்ளவனென்று எண்ணலாம். தீமைகளையும் இயேசுவுக்கு விரோதமான காரியங்களையுங் கண்டால் கோபமூண்டு கடிந்துகொள்வான். இதினால் நான்காம் சுவிசேஷத்தில் பரிசேயரது விரோதத்தைத் தெளிவாய்க் காட்டுகிறானென்று நினைக்கலாம். இயேசுவுடனிருந்தபோது அதிகமாய்ப் பேசாமல் எப்போதும் அன்புள்ளவனாய் இயேசுவின் போதனைகளை ஏற்றுக்கொண்டு தியானஞ்செய்ததாலே நான்காம் சுவிசேஷம் பெரும்பான்மையாய்ச் சின்மய விஷயங்களுடையது. அவன் நாமதிகமாய் நேசிக்கக்கூடியவனும் மேன்மையாய் மதிக்கத்தக்கவனுமானான்.

## இரண்டாம் பாகம்

# வசனமும் வியாக்கியானமும்

### $1^{1-18}$. பரம வாக்கு.

1 ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை
தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயி
2 ருந்தது. — அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். —
3 சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டான
தொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. —
4 அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷ
5 ருக்கு ஒளியாயிருந்தது.—அந்த ஒளி இருளிலே பிரகா
சிக்கிறது; இருளானது அதைப் பற்றிக்கொள்ளவில்லை.
6 தேவனால் அனுப்பப்பட்ட ஒரு மனுஷன் இருந்
7 தான், அவன் பேர் யோவான்.—அவன் தன்னால் எல்
லாரும் விசுவாசிக்கும்படி அந்த ஒளியைக்குறித்துச்
8 சாட்சிகொடுக்க சாட்சியாக வந்தான். — அவன் அந்த
ஒளியல்ல, அந்த ஒளியைக்குறித்துச் சாட்சிகொடுக்க
வந்தவனாயிருந்தான்.
9 உலகத்திலே வந்து எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்
10 கிற ஒளியே அந்த மெய்யான ஒளி. — அவர் உலகத்
தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று,
11 உலகமோ அவரை அறியவில்லை. — அவர் தமக்குச்
சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமான
12 வர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. — அவரு
டைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை
ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை
பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்க
13 ளுக்கு அதிகாரங்கொடுத்தார். — அவர்கள், இரத்தத்தி
னாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்

தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்.—
14 அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்
தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணி
னார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது
பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற
மகிமையாகவே இருந்தது.
15 யோவான் அவரைக்குறித்துச் சாட்சிகொடுத்து: எனக்
குப் பின்வருகிறவர் எனக்கு முன்னிருந்தவர், ஆகை
யால் அவர் என்னிலும் மேன்மையுள்ளவர் என்று
நான் சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான் என்று
சத்தமிட்டுக் கூறினான்.
16 அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிரு
17 பையின்மேல் கிருபை பெற்றோம். — எப்படியெனில்
நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்
கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்து
18 வின் மூலமாய் உண்டாயின. — தேவனை ஒருவனும்
ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற
ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்.

## I. $1^{1-18}$. முகவுரை.

முகவுரையில் இந்தச் சுவிசேஷத்தின் போதனை சுருக்கமாய் அடங்கியிருக்கிறது. இயேசுவினது குணமும் நடக்கையும் இதிலே உள்ளங்கை நெல்லிக்கனிபோல் காணப்படுகின்றன. இதில் பரம வாக்கு என்னும் பெயர் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரம வாக்கின் போதனையைப்பற்றி முன்னே விவரமாயெழுதினோம். நீங்களதை மனதில் நினைவுகூர்ந்து இந்த வியாக்கியானத்தை வாசிக்கக்கடவீர்கள். இந்த முகவுரை இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கப்படலாம்.

(1) பரம வாக்கினது நித்தியதன்மை. $1^{1-5}$.

(2) பரம வாக்குக்குண்டான வெளிப்படுத்தல். $1^{6-18}$.

**முதல் பகுதி.** நித்தியகாலத்துக்குரிய காரியங்களைச் சொல்லுகிறது.

**இரண்டாம் பகுதி.** உலக சரித்திரத்துக்குரிய காரியங்களைச் சொல்லுகிறது. இரண்டாம் பகுதியையும், பின்வருமாறு பிரிக்கலாம்.



(1) பரம வாக்குக்குச் சாட்சி. $1^{6-9}$.

(2) உலகத்தாரின் அவிசுவாசம். $1^{10-11}$.

(3) மெய்விசுவாசிகளது நிலைமை. $1^{12-13}$.

(4) பரம வாக்கு மனிதனானதலாலாகிய பயன்கள். $1^{14-18}$.

**பரம வாக்கினது நித்தியதன்மை. $1^{1-5}$.**

இந்த வாக்கியங்கள் பரம வாக்கு தெய்வத்தோடிருக்கிற நிலையையும் உலக சிருஷ்டிப்பிலும் பாதுகாப்பிலும் அவருக்குண்டான தொழிலையும் விளக்கிக் காட்டுகின்றன. பரம வாக்கானது உலகத்தின் ஜீவனும் ஒளியுமாயிருக்கிறது.

1. **ஆதியிலே**—இது பழைய ஏற்பாட்டின் முதல் வார்த்தையுடன் சம்பந்தமுள்ளது. உலக சிருஷ்டிப்பின் துவக்கத்தையும் திரிகாலங்களுமுண்டான சமயத்தையுங் குறிப்பிக்கிறது.

**வார்த்தை**—வாக்கு என்பது இந்திய தத்துவ நூற்களில் இம்மொழிக்குரிய அர்த்தத்தையுடையதாதலின் Logos என்னும் பதத்திற்கு வாக்கு அல்லது பரம வாக்கு என்பது உத்தம மொழிபெயர்ப்பாக இருக்கும்.

**இருந்தது**—இருந்திருக்கிறது என்கிற அர்த்தத்தையுடையது. ஆதிகாலத்தில் உலகத்தைப்போலப் பரம வாக்கு உண்டானது என்று சொல்லாமல் அப்போதே இருந்தது என்று சொல்லக்கூடிய தன்மையுடையது. திரிகாலங்களுண்டாகுமுன்னே அது இருந்தது. இதினால் பரம வாக்கு நித்தியத்துவமுடையதென்றறிக.

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே" என்று மாணிக்கவாசகரால் சொல்லப்பட்டதைப் பார்க்க.

**தேவனிடத்திலிருந்தது**—கடவுளோடு சமவாயசம்பந்த நிலைமையிலுள்ளதென்பதைக் காண்பிக்கிறது. பரம வாக்கானது கடவுளுக்கோர் குணமும் ஓர் சக்தியுமல்ல. எக்காலத்திலும் கடவுளோடு ஒற்றுமைப்பட்டுள்ள குலஸ்தியென்று சொல்லக்கூடிய தன்மையுடையது. அது கடவுளது சக்தியாகவும், குணமாகவும் மாத்திரமிருந்தால் தேவனிடத்திலிருந்தது என்று சொல்லவேண்டியதில்லை. ஆதலின் அப்படிச் சொல்லியிருப்பதால் பரம வாக்கானவர் தெய்வக்குணியென்பது அனுமானமாகிறது. இந்தத் தெய்வக்குணியைக்குறித்துக் கடவுளுடைய சமவாய நிலைமையைச் சாதித்தல் வேண்டும்.

**தேவனாயிருந்தது**—தெய்வத்தன்மையும் குணமுமுடையது. அந்தப் பரம வாக்கு தெய்வமாயிற்றென்னும் மொழிபெயர்ப்பு சிறந்தது. இந்த வசனத்தில் பரம வாக்கைப்பற்றி மூன்று காரியங்கள் கூறப்பட்டன. அவை யெவையெனின்: அவரது நித்தியத்துவம், கடவுளுடன் அவரது சமவாயசம்பந்தம், அவரது தெய்வத்தன்மை என்பவைகளே.

2. **அவர்**—அன்னவர் அல்லது அவ்வண்ணமாய்ச் சொல்லப்பட்டவர். அதாவது அப்படியே விவரிக்கப்பட்ட அந்தப் பரம வாக்கு. உலக சரித்திரம் ஆரம்பித்தபோது பரம வாக்கு அவ்வண்ணமாய் கடவுளுடனிருத்தல் இவ்வசனத்தில் கூறப்பட்டது.

3. பரம வாக்கின் மூலமாய் சகலமும் உண்டாகப்பெற்றது. அவரே சிருஷ்டிப்பின் கர்த்தாவானார்.

**அவராலே யல்லாமல்**—அவரில்லாமலே என்பது நன்று. எல்லாம் அவரது சமுகத்தில் உண்டாயிற்றென்பதைக் காண்பிக்கிறது.

4. **அவருக்குள் ஜீவனிருந்தது**—அவரிலே ஜீவனிருந்ததென்பது நன்று. அவரே உயிருக்குயிராகவே யிருந்தார் எனவும், உலகத்தின் உயிர் அவரில் அமைந்திருந்தது எனவும், சொல்ல விரும்பி அவரிலே ஜீவனிருந்தது என்றான். தொகுத்துச்சொல்லின் அவரே உலகத்தைக் காத்து நடத்துகிறார் என்பதாம்.

**மனுஷருக்கு ஒளியாயிருந்தது** — கடவுளது உயிராகிய பரம வாக்கு உலகத்தில ஜீவனாகி அறிவாகிய ஒளியையுமுள்ளதாயிற்று. ஒளி என்பது நன்னெறியறிவு என்றர்த்தத்தையுமுடையது. அது லௌகீக அறிவைமாத்திரங் குறிப்பிக்கிறதில்லை.

5. **இருளிலே பிரகாசிக்கிறது**—எக்காலங்களிலும் இந்தத் தெய்வ ஒளியானது பிரகாசித்துக்கொண்டேயிருக்கிறது. உலகத்தில் பாவவிருள் செருங்கிப் படர அந்த ஒளியின் பிரகாசம் அதிலேயே துலங்கி வெளிப்படுகிறது. கடவுளாவியாகிய அந்த ஒளிக்கு உலகத்தினாவியாகிய லௌகீகம் நேர்விரோதத்தையுடையது.

**பற்றிக்கொள்ளவில்லை**—கிரேக்கு மொழிக்கு இரண்டர்த்தங்களுண்டு. (1) உணர்ந்துகொள்ளவில்லை. (2) மேற்கொள்ளவில்லை. இவ்விடத்தி லநேக வித்துவான்கள் மேற்கொள்ளவில்லையென்று அர்த்தங்கொடுக்கிறார்கள். எப்படியெனில், இருளதிகமாய் மூடினும் ஒளியை அவித்துப்போட முடியாமற்போயிற்றென்பார். மற்றோர்



அந்த ஒளி ஓயாமற் பிரகாசித்துக்கொண்டிருப்பினும் உலகத்தார் மனவிருளால் அதை உணராமற்போனார்களென்பார்.

**பரம வாக்கின் வெளிப்படுத்தல். 1[6-18].**

நித்தியகாலத்தில் இருந்துகொண்டேயிருக்கிற அந்தப் பரம வாக்கு உலக சரித்திரகாலத்தில் வெளிப்படலாயிற்று. இந்த வசனங்களில் அந்த வெளிப்படுத்த லின்னதென்றும் உலகத்தா ரதைப் பெற்றுக்கொண்டவித மின்னதென்றும் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் தெய்வசித்தத்தினால் கடவுளின் மக்களானார்களென்றும் காண்கிறோம்.

6. பரம வாக்குக்குச் சாட்சியாக ஆசிரியன் பழைய ஏற்பாட்டின் கடைசியான தீர்க்கதரிசியைக் காண்பிக்கிறான். இந்தச் சாட்சியால் தான் யோவான் இயேசுவை நம்பி ஏற்றுக்கொண்டான்.

**இருந்தான்**—எழுந்தான் அல்லது தோன்றினான் என்க. இந்த மொழி மூலபாஷையில் முதல் வசனத்திலிருக்கிற இருந்தது என்கிற மொழிக்கு வித்தியாசமுள்ளது. ஆகையின் மூலத்தின் வித்தியாசம் மொழிபெயர்ப்பிலேயும் காணப்படவேண்டும்.

**அனுப்பப்பட்ட**—இம்மொழி ஒரு விசேஷித்த உத்தரவைக் குறிக்கிறது. கடவுள் இயேசுவை அனுப்பினதிலும் இயேசு அப்போஸ்தலரை அனுப்பினதிலும் உபயோகிக்கப்பட்ட மொழியே இவ்விடத்தில் வந்ததாகையால் கடவுள் இக்காரியத்திற்காகச் செய்த விசேஷித்த கட்டளையைக் காட்டுகிறது. உலகம் ஒளியை உணராமல்போனதால் கடவுள் இந்த விசேஷித்த ஏற்பாடு செய்தல் அவசியமாயிற்று.

7. **சாட்சி** — இந்த மொழி அடிக்கடி இந்நூலில் வருகிறது. இயேசுவே தேவகுமாரனென்று ரூபிக்கும் சாட்சி கொடுக்கும் பொருட்டே ஆசிரியன் இதை எழுதினான்.

**தன்னால்**—மற்றோர் அந்த ஒளியை அறிந்துகொள்ளவேண்டுமென்பதே யோவான்ஸ்நானகனுடைய நோக்கம். அவனால் யோவானும் பேதுருவும் இன்னுஞ்சில சீஷரும் இயேசுவினிடம் வந்து சேர்ந்தார்கள்.

9. இந்த வசனத்திற்குப் பல மொழிபெயர்ப்புகளுண்டு. நமது தமிழ் வேதாகம மொழிபெயர்ப்பு பெரும்பான்மையோரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ௮-ம் வசனத்தில் யோவான்ஸ்நானகன் அந்த ஒளியல்லவென்றதால் இவ்வசனத்தில் அந்த ஒளி உலகத்தில் வந்திருக்

கிறது என்பதைச் சாதிக்கிறது. பெரும்பான்மையாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழிபெயர்ப் பெதுவெனின், எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற மெய்யான ஒளியே உலகத்தில் வருகிறதாகவே இருந்தது என்பதே.

**மெய்யான** — இம்மொழி நம்முடைய ஆசிரியனுக்கு மிக்க பிரியமான மொழி. இது புதிய ஏற்பாட்டில் வருகிற 28 முறைகளில் 23 இவன் இயற்றிய நூற்களில் வருகின்றன. குறைவும் பங்கமுமுடையதற்கு எதிர்மாருக அது குறைவற்றதும் உத்தமமுமானதாகச் சுட்டிக் காட்டுகிறது. "உண்மையாய் வெளிப்படுத்தும் ஒளியையும் காரியங்கள் உண்மையாயிருக்கும் நிலையையும் காண்பிக்கிற ஒளியையும் மெய்யான ஒளியென்று சொல்லுகிருன்" என்றும், "அந்த உண்மையான நிலையாவது, கடவுளையன்றி வேறே உண்மையில்லை யென்றும் உலகத்தார் இந்திரிய யனுபவத்திலிருந்து ஆத்மீக அனுபோகமடைய பரிசுத்தாவி உலகத்தைப் படைத்ததென்றும் கடவுளை அடையும் வழி கிறிஸ்துதான் என்றும் அறிதலே" யென்றும் பரானந்தர் எழுதினர்.

**10. உலகமோ அவரை அறியவில்லை**—இந்த வசனம் எங்கும் எக்காலத்தும் வியாபித்திருக்கும் கடவுளினது சக்தியாகிய பரம வாக்கைக் குறிப்பிக்கிறது. இது மனச்சாட்சியாகவும் சின்மய அறிவாகவும் சாஸ்திரங்களில் காணப்பட்ட உண்மையான போதனையாகவும் இன்னும் பற்பல வகைகளாகவும் காணப்படுகிறது. உலகத்தார் அந்த ஒளியைத் தேவ ஒளியாக அறியாமல் அதற்கு விரோதமாக நடந்து இருட்டுக்குரிய பல பொய்ப் போதனைகளை நம்பினர்கள். இந்த வாசகம் யூதர்கள் இயேசுவைத் தள்ளினதையுங் குறிப்பிட்டிருக்கலாம்.

**11.** இந்த வசனம் இயேசு மனுஷனானதைச் சுட்டிக் காட்டுகிறது. தமக்குச் சொந்தமானதிலே தமது சொந்த வீட்டுக்கு அல்லது தமதிருப்பிடத்திற்கென்றால் நன்று. யூதர்கள் விசேஷித்தவிதமாய்க் கடவுளுடைய சொந்த ஜனங்களானர்கள். அவர்கள் கடவுளிடம் சிறந்த வெளிப்படுதலைப் பெற்றிருந்தார்கள்.

**12.** அவரை உண்மையாகவே யறிந்து ஏற்றுக்கொண்டவருக்கு கிடைத்த பலன் இங்கே காண்பிக்கலாயிற்று. அன்னவர் ஒரு விசே



ஷித்த வல்லமையடைவார். பாவத்தினால் மனிதர் இழந்ததை ஓர் விசுவாசக் கிரியையால் மறுபடியும் நியாயத்தின்படி பெற்றடைந்தார்கள். வாசகத்தின் அமைப்பு அந்த விசுவாசக்கிரியையைச் சிறப்பித்துக் காண்பிக்கிறது.

**அதிகாரம்**—வல்லமையுள்ள அதிகாரமென்க.

**தேவனுடைய பிள்ளைகளாகும்படி** — ஒரு புதிய நிலைமையும் சம்பந்தமும் சிலாக்கியமும் பெறுகிருர்கள். இயேசுவை விசுவாசிக்கும் கிரியையால் கடவுள் அவர்களைப் பிறப்பித்து அவர்கள் குணத்திலும் நடக்கையிலும் உண்மையாய்த் தம் மக்களாகத்தக்க வல்லமையுள்ள அதிகாரத்தை அவர்களுக்குத் தருகிருர். "இருளால் மூடப்பட்டு லௌகீக ஆவியில் மூழ்கின மனதை பிரகாச ஞானமடைந்து தெய்வீக ஆவியாகச் செய்வது எல்லாவற்றிலும் பிரதிசயமும், இரகசியானந்தமுமாம்" என்று பரானந்தர் எழுதியிருக்கிருர். "கடவுளுக்குச் சமான நிலையானது மூன்று விஷயங்களில் கிடைக்கப்படும். (1) கேடின்மை. (2) ஆத்மீகப் பூரணம். (3) நித்திய ஜீவன் அதாவது அப்பூரணத்தில் மாறுபாடின்மை." (பரானந்தர்)

கடவுள் பிள்ளைகளாகத்தக்க அதிகாரம் அவர்களுக்குக் கொடுத்தார் என்பது இதற்கு நல்ல மொழிபெயர்ப்பு.

**அவருடைய நாமத்தின்மேல்**—நாமம் என்பது ஒருவனது குணதிசயங்களையும் மகிமையையும் சுட்டிக் காட்டும். ஆகையால் இங்கே பரம வாக்கினது மேலான தன்மையும் வேலையும் இன்னதென்று இம்மொழிபெயர்ப்பில் அறிவிக்கப்படுகிறது.

**13. தேவனாலே**—இந்தப் புது நிலைமையும் ஜீவியமும் இயற்கையறிவாலாவது மனுஷீக சித்த பலத்தாலாவது உண்டாகாமல் கடவுளது மேலான வல்லமையாலேயே உண்டாக்கப்பட்டு நிற்கும் என்பதை அதிக சிறப்போடு காண்பிக்கிருன். இதிலும் பின்வரும் வசனங்களிலும் அந்தப் பரம வாக்கு மனிதனான பலன்கள் இன்னவென்று காணப்படுகிறது. கடவுளது மகிமை அவரிலே விளங்கினது. யோவான்ஸ்நானகன் அவரது மேன்மைக்குச் சாட்சி கூறினன். சீஷர்களும் தங்கள் அனுபோகத்திலே அவரது பெருமையை உணர்ந்தார்கள். அவர் கொடுத்த சுவிசேஷத்தை நியாயப்பிரமாணத

துடன் ஒத்துப்பார்க்கின் அதின் அருமை விளங்கும். பரம வாக்கு கடவுளுடன் சமவாய சம்பந்தத்திலிருப்பவராய்க் கடவுளை உலகத்தாருக்கு வெளிப்படுத்தி வருகின்றார். அவராலேயொழிய வேறே வழியால் கடவுளைக் காணலரிது.

உன்னுடைய விக்கண்ணா லொன்றுமெனைக் காண்பரிதா
மென்னுமது தன்னாலே யானுனக்கு—மன்னியசீர்த்
திவ்வியமாங் கண்டருவேன் சீர்பிறங்கு மென்பெருமை
செவ்வியுறக் காணதனாற் சேர்ந்து (a)

என்பதை பகவத்கீதா வெண்பாவில் காண்க.

14. **அந்த வார்த்தை மாம்சமாகி**—மறுபடியும் வார்த்தை யென்னும் மொழி வருகிறது. ஒரு சிறந்த காரியத்தைக் காண்பிக்கும் பொருட்டே அப்படி வருகிறது. அந்தப் பரம வாக்கு உண்மையான மனுஷனானார். மாம்சமென்பது சகளம் அதாவது சரீரி என்றும் முழு மனுஷத்தன்மையென்றும் அர்த்தமாம்.

அகள மாகி யறிவரி தப்பொருள்
சகள மாகியென் றுந்தீபற (b)

என்று திருவுந்தியார் இயற்றினதைக் காண்க. மாயாமலத்தில் அலைக்கழிக்கப்பட்ட இம்மனுஷீகத்தன்மையில் பரம வாக்கானவர் புகுந்தார் என்பது மெய்யான மாறுதலைக் காண்பிக்கிறது. அவர் மனுஷீகத்தன்மை பெற்றதில் மாறுதலடைந்தார். நாலு முக்கியமான சத்தியங்கள் இவ்வாசகத்தில் தோற்றப்படும்.

(i) இயேசுவுக்குப் பூரணமான மனுஷீகத்தன்மை யுண்டு. அவர் சரீரமேயென்றல்ல மாம்சமுமேயானார் என்றே சொல்லியிருக்கிறது.

(ii) இயேசுவின் மனுஷீகத்தன்மை உண்மையாகவேயிருக்கிறது. அவர் மாம்சம் பெற்றதாலல்ல மாம்சமானவரென்றே சாதிக்கப்பட்டிருக்கிறது.

---

(a) உனது சரீரக்கண்ணால் என்னைப் பார்ப்பது முடியாது. யான் அதினால் உனக்கு நிலையான திவ்விய கண்களைத் தருவேன். அவைகளால் என் பெருமையைச் சேர்ந்து தெளிவாய்ப் பார்ப்பாயாக.

(b) இன்மையத் தன்மையும் அறியப்படாததுமான அப்பொருளாகிய கடவுள் சரீரமுடையதாகி.



(iii) தெய்வீகத்தன்மையும் மனுஷீகத்தன்மையும் இரண்டுமொன்றாகி ஒரே ஆத்துமாவிலுள்ளது. அது இதுவாயிற்றென்று சொல்லலாம்.

(iv) அந்தப் பரம வாக்கு எப்பொழுதும் மனுஷனுக்குரிய உண்மையான ஆத்துமா உடையவராயிருந்திருக்கிறார்.

**வாசம்பண்ணினார்**—ஒருவர் இன்னொருவர் பக்கத்தில் கூடாரம்போட்டு எல்லாவற்றிலுங் கூடவே நடப்பித்ததுபோல் அவர் உலககாரியங்களில் வந்து அவைகளில் நமக்குச் சகோதரனாயிருந்தார் என்பதைப் போதிக்கிறது.

**அவருடைய மகிமையைக் கண்டோம்**—அவரது மகிமையைக் காண்பதைப்பற்றி ஆசிரியன் தனது சாட்சி கொடுக்கிறான். இந்நூலில் காண்பிக்கப்படும் மகிமை கதையாகக் கேள்விப்பட்டதில்லாமல் நாங்களே கண்ணாரக் கண்ட மகிமையாமென்று ஆசிரியனறிவிக்கிறான். மகிமையென்பது ஆத்துமாவின் குணத்தின் மேன்மை. அந்த மேன்மை நடக்கை முழுவதிலும் துலங்கி வெளிப்பட்டது. அந்த மகிமை அதிகச் சிறப்பும் கடவுளிடம் பெற்றதும் கடவுளுடைய குமாரனுக்குரியதுமான மகிமையாயிற்று. ஆசிரியனும் மற்றச் சீஷரும் இயேசுவின் ஜீவியத்தை ஆலோசித்துப் பார்த்தபோது அவரது குணப்பண்பின் மேன்மையை அவ்வண்ணமாய் நினைத்தார்கள்

**ஒரேபேறானவர்**—ஏகபுத்திரன் என்பது நல்ல மொழிபெயர்ப்பு. அவரது குணம் மிக்க சிறப்பான குணம். மனிதரெல்லாரும் கடவுளின் மக்களாகலாம். எனினும் இயேசுவே எப்போதும் விசேஷித்தவிதமாய் ஏகபுத்திரனானவர். வேதசாஸ்திரிகள் யாவரும் உண்மையான விசுவாசிகளுடையும் மகிமையை அதிக மேன்மையுடையதாய்க் காண்பித்தும் எப்போதும் இயேசுவினது மேன்மையைப் பிரத்தியேகமாய்ச் சிறப்பித்துங் காட்டினார்களென்பதை நாம் நினைவுகூராமல் இயேசுவின் மகிமையையும் விசுவாசிகளின் மகிமையையும் ஒரேவிதமாய் நினைத்தல் தெளிந்தறிவடையும் வழியல்ல.

சிவன்சீவ னென்றிரண்டுஞ் சித்தொன்று மென்னிற்
சிவனருட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கெடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தலற்றித்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்று

னவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டு
மனைந்தாலு மொன்றாகா தனியமா யிருக்கு
மிவன்றானும் புத்தியுஞ்சித் திவனோமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனு மசித்தாமே (a)

என்று சிவஞானசித்தியார் இக்கருத்தை மிகத் தெளிவாக வெளிப்படுத்தினதைக் காண்க.

15. எனக்குப் பின்வருபவர் என்னிலும் மேன்மையுள்ளவர், ஏனென்றால் அவர் எனக்கு முன்னமேயிருந்தாரென்று நான் சொன்னவர் இவரே என்று சத்தமிட்டுக் கூறினானென்பது நல்ல மொழிபெயர்ப்பு. உலக சரித்திரத்தில் பின்னே வந்தவரெனினும் யோவான்ஸ்நானகன் பிறக்குமுன்னேயே இயேசு எப்போதும் இருக்கிறவராதலின் அவரது மகிமை யோவான்ஸ்நானகனது மகிமையிலும் மிகப் பெரிது. அவர் முன்னிருப்பவராதலால் மேன்மையிலும் முந்தினவராவார். யோவான்ஸ்நானகன் இவ்வளவு திட்டமாய் இயேசுவின் முன்னிருப்பைச் சுட்டிக் காட்டினதைப்பற்றிச் சிலர் சந்தேகிக்கிறார்கள். அவன் இயேசுவினது மேன்மையை யுணர்ந்தானென்பதற்குச் சந்தேகமில்லை. ஒருவேளை ஆசிரியனே யோவான் சொன்ன வார்த்தைகளுக்கு இவ்வர்த்தத்தை வைத்திருக்கலாம்.

16. **அவனுடைய பரிபூரணத்தினால்**—பதினான்காம் வசனத்தில் அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவரென்று சொல்லப்பட்டது. இந்தச் சின்மயப்பொருட்கள் எப்போதும் அவரில் குறைவுபடாமல் நிறைவுள்ளதாயின. அந்தச் சின்மய நிறைவாலே நமது குறைவுகளெல்லாம் தீர்ந்து நாமும் சின்மயப்பொருட்கள் எல்லாவற்றாலும் நிறைந்தவராவோம்; நாம் வேண்டிய அளவாக அவைகளை மேன்மேலும் பெற்றுக்கொள்ளக்கூடும். நாமதிகமதிகமாய்ப் பெறப் பெற இன்னும் அவ்வளவு அதிகமாக மறுபடியும் பெற்றுக்கொள்ளக் கூடியதாயிருக்கிறது.

(a) கடவுள் ஆத்மா என்னும் இருபொருளும் சின்மயத்தன்மை யாதலால் ஒத்தொன்றாம் எனின், அப்படியல்ல; ஏனென்றால் கடவுள் அருளாகிய சித்தாம். ஆத்மா அவ்வருளைச்சேரும் சித்தாம். கடவுள் பாவத்தைக் கெடுத்துப் புத்தி முத்தி யளிக்கும் சித்தாம். ஆத்மா அவற்றில் அழுந்தும் சித்தாம். கடவுள் தானே யறியும் சித்தாம். ஆத்மா அறிவிக்க அறியும் சித்தாம். இவ்விருபொருளும் தம்முட் கூடிய வழியும் அத்துவிதமாயிருக்குமேயொழிய ஒன்றாய்ப் போகாததலால், ஆத்மாவும் புத்தியும் சித்தெனக் கூறப்படினும் புத்தி ஆத்மாவாகமாட்டாது. புத்தி அசித்தென்றால் கடவுளை முன்னிட்டு ஆத்மா அசித்தாம்.



17. **நியாயப்பிரமாணம்** — சுவிசேஷத்திற்கும் நியாயப்பிரமாணத்திற்கும் வித்தியாசங் காண்பிக்கிறான். நியாயப்பிரமாணமானது குற்றமுள்ள மனிதனான மோசேயால் உண்டாக்கப்பட்டு மனிதர்களிடம் பற்பல கடமைகளை அறிவிக்கும் அடையாளமாயிருந்தது. சுவிசேஷமோ குற்றமில்லாத தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவாலே தண்டனை நீக்குதலும் அடையாளத்தின் மெய்ப்பொருளைக் காண்பித்தலுமுடையதாய்க் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்ததாயு மிருக்கிறதாக வந்தது. ஆகையால் சுவிசேஷம் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினது. அந்தச் சுவிசேஷம் இன்னதென்று முன்வந்த வசனங்களில் காணப்படுகிறது.

18. **ஒரேபேறான குமாரனே** — இந்த வசனத்தில் ஆசிரியனது போதனை முற்றுப்பெற்றது. இதிலே அவன் பின்வருங் காரியங்களைக் காண்பிக்கிறான்.

(1) மனிதர் அனுபோக அறிவால் கடவுளை அறிய முடியாது.

(2) இயேசுவே சம்பூரணமாய்க் கடவுளுடன் ஐக்கியப்பட்டிருக்கிறார்.

(3) அதினாலே அவர்மட்டுமே கடவுளைச் சரியாய் வெளிப்படுத்தக் கூடியவர்.

**பிதாவின் மடியிலிருக்கிற**—இந்த வார்த்தை அன்பின் ஐக்கியத்தைக் காட்டுகிறது. இதுவே இயேசுவின் நித்திய நிலைமை. குமாரன் தந்தையின் மனம் முழுவதையு மறிந்துகொள்ளுகிறார். ஆகையால் அவரே தந்தையைக் காண்பிக்கத்தக்கவர். இயேசுவே கடவுளது உண்மையான வெளிப்படுத்தலானார்.

### 1[19-34]. யோவான்ஸ்நானகன் கொடுத்த சாட்சி.

19 எருசலேமிலிருந்து யூதர்கள் ஆசாரியரையும் லேவியரையும் யோவானிடத்தில் அனுப்பி: நீர் யார் என்று
20 கேட்டபொழுது, — அவன் மறுதலியாமல் அறிக்கை

யிட்டதுமன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்
21 கையிட்டான்.—அப்பொழுது அவர்கள்: பின்னை யார்?
நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு: நான்
அவன் அல்ல என்ருன். நீர் தீர்க்கதரிசியானவரா
என்று கேட்டார்கள். அதற்கும்: அல்ல என்ருன்.—
22 அவர்கள் பின்னும் அவனை நோக்கி: நீர் யார்? எங்களை
அனுப்பினவர்களுக்கு நாங்கள் உத்தரவு சொல்லும்ப
டிக்கு, உம்மைக்குறித்து என்ன சொல்லுகிறீர் என்று
23 கேட்டார்கள்.—அதற்கு அவன்: கர்த்தருக்கு வழியைச்
செவ்வைபண்ணுங்கள் என்று ஏசாயா தீர்க்கதரிசி
சொன்னபடியே, நான் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவ
னுடைய சத்தமாயிருக்கிறேன் என்ருன்.
24 அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள். —
25 அவர்கள் அவனை நோக்கி: நீர் கிறிஸ்துவுமல்ல, எலி
யாவுமல்ல, தீர்க்கதரிசியானவருமல்லவென்ருல், என்
ஞானஸ்நானங்கொடுக்கிறீர் என்று கேட்டார்கள். —
26 யோவான் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நான் ஜலத்
தினுலே ஞானஸ்நானங்கொடுக்கிறேன்; நீங்கள் அறி
27 யாதிருக்கிற ஒருவர் உங்கள் நடுவிலே நிற்கிருர்.—அவர்
எனக்குப் பின்வந்தும் என்னிலும் மேன்மையுள்ளவர்;
அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும்
28 நான் பாத்திரனல்ல என்ருன்.—இவைகள் யோர்தா
னுக்கு அக்கரையில் யோவான் ஞானஸ்நானங்கொடுத்த
பெத்தாபராவிலே நடந்தன.
29 மறுநாளிலே யோவான் இயேசுவைத் தன்னிடத்தில்
வரக்கண்டு: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து
30 தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி,—எனக்குப்பின் ஒருவர்
வருகிருர், அவர் எனக்கு முன்னிருந்தபடியால் என்னி
லும் மேன்மையுள்ளவரென்று நான் சொன்னேனே,
31 அவர் இவர்தான்.—நானும் இவரை அறியாதிருந்
தேன்; இவர் இஸ்ரவேலுக்கு வெளிப்படும்பொருட்
டாக, நான் ஜலத்தினுலே ஞானஸ்நானங் கொடுக்க வந்
தேன் என்ருன்.
32 பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவி
யானவர் புருவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்
33 மேல் தங்கினதைக் கண்டேன்.—நானும் இவரை அறி
யாதிருந்தேன்; ஆனுலும் ஜலத்தினுல் ஞானஸ்நானங்
கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர்



இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே
பரிசுத்தஆவியினுல் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று
34 எனக்குச் சொல்லியிருந்தார். — அந்தப்படியே நான்
கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி
கொடுத்து வருகிறேன் என்ருன்.

## II. இயேசு ஜனங்களுக்குக் கொடுத்த பொதுவான வெளிப்படுத்தலின் தன்மை. $1^{19}$–$12^{50}$.

### 1. அவரது மேன்மையைக்குறித்த மூன்று சாட்சிகள். $1^{19}$–$2^{12}$.

முகவுரையில் கூறிய மகிமையை இயேசுவின் சரித்திரத்தில் காண்பிக்க விரும்பி ஆசிரியன் முதலாவது அந்த மகிமைக்கு மூன்று சாட்சிகளை விவரித்தெழுதியிருக்கிருன். ஆசிரியன் இந்த மூன்று விஷயங்களையும் அந்த நோக்கத்திற்கென்றே எடுத்தெழுதினுனென்று நிச்சயித்துக்கொள்ளலாம். முதலாவது தீர்க்கதரிசனச் சாட்சி கடைசித் தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானகனுல் கூறப்பட்டது. இரண்டாவது அக்காலத்து ஜனங்கள் அவர்மேல் வைத்த நம்பிக்கை ஒரு சாட்சியாகக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. மூன்ருவது அவர் செய்த கிரியைகள் அவரது உண்மையான மகிமையைக் காண்பிக்கும் விசேஷித்த அத்தாட்சியாக வெளிப்படுகிறது. ஆசிரியன் சரித்திரத்தின் துவக்கத்தில் இந்த மூன்று சாட்சிகளை வைத்தெழுதினுன். அவிசுவாசமும், விசுவாசமும் எதிரிடையாக இந்நான்காம் சுவிசேஷத்தின் சரித்திர முழுவதிலும் காணப்படுகின்றன என்று அறிவோம். யூதர் யோவானை நம்பவில்லை. அவருடைய சீஷர்களது நம்பிக்கை எல்லாச் சீஷர்களது நம்பிக்கைக்கும் திருஷ்டாந்தமாகிறது. நாம் முன்னே சொல்லியபடி, இந்நூலில் ஜனங்களுக்குண்டான அவிசுவாசமும் பகையும் சீஷர்களடைந்த நம்பிக்கையும் அன்பும் வரவர அதிக[illegible]தைப் பார்க்கிருேம்.

#### (i) யோவான்ஸ்நானகன் கொடுத்த சாட்சி. $1^{19-34}$.

இதிலே இரண்டு பங்குகளுண்டு. யோவான் தான் இ[illegible]னென்றும் தாம் மேசியாவல்லவென்றும் (19–28.) சொன்னபின்பு இயேசுவையே மேசியாவாகத் தன் சீஷர்களுக்குச்சுட்டிக்காட்டினுன் (29–34.). யோவான் ஜனங்களுக்குள் அதிக மேன்மைபெற்று அவன் பெயர் எங்

கும் பிரஸ்தாபப்பட்டதால் எருசலேம் யூதர் அவன் தன்னை இன்னு னென்று சொன்னதைப்பற்றி விசாரிக்க ஆட்களை யனுப்பினார்கள்.

19. **யூதர்**—இந்நூலில் இதற்கு விசேஷித்த அர்த்தங் கொடுக்கப் பட்டது. பெரும்பான்மையான நூற்களில் யூதரென்னப்பட்டவர் சமாரியா மார்க்கத்தாரொழிந்த மற்றெல்லா உண்மையான இஸ்ர வேலர் என்றறிக. இந்நூலிலோ இயேசுவுக்கு விரோதமாக யூத மார்க்கத்தில் அறிவீன வைராக்கியமுடையவராயும் விசேஷமாய் எரு சலேம்பட்டணத்தாராயும் ஆசாரிய பட்சத்தாராயும் இருந்தவரைக் குறிப்பிடுகிறது. இந்தப் பெயர் எழுபதுதடவை இந்நூலில் வந்து எப்போதும் அன்னவரைச் சுட்டுகிறது.

21,22. யோவான்ஸ்நானகன் தான் மேசியாவென்றும் எலியா வென்றும் வரும் தீர்க்கதரிசியென்றும் மறுத்துவிட்டான்.

**எலியா**—யூதர்கள் எலியா தானே வருவாரென்று நினைத்தபடி அவர் எலியாவல்லவெனினும், சின்மய வம்சத்தின்படி அவன் எலியாவானனென்று சொல்லக்கூடும். இயேசு அப்படியே சொன் னார். மத். $11^{14}$, $17^{12}$. பார்க்க.

**அந்தத் தீர்க்கதரிசி**—அதாவது மோசே அல்லது முன்குறித்த தீர்க்கதரிசி. உபா $18^{15}$. பார்க்க.

23. **சத்தம்**—தான் கூறுபவனது சத்தமாயினன் என்பதாகச் சொன் னான். தான் தூதனல்லாமல் தூதனது சத்தமாத்திரமென்றே கூறி னான். இவ்விதமாய்த் தனக்குப்பின் வருபவரைத் தன்னிலுஞ் சிறப் பித்துக் கூறினான். ஆண்டவர் வருமுன்னே ஜனங்களது இருதயங் கள் ஆயத்தமாக்கப்படல் வேண்டும். இதற்கென்று மனந்திரும்பு தலைக் கூறுஞ்சத்தம் வேண்டியதாயிற்று. ஜனங்களது இருதயங்கள் தானிருந்த வனாந்தரத்தைப்போலிருந்தன. ஆண்டவர் நடக்கும் வழி அங்கேயில்லை. ஆகையால் ஒருவன் முன்னே போய் தேவராஜ னுக்கு வழியைச் செவ்வை பண்ணவேண்டும். கூறுகிறவர் கடவு ளாவியானவரேயென்று சொல்லலாம். யோவான் அந்த ஆவியின் தொனியே; அவன் சொன்ன வார்த்தைகளைக் குறித்து ஏசா $10^{3}$-ல் பார்க்க.

24. **பரிசேயர்**—தேச வாடிக்கையை அனுசரித்துக்கொள்பவரா தலின் யோவான் ஞானஸ்நானம் என்னும் புதிய சடங்கை ஸ்தாபித்



தலைப்பற்றி ஆக்ஷேபனை சொன்னார்கள். பாரம்பரியத்தின் ஞாயம் அவர்களுக்கு முக்கியமான கட்டளை. ஆதலால் கிஞ்சித்தேனும் அப் ப் பாரம்பரியத்துக்கு விரோதமானதொன்றையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்று அதை நிவிர்த்திசெய்யப்பார்த்து இதுவிஷயமாய் யோவானைக் கேட்டார்கள். பரிசேயர் பாரம்பரியத்தைப் புத்தியீனமாய் அனுசரித்தல் இந்நூலில் தெரியக் காணப்படுகிறது. பரிசேயரே முக்கியமாய் இயேசுவின் விரோதிகள்.

26, 27. தன் வேலை ஆயத்தத்துக்குரிய வேலைமாத்திரம் என்றும், புறம்பான சடங்கு அவ்வளவு விசேஷமல்லவென்றும் இருதய மாறு தல் அவசியமென்றும் அதற்கு வேறொரு பிரசங்கி வேண்டுமென் றும் யோவான் உணர்ந்து தன்னைக்குறித்துப் பெருமை பாராட்டாமல் பின் வருபவரையே மேன்மை பாராட்டினான்.

28. **பெத்தாபரா** — யோர்தானுக்கு அப்பாலுள்ள பெத்தானி யென்று எழுதப்பட்டிருக்கவேண்டும். நமதாசிரியன் திட்டமாய் இடங்களைச் சுட்டிக் காட்டுகிறான்.

29. **மறுநாளிலே** — ஆசிரியன் திட்டமாய்க் காலக்குறிப்புகளை அறிவிக்கிறான். அவனே யோவான்ஸ்நானகனோடு இருந்தான் போலிருக்கிறது. இயேசு சோதனை வனாந்தரத்திலிருந்து வந்தபின்பு இது நடந்திருக்கும். அதற்குமுன்னே யோவான்ஸ்நானகன் அவ ருக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவன் சொன்ன வார்த்தைகள் யாரிடத்தில் என்றும், எந்த நோக்கத்தால் என்றும் யோசிக்கவேண் டும். வருபவரைப்பற்றி அவன் தன் சீஷரோடு பேசியிருப்பான். ஒருவேளை அதற்கு முன்னமே யேசியா ஏசா 53-ம் அதிகாரத்தில் காணப்படும் ஆட்டுக்குட்டியைப்போல் வருவாரென்று சொல்லி யிருக்கலாம். யூதர்களதை மேசியாவைக் குறித்ததாக நினைத்தலால் இக்கோட்பாடு அவர்களுக்கு விபரீதமாயிருக்கமாட்டாது. அந்தத் தீர்க்க தரிசனத்தில் மேசியா பாவத்தைச் சுமப்பாரென்று வருகிறது. பஸ் காபண்டிகை சமீபந்தான். ஆதலால் இவ்வெண்ணம் அவர்கள் மனதிலிருக்கும். உலகத்தின் பாவமென்று சொன்னதால் தெளி வாய்ச் சர்வஜன பிரயோஜனத்தையும் உணர்ந்தானென்று நினைக்க லாகாது. அவன் கடவுளாவியால்தான் அப்படிச் சொன்னான். ஒரு சின்மயச்சிந்தை மனதில் எழும்பிவிட்டது.

**32, 33.** யோவான் இவ்விதமாய் இயேசுவினது ஞானஸ்நானத்தை விவரித்தான். தேவாவியால் நிறைந்தவர் பின் வருபவரும் கடவுளாவியை யூற்றுபவருமாவார் என்றும் அடையாளத்தைப் பெற்றதால் இயேசுவை யறிந்தான். அவன் சின்மயக்காட்சியால் இந்தச் சத்தியத்தை யறிந்து புறம்பான தரிசனத்தால் அத்தாட்சிபெற்று இயேசு இன்னாரென்று அறிந்து இந்தக் காரியத்தை அவன் தன் சீஷருக்குப் போதித்தான்.

**34. தேவனுடைய குமாரன்**—இது மேசியாவுக்குக் கொடுக்கப்பட்ட நாமம். வேறே ஆழ்ந்த கருத்து இந்த வார்த்தையோடு சேர்க்க இச்சமயத்தி லிடமில்லை. இது பெரிய மனிதனையும் தீர்க்கதரிசியையும் குறித்தது.

### $1^{35-51}$. முதல் சீஷர் கொடுத்த சாட்சி.

35 மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில்
36 இரண்டுபேரும் நிற்கும்போது,—இயேசு நடந்துபோகிறதை அவன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்
37 றான்.—அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷரும் கேட்டு, இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.
38 இயேசு திரும்பி, அவர்கள் பின்செல்லுகிறதைக் கண்டு: என்ன தேடுகிறீர்கள் என்றார். அதற்கு அவர்கள்: ரபீ, நீர் எங்கே தங்கியிருக்கிறீர் என்று கேட்டார்கள்; ரபீ என்பதற்குப் போதகரே என்று அர்த்தமாம்.—
39 அவர்: வந்து பாருங்கள் என்றார். அவர்கள் வந்து அவர் தங்கியிருந்த இடத்தைக் கண்டு, அன்றையத்தினம் அவரிடத்தில் தங்கினார்கள். அப்பொழுது ஏறக்குறையப் பத்துமணி வேளையாயிருந்தது.
40 யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின் சென்ற இரண்டுபேரில் ஒருவன் சீமோன்பேதுருவின்
41 சகோதரனாகிய அந்திரேயா என்பவன்.—அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு: மேசியாவைக் கண்டோம் என்று சொன்னான்; மேசியா
42 என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம்.—பின்பு, அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தான். இயேசு அவனைப் பார்த்து: நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார்; கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம்.



43 மறுநாளிலே இயேசு கலிலேயாவுக்குப் போக மனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு: நீ எனக்குப் பின்
44 சென்று வா என்றார்.—பிலிப்பென்பவன் அந்திரேயா பேதுரு என்பவர்களுடைய ஊராகிய பெத்சாயிதா பட்டணத்தான்.
45 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம்; அவர் யோசேப்பின் குமாரனும்
46 நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.—அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமோ என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான்.
47 இயேசு நாத்தான்வேலைத் தம்மிடத்தில் வரக்கண்டு அவனைக்குறித்து: இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவே
48 லன் என்றார்.—அதற்கு நாத்தான்வேல்: நீர் என்னை எப்படி அறிவீர் என்றான். இயேசு அவனை நோக்கி: பிலிப்பு உன்னை அழைக்கிறதற்கு முன்னே, நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன் என்
49 றார்.—அதற்கு நாத்தான்வேல்: ரபீ, நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா என்றான்.
50 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயா விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரி
51 தானவைகளைக் காண்பாய் என்றார்.—பின்னும், அவர் அவனை நோக்கி: வானம் திறந்திருக்கிறதையும், தேவதூதர்கள் மனுஷகுமாரனிடத்திலிருந்து ஏறுகிறதையும் இறங்குகிறதையும் நீங்கள் இதுமுதல் காண்பீர்கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

### (ii) முதல் சீஷன் கொடுத்த சாட்சி. $1^{35-51}$.

இந்தச் சமயத்தில் யோவான்ஸ்நானகன் மறுபடியும் இயேசுவைப்பற்றிச் சாட்சி கொடுக்கிறான். அவன் தன் சீஷருக்கு அவரைக் காட்டினவுடன் அவர்கள் யோவானை நம்பிப் பின்சென்றதினாலே அவருக்குச் சாட்சிகளானார்கள். மூவர் இன்னும் மற்றவர்களையும் சந்தித்து இயேசுவிடம் அவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். இது இயேசுவின் ஆத்ம இயக்கத்தைக் காண்பிக்கிற சாட்சியாம். ஒவ

வொரு சீஷனும் இயேசுவைப்பற்றி ஒவ்வொரு விசேஷித்த சாட்சியைக் கூறுகிறான்.

**35. அவனுடைய சீஷரில் இரண்டுபேரும்**—அதாவது அந்திரேயாவும் யோவானும். அன்னவரிருவர் கலிலேயாதேசத்தார். அவர்கள் தங்கள் சகோதரருடன் யோவான்ஸ்நானகனிடம் வந்து சேர்ந்ததால் அவர்களிலுள்ள பயபக்தி இன்னதென்று நாமறியலாம். ஒருவன் அந்திரேயாவென்று 41-ம் வசனத்தில் காணப்படுகிறது. ஆசிரியன் எப்போதும் தன் பேர் சொல்லாமையாலும் இக்காரியத்தைப் பார்த்தறிந்தவன் இதை எழுதியிருக்கவேண்டியதாலும் மற்றொருவன் ஆசிரியன் என்று அனுமானிக்கலாம்.

36. இயேசு அவ்வழியாய் நடந்து யோவான்ஸ்நானகனைக் கடந்து போனார். இது இயேசுவும் யோவானுஞ் சந்தித்த கடைசியான சமயம். யோவான் தனக்குள்ளே பேசிக்கொண்டிருந்ததுபோலிருக்கிறது. அவனுடைய சீஷர்கள் அவன் பேசினதைக் கேட்டு வலிய இயேசுவுக்குப் பின்சென்றார்கள்.

**39. பத்துமணி வேளையாயிருந்தது**—இது மாலை நாலுமணியிருக்கும். அக்காலத்தோர் விடியற்காலம் முதலாய் மணிதணக்கிட்டார்கள். விடியற்காலம் சுமார் ஆறுமணியாகும். இதனாசிரியனான யோவான் இந்நாளின் சம்பவங்களைத் திட்டமாய் ஞாபகப்படுத்துகிறதைப் பார்க்கிறோம்.

**41. அவன் முதலாவது தன் சகோதரன்**—ஆகையால் மற்றவனும் இரண்டாவது தன் சகோதரனையுங் கண்டு கூட்டிக்கொண்டு வந்தான்போலிருக்கிறது. அந்திரேயா மற்றவர்க்குச் சிறு உபகாரங்களைச் செய்ய இரண்டு மூன்று சமயங்களில் முந்திக்கொள்ளுகிறான். சீமோன்பேதுரு சுவிசேஷ சரித்திரத்தில் பெரியவனானபடியால் அவன் சீமோன்பேதுருவின் சகோதரனென்று சொல்லப்பட்டிருக்கிறான். முதல் சீஷர்கள் சுவிசேஷப் பிரபல்யஞ்செய்து தங்களுக்குத் தெரிந்த ஆட்களையும் இயேசுவினிடம் சேர்த்த நல்லமாதிரியைக் கவனிக்க.

**மேசியாவைக் கண்டோம்**—யூதருக்கு இது விசேஷித்த காட்சி. அவர்களாசை முழுவதும் இப்படிப்பட்ட காட்சியில் திருப்திபெறும். இயேசுவைப்பற்றி அந்திரேயா கொடுத்த சாட்சி இதுவே.



**42. அவனைப்பார்த்து**—அவனை உற்றுப்பார்த்து என்க. 36-ம் வசனத்திலும் யோவான் இயேசு நடக்கிறதை உற்றுப்பார்த்தானென்று சொல்லியிருக்கிறது. அவனது மனதை கவனித்துப் பார்த்ததுபோலும். யோனா யோவானென்றிருக்கவேண்டும்.

**கேபா**—இது எபிரெய பாஷை. பேதுரு கிரேக்கு பாஷை. இரண்டுக்கும் ஒரே அர்த்தம். பாறை என்பது இவைகளுக்கு அர்த்தமாம். இந்தப் பெயர் அவன் அப்போஸ்தலனானபோது கொடுக்கப்பட்டுப் பின்பு அவனைச் சுவிசேஷத்திற்குப் பலத்த தூணக்கும் அவனது நிலைமையைக் காண்பிக்கிறது. பேதுரு பின்பு சிறந்த அறிக்கையைச் செய்தபோது அந்தப் பெயரை இன்னும் விவரமாய்த் தெரிவித்து அதற்குத் தக்கவனானான். மத் $16^{18}$. பார்க்க. இவனுக்குப் புதிய ஏற்பாட்டில் பேதுரு அல்லது சீமோன்பேதுரு என்று பெரும்பான்மையாய்ப் பெயரிடப்பட்டது. இயேசு எப்போதும் அவனைச் சீமோனென்கிறார். பவுல்மாத்திரம் கேபா என்னும் பெயரை வழங்குகிறான்.

இந்த அழைப்பும் திரியனுபந்த சுவிசேஷங்களில் எழுதியிருக்கிற அழைப்பும் ஒன்றுதானா என்னும் கேள்வியுண்டு. மற்றதை மத் $4^{18-22}$. மாற் $1^{16-20}$. லூக் $5^{1-11}$. பார்க்க. இரண்டிலுங் காரியங்களெல்லாம் விபரீதமுள்ளவை. அதாவது:

| | யோவான் சுவிசேஷம். | திரியனுபந்த சுவிசேஷங்கள். |
|---|---|---|
| (i) இடம். | யூதேயா. | கலிலேயா. |
| (ii) காலம். | ஞானஸ்நானம்பெற்றபின்பு, கொஞ்சகாலமாக. | அதற்குப் பின்பு. |
| (iii) பேர்கள். | பிலிப்பும், நாத்தான்வேலும். | அன்னவர் வருகிறதில்லை. |
| (iv) சந்தர்ப்பங்கள். | சந்தித்து சம்பாஷித்தல். | அற்புதம் செய்தல். |
| (v) நோக்கம். | சீஷர்கள் விசுவாசத்துக்கு அழைக்கப்பட்டார்கள். | ஊழியத்திற்கு அழைக்கப்பட்டார்கள். |

திரியனுபந்த சுவிசேஷங்களின் சம்பவத்தைக் கவனித்து வாசிப்பின், அதற்கு முன்னே சீஷர்கள் இயேசுவைக் கண்டு பேசி விசுவாசித்தார்களென்று அனுமானிக்கலாம். இயேசு யூதேயாவை விட்டபின்பு கலிலேயாவிற்குப் போய்க் கொஞ்சக்காலமாக வீட்டிலிருந்தாற்போலிருக்கிறது. அவர் சிலகாலமாகக் கப்பர்நகூமில் வசித்துக்கொண்டிருந்தார். பின்பு அவர் விசேஷித்த பிரசங்கவேலை ஆரம்பித்தபோது முன்னே விசுவாசமடைந்த சீஷரை ஊழியஞ்செய்ய அழைத்தார் என்று சொல்லவேண்டும். இடையில் சீஷர் தங்கள் சாதாரண வேலைசெய்யத் திரும்பிப்போனார்களென்று தோன்றுகிறது.

43. **பிலிப்பு**—$6^{5-7}$ $12^{21}$ $14^{8,9}$. பார்த்து இந்தச் சீஷனைப்பற்றியறிக. அவன் நடபடியில் சொல்லியிருக்கிற பிலிப்பு அல்ல. அவன் அந்திரேயா சீமோன் என்பவர்கள்போல பெத்சாயிதா ஊரான். அவர்களுடன் யோவான்ஸ்நானகனிடம் வந்திருப்பான். ஆகையால் இயேசுவின் அழைப்பைக் கேட்க ஆயத்தமாயிருந்தான்.

44. **பெத்சாயிதா**—$6^{16-22}$ மாற் $6^{45}$. பார்க்க. இந்த ஊர் யோர்தான் நதிக்கு மேற்கேயுள்ளது. பெத்சாயிதா யூலியா என்பது இதல்ல. அது வேறே. பெத்சாயிதா என்பதற்கு மீன்பிடிப்போர் ஊர் என்றர்த்தமாம். அது கலிலேயாக்கடலின் வடமேற்குக் கரையிலிருந்ததாகச் சொல்லுவார். இது ஒரு செழிப்பான பள்ளத்திலிருந்தது.

45. **நாத்தான்வேல்**—இது தேவவரம் என்னும் அர்த்தமுள்ளது. பற்தொலொமேயுவும், இதுவும் ஒருவனது பெயர். யோவான் எப்போதும் நாத்தான்வேல் என்று சொல்லுகிறான். திரியனுபந்த சுவிசேஷங்களில் எப்போதும் பற்தொலொமேயுவென்று சொல்லியிருக்கிறது. பற்தொலொமேயு எப்போதும் பிலிப்புடன் சேர்க்கப்பட்டான். மத் $10^{3}$ லூக் $6^{14}$ மாற் $3^{18}$. பார்க்க. பிலிப்பு சொன்னது பேதுரு சொன்னதுபோலிருக்கிறது. அவன் கானாவூரான் $21^{2}$. பார்க்க. கானா நாசரேத் ஊர் பக்கத்திலிருந்தது.

46. **நாசரேத்**—லீபனோன் மலைகளிலுள்ள ஒரு பள்ளத்தில் அமைந்தது. சமுத்திரமட்டத்திற்குமேல் 1500 அடி உயரமுள்ளது. இது அநேக அழகான புஷ்பங்களுண்டாகுமிடம். இது ஒரு சிறு கிராமம். கானா அதற்குப் பக்கத்திலிருந்தது. அதினால் நாத்தான்வேல் இந்தக் கேள்வி கேட்டான்.



47. இயேசு மற்றவர்களுடைய மனங்களை யறிந்தவர். அவர் பேதுரு, பிலிப்பு, நிக்கொதேமு, சமாரியாஸ்திரீ என்பவர்களின் எண்ணங்களை யறிந்ததாக இந்நூலில் சொல்லியிருக்கிறது. $2^{25}$-ம் வசனத்தில் இப்படி யறிவது இயேசுவுக்கு இயற்கை என்றறிக.

**உத்தம இஸ்ரவேலன்** — கடவுளால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனத்திற்குரியவன். அப்பேர்ப்பட்ட ஜனத்துக்குரிய லக்ஷணங்கள் அவனிலுள்ளன. அவன் உண்மையாகவே கடவுளுடைய மேசியாவுக்காக எதிர்பார்த்தவன்.

48. **நீ அத்திமரத்தின் கீழிருக்கும்போது**—அத்திமரம் விசேஷமாய்த் தியானஞ்செய்யு மரமாயிற்று. அவன் அந்தச் சமயத்தில் மேசியாவைப்பற்றியோ இஸ்ரவேலின் இரட்சிப்பைப்பற்றியோ ஏதோ ஒரு விசேஷித்த காரியத்தை அதிக பயபக்தியுடன் தியானித்துக் கொண்டிருந்திருப்பான். அப்போது ஏதோ விசேஷித்த சின்மய அனுபோகம் கிடைத்தது என்று நினைக்கலாம்.

49. **நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா**—இவைகளே மேசியாவின் நாமங்கள். இயேசு தனது தியானத்திற்கு நிறைவேறுதலாய் வந்ததால் நாத்தான்வேல் தான் எதிர்பார்த்த நோக்கங்களின்படியே உடனே விசுவாசத்துடன் அவரை மேசியாவென்று அறிக்கையிட்டான்.

50. **பெரிதானவைகளைக் காண்பாய்**—இயேசுவிலுள்ள தெய்வ வல்லமையால் இஸ்ரவேலின் இரட்சிப்பு, பாவநாசம், குணப்படுதல் முதலியவை இப்பெரிதானவைகள்.

51. **மனுஷகுமாரன்** — இந்தப் பெயரே இயேசு பெரும்பான்மையாய் தமக்குக் கொடுக்கும் பெயர். அப்போஸ்தலரும் வேத நூலாசிரியரும் ஒருபோதும் இந்தப் பெயரை உபயோகிக்கிறதில்லை. அவர் தம்மை இவ்விதமாய் அழைத்தது இது முதல் சமயம். இந்த அதிகாரத்தில் இயேசுவுக்கு வழங்கும் பெயர்களாவன: ஸ்நானகனால் கூறப்பட்டவர் (26), தேவாட்டுக்குட்டி (29, 36), தேவகுமாரன் (34, 49), மேசியா (41, 45), இஸ்ரவேல் ராஜா (49) என்பவைகளே.

## $2^{1-12}$. முதல் அற்புதத்தின் சாட்சி.

1 மூன்றாம்நாளிலே கலிலேயாவிலுள்ள கானா வூரிலே
ஒரு கலியாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கே
2 யிருந்தாள்.—இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக்
கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.
3 திராட்சரசங் குறைவுபட்டபோது, இயேசுவின் தாய்
அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை
4 என்றாள்.— அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும்
உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை
5 என்றார்.—அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி:
அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்
6 படி செய்யுங்கள் என்றாள்.—யூதர்கள் தங்களைச் சுத்தி
கரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்று இரண்டு
மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடி
7 கள் அங்கே வைத்திருந்தது.—இயேசு வேலைக்காரரை
நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்;
8 அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள்—அவர்
அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு,
பந்தி விசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்
றார்; அவர்கள் கொண்டுபோனார்கள்.
9 அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று
தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததே
யன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால்,
அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்த
10 போது, மணவாளனை அழைத்து:—எந்த மனுஷனும்
முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள்
திருப்தியடைந்தபின்பு, ருசி குறைந்ததைக் கொடுப்
பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்
தீரே என்றான்.
11 இவ்விதமாக இயேசு இந்த முதலாம் அற்புதத்தைக்
கலிலேயாவிலுள்ள கானா ஊரிலே செய்து, தம்மு
டைய மகிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய
சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்.
12 அதன்பின்பு அவரும் அவருடைய தாயாரும் அவ
ருடைய சகோதரரும் அவருடைய சீஷரும் கப்பர்
நகூமுக்குப் போய், அங்கே சிலநாள் தங்கினார்கள்.



## (iii) முதல் அற்புதத்தின் சாட்சி. $2^{1-11}$.

கிறிஸ்துவின் மகிமையானது அவரது வார்த்தையிலும் அவரைச் சேர்ந்த சீஷர்களது நம்பிக்கையிலு மாத்திரமல்ல, அவர் செய்த கிரியையிலும் விளங்கிற்று. ஆசிரியன் இப்பொழுது மூன்றாவதாக அவ்வண்ணமான சாட்சி கொடுக்கிறான். தம்முடைய சீஷர்களது குறைகள் நீங்கும்படி இவ்வற்புதத்தை வலியச் செய்தார். அதினால் அவருடைய சீஷர்கள் அவர்மேல் நம்பிக்கை வைத்தார்கள். காலக் குறிப்புகளும் இடக்குறிப்புகளும் திட்டமாய்ச் சொல்லப்பட்டன வென்று கவனிக்க.

1. யோசேப்பைப்பற்றி ஒன்றும் சொல்லாததால் அவன் முன்னமே இறந்துபோனதாக அனுமானிக்கலாம். மரியாள் அந்தக் கானாவூர் குடும்பத்துடன் மிகப் பழக்கமுடையவளாதலின் அக்குடும்பத்தார் இயேசுவையும் அவர் சீஷர்களையும் கலியாணத்திற்கு வரவழைத்தார்கள்.

2. கானா—இது கலிலேயாதேசத்தில் நாசரேத்துக்கு ஐந்து மைல் தூரமான ஒரு ஊர்.

3. மரியாள் ஏன் இயேசுவிடம் வந்து இப்படிச் சொன்னாளெனின், மரியாள் எருசலேமில் நடந்த சங்கதிகளை யறிந்துகொண்டு அதினால் இயேசு பிறந்தபொழுது நடந்த அதிசயங்களை நினைவுகூர்ந்து மனவெழுச்சி அடைந்து நாணவருக்குச் சைகை காட்டினால் இப்போது அவர் தம்மை வெளிப்படுத்துவாரென்று நினைத்திருப்பாளென்று சொல்லலாம்.

4. தமக்கும் அவளுக்கும் முன்னிருந்த சம்பந்தம் இப்போதில்லையென்பதை இயேசு தம்முடைய தாயாருக்குக் காண்பிக்கிறார். அவர் முன்னே அவளுக்குக் கீழ்படிந்து நடந்தார். இனிமேல் அவர் தமது சொந்தவழியில் நடக்கவேண்டும். தாம் தம்மை வெளிப்படுத்தத்தக்க சமயத்தைத் தாமே தீர்மானிக்கவேண்டியதேயொழிய வேறொருவரும் அதை யுணர்த்தக்கூடாது. இதெல்லாம் அவருடைய உத்தரவிலே தெரியவருகிறது. $7^{8-10}$. பார்க்க

5. மரியாளது பிடிவாதமான விசுவாசத்தைப் பார்க்க. ஒரு வேளை இயேசு மரியாளிடம் சொன்னதெல்லாம் இதிலே எழுதப்

படாமலிருக்கலாம். இயேசுவின் சத்தமோ அவர் சொன்ன மற்ற வார்த்தைகளோ ஏதோ இந்த நம்பிக்கைக்குக் காரணமாயிருக்கலாம்.

6. **ஆறு கற்சாடிகள்**—இவைகள் கைக்கிண்ணம் முதலியவைகளைக் கழுவுவதற்கு வைக்கப்பட்டன. Dr. E. D. Clark என்பவர் அநேக பெரிய கற்சாடிகளைக் கானா என்னும் ஊரிலே கிடக்கக் கண்டோமென்று எழுதியிருக்கிறார். இவைகள் மிடாக்களைப்போலிருந்தன. ஒவ்வொன்றும் எண்பது படி கொள்ளத்தக்கது. ஆகையால் அதிகமான ரசம் உண்டாக்கப்பட்டதாகக் காணப்படுகிறது. அத்தொகையிலே முழுவதையுங் குடித்தார்களென்று நினைக்கவேண்டியதில்லை. இயேசு ஏன் அவ்வளவு அதிகமாய்ச் செய்தார்? அவர் கொடுக்கும் ஆசீர்வாதங்களின் பெருக்கம் இதினால் காணப்படுகிறதென்பார் சிலர். அவர் இக்காரணத்தால் செய்திருக்கலாம்; மொண்டுகொண்டது மாத்திரம் ரசமாயிற்றென்பார் சிலர். அப்படியுமிருக்கலாம்.

11. **அற்புதத்தை**—இது சரியான மொழிபெயர்ப்பல்ல. இந்த ஆசிரியன் அற்புதமென்னும் வார்த்தையை வழங்காமல் பெரும்பான்மையாய் அடையாளமென்றெழுதுகிறான். 4[48]-ம் வசனத்தில் மாத்திரம் அற்புதம் என்று எழுதுகிறான். இயேசு செய்த அற்புதங்களை அவரது குணத்தையும் சித்தத்தையும் காண்பிக்கும் அடையாளங்களாகவெண்ணி இவ்விதமா யெழுதியிருக்கிறான்.

**தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்**—அதாவது தமது மகத்துவ குணத்தைத் தெரிவித்தார். இது அந்த அடையாளத்தின் இயற்கையால் உண்டான பலன்.

**அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்**—அவருடைய சீஷர்கள் இன்னுந் திட்டமான நம்பிக்கை அவர்மேல் வைக்கவில்லையென்பது இதிலிருந்து தோன்றுகிறது. விசுவாசம் முன்னமே இருந்தும் அது இன்னதென்று அவர்களறியவில்லை. இப்போது மனதார அவர்மேல் நம்பிக்கைவைக்க ஆரம்பித்தார்கள். இந்த அற்புதத்தைத் தவிர்த்து இந்நூலில் எழுதியிருக்கிற மற்றெல்லா அற்புதங்களாலும் சிலருக்கு அவிசுவாசம் உண்டாயிற்று. இந்தச் சுவிசேஷகன் எப்போதும் இன்னபலன் உண்டானதென்று தெரிவிக்கிறான்.

12. **கப்பர்நகூம்**—மத் 9[1] 11[23] மாற் 2[1] லூக் 10[15]. பார்க்க. இவ்விடத்தில் இயேசு விசேஷித்த கிரியைகளைச் செய்தார். இது



ரோமான் பட்டாளமும் சுங்கவாசலுமுள்ள பெரிய பட்டணம். அது இருந்த இடம் இப்போது திட்டமாய்த் தெரியவருகிறதில்லை. கலிலேயாக்கடலின் கரையில் கனேசரேத் நாட்டிலிருந்தது.

**கப்பர்நகூமுக்குப் போய் அங்கே சிலநாள் தங்கினார்கள்**—அவர் தம்முடைய தாயாரோடும் சகோதரரோடும் கொஞ்சநாளாக கப்பர்நகூமில் தங்கினார்.

### 2[13-25]. பொதுவான வெளிப்படுத்தலின் ஆரம்பம்.

13 பின்பு யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்
தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப் போய்,—
14 தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவை
களை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்
15 கிறதையும் கண்டு,—கயிற்றினால் ஒரு சவுக்கை உண்டு
பண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமாடுகளையும் தேவா
லயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரருடைய
காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு,—
16 புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்தி
லிருந்து எடுத்துக்கொண்டு போங்கள்; என் பிதாவின்
வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்.
17 அப்பொழுது: உம்முடைய வீட்டைக்குறித்து உண்
டான பக்தி வைராக்கியம் என்னைப் பட்சித்தது என்று
எழுதியிருக்கிறதை அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்
தார்கள்.
18 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீர் இவை
களைச் செய்கிறீரே, இதற்கு என்ன அடையாளத்தை
எங்களுக்குக் காண்பிக்கிறீர் என்று கேட்டார்கள்.—
19 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆல
யத்தை இடித்துப்போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே
20 இதை எழுப்புவேன் என்றார்.—அப்பொழுது யூதர்
கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத்தாறு வருஷம்
சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்பு
21 வீரோ என்றார்கள்.—அவரோ தம்முடைய சரீரமாகிய
22 ஆலயத்தைக்குறித்துப் பேசினார்.—அவர் இப்படிச்
சொன்னதை அவர் மரித்தோரிலிருந் தெழுந்தபின்பு
அவருடைய சீஷர்கள் நினைவுகூர்ந்து, வேதவாக்கியத்
தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்
தார்கள்.

23 பஸ்காபண்டிகையிலே அவர் எருசலேமிலிருக்கை
யில், அவர் செய்த அற்புதங்களை அநேகர் கண்டு, அவ
24 ருடைய நாமத்தில் விசுவாசம் வைத்தார்கள்.—அப்படி
யிருந்தும், இயேசு எல்லாரையும் அறிந்திருந்தபடியால்,
25 அவர்களை நம்பி இணங்கவில்லை. — மனுஷருள்ளத்தி
லிருப்பதை அவர் அறிந்திருந்தபடியால், மனுஷனைக்
குறித்து ஒருவரும் அவருக்குச் சாட்சி கொடுக்கவேண்
டியதாயிருக்கவில்லை.

## 2. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் ஆரம்பங்கள். $2^{13}$–$1^{54}$.

பொதுவான ஜனத்திற்கு முன்பாக அவர் செய்த ஊழியத்தை இப்போது பார்க்கிறோம். அதோடு பலரும் அவரை எவ்வண்ணமாய் நினைத்தார்களென்றும் பார்க்கிறோம். அவரை அசட்டைபண்ண ஒருவராலும் முடியாது. நம்பிக்கையின் வளர்ச்சியும் அவிசுவாசத்தின் பிறப்பும் காணலாயிற்று. அவர் யூதருக்கும் சமாரியருக்கும் கலிலேயா தேசத்தாருக்கும், தம்மை வல்லவராகவும் கடவுளிடத்தில் விசேஷித்த அதிகாரம் பெற்றவராகவும் வெளிப்படுத்தினர். அதோடு பரம ராஜ்யத்துக்குரியவனது குணத்தையும் நடக்கையையும் சில சம்பாஷணைகளில் போதித்தார்.

### (i) எருசலேம்பட்டணத்தில். $2^{13}$–$3^{21}$.

இயேசு முதலாவது ஆசாரியரது அநியாயத்தை எதிர்த்துத் தமது நன்னெறிப் பெருமையையும் நீதியின் அதிகாரத்தையும் அவர்களது ஆசாரங்களுக்கு மேலானதாகக் காண்பித்தார். யூதர்கள் விரோதம் பண்ணத் துவக்கி அவரது அதிகாரத்திற்கு அடையாளத்தைக் கேட்டார்கள். இத்துடன் யூதப் பெரியோரில் ஒருவர் இயேசுவைப்பற்றி நல்லெண்ணங்கொண்டு அவரது போதனை இன்னதென்று விசாரிக்க வந்ததைப் பார்க்கிறோம். விசுவாசமும் அவிசுவாசமும் கூடவே உண்டாகின்றன.

**13. பஸ்காபண்டிகை** — இது முக்கியமான யூதப்பண்டிகை. அதின் ஸ்தாபகம் யாத் 12. காண்க. யூதர் யாவரும் பிரதி வருஷமும் எருசலேமுக்குப் போக விரும்பிக் கூடுமானால் போவார்கள். எளியவர்களும் ஒருதடவையாகிலும் எருசலேமுக்குப் போவார்கள். இந்தப்



பண்டிகை முற்காலத்து பெரிதான இரக்ஷிப்பைக் கொண்டாடினதுடன் வரும் மேசியாவினது பிற்கால இரக்ஷிப்பையும் அடையாளமாகக் காண்பித்தது.

**14,16.** எருசலேம் ஆலயத்திற்கு மூன்று பிராகாரங்களிருந்தன. இவைகளில் வெளிப்பிராகாரத்தில் பலியிடும்படி ஆடுமாடுகளையும் புறா முதலிய பக்ஷிகளையும் விற்றார்கள். அதுவுமன்றி தேவாலயத்துக் காணிக்கையெல்லாம் யூத நாணயங்களில் மாற்றவேண்டுமாதலின் ரோமாபுரிமுதலிய பலவிடத்து நாணயங்களை மாற்றுங் கடைகளை அங்கே வைத்திருந்தார்கள். தேவாலயத்தின் அதிகாரிகளாகிய ஆசாரியர் இவைகளை ஏற்படுத்தி இவைகளினால் அதிக லாபம் பெற்றுக்கொண்டார்கள். அங்கே இந்த வியாபாரத்தினால் அதிகக் குழப்பம் உண்டாயிற்று. அதோடு மிருகங்களுக்கு மிதமிஞ்சின விலைபோட்டு நாணயமாற்ற அதிக அநியாயமான வட்டத்தைக் கேட்டு ஜனங்களை மிகவுந் துன்பப்படுத்தினார்கள். இப்பேர்ப்பட்ட குழப்பமும் அநியாயமும் தேவாலயத்தில் நடந்ததால் அவ்வாலயம் தீட்டுப்பெற்றது. இயேசு நீதியான கோபமடைந்து இந்த அநீதியான வியாபாரத்தை நிறுத்தி வியாபாரிகளைத் துரத்திவிட்டார். அவர் சவுக்கைச் செய்து ஜனங்களையடித்துத் துரத்தினதாக நினைக்கவேண்டியதில்லை. அவரது நீதியான கோபமும் மேன்மையான முகச்சாயலும் அவருடைய பிதாவினது வீட்டுக்கு இது ஆகாதென்னும் அவரது நன்னெறி உணர்ச்சியின் வல்லமையும் அவரது முகத்தில் விளங்கி அவருக்கெல்லாரையும் கீழ்ப்படுத்திவிட்டிருக்கும். அங்கேயிருக்கும் ஜனங்கள் அவர் சொன்னதையுஞ் செய்ததையும் பார்த்து அவர் அவ்விதமாய் அந்த அநியாய வியாபாரிகளைத் தொலைத்துவிட்டதைப்பற்றிச் சந்தோஷம் அடைந்தார்களென்றும் நினைக்கலாம்.

**17, 18.** இந்தக் கிரியையின் பயனைக் கவனிக்க. சீஷருக்கும் யூதருக்கும் வெவ்வேறான பயன்களுண்டாயின. சீஷர்கள் இப்படிப்பட்ட வைராக்கியம் உண்மையான பக்தனுக்குரிய அடையாளமென்று நினைத்து, அதினால் அவர் கடவுளது சிரேஷ்ட பக்தரிலொருவரென்று நம்பினார்கள். யூதர்களோ அவரப்படிச் செய்தலால் அவர் செய்த அதிகாரத்திற்கு இன்னொரு அடையாளத்தைக் கேட்டு அவரை விரோதித்தார்கள். கிரியனுபந்த சுவிசேஷங்களும் இப்பேர்ப்

பட்ட கிரியையைச் சொல்லுகின்றன. மத். 21 லூக் 19 மாற் $11^{12-15}$. இவைகளில் இச்சம்பவம் இயேசுவின் ஊழியநாட்களின் கடைசியில் நடந்ததாகக் கூறப்படுகிறது. இயேசு இந்தக் காரியத்தை முதலிலும் கடைசியிலும் செய்திருப்பதைப்பற்றி நாம் சந்தேகிக்கவேண்டியதில்லை; யோவானே முதல் சம்பவத்தை யெழுதினாலும், மற்றவர்கள் கடைசியான சம்பவத்தை யெழுதினவர்களாயிருக்கலாம். ஏனென்றால் இரண்டிற்கும் வித்தியாசங்களிருக்கின்றன. இந்த முந்தின சம்பவம் ஒருவேளை மற்றச் சுவிசேஷகருக்குத் தெரியாதிருக்கலாம்.

19. **இந்த ஆலயத்தை இடித்துப்போடுங்கள்** — யூதர்களுக்கு விளங்காத மறுமொழியைச் சொன்னார். யூதர் இந்த வார்த்தையை நினைவுகூர்ந்து நியாயத்தீர்ப்பின் குற்றத்தைச் சாட்டுங் காரியமாக அதை யெடுத்துக்கொண்டார்கள். இது வெவ்வேறுவிதமான வியாக்கியானம்பெற்றது; அதாவது:

(i) அங்கே கட்டப்பட்ட தேவாலயம் அவரது மரணத்தால் அழிவுபெறும். அவரது உயிர்த்தெழுதலில் உண்மையான தேவாலயம் கட்டப்பெறும் என்பதும்;

(ii) அந்த தேவாலயத்தையல்ல, அவர் தமது சரீரமாகிய தேவாலயத்தையே குறிப்பித்தாரென்பதும்;

(iii) யூதர் தேவாலயத்தை அழித்துப் பிறகு சீக்கிரத்தில் கிறிஸ்தவ சபையைக் கட்டுவேனென்பதும்; அப்படியானால் மூன்றுநாளென்பது கொஞ்ச காலத்துக்குள்ளேயென்றும் அர்த்தமாகும்.

இயேசு இவைகளில் ஒன்றையாவது திட்டமாய்ச் சுட்டிக் காட்டினாரென்று நிச்சயித்துச் சொல்ல முடியாது. யூதர்கள் தேவாலயம் கடவுள்சமூகந் தரித்த இடமென்று நினைத்தார்கள். கடவுள்சமூகம் இனிமேல் அந்த தேவாலயத்தில் முன்னிருந்தபடி தரித்திருக்கமாட்டாதென்றும், இயேசுவினது ஆத்துமாவில் கடவுளது உண்மையான சமூகந் தரித்திருக்குமென்றும், அதுவே உண்மையான தேவாலயமென்றும் இவ்வார்த்தைகளால் தெரிவிக்கப்படலாம். அதற்குமேலே நிச்சயமாய்ச் சொல்ல முடியாது.

20. **நாற்பத்தாறு வருஷம்**—ஏரோது தேவாலயத்தை மராமத்துச் செய்ய கி. மு. 20-ம் வருஷத்தில் ஆரம்பித்தான். அந்த வேலை கி. பி.



64-ம் வருஷத்தில் முடிவுபெற்றது. ஆகையால் இயேசு பேசினபோது அது முடிவுபெறவில்லை.

23. ஆதலால் அநேகர் அவர் செய்த அற்புதத்தினால் ஒருவாறு நம்பினார்கள். அவ்வண்ணமான விசுவாசம் மனதுக்குரிய விசுவாசமல்லவென்றறிந்து அன்னவருக்குத் தம்மைப் பூரணமாய் வெளிப்படுத்திலர். ஏனெனில், அவர்கள் அந்த வெளிப்படுத்தலை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். $10^{37, 38}$ $14^{11}$ $10^{38}$. பார்க்க.

24, 25. இயேசுவுக்கு மனிதரது கருத்துகளை அறியும் வல்லமை உண்டென்பது இங்கே திட்டமாய்ச் சாதிக்கப்பெற்றது. இந்த வல்லமை இந்நூலில் அடிக்கடி காணப்படுகிறது. $1^{43, 49, 50}$ $4^{17-19}$ $6^{64}$ $13^{13}$ $21^{17}$. பார்க்க.

## நிக்கொதேமு என்பவனுடன் சம்பாஷணை செய்தல். $3^{1-15}$.

முந்தின அதிகாரத்தில் சொல்லப்பட்டதற்கும் இதற்கும் சம்பந்தம் யாதெனில்: சிலர் நிக்கொதேமு குறைவான விசுவாசத்தைக் காண்பிக்கிறதாகவும், வேறு சிலர் அந்தப் பொதுவான விசுவாசத்தைக் காட்டாமல் பெரும்பான்மையோருக் கொழிபாக நிக்கொதேமு உண்மையுள்ள விசுவாசமுடையோனானதாகவும் சொல்லுகிறார்கள். $2^{23-25}$. வசனங்களுடன் இதற்கும் விசேஷித்த சம்பந்தமிருக்கிறதாக அறிக. அவன் இயேசு செய்த அடையாளங்களால் இழுக்கப்பெற்று வந்ததாகப் பார்க்கிறோம். ஆகையால் அந்த விஷயத்தில் முன்சொன்ன அந்தக் குறைவான விசுவாசத்தை யடைந்தவனானான். எனினும் இயேசு தம்மை நிக்கொதேமுவுக்கு வெளிப்படுத்தினதால் அவனது விசுவாசம் உண்மையான விசுவாசமாய் வளர்ந்துகொள்ளக் கூடுமென்று இயேசு நினைத்ததாக அறிந்து அவனெல்லாவிஷயங்களிலும் முன் சொல்லியிருந்த மனிதர்களைப்போலொத்தவனல்லனென்று சொல்லவேண்டும். கடைசியாக அவன் இயேசுவின் பட்சத்தைச் சார்ந்துகொண்டவனாகக் காணப்படுகிறான். $7^{50}$ $19^{39}$. பார்க்க.

இந்தச் சம்பாஷணையின் விசேஷித்த பொருள் புதிய பிறப்பென்பதாம்; அல்லது பரம ராஜ்யத்தில் பிரவேசிப்பதற்குப் புதிய பிறப்புண்டாதல் அவசியமென்றும் பொருந்தும். நிக்கொதேமு இயேசுவைப்பற்றி உண்மையான ஆசைகொண்டு அவரிடத்திலேயே இந்தப் புதிய

போதனை இன்னதென்று அறிந்துகொள்ளவேண்டுமென்று விரும்பி இயேசுவிடம் வந்து விசாரித்தான். அவர் போதனை மேசியாவின் வருகையுடன் எவ்வாறு சம்பந்தமுள்ளதென்றறிய விரும்பியிருப்பான்.

### 3[1-15]. பரம ராஜ்யத்தின் பரம பிறப்பு.

1 யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்
2 னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்.—அவன்
இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர்
தேவனிடத்திலிருந்து வந்தபோதகர் என்று அறிந்திருக்
கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன்
இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்
களைச் செய்யமாட்டான் என்றான்.
3 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறு
படியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக்
காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே
உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.
4 அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதா
யிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின்
கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்
கூடுமோ என்றான்.
5 இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும்
ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்
தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்
6 யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.—மாம்சத்தினால்
பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது
7 ஆவியாயிருக்கும்—நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும்
என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்
8 படவேண்டாம்.—காற்றானது தனக்கு இஷ்டமான
இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய்,
ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்
றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத்
தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ அவனும்
அப்படியே இருக்கிறான் என்றார்.
9 அதற்கு நிக்கொதேமு: இவைகள் எப்படி ஆகும்
என்றான்.
10 இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போத
கனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா?—



11 மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகி
றேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள்
கண்டதைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறோம்; நீங்களோ
12 எங்கள் சாட்சியை ஏற்றுக்கொள்ளுகிறதில்லை.—பூமிக்
கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும்
நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரம காரியங்களை உங்க
ளுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்?—
13 பரலோகத்திலிருந்து இறங்கினவரும் பரலோகத்தில்
இருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பர
14 லோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை.—சர்ப்பமா
னது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டது
15 போல மனுஷகுமாரனும்,—தன்னை விசுவாசிக்கிறவன்
எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை
அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்.

### சம்பாஷணையின் போங்காவது.

(i) நிக்கொதேமு இயேசுவினது தெய்வீக அதிகாரத்தை அறிக்கையிட்டான்; 2.

(ii) இயேசு யாவருக்கும் புதிய பிறப்பு அவசியமென்பதைச் சாதித்தார்; 3.

(iii) நிக்கொதேமு தன்விஷயமாய்ப் புதிய பிறப்பு கேட்பது ஆச்சரியமென்று நினைத்துப் புதிய பிறப்புண்டாகும்விதமென்னவென்று விசாரித்தான்; 4.

(iv) புதிய பிறப்பு சின்மய ஜீவனுக்குரியதென்றும், தேவாவியால் உண்டாகிறதென்றும் இயேசு போதித்தார்; 5–7.

(v) புதிய பிறப்பு உலகப்பிரமாணத்தின்படி நடக்கிறதில்லையென்று சின்மயப்பிரமாணத்தைக் காட்டினார்; 8.

(vi) நிக்கொதேமு இப்போதனையைப்பற்றி மிக்க அதிசயமடைந்தவனாய்ச் சந்தேகித்தான்; 9.

(vii) இயேசு தாம் உண்மையாய்ப் பரம ராஜ்யத்தின் விஷயங்களைப் போதிக்கத்தக்க அதிகாரமுடையவரென்று திட்டமாய்ச் சொன்னார்; 10–13.

(viii) இயேசு தம்மை விசுவாசிப்பது புதிய பிறப்பாகிய நித்தியஜீவனை யடைகிறதற் கேதுகரமாக சாதித்தார்; 14, 15.

1. **நிக்கொதேமு** — $7^{50. 51}$ $19^{39}$ லூக் $14^{1}$ $23^{13}$. பார்க்க. அவன் யூதப் பிரதான சங்கத்தாருள் ஒருவன். இயேசுவைப்பற்றி நல்ல அபிப்பிராயங் கொண்டவன். அவன் சற்றுக் கோழைத்தனமுள்ளவனாகத் தோன்றுகிறது. எனினும் உண்மை யின்னதென்று நாடும் மனமுள்ளவன். கடைசியாகத் தனது விசுவாசத்தைத் தைரியமாகக் காட்டினான்.

2. **இராக்காலத்தில்**—அதாவது இரகசியமாய் வந்தான். தான் யூதச் சாஸ்திரியாதலின் வெளிப்படையாய் இயேசுவை ஏற்றுக்கொள்ளத் தகாதென்று பயத்தினால் இராத்திரியில் வந்திருப்பான்.

**ரபீ**—இந்த வார்த்தையால் நிக்கொதேமு இயேசுவைப் போதகராக அறிக்கையிட்டு மரியாதை காட்டுகிறான்.

3. **மறுபடியும் பிறவாவிட்டால்**—புறஜாதியார் யூத மார்க்கத்தைச் சேர்ந்தபோது புதிதாய்ப் பிறந்தவர்களாக எண்ணப்பட்டார்கள். எனினும் நியாயப்பிரமாணத்தில் தேர்ந்த பரிசேயனுக்கும் புதுப் பிறப்பு அவசியமென்றது ஆச்சரியமுண்டாக்கத்தக்கது.

**தேவனுடைய இராஜ்யத்தை**—இந்த வாசகம் அடிக்கடி திரியநுபந்த சுவிசேஷங்களில் வழங்கிவரினும் இந்நூலிலே இவ்விடத்திலும் 5–ம் வசனத்திலும்மாத்திரம் வருகிறது. எனினும் இவ்விடத்தில் உபயோகித்தலால் திரியநுபந்த சுவிசேஷங்களின் போதனையுடன் சம்பந்தம் பெற்றுள்ளது.

தேவனுடைய ராஜ்யமென்பது கடவுள் சித்தம் பூரணமாய் நிறைவேறும் நிலைமையென்றறிக. இது உள்ளத்திலாவது உலகத்திலாவது இருக்கலாம். சில சமயங்களில் கடவுளின் சித்தப்படி மாறுதல்பெற்ற உள்ளத்தைக் குறிக்கிறது. சில சமயங்களில் கடவுள் சித்தப்படி நடக்கும் ஜனசமுதாயத்தைக் குறிக்கிறது. இவ்விடத்திலே கடவுளது கிருபையும் ஆசீர்வாதமுமுள்ள பாக்கியத்தையுடைய பரிசுத்தமான நிலைமையைக் காட்டுகிறது. யூதர்கள் அது தங்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டதாக நினைத்தார்கள். இயேசு இதை யடையும் நிபந்தனையைக் காட்டுகிறார். அது சின்மய ராஜ்யமாதலின் நிபந்தனையும் சின்மயப் பிறப்பாதலாமே.

"புத்தியில் லௌகீக எண்ணங்களால் ஆட்கொள்ளப்படுவது உலக ராஜ்யமாம். புத்தியில் தெய்வீக எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டு எல்லாவற்றிலும் கடவுளைக் கண்டறிதல் பரம ராஜ்யமாம்." (பாரகர்)



5. **ஜலத்தினாலும் ஆவியினாலும்**—இவ்வார்த்தைகளால் புறம்பான மாறுதலும் உள்ளான மாறுதலுந் தெரியவருகின்றன. ஜலம் என்பது ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது. யோவான்ஸ்நானகன் ஞானஸ்நானங் கொடுத்ததாகவும் பரிசேயர் அதை ஏற்றுக்கொள்ளாததாகவும் வாசித்தோம். இயேசு இதைக் குறிப்பித்து ஜலத்தினால் என்றார். ஞானஸ்நானம் மனஸ்தாபத்தையும் முந்திய நிலைமையை நீக்குதலையும் குறிக்கிறது. தங்களுக் கிவைகள் அவசியமென்பதை பரிசேயர் ஒப்புக்கொள்ளாததாலின் யோவானது ஞானஸ்நானத்தைத் தள்ளிப்போட்டார்கள் (லூக் $7^{30}$. பார்க்க.). இயேசு ஜலத்தினால் என்று சொல்லி இவைகள் பரிசேயருக்கும் அவசியமென்று சுட்டிக் காட்டினார். 5–7 வசனங்களில் பரம ராஜ்யத்திற்குரிய இயல்பும் உலக வியல்பும் முற்றும் விபரீதமுள்ளன என்பது போதிக்கப்பட்டிருக்கிறது. முதலாவது பழையது நீங்கி, இரண்டாவது ஆவியால் புதியது உண்டாதல்வேண்டும். ஆதலின் இயேசு ஆவியினாலும் என்றும் சொன்னார். புதியது சின்மயத்தன்மையுள்ளதாதலின் சின்மயச்சக்தியால் உண்டாதல்வேண்டும். அந்த ஆவி கடவுளின் ஆவியாகிய பரிசுத்தாவியே.

8. இவ்வசனத்தில் புதிய பிறப்புண்டாகும்வகை தெரிவிக்கப்பட்டது. அது சின்மயத் தன்மையாதலின் சின்மயப் பிரமாணத்துக் கேற்றதாய் நடக்கும். காற்றைப்போல் தெரியாதபடி உண்டாகி இடைவிடாது வெளிப்படையான மாறுதலில் காணப்படுகிறது. ஆவியானது ஐம்புலன்களுக்குத் தெரியாத சின்மயச்சிந்தையி லியக்கஞ்செய்து கடைசியாக ஒருவனது ஜீவியத்திலே புலப்படுகிறது.

11. **நாங்கள்** — இப்பதத்தால் இயேசு தம் பட்சத்தாருக்கும் நிக்கொதேமுவின் பட்சத்தாருக்குமுள்ள பேதத்தைக் காட்டுகிறார். அவர்கள் பாரம்பரியமாய்ப் பெற்றதைப் போதிக்கிறதாகவும் தாம் அநுபவித்தறிந்ததைப் போதிப்பதாகவும் சொன்னார்.

12. **பூமிக்கடுத்த காரியங்களை** — **பரம காரியங்களை** — முந்தினவை மனந்திரும்பல் ஞானஸ்நானம் முதலியவைகளுக்குரியவைகள். பிந்தினவை பரமராஜ்யத்துக்குரிய சின்மயகாரியங்கள்.

13. இவ்விடத்தில் இயேசு தமது தன்மையைக் கொஞ்சமாக வெளிப்படுத்துகிறார். எப்படியெனில், மனுஷகுமாரனும் தாமே பரத்தை வெளிப்படுத்துகிறவர்; ஏனென்றால் அவர் மற்றவர்களைப்

போல் உலகத்தாரல்லர்; அவர் விசேஷித்தவிதமாய் பரத்திலிருந்து வந்திறங்கினவரே. ஆதலால் பரத்தைக்குறித்து அனுபோக அறிவு அவருக்குண்டென்று இவ்விதமாய் 11-ம் வசனத்தின் வார்த்தைக்கு இவ்விடத்தில் காரணத்தைக் காட்டுகிறார்.

14. கடைசியாக இயேசு நிக்கொதேமு தம்மை விசுவாசிக்கும்படி தமது வேலையைப்பற்றிச் சற்று விவரிக்கிறார். பழைய ஏற்பாட்டின் போதனையுடன் சம்பந்தப்படுத்தித் தாம் சொல்லிய புதிய ஜீவனாகிய நித்திய ஜீவனுக்குத் தாமே காரணரென்பதை வெளிப்படுத்தினார். நிக்கொதேமு இவ்வார்த்தைகளை நன்குணராமல் பிறகு இயேசுவினது பிரேதத்தைச் சிலுவையிலிருந்து இறக்கும்படி உதவிசெய்தபோது ($19^{38-42}$) அவைகளின் அர்த்தத்தை அறிந்துகொண்டானென்று நினைக்கலாம்.

15. **கெட்டுப்போகாமல்** — இந்த வார்த்தைகள் பிசகாய் வந்ததால் அவைகளை நீக்குக. 14, 15 வசனங்களை சுவிசேஷகன் தன் கருத்தாக எழுதினானென்று சொல்வார் சிலர். பெரும்பான்மையோர் சுவிசேஷகனது கருத்துகள் 16-ம் வசனமுதலாய்த் தொடங்குகின்றனவென்று சொல்லுகிறார்கள். "தன்னை விசுவாசிக்கிறவனெவனோ அவன் நித்தியஜீவனை யடையும்படிக்கு" என்பதை ஆசிரியன் சேர்த்தெழுதினதாகத் தோன்றுகிறது.

### $3^{16-21}$. இயேசுவே பரம ரட்சகர்.

16 தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசு
வாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்
தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்
17 வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.—உலகத்தை ஆக்
கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமா
ரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்
18 சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.—அவரை
விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்;
விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமா
ரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியி
19 னால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று.—ஒளி
யானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரி
யைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்



கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த
20 ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது.—பொல்
லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான்,
தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினி
21 டத்தில் வராதிருக்கிறான்.—சத்தியத்தின்படி செய்கிற
வனோ, தன் கிரியைகள் தேவனுக்குள்ளாய்ச் செய்யப்
படுகிறதென்று வெளியாகும்படிக்கு, ஒளியினிடத்தில்
வருகிறான் என்றார்.

### சுவிசேஷகனது சிந்திப்புகள். $3^{16-21}$.

சுவிசேஷகன் முந்தினவார்த்தைகளை எழுதின பிறகு அவைகளைப்பற்றித் தன் சிந்தனைகளை எழுதினான். ஒரேபேறான குமாரனென்னும் நாமத்தில் விசுவாசமுள்ளது என்றும் சத்தியத்தின்படி செய்ய என்றும் சொல்வதாலும் வினைகள் இறந்தகாலத்தில் போட்டிருப்பதாலும் இவைகள் சுவிசேஷகனின் சிந்தனைகளென்று அனுமானிக்கலாம். இங்கே காண்பிக்கப்பெற்ற எண்ணங்கள் எவையெனில்:—

குமாரன் மனிதனானதற்கேதுவான நோக்கம்; 16, 17. உலகம் நித்தியஜீவன் பெறுவதற்கென்றே.

அதின் பயன்கள்; 18, 19. விசுவாசிப்போருக்குத் தீர்ப்பில்லை. விசுவாசியாதவர்களுக்கு தீர்ப்புண்டு. இந்த இருவகுப்பாரும் தங்தமக்குள்ள குணங்களாலேயே—அதாவது விசுவாசியாதவன் தீமை செய்யுங் குணத்தாலும், விசுவாசிப்போர் சத்தியம் செய்யுங் குணத்தாலும் அவ்வவ்வாறே செய்யப் பலவந்தம் பண்ணப்படுகிறார்கள். 20, 21.

19. **இருள் – ஒளி** — இந்நூலில் இவ்வண்ணமான எதிரிடைக் கருத்துள்ள பதங்கள் அடிக்கடி வருகின்றன. இருள் தீமையையும் ஒளி நன்மையையும் குறிக்கிறது.

20. "உண்மையாகவே ஆத்மீக வழியல்லாத வழிகளில் ஒருவன் பாடுபடுகிறதைக் கண்டால் அவன் இருளாகிய லௌகீகத்தை விரும்பி ஒளியாகிய தேவபக்தியை வெறுக்கிறானென்று நிச்சயித்துக்கொள்ளலாம் என்று இயேசு பலமாய்ச் சொன்னார்." (பாராநந்தர்)

### $3^{22-36}$. யோவான்ஸ்நானகனின் இரண்டாம் சாட்சி.

22 இவைகளுக்குப் பின்பு, இயேசுவும் அவருடைய
சீஷரும் யூதேயாதேசத்திற்கு வந்தார்கள்; அங்கே அவர்
அவர்களோடே சஞ்சரித்து, ஞானஸ்நானங் கொடுத்து

23 வந்தார்.—சாலிம் ஊருக்குச் சமீபமான அயினோன் என்
னும் இடத்திலே தண்ணீர் மிகுதியாயிருந்தபடியினால்,
யோவானும் அங்கே ஞானஸ்நானங் கொடுத்துவந்தான்;
ஜனங்கள் அவனிடத்தில் வந்து ஞானஸ்நானம் பெற்
24 றார்கள்.—அக்காலத்தில் யோவான் காவலில் வைக்கப்
பட்டிருக்கவில்லை.
25 அப்பொழுது யோவானுடைய சீஷரில் சிலருக்கும்
யூதருக்கும் சுத்திகரிப்பைக்குறித்து வாக்குவாதமுண்டா
26 யிற்று.—அவர்கள் யோவானிடத்தில் வந்து: ரபீ, உம்
முடனேகூட யோர்தானுக்கு அக்கரையில் ஒருவர்
இருந்தாரே; அவரைக்குறித்து நீரும் சாட்சி கொடுத்
தீரே, இதோ, அவர் ஞானஸ்நானங்கொடுக்கிறார், எல்
லாரும் அவரிடத்தில் போகிறார்கள் என்றார்கள்.
27 யோவான் பிரதியுத்தரமாக: பரலோகத்திலிருந்து ஒரு
வனுக்குக் கொடுக்கப்பட்டாலொழிய, அவன் ஒன்றை
28 யும்பெற்றுக்கொள்ளமாட்டான்.—நான் கிறிஸ்துவல்ல,
அவருக்கு முன்னாக அனுப்பப்பட்டவன் என்று நான்
29 சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.—மணவாட்டியை
உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழ
னோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்
கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிக
வும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்
30 பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று.—அவர் பெரு
கவும் நான் சிறுகவும் வேண்டும்.
31 உன்னதத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலா
னவர்; பூமியிலிருந்துண்டானவன் பூமியின் தன்மை
யுள்ளவனாயிருந்து, பூமிக்கடுத்தவைகளைப் பேசுகிறான்;
பரலோகத்திலிருந்து வருகிறவர் எல்லாரிலும் மேலான
32 வர்.—தாம் கண்டதையும் கேட்டதையும் சாட்சியாகச்
சொல்லுகிறார்; அவருடைய சாட்சியை ஒருவனும் ஏற்
33 றுக்கொள்ளுகிறதில்லை.—அவருடைய சாட்சியை ஏற்
றுக்கொள்ளுகிறவன் தேவன் சத்தியமுள்ளவரென்று
34 முத்திரைபோட்டு நிச்சயப்படுத்துகிறான்.—தேவனால்
அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசு
கிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லா
35 மல் கொடுத்திருக்கிறார்.—பிதாவானவர் குமாரனில் அன்
பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்
36 கொடுத்திருக்கிறார்.—குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்



கிறவன் நித்தியஜீவனை யுடையவனாயிருக்கிறான்; குமா
ரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவ
னுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும் என்றான்.

## யோவான்ஸ்நானகனின் இரண்டாம் சாட்சி. 3²²⁻³⁶.

இயேசு எருசலேம்பட்டணத்தை விட்டு யூதேயாதேசத்தில் பிரசங்கம்பண்ணித் தம்முடைய சீஷர்மூலமாய் அநேகர்க்கு ஞானஸ்நானங் கொடுப்பித்துவந்தார். அவர் தம்மை மேசியாவாக வெளிப்படுத்தும்முன்னே ஜனங்களுக்குள்ளே அநேக காரியங்களைப் போதித்துத் தம்மைப் பலவகையாய் வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ஆகையால் அவர் யூதர்களோடு போராடினதை விட்டு விலகினார். அப்படியிருக்க, யோவான்ஸ்நானகனுடைய சீஷரும் இயேசுவைப்பற்றிச் சந்தேகங்கொண்டு அவனிடத்தில் போய் விசாரித்தார்கள். அவன் மறுபடியும் இயேசுவைக் குறித்து மேன்மையான சாட்சி கொடுத்தான். பிறகு 31–36–ல் ஆசிரியன் அதாவிஷயமாய்த் தன்னபிப்பிராயத்தையும் எழுதியிருக்கிறான்.

23. **அயினோன்**—இது ஊற்றுகளென்னும் அர்த்தமுள்ளது. சாலீம் ஊர் பக்கத்திலிருந்ததாகச் சொல்லியிருக்கிறது. இந்தச் சாலீம் சீகேமூருக்குக் கிழக்கு. அநேக வெள்ளாறுகள் இவ்விடத்தில் ஓடுகின்றன. இது எருசலேம்பட்டணத்திலிருந்து கலிலேயாவுக்குப் போன பெரிய ரஸ்தாவின் ஓரத்திலிருந்தது.

24. **அக்காலத்தில்**—மத் 4[12. 13. 17] மாற் 1[14]. திரியனுபந்த சுவிசேஷங்களிலிருந்து யோவான்ஸ்நானகன் இயேசு தமது பிரசங்கவேலையை ஆரம்பிக்குமுன்னேயே காவலில் வைக்கப்பட்டதாக நினைக்கக்கூடியதை மறுக்கும்படியும் அவன் அதுவரைக்கும் காவலில் வைக்கப்படாததைத் திட்டமாய்க் காண்பிக்கும்படியும் இதை யெழுதினான். மற்றச் சுவிசேஷங்களில் யூதேயாவில் நடந்த இந்த ஊழியம் சொல்லியிருக்கவில்லை.

26. யோவான்ஸ்நானகனுடைய சீஷர்கள் இயேசுவைப்பற்றிக் கொஞ்சம் பொறாமைகொண்டு தங்கள் போதகரிடம் முறையிட்டார்கள். இயேசுவினிடம் வந்த பேதுரு அந்திரேயா முதலியவர்கள் இப்படிச் செய்திருக்கமாட்டார்களென் றெண்ணி முறையிட்டவர்கள் இவர்களல்ல வென்றறிக.

27–30. யோவான்ஸ்நானகன் சொஞ்சமேனும் பொறுமைகொள்ளாமல் இயேசுவின் மேன்மையை யறிந்து அதைத் தெளிவாய்க் கூறுகிறான். முதலாவது ஒரு போதகரது போதகத்தின் அதிகார அளவைப்பற்றிக் கற்பித்தான். எப்படியெனில், தான் பரத்தில் பெற்றது எவ்வளவோ அவ்வளவு அதிகாரமுள்ளது. தான் இயேசுவுக்காக ஆயத்தஞ்செய்கிறவன் மட்டுமென்று அறிந்து இயேசுவின் பெருமையைக்குறித்துச் சந்தோஷமடைந்து அவரது சிறந்த மேன்மையைக் கூறினான். மணவாளனுடைய தோழன் மணவாட்டியை மணவாளனுக்கு ஒப்புவித்துவிட்டதுபோல் தான் இயேசுவுக்கு ஆயத்தஞ்செய்து பின்பு விலகிப்போகவேண்டுமென்று அறிந்து சந்தோஷித்தான். இதுவே யோவான்ஸ்நானகனுடைய பெருந்தன்மையைத் தெளிவாய் வெளிப்படுத்துகிற திருஷ்டாந்தம். "யோவான்ஸ்நானகன் சொன்ன கருத்தாவது அவரது நாமத்தைக் கேட்டவர்களைக் கவர்ந்து இழுக்கும் வல்லமையைக் கடவுள் இயேசுவுக்குக் கொடுத்தலாலே ஞானஸ்நானம்பெற யாவரும் இயேசுவினிடம் போவது ஆயிற்று." (பாரநந்தர்.)

31–36. இந்த வசனங்கள் ஆசிரியனது சிந்தனைகள் என்று வசன நடையாலும் அதில் காணப்படும் நோக்கங்களாலும் தெளிவாகிறது. அதுமாத்திரமல்ல, அவன் இந்தச் சுவிசேஷத்தில் இவ்வண்ணமாகப் பல இடங்களில் தனது அபிப்பிராயங்களை எழுதுகிறான். இவைகளில் இயேசுவையும் மற்றெல்லாப் போதகரையும் பிரித்து இயேசுவின் பெருமையைக் காண்பிக்கிறான். எப்படியெனில், மற்றவர்கள் உலக ஞானத்தை யுடையவர்களானதுபோலல்லாமல் இயேசுவோ பரத்திலிருந்து வந்தவராகிப் பரம ஞானத்தையுமுடையவரானார். 34-ம் வசனத்தில் அவர் மட்டின்றி பூரணமாய்க் கடவுளாவியைப் பெற்றாரென்று சொல்லியிருக்கிறது. அதுமாத்திரமல்ல, அவருக்கு அதிகாரத்தையுங் கொடுத்து யாவரு மவர்மேல் நம்பிக்கைவைத்து நித்திய ஜீவனை யடையவேண்டுமென்று கடவுள் ஏற்படுத்தியிருக்கிறாரென்பது 35, 36-ம் வசனங்களில் வெளியாகிறது.

36. தேவனுடைய கோபம்—இந்த வாசகம் அடிக்கடி நிருபங்களில் வருகிறதெனினும் சுவிசேஷங்களில் இவ்விடத்தைத்தவிர வேறிடத்தில் வரக்காணோம். பாவம் செய்தவன்மேல் வரும் கடவுளது



நியாயத்தீர்ப்பு அல்லது கடவுளது பிரமாணத்தின் நியாயத்தீர்ப்பு இதினால் குறிக்கப்பட்டது.

### $4^{1-9}$. பரம புருஷன்.

1 **யோ**வானைப்பார்க்கிலும் இயேசு அநேகம்பே
ரைச் சீஷராக்கி ஞானஸ்நானங் கொடுக்கிறாரென்று
பரிசேயர் கேள்விப்பட்டதாகக் கர்த்தர் அறிந்தபோது,—
2 யூதேயாவைவிட்டு மறுபடியுங் கலிலேயாவுக்குப் போ
3 னார்.—இயேசு தாமே ஞானஸ்நானங் கொடுக்கவில்லை,
4 அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள்.—அவர் சமாரி
யாநாட்டின் வழியாய்ப் போகவேண்டியதாயிருந்தபடி
5 யால்,—யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக்
கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவி
6 லுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு வந்தார்.—அங்
கே யாக்கோபுடைய கிணறு இருந்தது; இயேசு பிர
யாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்றி
னருகே உட்கார்ந்தார்; அப்பொழுது ஏறக்குறைய
ஆறும்மணி வேளையாயிருந்தது.
7 அவருடைய சீஷர்கள் போஜனபதார்த்தங்களைக்
கொள்ளும்படி ஊருக்குள்ளே போயிருந்தார்கள்.—
8 அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ
தண்ணீர் மொள்ள வந்தாள். இயேசு அவளை நோக்கி:
9 தாகத்துக்குத் தா என்றார்.—யூதர்கள் சமாரியருடனே
சம்பந்தங் கலவாதவர்களானபடியால், சமாரியா ஸ்திரீ
அவரை நோக்கி: நீர் யூதனாயிருக்க, சமாரியா ஸ்திரீ
யாகிய என்னிடத்தில், தாகத்துக்குத் தா என்று எப்
படிக் கேட்கலாம் என்றாள்.

### (ii) இயேசு சமாரியா நாட்டிலிருந்தது. $4^{1-42}$.

பரிசேயரது பொறாமையால் இயேசு யூதேயாவை விட்டுச் சமாரியா நாட்டின் வழியாய்க் கலிலேயாவிற்குப் பயணஞ்செய்தார். சமாரியா நாட்டில் ஒரு ஸ்திரீயைக் கண்டு அவளுடன் சிறந்த வணக்கத்தைப் பற்றியும் தமது தன்மையைப்பற்றியும் சம்பாஷணை செய்தார். அவள் விசுவாசித்து மற்றோருக்குச் சாட்சி கொடுத்து அநேகர் அதிசயமொன்றையும் பாராமல் அவரை விசுவாசித்துக்கொள்ளும்படி

உதவினான். இச்சுவிசேஷகன் அடிக்கடி சம்பாஷணைகளை எழுதுகிறான். யூதரல்லாதவராகிய இவர்களது விசுவாசத்தையுங் கவனிக்க.

1. ஆசிரியன் சதுசேயர் ஏரோதியரென்பவரைப்பற்றி ஒரு இடத்திலு மெழுதாமல் பரிசேயரை முதன்மையானவர்களாக எண்ணி அவர்களை விசேஷித்தெழுதுகிறான். அவர்கள் யோவான் ஸ்நானகனின் போதனைக்குச் சம்மதியாததுபோல் இந்தப் புதிய போதகத்தைக்குறித்துஞ் சந்தேகித்தார்கள். அவர் போதனை ஜனங்களுக்குள் கொஞ்சமாய்ச் சித்திபெற்றது. அதுவுமவர்களுக்குப் பிரியமில்லாமல் அவர்களை எதிர்க்கத் துவக்கும் காலமாயிற்று. இங்கே பரிசேயரது விரோதம் முதலாவது வெளிப்பட்டது. ஒருவேளை இதற்குள்ளேயே யோவான் காவலில் வைக்கப்பட்டிருக்கலாம். ஏரோது அப்படிச் செய்யும்படி பரிசேயரை ஏவினானென்பார் சிலர். அவர்கள் தம்மையும் அப்படித் தொலைக்க விரும்பினார்களென்றறிந்து இயேசு விலகியிருந்தார். ஏனெனில், அவரது காலம் இன்னும் வரவில்லை.

4. **போகவேண்டியதாயிருந்தபடியால்** — அதாவது அப்படிப் போகவேண்டிய அவசியமிருந்தது. இதுவே நேரான வழி. யூதரநேகர் சமாரியரை அசுத்தராக எண்ணி அவ்வழி போகாமல் அந்நாட்டைச் சுற்றிப்போவார்கள்.

6. **யாக்கோபுடைய கிணறு**—இந்தப் பெயரையுடைய கிணறொன்று இன்னமும் அங்கே யிருக்கிறது. அது இப்போது சுமார் எழுபதடி ஆழமுள்ளது. முன்னே அதிலுமதிக ஆழமுள்ளதாயிருந்ததாகத் தோன்றுகிறது. யூதேயாவிலிருந்து கலிலேயாவிற்குப் போகும் ரஸ்தாவின்பேரிலே யிருக்கிறது.

**ஆறாம்மணி**—நமது கணக்கின்படி மத்தியானம் பன்னிரண்டு மணி.

**இளைப்படைந்தவராய்**—இதில் இயேசுவினது உண்மையான மனுஷீகத்தைக் கவனிக்க.

9. யூதர்கள் சமாரியருடன் கிஞ்சித்தேனும் புழங்கமாட்டார்கள். சிலவகையான பதார்த்தங்களைமாத்திரம் அவர்களிடம் வாங்குவார்கள். அவர்களுடன் புசித்தலுங் குடித்தலும் ஆகாது. சமாரியரும் யூதர்களைப் பகைத்து அடிக்கடி அவ்வழியேபோன யூதப் பிரயாணிகளை



அடித்துக் காயப்படுத்தினதுண்டு. இயேசு தாம் இப்பேர்ப்பட்ட விரோதத்திற்குச் சம்பந்தமில்லாதவரென்று காண்பித்தார்.

### $4^{10-26}$. உத்தமப்போநளும் வணக்கமும்.

10 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவ
னுடைய ஈவையும், தாகத்துக்குத் தா என்று உன்னி
டத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்
திருந்தாயானால்; நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய்,
அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்
என்றார்.
11 அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள
உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்
கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர்
12 உண்டாகும்? — இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த
நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப்பார்க்கிலும்
நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர்
மிருகஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே என்றாள்.
13 இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்
ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டா
14 கும். — நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவ
னுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவ
னுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்
திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்.
15 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, எனக்
குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டு
கொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை
எனக்குத் தரவேண்டும் என்றாள்.
16 இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை
17 இங்கே அழைத்துக்கொண்டுவா என்றார். — அதற்கு
அந்த ஸ்திரீ: எனக்குப் புருஷன் இல்லை என்றாள்.
இயேசு அவளை நோக்கி: எனக்குப் புருஷன் இல்லை
18 யென்று நீ சொன்னது சரிதான். — எப்படியெனில்,
ஐந்து புருஷர் உனக்கிருந்தார்கள், இப்பொழுது உனக்
கிருக்கிறவன் உனக்குப் புருஷன் அல்ல, இதை உள்
19 ளபடி சொன்னாய் என்றார். — அப்பொழுது அந்த
ஸ்திரீ அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் தீர்க்கதரிசி
20 என்று காண்கிறேன். — எங்கள் பிதாக்கள் இந்த மலை

யிலே தொழுதுகொண்டுவந்தார்கள்; நீங்கள் எருசலேமி
லிருக்கிற ஸ்தலத்திலே தொழுதுகொள்ளவேண்டும்
என்கிறீர்களே என்றாள்.
21 அதற்கு இயேசு: ஸ்திரீயே, நான் சொல்லுகிறதை
நம்பு, நீங்கள் இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திர
மல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுகொள்ளுங்காலம்
22 வருகிறது.—நீங்கள் அறியாததைத் தொழுதுகொள்ளு
கிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுதுகொள்
ளுகிறோம்; ஏனென்றால் இரட்சிப்பு யூதர்கள் வழி
23 யாய் வருகிறது.—உண்மையாய்த் தொழுதுகொள்ளு
கிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும்
தொழுதுகொள்ளுங் காலம் வரும், அது இப்பொழுதே
வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள்
இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரு
24 ம்புகிறார். — தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத்
தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மை
யோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்
றார்.
25 அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படு
கிற மேசியா வருகிறாரென்று அறிவேன், அவர் வரும்
போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்
26 றாள். — அதற்கு இயேசு: உன்னுடனே பேசுகிற
நானே அவர் என்றார்.

இயேசு அந்த ஸ்திரீக்குப் போதிக்கக்கூடிய இந்த நல்ல சமயத்தை இழந்துபோகாமல் உயர்ந்த சத்தியங்களைத் தெளிவும் அனுதாபமுமுள்ளவிதமாய்ப் போதித்தார். அந்தச் சம்பாஷணையின் விஷயங்களாவன: (i) உத்தமப்பொருள் $4^{10-16}$. (ii) உத்தமவணக்கம் $4^{21-24}$. என்பவை.

(i) **உத்தமப்பொருள்** என்பது கடவுள் வரமாகிய நித்திய ஜீவன். $4^{10-16}$.

10. அவர் அந்த இடத்தில் கிடைத்த ஒரு சாமான்ய திருஷ்டாந்தத்தை யெடுத்துக் கூறினார். உத்தமப்பொருளை ஜீவத்தண்ணீரென்றார். அதைக் கொடுக்கக்கூடியவர் தாமே யென்று தெரிவிக்கிறார்.

11, 12. அவரது அர்த்தத்தை அவள் நன்கறியாமல் சற்று விகடமாய் உத்தரவு கொடுக்கிறாள்.



13, 14. இயேசு இப்போது விவரமாய்த் தமது வார்த்தையை வெளிப்படுத்தினதாகக் காண்கிறோம். இந்த உத்தமப்பொருளால் மனிதருக்குப் பூரணத் திருப்தி கிடைப்பதாகக் காண்பித்தார். லௌகீகப் பொருளையொத்த இந்தக் கிணற்றுத்தண்ணீர் எக்காலத்தும் திருப்தி கொடுக்காது. பரமபொருளாகிய ஜீவத்தண்ணீர் எக்காலத்தும் பூரணத் திருப்தியைக் கொடுப்பதோடு புதிய ஆசீர்வாதங்களையும் வருவிக்கும்.

15. அந்த ஸ்திரீ சின்மயப்பொருட்களை நினையாமல் தன் சரீரத்துக்குரியவைகளைமாத்திரம் நினைக்கிறதைப் பார்க்க.

16. இயேசு அவளுக்குச் சின்மயவிஷயங்களைக் காண்பிக்க விரும்பி முதலாவது அவளது உண்மையான நிலைமையைக் காட்டித் தமது மறைவல்லமையை வெளிப்படுத்தினார். அவள் அப்பொழுது அவரது போதனையைக்குறித்து நினைக்கலுற்றாள்.

(ii) **உத்தமவணக்கம்.** $4^{17-24}$.

20. அவள் மதசம்பந்தமான காரியங்களில் சிந்தையாயிருப்பதாகக் காண்கிறோம். எங்கே வணங்கவேண்டுமென்பது அவளுக்கு விசேஷித்த கேள்வி. ஆகையினால் இந்தப் பக்தனிடத்தில் அதற்கு உத்தரவு கேட்கலாமென்று நினைத்து அதைப்பற்றிக் கேட்கிறாள்.

**இந்த மலையில்**—அந்தக் கிணறு அம்மலையின் அடிவாரத்திலிருந்தது. அதைச் சுட்டிக்காட்டிக் கேட்டிருப்பாள். அந்த மலையின் பெயர் கெர்சீம். சமாரியர் எக்காலத்தும் அதின் ஆலயத்தில் கடவுளை வணங்கிக்கொண்டிருந்தார்கள். இந்த விஷயத்தைப்பற்றி அதிக வாக்குவாதம் யூதருக்கும் சமாரியருக்கும் உண்டாயிற்று. உபா $29^{11}$. பார்க்க.

21–24. உத்தமவணக்கம் இன்னதென்று காண்பித்தார். அது இடத்திற்கும் ஜாதிக்குமுரியதல்ல. கடவுள் பரமாத்மாவாதலின் சின்மயத்தன்மையுள்ளது. மனிதர் இதைத் தெரிந்தறியும்போது பிரிவினைகள் நீங்கி யாவரும் ஒருமனப்பட்டு வணங்குவார்கள்.

21. **பிதாவே** — கடவுள் நம்முடன் சம்பந்தமுள்ளவரென்பதும் எல்லாரும் ஒருவரோடொருவர் சம்பந்தமுள்ளவரென்பதும் இவ்வார்த்தையினால் காணப்படுகின்றன. கிறிஸ்து செய்த வெளிப்படுத்தலில் கடவுளது தந்தைத்துவம் விசேஷித்த தாற்பரியம்.

**22.** யூதர்கள் பக்தர்களால் விசேஷித்த வெளிப்படுத்தலை யடைந்ததையும் அவர்களுக்குள் மேசியா தோன்றவேண்டியதையும் அவரறிந்து யூதர்களது பெருமையைச் சாதித்தார்.

**23. ஆவியோடும் உண்மையோடும்**—இவைகளுக்கு உண்மையான மனதாலும் என்றர்த்தமாம். இப்பதங்கள் இரண்டு குணங்களையல்ல ஒரு குணத்தையே குறிக்கின்றன.

**24. தேவன் ஆவியாயிருக்கிறர்** — அதாவது கடவுள் சின்மயச் சொரூபி அல்லது கடவுள், பரமாத்மா.

> "சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்ன
> அற்புதமே அன்பே அறிவே பராபரமே"

என்று தாயுமானவர் பாடியதை ஒத்துப்பார்க்க.

**25.** அந்த ஸ்திரீ அப்பேர்ப்பட்ட சத்தியங்கள் மேசியாவால் மனிதாது பெலவீன மனதுக்கு விளங்குமென்று நினைத்து இவ்விதமாய்ப் பேசினுள்.

**26.** இயேசு கடைசியாகத் தமது மேசியா தத்துவத்தைச் சாதித்தார். கடவுள் பரம சத்தியங்களை அறிவாளிகளுக்கல்ல பாலகருக்கும் பேதையோருக்கும் வெளிப்படுத்தும் திருஷ்டாந்த மிதுதான்.

### $4^{27-42}$. சமாரியரின் விசுவாசம்.

27 அத்தருணத்தில் அவருடைய சீஷர்கள் வந்து, அவர்
ஸ்திரீயுடனே பேசுகிறதைப்பற்றி ஆச்சரியப்பட்டார்
கள். ஆகிலும் என்ன தேடுகிறீரென்ருவது, என் அவ
ளுடனே பேசுகிறீரென்ருவது, ஒருவனும் கேட்க
வில்லை.
28 அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் குடத்தை வைத்து
விட்டு, ஊருக்குள்ளே போய், ஜனங்களை நோக்கி:—
29 நான் செய்த எல்லாவற்றையும் ஒரு மனுஷன் எனக்
குச் சொன்னுர்; அவரை வந்து பாருங்கள்; அவர்
30 கிறிஸ்துதானே என்ருள். — அப்பொழுது அவர்கள்
ஊரிலிருந்து புறப்பட்டு அவரிடத்தில் வந்தார்கள்.
31 இப்படி நடக்கையில் சீஷர்கள் அவரை நோக்கி:
ரபீ, போஜனம்பண்ணும் என்று வேண்டிக்கொண்டார்
32 கள்.—அதற்கு அவர்: நான் புசிப்பதற்கு நீங்கள் அறி
33 யாத ஒரு போஜனம் எனக்கு உண்டு என்ருர்.—அப்



பொழுது சீஷர்கள் ஒருவரையொருவர் பார்த்து: யாரா
வது அவருக்குப் போஜனம் கொண்டுவந்திருப்பானே
என்ருர்கள்.
34 இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்
பினவருடைய சித்தத்தின்படி செய்து அவருடைய
கிரியையை முடிப்பதே என்னுடைய போஜனமா
35 யிருக்கிறது.—அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும்
நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்
லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்
புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெ
டுத்துப் பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லு
36 கிறேன்.—விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இரு
வரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிற
வன் கூலியை வாங்கி, நித்தியஜீவனுக்காகப் பலனைச்
37 சேர்த்துக்கொள்ளுகிருன். — விதைக்கிறவன் ஒருவன்
அறுக்கிறவன் ஒருவன் என்கிற மெய்யான வழக்கச்
38 சொல் இதனாலே விளங்குகிறது. — நீங்கள் பிரயாசப்
பட்டுப் பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பி
னேன், மற்றவர்கள் பிரயாசப்பட்டார்கள், அவர்களு
டைய பிரயாசத்தின் பலனை நீங்கள் பெற்றீர்கள்
என்ருர்.
39 நான் செய்த எல்லாவற்றையும் எனக்குச் சொன்
னுர் என்று சாட்சிசொன்ன அந்த ஸ்திரீயினுடைய
வார்த்தையினிமித்தம் அந்த ஊரிலுள்ள சமாரியரில்
அநேகர் அவர்மேல் விசுவாசமுள்ளவர்களானுர்கள்.—
40 சமாரியர் அவரிடத்தில் வந்து, தங்களிடத்தில் தங்க
வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்;
41 அவர் இரண்டுநாள் அங்கே தங்கினுர்.—அப்பொழுது
அவருடைய உபதேசத்தினிமித்தம் இன்னும் அநேகம்
42 பேர் விசுவாசித்து,—அந்த ஸ்திரீயை நோக்கி: உன்
சொல்லினிமித்தம் அல்ல, அவருடைய உபதேசத்தை
நாங்களே கேட்டு, அவர் மெய்யாய்க் கிறிஸ்துவாகிய
உலகரட்சகர் என்று அறிந்து விசுவாசிக்கிறேம் என்
ருர்கள்.

### இந்தச் சம்பாஷணையின் பலன்கள். $4^{27-42}$.

சீஷர்கள் இயேசு ஒரு ஸ்திரீயுடன் பேசினதைக் கண்டு அதிசயமடைந்தார்கள். அந்த ஸ்திரீ புதிய நோக்கங்களைப் பெற்று இயேசு

சிறந்த போதகரென்னும் விசுவாசமடைந்தாள். இயேசு தமது வேலையின் பலன் அவ்வளவு சீக்கிரத்தில் கிடைப்பதைச் சீஷருக்குக் காண்பித்தார். கடைசியாகச் சமாரியரநேகர் அவரை விசுவாசித்தார்கள்.

28, 29. அந்த ஸ்திரீ ஊருக்குத் திரும்பி நடந்த சங்கதிகளை யறிவித்தாள். அவள் தன் குடம் வைத்துவிட்டுப் போனதால் திரும்பி வரவேண்டுமென்னும் நோக்கத்துடன் போயிருந்ததாக அறிகிறோம். அவள் இயேசுவை மேசியாவென்று சாதிக்காவிடினும் அன்னவராகலாமென்று சுட்டிக்காட்டினாள்.

32. கடவுளது சித்தப்படி செய்து அவருக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் சரீரப்பசியை யுணராத ஆத்ம திருப்தியை யுண்டாக்கிவருகிறது.

34. **எனது–நான்**—"என்றது அவரது சரீரத்தையல்ல அவரது ஆவியையே குறிக்கிறது." (பரானந்தர்.)

35. "ஆத்ம அறுப்பாவது, ஆத்மா என்னும் காய், புளிப்பாகிய லௌகீக புத்தி இனிமையாகிய தேவபக்தியாகும்படியும், தற்சிநேகம் தேவன்பாகும்படியும் முற்றிப் பழமாதலாம்" (பரானந்தர்.)

35. இதற்கு இரண்டு அர்த்தம் சொல்லலாம்.

(1) அச்சமயத்தில் சமாரியர் அநேகர் அந்த ஸ்திரீயுடன் வருவதைக் கண்டு அவர்களை அறுப்புக்குத் தயாரான நிலங்களை ஒத்தவர்களென்று நினைத்திருக்கலாம்.

(2) சுற்றியிருந்த நிலங்களில் தானியமெல்லாம் நல்ல பயிராகி நல்ல அறுப்புண்டாகும் நம்பிக்கை வரத்தக்கதாக விளைந்திருக்கலாம். அறுப்புக்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று ஒருவன் ஒருவேளை சொல்லியிருப்பான். அறுப்பு ஏப்ரல் மாதத்தின் நடுவில் நடந்திருக்கும். அப்படியானால் இது ஜனவரி மாதத்தின் கடைசியில் நடந்தது.

38. பிற்காலத்தில் சீஷர்கள் அநேகருக்கு ஞானஸ்நானம் கொடுத்தார்கள். யோவான்ஸ்நானகன் செய்த வேலையாலும் தாமும் பிரசங்கம்பண்ணினதாலும் அவர்களுக்கு இந்தப் பயன் கிடைக்குமென்பதாகவும் அந்த ஸ்திரீயோடு தாம் சம்பாஷித்ததால் சமாரியரநேகர் தம்மை விசுவாசிப்பதாகவும் அவர் இவ்வசனத்தினால் குறிப்பிட்டார்.

42. **மெய்யான கிறிஸ்துவாகிய**—என்பதை ஒழிக்க. இது பிற்காலத்தில் நிருபனொருவனால் சேர்க்கப்பட்டதென்றறிக.



**உலக இரட்சகர்**—இந்த வார்த்தை வேதத்தில் இவ்விடத்திலும் 1 யோவா $4^{14}$-லும் மாத்திரம் வருகிறது. இயேசு சர்வஜனத்திற்குரிய வணக்கத்தைப்பற்றிப் பேசினதால் இந்த வார்த்தை வந்தது. சமயோசிதமாய் அவர்கள் இயேசுவைக்குறித்து இவ்வண்ணம் சொன்னது அதிசயம் உண்டாக்கத்தக்கது. ஒருவேளை சுவிசேஷகன் பின்பு இப்படிப்பட்ட பெயர் சமயத்திற்குத் தகுதியுள்ளதென்றெண்ணி அதைச் சேர்த்திருக்கலாம்.

## $4^{43-54}$. கலிலேயா நாட்டார் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுதல்.

43 இரண்டுநாளைக்குப் பின்பு அவர் அவ்விடம்விட்டுப்
44 புறப்பட்டு, கலிலேயாவுக்குப் போனார். — ஒரு தீர்க்க
தரிசிக்குத் தன் சொந்த ஊரிலே கனமில்லையென்று
45 இயேசு தாமே சொல்லியிருந்தார்.—அவர் கலிலேயா
வில் வந்தபோது, எருசலேமில் பண்டிகையிலே அவர்
செய்த எல்லாவற்றையும் பார்த்திருந்த கலிலேயர்
அவரை ஏற்றுக்கொண்டார்கள்; அவர்களும் பண்டி
கைக்குப் போயிருந்தார்கள்.
46 பின்பு, இயேசு தாம் தண்ணீரைத் திராட்சரசமாக்
கின கலிலேயாவிலுள்ள கானாஊருக்கு மறுபடியும்
வந்தார்; அப்பொழுது கப்பர்நகூமிலே ராஜாவின் மனு
ஷரில் ஒருவனுடைய குமாரன் வியாதியாயிருந்தான்.—
47 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்தா
ரென்று அந்த மனுஷன் கேள்விப்பட்டபோது, அவ
ரிடத்திற்குப் போய், தன் மகன் மரண அவஸ்தையா
யிருந்தபடியினாலே, அவனைக் குணமாக்கும்படிக்கு வர
வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.
48 அப்பொழுது இயேசு அவனை நோக்கி: நீங்கள்
அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால்
49 விசுவாசிக்கமாட்டீர்கள் என்றார்.—அதற்கு ராஜாவின்
மனுஷன்: ஆண்டவரே, என் பிள்ளை சாகிறதற்கு
50 முன்னே வரவேண்டும் என்றான்.—இயேசு அவனை
நோக்கி: நீ போகலாம், உன் குமாரன் பிழைத்திருக்
கிறான் என்றார். அந்த மனுஷன், இயேசு சொன்ன
51 வார்த்தையை நம்பிப் போனான்.—அவன் போகையில்,
அவனுடைய ஊழியக்காரர் அவனுக்கு எதிர்கொண்டு

வந்து, உம்முடைய குமாரன் பிழைத்திருக்கிறான்
52 என்று அறிவித்தார்கள்.—அப்பொழுது: எந்த மணி
நேரத்தில் அவனுக்குக் குணம் உண்டாயிற்று என்று
அவர்களிடத்தில் விசாரித்தான். அவர்கள்: நேற்று
ஏழாமணி நேரத்தில் ஜுரம் அவனை விட்டது என்
53 றார்கள்.—உன் குமாரன் பிழைத்திருக்கிறான் என்று
இயேசு தன்னுடனே சொன்ன மணிநேரம் அதுவே
என்று தகப்பன் அறிந்து, அவனும் அவன் வீட்டா
ரனைவரும் விசுவாசித்தார்கள்.
54 இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்குத் திரும்பி
வந்தபின்பு, இது அவர் செய்த இரண்டாம் அற்புதம்.

### (iii) அவர் கலிலேயா நாட்டிலிருந்தது. $4^{43-54}$.

இப்போது இயேசு கலிலேயாவில் செய்த ஊழியத்தைப்பற்றி ஆசிரியன் எழுதுகிறார். அந்தக் காலத்தைக்குறித்து ஒரே ஒரு சம்பவத்தை விவரித்தெழுதினான். இந்த ஒரே சம்பவத்தின் சரித்திரத்தில் அந்த முதல் ஊழியம் முழுவதையும் சுருக்கமாய்க் காண்பித்திருக்கிறான். அந்தச் சம்பவம் ஒரு அடையாளமாக எண்ணப்பட்டுள்ளது. ஜனங்களுக்குள் அதின் பலன் இன்னதென்று நம்முடைய ஆசிரியன் வழக்கப்பிரகாரமாய்த் தெரிவித் தெழுதினான். யூதர்களைப்போலல்லாமல் கலிலேயர் அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டார்கள். பிரபுவின் மகனை சுகமாக்கின இச்சம்பவம் இந் நான்காம் சுவிசேஷத்தில்மாத்திரம் எழுதியுள்ளது, ஆதலின் சிலர் மத் $8^5$ லூக் $7^2$ எழுதியிருக்கிற பட்டாளத்தலைவனது வேலைக்காரன் சுகமானதும் இதுவும் ஒன்றே என்பார். அவைகளை விசாரித்துப் பார்க்கின் சில வித்தியாசங்கள் தோன்றும். அவையாவன:

(i) இது கானாவூரில் நடந்தது. அது கப்பர்நகூமிலிருந்தது.

(ii) இது கலிலேயாவுக்குத் திரும்பிவந்தவுடனே, அது கொஞ்சக் காலஞ் சென்றபிறகு நடந்தது.

(iii) இதிலே அந்தப் பிரபு யூதனே—வியாதிக்காரனும் அவன் மகனே, அதிலே பட்டாளத்தலைவன் புறஜாதியான்—வியாதிக்காரனும் அவனடிமை.

(iv) இதிலே தகப்பன் நம்பிக்கை பலவீனமுள்ளதாகவும், அதிலே தலைவனது நம்பிக்கை பலமுள்ளதாகவும் இயேசு கூறினார்.



(v) இதிலே விண்ணப்பத்திற்கு விபரீதமாகவும், அதிலே விண்ணப்பத்தின்படியேயும் செய்யப்பட்டது.

இந்த வித்தியாசங்களால் இரண்டு சரித்திரங்கள் ஒரு சம்பவத்தையல்ல, இரண்டு சம்பவங்களைக் குறிக்கின்றனவென்று சொல்ல வேண்டும்.

44. தன் சொந்த ஊரிலே—தன் சொந்த நாட்டிலே என்று எழுதுக. இதற்குப் பல அர்த்தங்கள் எழுதியுள்ளன. அவையாவன:

(i) சொந்தநாடு என்பது, யூதேயாவைக் குறிக்கிறது. ஏனெனில், அங்கே அவருக்குக் கனங்கிடைக்காமல்போனதால் அவர் அதை விட்டுவிட்டார்.

(ii) சொந்தநாடு என்பது, நாசரேத்ஊரைக் குறிக்கிறது. கானூன் நாசரேத்தூர் பக்கத்திலிருப்பதாலும் அவர் நாசரேத்துக்கும் போனதாக லூக் $4^{14}$-லும் தோன்றுகிறபடியினாலும் இவ்விதமாய்ச் சொல்ல முடியாது.

(iii) சொந்தநாடு என்பது கலிலேயாநாட்டைக் குறிக்கிறது. ஏனெனில், அவரதை விட்டு யூதேயாவிற்குப் போய் அங்கே முதலாவது கனம்பெற்றுப் பிறகு அந்தக் கனத்தைக்கொண்டு தன் சொந்த நாட்டுக்கு வந்து அங்கேயு மதினாலேயே கனம்பெற்றார். அவர் முதலாவது கலிலேயாவில் பிரசங்கஞ்செய்யத் துவக்கினால் கலிலேயர் அவரை ஏற்றுக்கொள்ளமாட்டாரென்று சொல்வார் சிலர்.

46. இராஜாவின் மனுஷரில் ஒருவன் — ஒரு பிரபு என்றால் போதும். அதாவது ஏரோது இராஜாவின் பரிவாரத்திலுள்ள ஒருவன்.

47. இயேசு ஏதோ மந்திரவித்தை செய்தல் வேண்டுமென்று நினைத்து அவன் தன் வீட்டுக்கு வரவேண்டுமென்று கேட்டான். தூரத்திலிருந்து அப்படிப்பட்ட காரியத்தைச் செய்யலாமென்று நினைக்கவில்லை. அதினால்தான் இயேசு அடையாளங்களையும் அற்புதங்களையும் காணாவிட்டால் விசுவாசிக்கமாட்டீர்களென்றார்.

50. அவன் இயேசுவின் வார்த்தையைக் கேட்டதும் அதை உசிதமாய் நம்பி வேறு அத்தாட்சியின்றி நம்பிக்கையோடு கப்பர்நகூமுக்குப் போனான். கப்பர்நகூம் 30 மைல் தூரமுள்ளது.

## $5^{1-16}$. இயேசுவின் அதிகாரத்திற்குச் சாட்சியான ஓர் அற்புதம்.

1 இவைகளுக்குப் பின்பு யூதருடைய பண்டிகை
ஒன்று வந்தது; அப்பொழுது இயேசு எருசலேமுக்குப்
2 போனார்.—எபிரெய பாஷையிலே பெதஸ்தா என்னப்
பட்ட ஒரு குளம் எருசலேமில் ஆட்டுவாசலினருகே
3 இருக்கிறது, அதற்கு ஐந்து மண்டபங்களுண்டு.—அவை
களிலே குருடர், சப்பாணிகள், சூம்பின உறுப்புடைய
வர்கள் முதலான வியாதிக்காரர் அநேகர் படுத்திருந்து,
தண்ணீர் எப்பொழுது கலங்கும் என்று காத்துக்கொண்
4 டிருப்பார்கள்.—ஏனெனில் சில சமயங்களிலே தேவதூ
தன் ஒருவன் அந்தக் குளத்தில் இறங்கி, தண்ணீரைக்
கலக்குவான்; தண்ணீர் கலக்கினபின்பு யார் முந்தி
அதில் இறங்குவானோ அவன் எப்பேர்ப்பட்ட வியாதி
ஸ்தனாயிருந்தாலும் சொஸ்தமாவான்.
5 முப்பத்தெட்டு வருஷம் வியாதிகொண்டிருந்த ஒரு
6 மனுஷன் அங்கே இருந்தான்.—படுத்திருந்த அவனை இ
யேசு கண்டு, அவன் வெகுகாலமாய் வியாதிஸ்தனென்று
அறிந்து, அவனை நோக்கி: சொஸ்தமாக வேண்டுமென்று
7 விரும்புகிறாயா என்று கேட்டார்.—அதற்கு வியாதிஸ்
தன்: ஆண்டவரே, தண்ணீர் கலக்கப்படும்போது என்
னைக் குளத்தில் கொண்டுபோய் விடுகிறதற்கு ஒருவரு
மில்லை, நான் போகிறதற்குள்ளே வேறொருவன் எனக்கு
8 முந்தி இறங்கிவிடுகிறான் என்றான்.—இயேசு அவனை
நோக்கி: எழுந்திரு, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு
9 நட என்றார்.—உடனே அந்த மனுஷன் சொஸ்தமாகி,
தன் படுக்கையை எடுத்துக்கொண்டு, நடந்துபோனான்.
10 அந்தநாள் ஓய்வுநாளாயிருந்தது.—ஆதலால் யூதர்கள்
குணமாக்கப்பட்டவனை நோக்கி: இது ஓய்வுநாளாயிருக்
கிறதே, படுக்கையை எடுத்துக்கொண்டு போகிறது
11 உனக்கு நியாயமல்ல என்றார்கள்.—அவன் அவர்களுக்
குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர்,
உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்
12 குச் சொன்னார் என்றான்.—அதற்கு அவர்கள்: உன்
படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னு
டனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில்
13 கேட்டார்கள்.—சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்



னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்
டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்.
14 அதற்குப்பின்பு இயேசு அவனை தேவாலயத்திலே
கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய், அதிக கேடான
தொன்றும் உனக்கு வாராதபடி இனிப் பாவஞ்செய்
15 யாதே என்றார்.—அந்த மனுஷன் போய், தன்னைச்
சொஸ்தமாக்கினவர் இயேசு என்று யூதர்களுக்கு அறி
16 வித்தான்.—இயேசு இவைகளை ஓய்வுநாளில் செய்தபடி
யினால், யூதர்கள் அவரைத் துன்பப்படுத்தி, அவரைக்
கொலைசெய்ய வகைதேடினார்கள்.

## 3. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் வளர்ச்சிகள். $5^{1}$-$12^{50}$.

இதுவரைக்கும் ஆசிரியன் இயேசு யூதேயாவிலும் எருசலேமிலும் கலிலேயாவிலும் தம்மை வெளிப்படுத்தத் துவக்கின விஷயங்களைத் தெரிவித்தெழுதினான். சீஷருக்கு விசுவாசமுண்டானதையும் யூதருக்கும் பரிசேயருக்கும் விரோதம் எழும்பலுற்றதையும் நாம் பார்த்தோம். இனி இயேசு தாம் கொடுக்கவேண்டிய வெளிப்படுத்தல் இன்னதென்று விஸ்தரித்தறிவித்தலையும் சீஷர் அதிகமதிகமாய் அவரை விசுவாசித்தலையும் பரிசேயரது பகை அதிகரித்தலையும் பார்க்கவேண்டும். அவர் செய்த அற்புதங்கள் விசுவாசத்திற்கும் பகைக்கும் காரணங்களாதலின் ஆசிரியன் நான்கு விசேஷித்த அடையாளங்களையும் அவைகளுடன் சேர்க்கப்பட்ட பிரசங்கங்களையும் ஆதாரங்களாகவே எழுதி அவைகளைக் காண்பிக்கிறான். அவ்வடையாளங்களாவன:

(1) திமிர்வாதக்காரனை சுகமாக்கல். 5.
(2) பெருங்கூட்டத்தை அதிசயமாய்ப் போஷித்தல். 6.
(3) குருடனைப் பார்க்கச்செய்தல். 9.
(4) லாசருவை உயிர்ப்பித்தல். 11.

இவை எல்லாவற்றிலும் அவர் செய்த வெளிப்படுத்தல் அதிக தெளிவு பெற்றுக்கொண்டே வந்தது. அவர் மூன்று பெரிய பண்டிகைகளில் எருசலேமில் தம்மை விசேஷித்தவிதமாய் வெளிப்படுத்தினதைக் கவனிக்க.

## (i) யூதேயாவில் தங்கள் அதிகாரத்தை வெளிப்படுத்தினது. $5^{1-47}$.

அவர் ஒரு அடையாளத்தைக் காண்பித்துப் பாரம்பரியத்துக்கும் பரிசேயர் கட்டளைகளுக்கும் தமது அதிகாரமே மேலானதென்று எருசலேம்பட்டணத்தில் அறிவித்தார். பரிசேயருக்குப் பகையும் சீஷருக்கும் அநேக ஜனங்களுக்கும் அதிக நம்பிக்கையுமுண்டாகின் றனவென்று நமதாசிரியன் திட்டமாய் அதின் பலன்களைத் தெரிவித்தெழுதியிருக்கிறான். பிறகு யூதர் அவரது அதிகாரத்தைக் குறித்துத் தர்க்கித்தபோது அவர் ஒரு பிரசங்கத்தில் அந்த அதிகாரத்துக்குரிய நியாயங்களைக் காட்டினார்.

1. **பண்டிகை ஒன்று**—எந்தப் பண்டிகையோ என்பதைப்பற்றி அதிக தர்க்கமுண்டு. பூரீம் (மார்ச்சில்), பஸ்கா (ஏப்ரலில்), பெந்தெகோஸ்தே (மேயில்), எக்காளம் (செப்டெம்பரில்), கூடாரம் (அக்டோபரில்), பிரதிஷ்டை (டிசம்பரில்) என்று சிற்சிலரால் சொல்லப்பட்டன. பெரும்பான்மையோர் தற்காலத்தில் பூரீம் பண்டிகை யென்பார். இது மார்ச்சு மாதத்தில் நடந்தது. $4^{30}$-ல் முந்தின சம்பவம் ஜனவரி மாதத்தில் நடந்ததாகவும், $6^{4}$-ல் பஸ்கா பண்டிகை அதற்குச் சமீபமாயிருந்ததாகவும் சொல்லியிருத்தலால் அப்படி நினைக்க இடமுண்டு. பஸ்கா, கூடாரம், பிரதிஷ்டை என்னும் சிரேஷ்ட பண்டிகைகளில் ஒன்றானால் பண்டிகை ஒன்று என்று எழுதாமல் மற்ற இடங்களில் எழுதினபிரகாரமாய்ப் பெயரைத் திட்டமாய்க் குறிப்பிட்டு ஆசிரியன் எழுதியிருப்பானென்று சொல்வதற்கு நியாயமுண்டு.

2. **பெதஸ்தா**—பலஸ்தீனுதேசப் பரிசோதனைச் சங்கத்தார் கொஞ்சகாலத்திற்கு முன்னே இந்தக் குளத்தைக் கண்டுபிடித்தார்கள். முற்காலத்துக் கிறிஸ்தவ வீரர் அதற்கு மண்டபங்களைக் கட்டித் தேவதூதன் ஒருவன் தண்ணீரிலிறங்கி அதைக் கலக்கினதைச் சுவரில் வரைந்தெழுதினார்களென்று தெரிகிறது. குளம் 55 அடி நீளமுள்ளதும் பல மண்டபங்கள் சுற்றிக் கட்டப்பட்டதாகவுமிருக்கிறது.

3. **படுத்திருந்து**—படுத்திருந்தார்களென்று எழுதுக. இதற்குப் பிறகு வரும் வார்த்தைகளும் 4-ம் வசனமும் வேறொரு இடத்திலிருந்து நகலாக்கினவரால் கூட்டப்பட்டனவென்று தோன்றுகிறது. இச்செய்தி ஆதிகாலத்திலிருந்து வந்த யூத பாரம்பரைபோலிருக்கிறது. குளத்தில் இரும்புச்சாரமென்னும் ஔஷதங் கலப்பான ஊற்று இடைக்கிடை சுரந்து வெளிப்பட்டதாகத் தோன்றுகிறது.



4. **சமாரியா**—இந்த ஊர் சமாரியாநாட்டின் தலைமைப்பட்டணம். இதற்குக் "காத்துக்கொள்ளும் மலை" என்று அர்த்தமாம். உம்ரி அரசன் இந்த ஊரைக் கட்டிச் சுற்றிலும் கோட்டையுண்டாக்கி இப் பெயரிட்டான். 1 இரா $16^{23}$. அசீரியர் அதை முழுவதுமா யிடித்தார்கள். ஏரோது மிக்க அலங்காரமாய் அதை மறுபடியுங் கட்டினான். அதிலே பற்பல மதங்கள் கலந்திருந்தன. சமாரியர் தங்களை இஸ்ரவேலர் என்று சொல்லியும் யூதர்களை மிகவும் பகைத்து வந்தார்கள்.

இந்தப் பட்டணத்தைச் சுற்றிலுமிருந்த நாடெல்லாம் வெகு செழிப்பாயும் பலவிதப் பழவர்க்கச் செடிகளுள்ளதுமாயிருந்தது. மலைகளும் பள்ளங்களும் இடைக்கிடையே இருக்கின்றன.

5. **சீகார்**—சிகேம் பக்கத்திலிருக்கிறது. இது ஏபால்மலை யடிவாரத்திலிருந்தது. யோசேப்பின் கல்லறை சமீபத்தில் காணப்பட்டது.

6. இயேசு வலியவந்து சுகங்கொடுத்ததைக் கவனிக்க. பிரபுவின் மகனைக் குறித்த சம்பவத்தைத்தவிர இந்நூலில் எழுதிய மற்ற அற்புதங்கள் இயேசு வலியச் செய்தவைகளென்று கவனிக்க. இயேசு எப்படியாவது அந்த மனிதனுடைய காரியங்களை அறிந்திருப்பார். ஒருவேளை தாமடைந்த அறிவாலேயே இவனுக்கு இந்த அதிசய சுகத்தை யளித்திருப்பார். அவன் இயேசுவின் வார்த்தையை நம்பி எழுந்திருந்து நடந்து படுக்கையை எடுத்துக்கொண்டுபோதல் அவனது இருதய ஆயத்தத்தைக் குறிப்பிக்கிறது.

10. பரிசேயர் அந்த அதிசயமான உபகாரத்தைப் பாராமல் தங்கள் நியாயப்பிரமாணத்திற்குத் தவறி நடந்ததைமாத்திரம் கவனித்தார்கள்.

14. **இனிப் பாவம் செய்யாதே**—இயேசு சரீர சுகத்தைமாத்திரமல்ல ஆத்மபோதனையையும் அவனுக்குக் கொடுக்க விரும்பி அவனைத் தேடிச் சென்றார். அவனது வியாதி எப்படியாவது அவன் செய்த

பாவத்திற்குச் சம்பந்தமுள்ளதுபோலிருக்கிறது. எப்போதும் வியாதியெல்லாம் ஒருவனது பாவத்தினாலே யுண்டாகுமென்று இந்த வார்த்தையைக்கொண்டு சொல்லக்கூடாது.

16. யூதருக்கு இயேசுவின்பேரிலுள்ள பகையினால் அவரைத் துன்பப்படுத்துகிறதைப் பார்க்கிறோம்.

**அவரைக் கொலைசெய்ய வகைதேடினார்கள்**—இந்த வார்த்தை 18-ம் வசனத்திலிருப்பதால் இவ்விடத்தில் பிசகாய்ச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதை யொழித்துத் துன்பப்படுத்தினார்கள் என்பதுடன் முடிக்க.

"மற்ற நாட்களையும் பரிசுத்தமாய் ஆசரிக்காதவர்களுக்கே கடவுளது கட்டளை கொடுக்கப்பட்டதால் இயேசு ஓய்வுநாளுக்குப் பரிசுத்தக் குலைச்சல் உண்டாக்கவில்லை." (பாரநந்தர்.)

### $5^{17-20}$. இயேசு கடவுளோடு விசேஷித்த சம்பந்தமுள்ளவர்.

17 இயேசு அவர்களை நோக்கி: என் பிதா இதுவரைக்
கும் கிரியைசெய்து வருகிறார், நானும் கிரியைசெய்து
18 வருகிறேன் என்றார்.—அவர் ஓய்வுநாள் கட்டளையை
மீறினதுமல்லாமல், தேவனைத் தம்முடைய சொந்தப்
பிதா என்றுஞ் சொல்லித் தம்மை தேவனுக்குச் சம
மாக்கினபடியினாலே, யூதர்கள் அவரைக் கொலைசெய்
யும்படி அதிகமாய் வகைதேடினார்கள்.
19 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யா
கவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகி
றேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெ
தவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச்
செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ,
அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்.—
20 பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம்
செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்;
நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப்பார்க்கிலும்
பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார்.

### அநந்த இயேசுவின் எதிர் நியாயங்கள். $5^{17-47}$.

இயேசு பாரம்பரியத்தின்படி நடக்காததினால் பரிசேயர் அவரைத் துன்பப்படுத்திப் பல குற்றங்கள் அவர்மேல் கூறினார்கள். இந்தப் பிர



சங்கத்தில் அவர் தமது அதிகாரத்திற்கு நியாயங்களை எடுத்துக் கூறுகிறார். ஓய்வுநாளுக்கடுத்த பாரம்பரிய கட்டளைகளுக்கு விரோதமாய் அவர் அடிக்கடி நடந்தது அவர்கள் பகையை மிகவும் மூட்டினது. திரியனுபந்த சுவிசேஷங்களிலும் அப்படியே தெரியவருகிறது.

17–20. கடவுளுடன் அவருக்கு விசேஷித்த சம்பந்தமாகிய தந்தை மகனென்னும் சம்பந்தமுண்டு. கடவுள் எப்போதும் கிரியைசெய்து பூலோகத்தைப் பாதுகாக்கிறதுபோலவே, தாம் எப்போதும் அந்தப் பிரமாணத்தின்படி நன்மைசெய்து வருகிறார். மகன் தந்தையின் சித்தப்படியே நடக்கிறான். தந்தை மகனை விசேஷித்தவிதமாய் நேசித்தார். எல்லாவற்றையு மவருக்குத் தெரிவித்திருக்கிறார். இந்த ஐக்கிய சம்பந்தம் அன்பினாலேயே யமைக்கப்பட்டிருக்கிறது.

18. யூதரது பகை வளர்ந்து வேறொரு அகோரரூபம் பெற்றதைப் பார்க்கிறோம். எப்படியெனில் அவர்மேல் குற்றஞ்சாட்டினதுடன் அவரைக் கொலைசெய்யவும் பிரயாசைப்பட்டார்கள். அவர் கடவுளுடன் தமது விசேஷித்த சம்பந்தத்தைக் கூறினதினாலேயே பகை வளர்ந்தேறினது.

20. **நீங்கள் ஆச்சரியப்படத்தக்கதாக**—ஆச்சரியம் விசுவாசத்திற்கு வழியாகலாம். நீங்களென்பது இப்போது விசுவாசமின்றி கேட்ட பரிசேயரைக் குறிக்கும்.

### $5^{21-30}$. இயேசுவின் மேலான அதிகாரங்கள்.

21 பிதாவானவர் மரித்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறது
போல, குமாரனும் தமக்குச் சித்தமானவர்களை உயிர்ப்
22 பிக்கிறார். — அன்றியும் பிதாவைக் கனம்பண்ணு
கிறதுபோல எல்லாரும் குமாரனையும் கனம்பண்ணும்
படிக்கு, பிதாவானவர் தாமே ஒருவருக்கும் நியாயத்
தீர்ப்புச் செய்யாமல், நியாயத்தீர்ப்புச் செய்யும் அதிகாரம்
முழுவதையும் குமாரனுக்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்.—
23 குமாரனைக் கனம்பண்ணாதவன் அவரை அனுப்பின
பிதாவையும் கனம்பண்ணாதவனாயிருக்கிறான்.
24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை
விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன்
ஆக்கினைத்தீர்ப்புக் குட்படாமல், மரணத்தைவிட்டு
நீங்கி, ஜீவனுக் குட்பட்டிருக்கிறான் என்று மெய்யா

கவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.—
25 மரித்தோர் தேவகுமாரனுடைய சத்தத்தைக் கேட்கும்
காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது;
அதைக் கேட்கிறவர்கள் பிழைப்பார்கள் என்று மெய்
யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.—
26 ஏனெனில், பிதாவானவர் தம்மில்தாமே ஜீவனுடைய
வராயிருக்கிறதுபோல, குமாரனும் தம்மில்தாமே ஜீவ
னுடையவராயிருக்கும்படி அருள் செய்திருக்கிறார்.—
27 அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால் நியாயத்தீர்ப்
புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக்
28 கொடுத்திருக்கிறார். — இதைக்குறித்து நீங்கள் ஆச்சரி
யப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளி
லுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்
29 காலம் வரும்; — அப்பொழுது, நன்மை செய்தவர்கள்
ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்,
தீமை செய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்
திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.
30 நான் என் சுயமாய் ஒன்றுஞ் செய்கிறதில்லை; நான்
கேட்கிறபடியே நியாயந்தீர்க்கிறேன்; எனக்குச் சித்த
மானதை நான் தேடாமல், என்னை அனுப்பின பிதா
வுக்குச் சித்தமானதையே நான் தேடுகிறபடியால் என்
தீர்ப்பு நீதியாயிருக்கிறது.—

### இயேசுவுக்கு இன்ன அதிகாரமுண்டென்பது. $5^{21-30}$.

மகனுக்குள்ள அதிகாரம் தந்தையின் அதிகாரத்திற்கு ஒத்தது. தந்தை தமக்குச் சமானமான அதிகாரத்தை மகனுக்குக் கொடுத்தார். மகனுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களாவன:—

(i) உயிருண்டாக்கல். $5^{21}$.

(ii) நியாயந்தீர்த்தல். $5^{22,27}$.

(iii) கனம்பெறல். $5^{23}$.

(iv) உயிரோடெழுப்புதல். $5^{25}$.

இந்தக் கனம் தந்தைக்குரிய கனத்துக்குச் சமானம்.

இந்த அதிகாரங்களுக்குக் காரணம் மகனது உயிர் சுயம்புவாய் இருப்பதேயென்று 26-ம் வசனத்தில் சொல்லியிருக்கிறது.

24. தந்தை மகனுக்குக் கொடுத்த நித்தியஜீவனை மகன் எந்த நிபந்தனையின்பேரில் மற்றவர்களுக்குக் கொடுக்கிறாரென்கிற கேள்



விக்கு இவ்வசனத்தில் உத்தரவு அடங்கியிருக்கிறது. விசுவாசமுள்ளவருக்கு கிடைக்குமேயொழிய மற்றோருக்குக் கிடைப்பதரிது.

**விசுவாசிம்**—"நம்பிக்கையானது அன்பினாலேயே உண்டாகிறது. நம்பிக்கை சற்குருவாலே வளருகிறது. தேவபக்தி யென்னும் விசுவாசமின்றி ஆத்மீக விருத்தியமையாது." (பாரநந்தர்.)

**கேட்டல்**—"என்பதற்குக் காதினால் கேட்டதுடன் ஞானவெளிச்சம் உண்டாகத்தக்கதாக நிதானித்தையும் மனதில் ஆலோசித்துக் கொள்ளலும் என்றர்த்தமாம்." (பாரநந்தர்.)

25. **தேவகுமாரனுடைய சத்தத்தை**.—அவர் கடவுளுடைய மகனாதலில் உயிரோடெழுப்புதலாகிய வல்லமை அவருக்கு இருக்கிறது.

**மனுஷகுமாரனாயிருக்கிறபடியால்**—மகன் உத்தம மகனும் மனிதருடைய சிறந்த பிரதிநிதியுமாதலினால் மனிதரை நியாயந்தீர்க்கு மதிகாரம் அவருக்குள்ளது.

28, 29. மகனுக்குள்ள அதிகாரத்தின் பலன்கள் இங்கே காணப்படுகின்றன; யாவருக்கும் உயிர்த்தெழுதலுண்டாகும். அவர்கள் செய்த கிரியைகளின்படியே அவர்கள் தங்கள் தங்கள் பயனைப் பெறுவார்கள் என்னும் நியாயத்தீர்ப்பின் பிரமாணம் போதிக்கப்பட்டது. இவ்விடத்தில் விசுவாசத்தைப்பற்றி ஒன்றுஞ் சொல்லப்படவில்லை யென்று கவனிக்க. ஏனென்றால், இறந்தவர் அநேகர்க்கு இயேசுவை விசுவாசிக்கும் சமயம் கிடைக்காமல்போனதால் இவ்விதமாய்ச் சொன்னார்.

30. இயேசு தாம் செய்வனவெல்லாம் நீதியுள்ளனவென்று சாதிக்கிறார். ஏனென்றால், அவர் தந்தையுடன் ஐக்கிய சம்பந்தமுடையவரும் எப்போதும் தந்தையின் சித்தம் நிறைவேற்ற விரும்புவோருமானவர், அவர் நியாயந்தீர்த்தல் கடவுளின் சித்தத்தாலே செய்யப்பட்டது. இவ்விடத்தில் இயேசு நான் இன்னான் என்று தம்மைத் திட்டமாய்ச் சுட்டிக்காட்டுகிறார்.

### $5^{31-39}$. இயேசுவின் அதிகாரத்திற்குச் சாட்சிகள்.

31 என்னைக்குறித்து நானே சாட்சி கொடுத்தால் என்
32 சாட்சி மெய்யாயிராது. — என்னைக்குறித்துச் சாட்சி
கொடுக்கிறவர் வேறொருவர் இருக்கிறார், அவர் என்

னைக்குறித்துக் கொடுக்கிற சாட்சி மெய்யான சாட்சி
யென்று அறிந்திருக்கிறேன்.
33 நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்
கள், அவன் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான்.—
34 நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சி
யல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவைகளைச்
35 சொல்லுகிறேன்.—அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்
காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்
திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.
36 யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மை
யான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில்,
நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக்
கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே
பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச்
37 சாட்சி கொடுக்கிறது.—என்னை அனுப்பின பிதா தாமே
என்னைக்குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்; நீங்கள்
ஒருக்காலும் அவர் சத்தத்தைக் கேட்டதுமில்லை, அவர்
38 ரூபத்தைக் கண்டதுமில்லை.—அவர் அனுப்பினவரை
நீங்கள் விசுவாசியாதபடியால் அவருடைய வசனம் உங்
களில் தரித்திருக்கிறதுமில்லை.
39 வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைக
ளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணு
கிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவை
களும் அவைகளே.

**இயேசுவின் அதிகாரத்திற்குச் சாட்சிகளாவன. $5^{31-39}$.**

(i) தாமே கொடுத்த சாட்சி. $5^{31}$.
(ii) யோவான் கொடுத்த சாட்சி. $5^{33-35}$.
(iii) அவர் செய்த கிரியைகளின் சாட்சி. $5^{36}$.
(iv) பரமதந்தை கொடுக்கிற சாட்சி. $5^{37-38}$.
(v) வேதாகமத்தின் சாட்சி. $5^{39}$.

**32. வேறொருவர்**—இதினால் இயேசு தந்தையைக் குறிப்பிடுகிறார். இந்தப் பரம சாட்சியை அவரே தமது மனதினால் அறிந்தும் முதலாவது யூதர் அறியத்தக்க சில சாட்சிகளைக் கூறினார். $5^{34}$-ம் வசனத்தில் இந்நோக்கம் வெளியாகிறது. அவர்கள் யோவானின் சாட்சியை அங்கீகரிக்கவில்லை என்று அறிகிறோம்.



35. யோவான்ஸ்நானகன் கொஞ்சக்காலமாய்ப் பிரகாசித்த விளக்கைப்போலிருந்தான். யூதர்கள் அந்த விளக்கை விட்டிற்பூச்சிகளைப் போல் சுற்றினார்களேயல்லாமல் அதைக்கொண்டு நீதியின் பாதைகளில் நடக்கவேயில்லை. அந்த விளக்குக்கு இயேசுவே ஒளியானார் என்பதை அனுமானத்தால் வருவிக்கவேண்டும்.

**36. கிரியைகள்**—இந்த வார்த்தை அவர் செய்த அற்புதங்களை மாத்திரமல்ல, தமது முழு ஊழியத்தையும் குறிப்பித்துக் காட்டுகிறது. இந்த வார்த்தை இந்நான்காம் சுவிசேஷத்தில் எப்போதும் அந்த பூரண அர்த்தத்தோடு வருகிறது.

**கற்பித்ததும்**—அல்லது கொடுத்ததும். இந்த வார்த்தை யோவானுக்குப் பிரியமான வார்த்தையாம். $3^{35}$ $5^{22, 26, 27}$ $6^{39, 65}$ $12^{49}$ $13^{3}$ $14^{31}$ $17^{4, 6, 9, 12, 24}$ $18^{9}$. பார்க்க.

37, 38. யூதர்கள் கடவுள் இத்தன்மையுடையவரென்று பூரணமாய் அறியவில்லை. அவரது சத்தமாகிய முந்தின கிரியைகளாலாவது அவரது வாக்காகிய இயேசுவாலாவது அவரைக் கற்றுக்கொள்ளவுமில்லை யென்பது.

**39. ஆராய்ந்து பாருங்கள்**—நீங்கள் ஆராய்ந்து பார்க்கிறீர்கள்; ஏனென்றால் என்று எழுதப்படவேண்டும். அதாவது நீங்கள் எழுத்தெழுத்தாக வேதாகமத்தைப் படித்தால் நித்தியஜீவன் கிடைக்குமென்று நினைக்கிறீர்களேயொழிய வேதாகமத்தின் பிரயோஜனமின்னதென்று நீங்களறிகிறதில்லை. வேதாகமங்களெல்லாம் என்னைக்குறித்துச் சாட்சியிட்டு நித்தியஜீவனுக்குக் காரணமாகிய என்னிடம் மனிதர்களை நடத்தும்படியான நோக்கத்தோடு எழுதியுள்ளனவென்பது இந்த வசனத்தின் அர்த்தம்.

**$5^{40-47}$. அவரது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாமைக்குக் காரணங்கள்.**

40 அப்படியிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்
படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை.
41 நான் மனுஷரால் மகிமையை ஏற்றுக்கொள்ளுகிற
42 தில்லை.—உங்களில் தேவ அன்பு இல்லையென்று உங்
43 களை அறிந்திருக்கிறேன்.—நான் என் பிதாவின் நாமத்
தினாலே வந்திருந்தும் நீங்கள் என்னை ஏற்றுக்கொள்ள

யில்லை, வேறொருவன் தன் சுயநாமத்தினாலே வந்தால்
44 அவனை ஏற்றுக்கொள்வீர்கள்.—தேவனாலேமாத்திரம் வரு
கிற மகிமையைத் தேடாமல், ஒருவராலொருவர் மகி
மையை ஏற்றுக்கொள்ளுகிற நீங்கள் எப்படி விசுவாசிப்
பீர்கள்?
45 பிதாவினிடத்தில் நான் உங்கள்மேல் குற்றஞ்சாட்டு
வேன் என்று நினையாதிருங்கள்; நீங்கள் நம்புகிற
46 மோசேயே உங்கள்மேல் குற்றஞ்சாட்டுவான்.—நீங்கள்
மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவா
சிப்பீர்கள்; அவன் என்னைக்குறித்து எழுதியிருக்கி
47 றானே.—அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசு
வாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்
படி விசுவாசிப்பீர்கள் என்றார்.

### யூதர்கள் இயேசுவின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளாமலிருந்ததற்குக் காரணங்களாவன. $5^{40-44}$.

(i) அவர்கள் கடவுளை அறியவில்லை. $5^{37}$.

(ii) அவர்கள் வேதாகமத்தின் உட்பொருளை அறியவில்லை. $5^{40}$

(iii) அவர்கள் கடவுளை நேசிக்கும் அன்பில்லாதவர்கள். $5^{42}$.

(iv) அவர்கள் கடவுளது நோக்கத்தை அறியவில்லை. $5^{43}$.

(v) அவர்கள் தற்புகழ்ச்சியை விரும்பினார்கள். $5^{44}$.

42. **அறிந்திருக்கிறேன்**—இயேசு அவர்களது உள்ளான எண்ணங்களை அறிந்துகொண்டாரென்பது.

43. அதிக டம்பமும் வேடிக்கையுமுள்ளவர்களாய் வந்த பொய்யான மேசியாக்கள் அநேகரை யூதர்கள் அறிவீனமுள்ளவர்களாய் ஆத்திரத்தோடு ஏற்றுக்கொண்டார்கள். யூத சரித்திரத்தில் 64 பெயர்கள் அப்படிப்பட்டவர்களென்று எழுதியிருக்கிறது. மேசியாவுக்குரிய குறிப்புகள் இன்னின்னவையென்று யூதர்களறியாமல் இவ்வித தப்பிதத்திற் குட்பட்டார்கள்.

44. மனிதர்களது புகழை அவர்கள் தங்கள் பிரமாணமாக வைத்துக்கொண்டு தங்களுக்குப் புகழ் கிடைக்கவேண்டுமென்று அவர்கள் விரும்பினதால் கடவுளது மகிமையைத் தேடி வந்தவரையே ஏற்றுக்கொள்ள மனமற்றவர்களானார்கள்.



**தேவனாலேமாத்திரம்**—ஒரே தேவனாலே யென்றெழுதுக. இயேசுவின் அதிகாரத்தைத் தள்ளுதலினால் வந்த முடிவைப் பார்க்க. $5^{45-47}$. அவ்வண்ணமாய்ச் செய்தவர் நியாயப்பிரமாணத்தின்படி செய்வதாக நினைத்தும் நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைக்குட்பட்டவராவார். ஏனென்றால், அவர்கள் அந்த நியாயப்பிரமாணத்தின் மெய்ப்பொருளுக்கு விரோதமாய் நடந்தார்கள்.

46. மோசே கொடுத்த நியாயப்பிரமாணமெல்லாம் என்னிலே நிறைவேறுதல்பெற்றது. நான் சொல்லிய போதனை அவர் முற்காலத்தில் அடையாளமாகக் காட்டின போதனையாம் என்பது.

47. அவர்கள் அதிககாலமாய்ப் படித்துக்கொண்டுவந்த தங்கள் வேதாகமத்தில் சொல்லிய கடவுளது வார்த்தைகளை உணராமற்போயிருந்தால் சிறிதுகாலமாத்திரங் கேட்கப்பெற்ற இயேசுவின் வார்த்தைகளை எப்படி உணரலாம் என்பது. பரிசேயர் எழுத்துக்குரியவைகளைத் திட்டமாயாராய்ந்து எழுத்துக்கள்மேலே அதிக கணக்கம் வைத்ததால் சின்மயப்பொருட்களைப் பார்க்கும் அறிவு மங்கிப்போனது; ஆகையால் இயேசு சின்மயப்பொருட்களை வெளிப்படுத்தியபோது அவர்கள் அவரைத் தள்ளிவிட்டார்கள்.

### $6^{1-15}$. இயேசுவின் சிறந்த வல்லமை.

1 இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியாக்கடல்
என்னப்பட்ட கலிலேயாக்கடலின் அக்கரைக்குப் போ
2 னார்.—அவர் வியாதிக்காரரிடத்தில் செய்த அற்புதங்
களைத் திரளான ஜனங்கள் கண்டபடியால் அவருக்குப்
3 பின்சென்றார்கள். — இயேசு மலையின்மேல் ஏறி,
அங்கே தம்முடைய சீஷருடனேகூட உட்கார்ந்தார்.—
4 அப்பொழுது யூதருடைய பண்டிகையாகிய பஸ்கா
சமீபமாயிருந்தது.
5 இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து, திரளான
ஜனங்கள் தம்மிடத்தில் வருகிறதைக் கண்டு, பிலிப்பு
வை நோக்கி: இவர்கள் சாப்பிடத்தக்கதாக அப்பங்களை
6 எங்கே கொள்ளலாம் என்று கேட்டார்.—தாம் செய்யப்
போகிறதை அறிந்திருந்தும், அவனைச் சோதிக்கும்படி
7 இப்படிக் கேட்டார்.—பிலிப்பு அவருக்குப் பிரதியுத்தர
மாக: இவர்களில் ஒவ்வொருவன் கொஞ்சங் கொஞ்

சம் எடுத்துக்கொண்டாலும், இருநூறு பணத்து அப்
8 பங்களும் இவர்களுக்குப் போதாதே என்றான்.—அப்
பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும், சீமோன்
பேதுருவின் சகோதரனுமாகிய அந்திரேயா அவரை
9 நோக்கி:—இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன்
கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு
மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்
களுக்கு எம்மாத்திரம் என்றான்.
10 இயேசு: ஜனங்களை உட்காரவையுங்கள் என்றார்.
அந்த இடம் மிகுந்த புல்லுள்ளதாயிருந்தது. பந்தியி
ருந்த புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம்பேராயிருந்
11 தார்கள்.—இயேசு அந்த அப்பங்களை எடுத்து, ஸ்தோத்
திரம்பண்ணி, சீஷர்களிடத்தில் கொடுத்தார்; சீஷர்
கள் பந்தியிருந்தவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படி
யே மீன்களையும் அவர் எடுத்து அவர்களுக்கு வேண்டி
யமட்டும் கொடுத்தார்.
12 அவர்கள் திருப்தியடைந்தபின்பு, அவர் தம்முடைய
சீஷர்களை நோக்கி: ஒன்றும் சேதமாய்ப் போகாதப
டிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்துவையுங்கள்
13 என்றார்.—அந்தப்படியே அவர்கள் சேர்த்து, வாற்
கோதுமை அப்பங்கள் ஐந்தில் அவர்கள் சாப்பிட்டு
மீதியான துணிக்கைகளினாலே பன்னிரண்டு கூடை
களை நிரப்பினார்கள்.
14 இயேசு செய்த அற்புதத்தை அந்த மனுஷர் கண்டு:
மெய்யாகவே இவர் உலகத்தில் வருகிறவரான தீர்க்க
15 தரிசி என்றார்கள்.—ஆதலால் அவர்கள் வந்து, தம்மை
ராஜாவாக்கும்படிப் பிடித்துக்கொண்டுபோக மனதா
யிருக்கிறார்களென்று இயேசு அறிந்து, மறுபடியும்
விலகி, தனியே மலையின்மேல் ஏறினார்.

## (ii) இயேசு கலிலேயாவில் தமது வல்லமையை வெளிப்படுத்தினது. $6^{1-71}$.

இந்த அதிகாரத்தில் இயேசுவினது ஊழியத்தின் வரலாற்றில் விசேஷித்த சம்பவமொன்று எழுதியிருக்கிறது. பரிசேயரும் யூதரின் பெரியோரும் அவரை விரோதித்தும் இதுவரைக்கும் கலிலேயரும் பொதுஜனங்களும் அவரை மிகவும் விரும்பி அவர்களில் அநேகர் அவரைச் சேர்ந்ததைப் பார்த்தோம். ஜனங்கள் அவர்மேல் வைத்த



நம்பிக்கையும் அன்பும் உண்மையானதாயிராமல் லௌகீக விஷயங்களுடன் சம்பந்தப்பட்டிருந்ததாக இச்சம்பவத்தில் காணப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் இரண்டு காரியங்கள் விசேஷமாய் வெளிப்படுகின்றன. அவையாவன:—

(1) எல்லாப் பொருட்கள்மேலுமுள்ள அவரது சிறந்த வல்லமை. இது அவர் செய்த அற்புதத்தாலும் கடலின்மேல் நடந்ததாலும் அறிவிக்கப்பட்டது.

(2) அவரது மனவுறுதி. ஜனங்களுக்குத் தமதுமேலுள்ள பக்தியில் உண்மையில்லையென்று அவர் கண்டபோது தமது சின்மயப் போதனையை இன்னுந் தெளிவாய்ப் போதித்தார். லௌகீக எண்ணங்களுக்கு இணங்காமல் சிநேகிதர் பின்வாங்கிவிடவே அவைகளைக் கண்டித்தார். நம்மாசிரியன் இதை ஒரு விசேஷித்த சம்பவமாக வெடுத்து கலிலேய ஊழியத்தில் இதொன்றையே எழுதியிருக்கிறான். இந்தச் சம்பவம் நான்கு சுவிசேஷங்களிலும் எழுதியிருக்கிறது. மத் $14^{13-21}$ மாற் $6^{30-44}$ லூக் $7^{12-17}$. பார்க்க. யோவான்ஸ்நானகன் மரணமடைந்தபிறகு இது நடந்தது.

### (a) ஜனங்களை அதிசயமாய்ப் போஷித்தல். $6^{1-15}$.

1. **இவைகளுக்குப் பின்பு**—அதாவது சீஷர்கள் போய்ச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத் திரும்பிவந்தபிறகு இயேசு கலிலேயாவில் அநேக கிரியைகளைச் செய்ததாகத் திரியனுபந்த சுவிசேஷங்களினால் தெரியவருகிறது.

**திபேரியாக்கடல்** — இந்தப் பெயர் இந்நூலில்மாத்திரம் வருகிறது. புறஜாதியார் நன்கறிய அப்படி எழுதப்பட்டிருக்கும். திபேரியா நகரம் ஏரோது அந்திப்பாவால் திபேரியராயருக்கு கண்ய ஞாபகமாகக் கட்டப்பட்டது. அதற்குப்பிறகு இந்தப் புறப் பெயர் கலிலேயாக்கடலுக்குக் கொடுக்கப்பட்டது. இந்தப் பட்டணம் கடலின் மேற்கரையிலிருந்தது. ஏரோது அங்கே ஒரு சிறந்த மாளிகை கட்டினான். ஊர் எல்லாம் வெகு அழகாயிருந்தது. அதைக் கட்ட ஒரு பழைய கல்லறையைச் சேதப்படுத்தினதால் அதின் குடிகள் யூதர்களல்லாமல் பெரும்பான்மையாய்ப் புறஜாதிகளானார்கள்.

3. திரியனுபந்த சுவிசேஷங்களைப் படித்துப் பார்த்தால் இயேசு தமது சீஷருடன் தனித்துப் பேச விரும்பிப்போனதாகவும் (மாற் $6^{10}$

லூக் $9^{10}$) ஏரோது இராஜா விரோதத்திற்கு விலகிப்போனதாகவும் (லூக் $9^{9}$) தெரியவருகிறது.

4. **பஸ்கா** — பின்வரும் பிரசங்கம் இந்தப் பண்டிகைக்கேற்ற பொருளையுடையது.

5. ஜனங்களெல்லாரும் இயேசு படவில் ஏறிப்போனதைக் கண்டு அவர் கடந்துபோன சிறு குடாக்கடலின் கரைமார்க்கமாய் ஓடிப் போய் மறுபக்கத்தி லவரைச் சந்தித்தார்கள். இரியதுபந்த சுவி சேஷங்களில் இயேசு ஜனங்களுக்குப் போதித்துக்கொண்டும் அவர் களைச் சொஸ்தப்படுத்திக்கொண்டுமிருக்கையில் கூட்டம் அதிகரித்த தென்றும் பகல் கழிந்துபோயிற்றென்றும் தோன்றுகிறது. சாயந்தர நேரத்தில் கூட்டம் மிக்க பெரிதாயிருக்கக் கண்டு இயேசு மனதுருகிச் சீஷர்களுடன் பேசினார். இந்தச் சுவிசேஷத்தில் அந்தகாரின் வேலை யைப்பற்றி எழுதப்பட்டிருக்கவில்லை.

6. **சோதிக்கும்படி** — அதாவது அவனது குணத்தைப் பரீக்ஷிக் கும்படி.

7. **இருநூறு பணத்து** — ஒரு பணம் சுமார் 9 அணா வாகையால் இது 105 ரூபாய் ஆகும்.

9. **வாற்கோதுமை** — இது ஏழைகள் சாப்பிட்ட போஜனம். இந்தச் சுவிசேஷம்மாத்திரம் இதைத் தெரிவிக்கிறது.

11. **ஸ்தோத்திரம்பண்ணி** — இந்த வார்த்தை மறுபடியும் $11^{41}$-ல் வருகிறது. வீட்டுத் தலைவன் எப்போதும் சாப்பிடும்முன் ஸ்தோத்திரம் பண்ணுவான். மற்றச் சுவிசேஷங்களில் ஆசீர்வதித்து என்று சொல்லி யிருக்கிறது. இந்த இரண்டு நோக்கங்களும் அந்தக் கிரியையிலிருக்கும்.

சீஷர்களிடத்தில் — சீஷர்களென்னும் வார்த்தைகள் மத் $14^{19}$ லிருந்து எடுத்து யாரோ ஒருவனால் பிறகு சேர்க்கப்பட்டதால் இவற்றை ஒழிக்க.

14. **தீர்க்கதரிசி** — மோசே முன் குறித்தவன். உபா $18^{15-19}$. மோசே வனாந்தரத்தில் இஸ்ரவேலரை அதிசயமாய்ப் போஷித்தது போல் இயேசு அப்போது போஷித்ததைக் கண்டு அவர்கள் அவ் வண்ணம் நினைத்தார்கள்.

15. இந்த அதிசயக் கிரியையைக் கண்டு, தீர்க்கதரிசிகள் முன் சொல்லிய பூரணத் திருப்தி கிடைக்குங்காலம் ஆரம்பித்தது என்றும்,



இராஜாவாக அவரை ஏற்றுக்கொள்ள விரும்பி அவர்மூலமாய் ரோம இராஜ்யத்தை யழித்துப்போடவேண்டுமென்றும் எண்ணினார்கள். மேலுமிவர்மூலமாய் யோவான்ஸ்நானகனின் மரணத்திற்காக ஏரோது இராஜாவைத் தண்டிக்கவேண்டுமென்று ஒருவேளை அநேகர் நினைத் திருக்கலாம். மத் $14^{22}$ மாற் $6^{45}$–ல் சொல்லியிருக்கிறபடி இயேசு தம் சீஷர்களைப் படவில் ஏறக் கட்டாயப்படுத்தினதற்கு இதுவே கார ணமாம். யோவான் வழக்கப்பிரகாரமாய் இயேசு செய்த கிரியைக ளால் ஜனங்களுக்குண்டான பலனைக் காண்பிக்கிறான்.

**தனியே மலையின்மேல்** [ஏ]றினார் — மத்தேயு, மாற்கு சொல்லிய படி ஜெபம்பண்ண அவர் வி[ல]கிப்போனார். மத் $14^{23}$ மாற் $6^{46}$. பார்க்க.

### $6^{16-21}$. இயேசுவே இயற்கைச் சக்திகளின் அதிபதி.

16 சாயங்காலமானபோது அவருடைய சீஷர்கள் கடற்
17 கரைக்குப் போய்,—படவில் ஏறி, கடலின் அக்கரையி
லுள்ள கப்பர்நகூமுக்கு நேராய்ப் போனார்கள்; அப்
பொழுது இருட்டாயிருந்தது, இயேசுவும் அவர்களி
18 டத்தில் வராதிருந்தார். — பெருங்காற்று அடித்தபடி
19 யினாலே கடல் கொந்தளித்தது.—அவர்கள் ஏறக்குறைய
மூன்று நாலு மைல் தூரம் தண்டுவலித்துப் போன
பொழுது, இயேசு கடலின்மேல் நடந்து, படவுக்குச்
20 சமீபமாய் வருகிறதைக் கண்டு பயந்தார்கள்,—அவர்களை
அவர் நோக்கி: நான்தான், பயப்படாதிருங்கள் என்
21 றார்.—அப்பொழுது அவரைப் படவில் ஏற்றிக்கொள்ள
மனதாயிருந்தார்கள்; உடனே படவு அவர்கள் போகிற
கரையைப் பிடித்தது.

(*b*) **கடல்மேல் நடந்தல்.** $6^{16-21}$.

16. **சாயங்காலம்** — அதாவது பொழுதுபோனபிறகு இருட் டாகுமுன்னே. இதற்கு இரண்டாம் மாலை யென்னும் பெயருண்டு.

19. **மூன்று நாலு மைல்** — கடல் இவ்விடத்தில் சுமார் 6 மைல் அகலமுடையது. இந்த இரண்டு அடையாளங்கள் பின்வரும் பிரசங் கத்திற்கு உதாரணங்களாகக் காண்பிக்கப்படுகின்றன. இயேசுவின் சூக்ஷ்மதத்துவம் சாமான்ய ஆத்மதத்துவமென்று நினைக்கலாகாது.

(*c*) **ஜனங்கள் மறுபடியும் இயேசுவைத் தேடினது.** $6^{22-25}$.

**(d) இயேசு செய்த பிரசங்கம். $6^{26-71}$.**

இந்தப் பிரசங்கத்தின் விசேஷித்த பொருள் இயேசுவே உயிருள்ள மெய்ப்பொருளாயிருக்கிறாரென்பதே.

இந்தப் பிரசங்கத்திற்கு மூன்று பாகங்களிருக்கின்றன.

(1) கடற்கரையில் சொல்லப்பட்டது. $6^{26-40}$.

(2) ஆலயத்திற்குப் போன வழியில் சொல்லப்பட்டது. $6^{41-51}$.

(3) ஆலயத்தில் சொல்லப்பட்டது. $6^{52-65}$.

இந்த நூலில் எழுதிய பிரசங்கங்களின் குறிப்பொன்றைக் கவனிக்க. யாதெனில் அப்பிரசங்கங்கள் சம்பாஷணையிலிருந்து பிறந்து; சம்பாஷணைமாதிரியாகவே யிருக்கின்றன. கேள்வி கேட்பதும் உத்தரவு கொடுப்பதுமாய்ப் பிரசங்கங்கள் நடந்தேறின.

பிரசங்கத்தைப் பின்வருமாறு பகுத்துக்கொள்ளலாம்.

(i) சின்மயப்பொருட்களை நாடுவது உத்தமம். $6^{26-34}$.

(ii) இயேசுவே அந்தச் சின்மய மெய்ப்பொருளாகிய ஜீவாகாரம். $6^{35-40}$.

(iii) கடவுளது வார்த்தையைக் கேட்பவன் இதை யறிவான். $6^{41-46}$.

(iv) இதை உண்மையாய் விசுவாசித்தல் பூரணஜீவனை அடைவதற்கேதுவாகும். $6^{47-51}$.

(v) இயேசுவின் ஆவியைப் பெறுதல் பூரணஜீவனை யடையும் வழியாம். $6^{52-59}$.

இந்தப் பிரசங்கத்தில் இயேசு தமது சின்மய மேன்மையையும் தாம் செய்த வல்ல கிரியைகளுக்குக் காரணமாகிய தமது சின்மய வல்லமையையும் ஜனங்களுக்கு வெளிப்படுத்தினார். கடைசியாக ஆசிரியன் சீஷர்களிடத்தும் பொதுவான ஜனக்கூட்டத்தினிடத்தும் இந்தப் பிரசங்கத்தினாலுண்டான பயனைத் தெரிவித்திருக்கிறான்.

### $6^{22-40}$. இயேசுவே ஜீவாகாரம்.

22 மறுநாளில் கடலின் அக்கரையிலே நின்ற ஜனங்
கள் அவருடைய சீஷர் ஏறின அந்த ஒரே படவு
தவிர அங்கே வேறொரு படவும் இருந்ததில்லையென்
றும், இயேசு தம்முடைய சீஷருடனேகூடப் படவில்
ஏறாமல் அவருடைய சீஷர்மாத்திரம் போனார்களென்



23 றும் அறிந்தார்கள். — கர்த்தர் ஸ்தோத்திரஞ்செய்த
பின்பு அவர்கள் அப்பஞ்சாப்பிட்ட இடத்துக்குச்
சமீபமாய்த் திபேரியாவிலிருந்து வேறே படவுகள் வந்
24 தது. — அப்பொழுது இயேசுவும் அவருடைய சீஷ
ரும் அங்கே இல்லாததை ஜனங்கள் கண்டு, உடனே
அந்தப் படவுகளில் ஏறி, இயேசுவைத் தேடிக்கொண்டு,
கப்பர்நகூமுக்கு வந்தார்கள்.

25 கடலின் அக்கரையிலே அவர்கள் அவரைக் கண்ட
போது: ரபீ, நீர் எப்பொழுது இவ்விடம் வந்தீர் என்று
கேட்டார்கள்.

26 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள்
அற்புதங்களைக் கண்டதினால் அல்ல, நீங்கள் அப்பம்
புசித்துத் திருப்தியானதினாலேயே என்னைத் தேடுகிறீர்
கள் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்
27 சொல்லுகிறேன். — அழிந்துபோகிற போஜனத்திற்
காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போ
ஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷ
குமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவா
கிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார்.

28 அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: தேவனுக்
கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன
29 செய்யவேண்டும் என்றார்கள். — இயேசு அவர்களுக்
குப் பிரதியுத்தரமாக: அவர் அனுப்பினவரை நீங்கள்
விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது
என்றார்.

30 அதற்கு அவர்கள்: அப்படியானால் உம்மை விசுவா
சிக்கும்படிக்கு நாங்கள் காணத்தக்கதாக நீர் என்ன
அடையாளத்தைக் காண்பிக்கிறீர்? என்னத்தை நடப்
31 பிக்கிறீர்? — வானத்திலிருந்து அவர்களுக்கு அப்பத்
தைப் புசிக்கக் கொடுத்தார் என்று எழுதியிருக்கிறபடி,
நம்முடைய பிதாக்கள் வனாந்தரத்தில் மன்னாவைப் புசித்
32 தார்களே என்றார்கள். — இயேசு அவர்களை நோக்கி:
வானத்திலிருந்துவந்த அப்பத்தை மோசே உங்களுக்
குக் கொடுக்கவில்லை; என் பிதாவோ வானத்திலிருந்து
வந்த மெய்யான அப்பத்தை உங்களுக்குக் கொடுக்கிறார்
என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்
33 லுகிறேன். — வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவ
னைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்

34 என்றார். — அப்பொழுது அவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இந்த அப்பத்தை எப்பொழுதும் எங்
களுக்குத் தரவேண்டும் என்றார்கள்.
35 இயேசு அவர்களை நோக்கி: ஜீவ அப்பம் நானே,
என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடை
யான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்
36 காலும் தாகமடையான். — நீங்கள் என்னைக் கண்டிருந்
தும் விசுவாசியாமலிருக்கிறீர்கள் என்று உங்களுக்குச்
37 சொன்னேன். — பிதாவானவர் எனக்குக் கொடுக்கிற
யாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிற
38 வனை நான் புறம்பே தள்ளுவதில்லை. — என் சித்தத்
தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்
தின்படி செய்யவே நான் வானத்திலிருந் திறங்கிவந்
39 தேன். — அவர் எனக்குத் தந்தவைகளில் ஒன்றையும்
நான் இழந்துபோகாமல், கடைசிநாளில் அவைகளை
எழுப்புவதே என்னை அனுப்பின பிதாவின் சித்தமா
40 யிருக்கிறது. — குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசு
வாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை
அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்பு
வதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்
கிறது என்றார்.

### (i) சின்மயப்பொருளை நாடுவது உத்தமம். 6[26-34].

ஜனங்கள் சரீரத் திருப்தியைத் தேடினார்கள். சின்மயத் திருப்தியை நாடுவது நன்று. அது நித்தியஜீவனுக்குரிய திருப்தி. ஜனங்கள் கடவுள் சித்தம் (6[26,27]). என்னவென்று கேட்டதற்கு, கடவுள் அனுப்பினவரை விசுவாசித்தல் கடவுளுக்குகந்த கிரியை என்றார் (6[28,29]). மோசே செய்ததை திருஷ்டாந்தமாக எடுத்து ஜனங்கள் ஒரு அடையாளத்தைக் கேட்டார்கள் (6[30-34]). அதற்குத் தாமே கடவுளிடத்திலிருந்து வந்ததும் கடவுளால் கொடுக்கப்பட்டதும் சின்மயத் திருப்திக்குரியதுமான பொருள் என்பது.

**27. மனுஷகுமாரன்** — தாம் பூதராது எண்ணத்திற்கு மாறாகச் சின்மயவிதமாய் மனிதரை இரட்சிக்கிறவர் என்பதை இந்தப் பெயரால் வெளிப்படுத்தினார். இந்தப் பெயர் பின்வரும் போதனைக்குரியது.

**முத்திரித்திருக்கிறார்** — அதற்குப் பிரதிஷ்டைசெய்து அதிகாரமுள்ள அடையாளங்களால் வெளிப்படுத்தினாரென்பது.



"ஆத்மீக அன்பும் ஞானமும் கடவுளது மூர்த்திகை." (பராநந்தர்.)

31. மேசியா இஸ்ரவேலருக்கு தேவ போஜனத்தைக் கொடுப்பாரென்பது யூதரது நோக்கம். ஆதலின் ஜனங்கள் இயேசு அதிசயமாய்ச் சாதாரண போஜனங்கொடுத்தது போதுமான அத்தாட்சியல்லவென்று நினைத்து இன்னொரு அடையாளத்தையுங் கேட்டார்கள். அவர்களது மனம் எப்போதும் புறம்பான காரியங்களில் சென்றதைப் பார்க்க.

### (ii) இயேசுவே அந்த சின்மயப்பொருள். 6[35-40].

தாமே ஆத்ம திருப்தி கொடுக்கும் அந்த உத்தமப்பொருள். 6[35].

ஜனங்கள் அவர் செய்கிற கிரியைகளைக் கண்டும் அவரை விசுவாசிக்கிறதில்லை. 6[36].

இயேசுவின் வேலை கடவுள் சித்தத்தை நிறைவேற்றுவதுதான். 6[37, 38].

ஜனங்களது அவிசுவாசம் அதைத் தடுக்க முடியாது. குமாரனை விசுவாசிக்கிறவன் நித்தியஜீவனைப் பெறுவது கடவுளது சித்தம். 6[39-40].

### 6[41-51]. ஜீவாகாரம் அடைவதற்கேதுவாகிய விசுவாசம்.

41 நான் வானத்திலிருந்து வந்த அப்பம் என்று அவர்
சொன்னதினிமித்தம் யூதர்கள் அவரைக்குறித்து முறு
42 முறுத்து:— இவன் யோசேப்பின் குமாரனாகிய இயேசு
அல்லவா, இவனுடைய தகப்பனையும் தாயையும் அறிந்
திருக்கிறோமே; அப்படியிருக்க, நான் வானத்திலிருந்
திறங்கிவந்தேன் என்று இவன் எப்படிச் சொல்லு
கிறான் என்றார்கள்.
43 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: உங்களுக்
44 குள்ளே முறுமுறுக்கவேண்டாம்.—என்னை அனுப்பின
பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன்
என்னிடத்தில் வரமாட்டான்; கடைசிநாளில் நான்
45 அவனை எழுப்புவேன்.—எல்லாரும் தேவனாலே போ
திக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசிகளின் ஆக
மத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்
தில் கேட்டுக் கற்றுக்கொள்ளுகிறவன் எவனும் என்னி
46 டத்தில் வருகிறான்.—தேவனிடத்திலிருந்து வந்தவரே
தவிர வேறொருவரும் பிதாவைக் கண்டதில்லை, இவரே
பிதாவைக் கண்டவர்.

47 என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனுக்கு நித்திய
ஜீவன் உண்டென்று மெய்யாகவே மெய்யாகவே உங்க
48, 49 ளுக்குச் சொல்லுகிறேன்.—ஜீவ அப்பம் நானே.—உங்
கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்
50 தும் மரித்தார்கள்.—இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்
கும்படி. வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே.—
51 நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த
அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்
பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்
காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்.

**(iii) கடவுளது வார்த்தையைக் கேட்பவன் ஞானமறிவான். 6[41-46].**

பரம தந்தையின் வருதலால் மனிதர் கிறிஸ்துவிடம் வருகிறார்கள். உண்மையாய்ப் பரம தந்தையை யறிந்தவன் இயேசுவையுமறிவான். 6[44, 45].

கடவுளிடத்திலிருந்து வந்தவன்மட்டும் கடவுளைப் பார்த்தறிந்தவன். 6[46].

41. **யூதர்கள்**—அவரை இப்படிக் கேட்டவர்கள் வேறாட்கள் போல் தோன்றுகிறது. இதற்குமுன்னே அவர் கடலோரத்தில் தமது சீஷர்களுடன் பேசிப் பின்பு பரிசேயரும் வந்து வீதியில் அவரைச் சந்தித்துக் கேட்டதுபோலிருக்கிறது.

42. இயேசு யோசேப்பின் மகனென்று யாவராலும் எண்ணப்பட்டார். அவர் தமது பரிசுத்தப் பிறப்பைப்பற்றி ஒருபோதும் பேசினதில்லை.

44. கடவுளாவி முதலாவது ஒரு மனிதனுடைய இருதயத்தில் கிரியைசெய்து அதைப் பண்படுத்தவேண்டும். கடவுளாவியின் வருதலொழிய ஒருவனது மனதில் விசுவாசமுண்டாகமாட்டாது.

"அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்று திருவாசகஞ் சொன்னதையும், "நந்தியருளாலே மூலனை நாடி" என்று திருமூலர் சொன்னதையும் ஒத்துப்பார்க்க.

45. **கற்றுக்கொள்ளுகிறவன்** — மனிதன் கடவுளது வருதலை மனமறிந்து ஏற்றுக்கொள்ளவேண்டும்.



**(iv) இதை விசுவாசித்தால் பூரண ஜீவனை அடைவதற் கேதுவாம். 6[47-51].**

மறுபடியும் இயேசு தம்மையே ஜீவாதாரமாக ஏற்படுத்துகிறார். 6[47, 48].

இந்த ஆகாரத்திற்கும் மற்ற போஜனத்திற்குமுள்ள வித்தியாசங் காண்பிக்கிறார். எப்படியெனில், 6[49-50].

இதுவே ஜீவனுள்ள போஜனம், மற்றதெல்லாம் ஜீவனில்லாதது.

51. அந்த உயிர் இயேசுவிலேயே அமைந்திருக்கும் பொருளாம். அதை மற்றவரெல்லாரும் அடையும்படியாக அவர் அவர்களுக்கு ஒப்புக்கொடுப்பார்.

**என் மாம்சமே**—இதினால் இயேசு தமது மனுஷீக சரீரத்தைக் குறிப்பிட்டார். இதனால் மோசேக்கும் இயேசுவுக்கும் இன்னொரு வித்தியாசம் காணப்படுகிறது. மனிதர் அதில் பங்குபெறும்பொருட்டு இயேசு தமது சொந்த சுபாவத்தை ஆகாரமாகக் கொடுக்கிறார். இயேசு இங்கே தமது மரணத்தைக் குறிப்பிடவில்லை. தமது சுபாவம் உலகத்திற்கு ஜீவபொருளாம் என்கிற இன்மையச் சத்தியம் ஒன்றையே குறிப்பிட்டார்.

### 6[52-59]. ஜீவாகாரம் பெறும் வழி.

52 அப்பொழுது யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்
தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்
களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள்.
53 அதற்கு, இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷ
குமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய
இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்க
ளுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யா
54 கவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.— என் மாம்சத்
தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவ
னுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசி
55 நாளில் எழுப்புவேன்.—என் மாம்சம் மெய்யான போ
ஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமா
56 யிருக்கிறது.—என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்
தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கி
57 றான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.—ஜீவ
னுள்ள பிதா என்னை அனுப்பினதுபோலவும், நான்
பிதாவினால் பிழைத்திருக்கிறதுபோலவும், என்னைப்
58 புசிக்கிறவனும் என்னாலே பிழைப்பான்.—வானத்திலி

ருந்திறங்கின அப்பம் இதுவே; இது உங்கள் பிதாக்கள்
புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்க
ளே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்
கும் பிழைப்பான் என்றார்.
59 கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்திலே அவர் உபதே
சிக்கையில் இவைகளைச் சொன்னார்.

## (v) இயேசுவின் ஆவியைப் பெறுதல் பூரண ஜீவனடையும் வழியாம். $6^{52-59}$.

இயேசு படிப்படியாகத் தமது சிறந்த தன்மைக்குரிய சத்தியங்களை வெளிப்படுத்தினார். முதலாவது தம்மை உத்தமப் பொருளாகக் காண்பித்துக் கடைசியாகத் தம்மை யாவரும் பெறலாலேயே நித்திய ஜீவனை யடையலாமென்பதைப் போதித்தார். யூதர்கள் அவர் வார்த்தைகளைச் சரியாய் அறியவில்லை. எப்படியெனில், அவர்கள் சரீரப் பிரகாரமாகவே எல்லாவற்றையுஞ் சிந்திப்பது வாடிக்கை. இயேசுவைப் பெற்றாலொழிய ஒருவருக்கும் மெய்ஜீவனில்லை. $6^{53-55}$. அவரே உண்மையான ஆத்தும போஜனம். இயேசுவைப் பெற்றவன் அவருடன் ஐக்கியமாயிருப்பான். $6^{56,57}$. அவனது ஜீவன் இயேசுவிலேயே அமைந்திருக்கும். இயேசுவைப் பெற்றவன் நித்தியஜீவனையும் பெறுவான். $6^{58,59}$.

**53. இரத்தத்தைப் பானம் பண்ணுமலும்**—இது யூதருக்கு ஆச்சரியமான வார்த்தை; இயேசு இவ்விடத்தில் சமீபத்தில் வந்த பஸ்கா பண்டிகையை நினைத்து அத்துடன் தாம் அடையப்போகிற மரணத்தையும் எண்ணிக்கொண்டிருப்பார். பலியைக்குறித்த நோக்கம் இதில் அடங்கியிருக்கிறது. எனினும் திட்டமாய்த் தமது மரண பலியை இரட்சிப்பின் வழியாகக் காட்டுகிறார் என்று சொல்லக் கூடாது. தாம் மரணம் அடையவேண்டுமென்றும் அந்த மரணம் எப்படியாவது உலகத்திற்குப் பூரண உயிர் கிடைக்கும் வழியாமென்றும் இதற்குள்ளே யறிந்திருப்பார். அதுமாத்திரமல்ல ஆசிரியனது சிந்தனைகள் கலந்திருக்கிறதென்றும் நினைவுகூரவேண்டும்.

**57. போலவும்** — இயேசுவுடன் அமைந்த ஐக்கியம் இன்னதென்று இதில் காணப்பட்டது. இயேசு எப்படித் தந்தையுடன் ஐக்கியமாய் அவரில் ஜீவன்பெற்று வருகிறாரோ அப்படியே நாமும் இயேசுவுடன் நித்திய சம்பந்தமுள்ளோராய் அவரிலே ஜீவன்பெற்று வருகிறோம். இந்த ஐக்கியமே இந்நூலுக்கு விசேஷித்த நோக்கமாக வருகிறது. இவ்விடத்தில் இராப்போஜனம் குறிப்பிக்கப்பட்டதென்று நாம் நினைக்கலாகாது. இந்நூலை எழுதின காலத்தில் இராப்போஜனத்தை அவ்வளவு விசேஷமாய் எண்ணினாரிலர். ஆசிரியனாவது இயேசுவாவது இராப்போஜனத்தைப்பற்றி இதில் சொல்லிய பிரகாரமாய்ப் பேசமாட்டார்களென்று நிச்சயித்துச் சொல்லலாம்.



**59. ஜெபஆலயத்திலே**—இந்தப் பிரசங்கத்தின் கடைசிப் பாகம் தேவாலயத்தில் சொல்லப்பட்டது. அது ஓய்வுநாளிலே நடந்திருக்கும். தற்காலத்தில் கப்பர்நகூம் என்னப்பட்ட இடத்தில் ஜெப ஆலயத்தின் சின்னாபின்னங்கள் கிடக்கின்றன. நிலைக்கட்டையில் மன்னா அடங்கின ஒரு சித்திரம் வரைந்திருக்கிறதாகக் காணப்படுகிறது. அதுவே அந்த ஜெபஆலயமென்று நினைக்கலாம். அப்படியாயின் இயேசு மன்னாவைப்பற்றிப் பேசினபோது அந்தப் படத்தைப்பார்த்தே பேசியிருப்பார்.

## $6^{60-71}$. விசுவாசமும் அவிசுவாசமும்.

60 அவருடைய சீஷரில் அநேகர் இவைகளைக் கேட்ட
பொழுது, இது கடினமான உபதேசம், யார் இதைக்
கேட்பார்கள் என்றார்கள்.
61 சீஷர்கள் அதைக்குறித்து முறுமுறுக்கிறார்களென்று
இயேசு தமக்குள்ளே அறிந்து, அவர்களை நோக்கி: இது
62 உங்களுக்கு இடறலாயிருக்கிறதோ?—மனுஷகுமாரன்
தாம் முன்னிருந்த இடத்திற்கு ஏறிப்போகிறதை நீங்கள்
63 காண்பீர்களானால் எப்படியிருக்கும்?—ஆவியே உயிர்ப்
பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான்
உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவ
னாயும் இருக்கிறது.
64 ஆகிலும் உங்களில் விசுவாசியாதவர்கள் சிலர் உண்டு
என்றார்; விசுவாசியாதவர்கள் இன்னாரென்றும், தம்
மைக் காட்டிக்கொடுப்பவன் இன்னானென்றும் ஆதி
65 முதலாக இயேசு அறிந்திருந்தபடியால், அவர் பின்
னும்: — ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்
டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதி
னிமித்தமே உங்களுக்குச் சொன்னேன் என்றார்.

66 அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவரு-
67 டனே கூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். — அப்
பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும்
68 போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார். — சீமோன்
பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே,
யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவ வசனங்கள் உம்மி
69 டத்தில் உண்டே. — நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரா
னாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்
70 தும் இருக்கிறோம் என்றான். — இயேசு அவர்களை
நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்து
கொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசா
71 யிருக்கிறான் என்றார். — சீமோனின் குமாரனாகிய யூதாஸ்
காரியோத்து பன்னிருவரி லொருவனாயிருந்தும், தம்
மைக் காட்டிக்கொடுக்கப் போகிறவனாயிருந்தபடியினால்
அவனைக்குறித்து இப்படிச் சொன்னார்.

## இந்தப் பிரசங்கத்தின் பற்பல பயன்கள். 60-71.

60. **அவருடைய சீஷரில்**—அதாவது அவரைச்சேர்ந்த எல்லாரும்.

**கடினமான உபதேசம்**—சின்மயத் தன்மையுள்ளதாதலின் அவர்கள் உணர்வதரிது.

62. **ஏறிப்போகிறதை**—இதிலே இயேசு மறுபடியும் தமக்குரிய தெய்வரூபமடைதலை குறிப்பித்துக் காட்டியிருக்கிறது. இந்த வார்த்தையில் அவருடைய மரணமும் உயிர்த்தெழுதலும் பரமேறுதலும் அடங்கும். அவர் அப்போது சொன்ன சின்மயப் போதனை ஒப்புக்கொள்ளக்கூடாதாயின் பின்பு உரைக்கப்படும், அவர் சின்மயவிதமாய் மகிமை பெறுதலைப்பற்றிய போதனையும் அவர்கள் நினைக்கலரிதாம்.

63. மதசம்பந்தமான விஷயங்களில் முக்கியமாய் அநுசரிக்கப்படவேண்டிய பிரமாணத்தை இந்த வசனத்தில் தெரிவிக்கிறார். அவர்கள் சரீரப்பொருளைச் சிறப்பாய் மதித்தார்கள். சின்மயப்பொருளே எல்லாவற்றிலும் உத்தமமும் உலகத்தில் உயிருள்ளதுமானதென்று போதித்தார்.

**மாம்சம்** — அதாவது சரீரப்பொருள் அல்லது சடப்பொருள் அல்லது நிகளப்பொருள்.

**ஆவி**—அதாவது அகளப்பொருள் அல்லது சின்மயப்பொருள்.



64. ஆசிரியன் அடிக்கடி இயேசுவினுடைய சூட்சம அறிவை வெளிப்படுத்திக் காட்டுகிறான். இயேசு ஊழியஞ்செய்ய ஆரம்பித்ததுமுதல் மனிதருடைய ரகசிய எண்ணங்களை அறிந்துகொண்டவராரென்பதுணர்க.

**ஆதிமுதலாக**—என்பதற்குப் பதிலாக ஆதியிலிருந்து என்று எழுதினால் நன்று.

**தம்மைக் காட்டிக்கொடுப்பவன்**—இயேசு யூதாஸைத் தெரிந்துகொண்டபோதே அவன் செய்யும் துரோகத்தை அறிந்திருந்தாரென்று இதில் அர்த்தங்கொள்ளவேண்டியதில்லை. அவர் எப்படி மனிதருடைய எண்ணங்களை ஆதியில் அறிந்துகொண்டுவந்தாரோ அப்படியே யூதாஸின் கெட்ட எண்ணத்தை அவன் அதை வெளியிடுமுன்னமே அறிந்துகொண்டாரென்க.

65. இயேசு இவ்வண்ணமான துரோகத்தை யறிதலால் தந்தையின் ஆவி ஒருவரது மனத்திலிருந்து அவனைக் கவர்ந்திருந்தால்தான் அவன் சின்மயவிஷயமாய் இயேசுவைச் சேரலாம். யூதாசும் மற்றுஞ் சிலரும் புறம்பான விதமாய்ச் சேர்ந்தார்களேயொழிய இருதயத்தால் சேராமலிருந்தார்கள். இருதயச் சேர்க்கையுண்டாகக் கடவுளது ஏவுதலை ஏற்றுதல் அவசியம்.

66. இந்த வசனத்தில் அவர் பிரசங்கத்தினால் வந்த ஒரு பயன் சொல்லப்பட்டது. யாதெனில், அநேகர் பின்வாங்கிப்போனார்கள். அவர்களது மனங்களில் சில லௌகிக நோக்கங்கள் இருந்ததினாலேயே இப்படி நடந்தது.

67. **பன்னிருவரையும்** — இந்நூலில் பன்னிருவரைத் தெரிந்துகொள்ளுதல் எழுதப்பட்டிருக்கவில்லை எனினும், ஆசிரியன் அதை யறிந்தானென்பது தெரியவருகிறது. அது பொதுவான சுவிசேஷப் பாரம்பரைக்குரியது.

68. சீஷருக்குண்டான பலனை இதில் காண்கிறோம். யாதெனில், அவர்களவரை இன்னம் அதிகமாய் விசுவாசித்தார்கள். இந்த விஷயம் பேதுரு முக்கியமாய்ப் பேசுபவராகக் காணப்படுகிறான். இந்த வார்த்தைகளும் மத் 16[16] லிருக்கிற வார்த்தைகளும் ஒன்று என்பார் சிலர். இவ்விரண்டின் பொருட்களும் வார்த்தைகளும் அதிக வித்தியாசமுடையதால் அதை மறுக்க.

**நித்தியஜீவ வசனங்கள்** — அதாவது நித்தியஜீவனுக்குரிய வசனங்கள் அல்லது நித்தியஜீவனைப்பற்றிய வசனங்கள். [illegible]னதே நன்று.

**69. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து**—நீர் கடவுளுடைய பரிசுத்தர் என்று எழுதுக. இதற்கு நீர்தாமே மேசியாவென்றர்த்தமாம். அவர்க ளிதை உறுதியாய் நம்பினார்கள்.

**70, 71. பிசாசாயிருக்கிறான்**—இயேசு அவனைத் தெரிந்துகொண்டபோது அவன் துரோகம் செய்வதாக அறிந்தாரென்றும் அவன் அப்போது பிசாசானவனென்றும் நாம் நினைக்கலாகாது. இயேசு யூதாசுக்கு எச்சரிக்கை சொல்லவும் தா மிதை யறியாமலிருந்தாரென்று சீஷர் நினையாதிருக்கவும் அவரிப்படிச் சொன்னாரென்க. பிசாசானது நன்மையைத் தீமையாக்குகிற தன்மையுடையதாம். யூதாஸ் அப்படியே இயேசு செய்த நன்மை யாவும் தீமையாக எண்ணியும் மாற்றியும்வந்தான்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச்
செய்ந்நன்றி கொன்ற மகற்கு" (a)

என்று நாயனார் சொன்னதுபோலவே யாயிற்று.

**71. காரியோத்து**—கீரியோத்து என்னும் ஊரான் என்பது. கீரியோத்து என்பவர் யூதேயாதேசத்தார் ஆகையால் சீஷரில் இவன் மட்டும் யூதேயாதேசத்தான்.

**(iii) இயேசு தமது உன்னத நிலைமையை எருசலேமில் வெளிப்படுத்தினது. 7¹–10⁴².**

ஏழுமுதல் பத்து அதிகாரங்களில் சொல்லிய சம்பவங்கள் இரண்டு பண்டிகைகளில் நடந்தன. அவ ரப்போது மிக்க தெளிவுடன் தமது உன்னத தன்மையைக் கூறினார். யூதர்கள் அதை ஒப்புக்கொள்ள விரும்பாமல் கூடியமட்டும் அவருக்கு விரோதம் பண்ணினார்கள். இந்த அதிகாரங்களில் அவர்களது விரோதம் அதிக மதிகமாய் வளர்ந்தேறிக்கொள்ளுதலைப் பார்க்கிறோம். வாக்கு

(a) பெரிய நன்மைகளைக் கெடுப்பவர்க்குத் தப்பிக்கும் வழியுண்டு. ஒருவன் செய்த நன்மையைத் தீமையாக்குபவனுக்கோ தப்பிக்கும் வழி இல்லை என்பது.



வாதங்களாலும் சண்டைகளாலும் இவ்வதிகாரங்கள் நிறைந்துள்ளன. இயேசு எருசலேம்பட்டணத்தில் செய்த விசேஷித்த ஊழியம் இவைகளில் எழுதியுள்ளது. இது திரியனுபந்த சுவிசேஷங்களில் வருகிறதில்லை. எனினும், இந்தச் சம்பவங்கள் உண்மையான சரித்திரப்போங்கா யிருக்கின்றன. எப்படியெனில், ஜனக்கூட்டங்களையும் சமுசயங்களையும் நம்பிக்கைகளையும் பலவிதமாய்ப் பார்க்கிறோம். சரித்திரமறியாதவன் இவ்விதமாய் எழுதலாகாது. ஒருவேளை சில விடங்களில் ஞாபகப்பிசகால், தான் தியானித்துக்கொண்ட எண்ணங்களை இயேசுவின் வாயிலே வைத்திருந்ததேயொழிய இந்தச் சம்பவங்கள் உண்மையான சரித்திரங்களல்லவென்று சொல்வதற்கிடமில்லை. சம்பவங்கள் நடந்தவாறு பொருளட்டவணையில் காண்க.

(a) கூடாரப்பண்டிகை. 7¹-8⁵⁹.

முதலாவது அவரது போதனையைப்பற்றிப் பற்பல அபிப்பிராயங்களும் வாக்குவாதங்களு முண்டாயிருந்ததைக் காண்கிறோம். 7.

பிறகு அவரே ஒரு பிரசங்கத்தில் தாம் போதிக்த அதிகாரத்தை விளக்கிக் காண்பித்துத் தாம் அதைப் பரம தந்தையிடமே பெற்றிருந்ததாகச் சாதித்தார். 8¹²-⁵⁹.

**7¹-¹³. இயேசுவைக்குறித்த ஆராய்ச்சி.**

1 இவைகளுக்குப் பின்பு, யூதர்கள் இயேசுவைக்
கொலைசெய்ய வகைதேடினபடியால், அவர் யூதேயா
விலே சஞ்சரிக்க மனதில்லாமல் கலிலேயாவிலே சஞ்
சரித்துவந்தார்.
2 யூதருடைய கூடாரப்பண்டிகை சமீபமாயிருந்தது.—
3 அப்பொழுது அவருடைய சகோதரர் அவரை நோக்கி:
நீர் செய்கிற கிரியைகளை உம்முடைய சீஷர்களும்
பார்க்கும்படி, இவ்விடம் விட்டு யூதேயாவுக்குப் போம்.—
4 பிரபலமாயிருக்க விரும்புகிற எவனும் அந்தரங்கத்திலே
ஒன்றையும் செய்யமாட்டான்; நீர் இப்படிப்பட்டவை
களைச் செய்தால் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்
5 தும் என்றார்கள்.—அவருடைய சகோதரரும் அவரை
விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.
6 இயேசு அவர்களை நோக்கி: என் வேளை இன்னும்
வரவில்லை, உங்கள் வேளையோ எப்பொழுதும் ஆயத்த

7 மாயிருக்கிறது.—உலகம் உங்களைப் பகைக்கமாட்டாது;
அதின் கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறதென்று
நான் சாட்சிகொடுக்கிறபடியினாலே அது என்னைப்
8 பகைக்கிறது.—நீங்கள் இந்தப் பண்டிகைக்குப் போங்
கள்; என் வேளை இன்னும் வராதபடியால் நான் இந்தப்
பண்டிகைக்கு இப்பொழுது போகிறதில்லை என்றார்.
9 இவைகளை அவர்களுடனே சொல்லி, பின்னுங் கலி
10 லேயாவிலே தங்கினார்.—அவருடைய சகோதரர் போன
பின்பு, அவர் வெளியரங்கமாய்ப் போகாமல் அந்தரங்க
மாய்ப் பண்டிகைக்குப் போனார்
11 பண்டிகையிலே யூதர்கள் அவரைத் தேடி: அவர்
12 எங்கேயிருக்கிறார் என்றார்கள். — ஜனங்களுக்குள்ளே
அவரைக்குறித்து முறுமுறுப்புண்டாயிற்று. சிலர்: அவர்
நல்லவர் என்றார்கள். வேறு சிலர்: அப்படியல்ல,
அவன் ஜனங்களை வஞ்சிக்கிறவன் என்று சொல்லிக்
13 கொண்டார்கள்.—ஆனாலும் யூதருக்குப் பயந்திருந்தனி
னாலே, ஒருவனும் அவரைக்குறித்துத் தாராளமாய்ப்
பேசவில்லை.

### இயேசுவும் அவருடைய சகோதரர்களும். $7^{1-14}$.

அவருடைய சகோதரர் அவர் தம்மை வெளிப்படையாயும் உலகப் பிரகாரமாயும் காண்பிக்க விரும்பி அவரை வேண்டிக்கொண்டார்கள். ஆகையால் அவருடைய சகோதரர் அவரை ஒருவாறு விசுவாசித்தார்களென்று சொல்லலாம்.

1. இயேசு இன்னும் கலிலேயாவில் தங்கி ஊழியஞ்செய்து வருகிறார். அந்த ஊழியத்தின் சரித்திரம் திரியனுபந்த சுவிசேஷங்களில் காணலாம். $6^4$—ல் சொல்லப்பட்ட பஸ்காபண்டிகைக்கு எருசலேமுக்குப் போகாமல் அக்டோபர் மாதத்தில் நடந்த கூடாரப்பண்டிகைவரைக்கும் கலிலேயாவிலிருந்தார். அந்த மாதங்களில் நடந்த சம்பவங்கள் மத் 15—18—ல் சொல்லியிருக்கின்றன. யூதரது பகை அவரைக் கொல்லவேண்டுமென்னும் தீர்மானத்திற்கு அவர்களை ஏவினதைக் காண்க.

2. **கூடாரப்பண்டிகை** — இந்தப் பண்டிகையானது எகிப்திலிருந்து இஸ்ரவேலரடைந்த இரட்சிப்பை முக்கியமாய்க் குறித்ததுடன் அறுப்பின் பண்டிகையாகவுமிருந்தது. இப்பண்டிகை ஏழுநாட்க



ளாய் நடந்தது. யாவரும் எருசலேமுக்கு வரவேண்டிய மூன்று பெரிய பண்டிகைகளில் இதுவும் ஒன்று. லேவி $23^{34}$ உபா $16^{13-15}$.

3. **உம்முடைய சீஷர்கள்**—உம் பட்சத்திலிருப்பவர்கள் எல்லாரும் என்பதென்க.

5. **அவருடைய சகோதரர்** — சின்மயவிதமாய் அவரை நம்பாமலிருந்தும் அவரடைந்த பிரஸ்தாபத்தையறிந்து அவர் ஜனங்களெல்லாருக்கு முன்பாக வல்ல கிரியைகளைக் காண்பிக்க அவர்கள் அவரைத் தூண்டிவிட்டார்கள். இது தேவாலயக் கோபுரத்தின்மேல் நடந்த சோதனை.

6—8. இயேசு தம்மை வெளிப்படுத்தும் காலம் இன்னும் வரவில்லை. இந்தக் காலம் லௌகீக காலமாதலின் அது அவருக்கேற்ற காலம் அல்லாமல் அவர் ஜாக்கிரதையாய் நடக்கவேண்டிய காலமாயிற்று. அவர் உலகத்தின் பொய்ப்புரட்டுகளைத் தெளிவாய் எடுத்துக் காண்பித்தலின் உலகத்திற்கும் அவருக்கும் பகை உண்டாயிற்று. அவருடைய சகோதரரோ உலகத்தோடொத்து வாழ்ந்தவர்கள்.

8. **இப்பொழுது போகிறதில்லை** — அதைக் கொண்டாடும்படி மற்றப் பிரயாணிகளுடன் வெளிப்படையாய்ப் போகிறதில்லையென்பது.

11—13. அவரது பிரஸ்தாபத்தைக் காண்க. ஜனங்கள் கொண்ட பலவித அபிப்பிராயங்களை ஆசிரியன் விளக்கிக் காட்டினான்.

13. யூதருக்கு அதாவது யூத அதிகாரிகளுக்குப் பயந்தார்கள். ஏனெனில் அவர்கள் இன்னும் அவரைப்பற்றித் திட்டமாய் நிதானிப்புச் செய்யாதிருந்தும் அவர்களிஷ்டத்தை யாவரும் அறிந்தார்கள்.

### $7^{14-24}$. இயேசு செய்த போதனையின் பிறப்பிடம்.

14 பாதிப்பண்டிகையானபோது, இயேசு தேவாலயத்
15 துக்குப் போய், உபதேசம்பண்ணினார்.—அப்பொழுது
யூதர்கள்: இவர் கல்லாதவராயிருந்தும் வேத எழுத்துக்
களை எப்படி அறிந்திருக்கிறார் என்று ஆச்சரியப்பட்
டார்கள்.
16 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என் உப
தேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பின
17 வருடையதாயிருக்கிறது.—அவருடைய சித்தத்தின்படி

செய்ய மனதுள்ளவனெவனே அவன் இந்த உபதேசம்
தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசு
18 கிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்.— சுயமாய்ப்
பேசுகிறவன் தன் சுய மகிமையைத் தேடுகிறான்,
தன்னை அனுப்பினவரின் மகிமையைத் தேடுகிறவனே
உண்மையுள்ளவனாயிருக்கிறான், அவனிடத்தில் அநீதி
19 யில்லை. — மோசே நியாயப்பிரமாணத்தை உங்களுக்
குக் கொடுக்கவில்லையா? அப்படியிருந்தும் உங்களில்
ஒருவனும் அந்த நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிற
தில்லை; நீங்கள் ஏன் என்னைக் கொலைசெய்யத் தேடு
கிறீர்கள் என்றார்.
20 ஜனங்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நீ பிசாசு
பிடித்தவன்; உன்னைக் கொலைசெய்யத் தேடுகிறவன்
21 யார் என்றார்கள்.—இயேசு அவர்களை நோக்கி: ஒரே
கிரியையைச் செய்தேன், அதைக்குறித்து எல்லாரும்
22 ஆச்சரியப்படுகிறீர்கள்.—விருத்தசேதனம் மோசேயினால்
உண்டாகாமல், பிதாக்களால் உண்டாயிற்று; பின்பு,
மோசே அதை உங்களுக்கு நியமித்தான்; நீங்கள் ஓய்வு
நாளிலும் மனுஷனை விருத்தசேதனம் பண்ணுகிறீர்
23 கள்.—மோசேயின் நியாயப்பிரமாணம் மீறப்படாத
படிக்கு ஓய்வுநாளில் மனுஷன் விருத்தசேதனம் பெற
லாமென்றால், நான் ஓய்வுநாளில் ஒரு மனுஷனை
முழுவதும் சுகமாக்கினதினாலே என்மேல் எரிச்சலா
24 யிருக்கலாமா?—தோற்றத்தின்படி தீர்ப்புசெய்யாமல்,
நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள் என்றார்.

### பற்பல வாக்குவாதங்கள். $7^{14-24}$.

15. இயேசு வேதாகமங்களை நன்கறிந்து வியாக்கியானம் சொன்னது ஜனங்களுக்கு ஆச்சரியத்தை யுண்டாக்கினது.

**கல்லாதவர்**—அவர் பெரிய வேத பாடசாலைகளில் படிக்கவில்லை. அவர் வாசிக்கவும் எழுதவும் ஊர் ஜெபவாசலின் பள்ளிக்கூடத்தில் படித்திருப்பார்.

16–18. இயேசு தமது ஞானத்தின் பிறப்பிடத்தைத் தெரிவித்தார். அதாவது தாம் தம்மையனுப்பின கடவுளிடம் அதைப் பெற்றதென்பதே.



17. அந்தப் போதனை கடவுளது போதனையாதலின் கடவுள் சித்தப்படி செய்பவர்மாத்திரம் அது இன்னதென்று அறிவார். ஆகையால் அந்தப் போதனைக்கு ருஜுவாக்கியங்கள் வேண்டியதில்லை.

18. தானாகவே போதிப்பவன் தனக்கென்று போதிப்பான். தன்னை யனுப்பினவராலேயே போதிப்பவன் அவருக்கென்றே போதிப்பான். இதுவே போதனைக்கு நல்ல அத்தாட்சி.

19. யூதர்கள் நியாயப்பிரமாணத்தை மிகவும் மேன்மைபாராட்டினும் அதின் சின்மயப்போதனையை அறியாமையின் எப்போதும் அதை மீறி நடந்தார்கள். நியாயப்பிரமாணத்தை நிறைவேற்ற வந்த அவரையே கொல்ல விரும்பினார்கள்.

20. யூத அதிகாரிகள் இயேசுவைக் கொல்ல விரும்பியதை ஜனங்களறியவில்லை.

21. **ஒரேகிரியை**—பெதஸ்தா குளத்தில் வியாதியஸ்தனை ஓய்வுநாளில் சொஸ்தமாக்கினதென்றறிக.

22–24. ஓய்வுநாளில் ஒருவனுக்கு விருத்தசேதனம் செய்யலாமென்று மோசே ஓய்வுநாட் பிரமாணத்தை மாற்றினதுபோலவே நான் ஒருவனது சுகத்திற்காக ஓய்வுநாட் பிரமாணத்தை மீறிநடப்பது குற்றமன்றே என்று சேர்க்கவும். மனிதர் திட்டமான சட்டங்களை அனுசரித்தல் பிரமாணத்திற்கு மதிப்பு காட்டுகிறதில்லை. அதின் சின்மய நோக்கங்களை அனுசரித்தலே அதிக மதிப்பு செய்வதாம் என்பதென்க.

24. "விவேகபுத்தியானது புறம்பான தோலை யுருவிப்பார்த்து உள்வஸ்துவைச் சரேலென்று கிரகித்துக்கொள்ளும் வாளெனின் காரியங்க ளெல்லாவற்றிலும் ஒருவன் கடவுளை நினைந்து நடந்தால் எந்நாளையும் பரிசுத்தநாளாக ஆசரித்துக்கொள்ளுகிறானென்று சொல்லல் வேண்டும்." (பராநந்தர்.)

### $7^{25-36}$. இயேசுவைக்குறித்த அபிப்பிராயங்கள்.

25 அப்பொழுது எருசலேம் நகரத்தாரில் சிலர்: இவனை
26 யல்லவா கொலைசெய்யத் தேடுகிறார்கள்?—இதோ,
இவன் தாராளமாய்ப் பேசுகிறானே, ஒருவரும் இவ
னுக்கு ஒன்றும்சொல்லுகிறதில்லையே, மெய்யாய் இவன்

கிறிஸ்துதான் என்று அதிகாரிகள் நிச்சயமாக அறிந்
27 திருக்கிறார்களோ?—இவன் இன்ன இடத்திலிருந்து
வந்தவனென்று நாம் அறிந்திருக்கிறோம், கிறிஸ்து
வரும்போதோ, அவர் இன்ன இடத்திலிருந்து வரு
கிறவரென்று ஒருவனும் அறியமாட்டானே என்
றார்கள்.
28 அப்பொழுது இயேசு தேவாலயத்தில் உபதேசிக்
கையில் சத்தமிட்டு: நீங்கள் என்னை அறிவீர்கள், நான்
எங்கேயிருந்து வந்தேனென்றும் அறிவீர்கள்; நான்
என் சுயமாய் வரவில்லை, என்னை அனுப்பினவர் சத்திய
29 முள்ளவர், அவரை நீங்கள் அறியாதிருக்கிறீர்கள்.—நான்
அவரால் வந்திருக்கிறபடியினாலும், அவர் என்னை
அனுப்பியிருக்கிறபடியினாலும், நானே அவரை அறிந்
திருக்கிறேன் என்றார்.
30 அப்பொழுது அவரைப் பிடிக்க வகைதேடினார்கள்;
ஆனாலும் அவருடைய வேளை இன்னும் வராதபடியி
னால் ஒருவனும் அவர்மேல் கைபோடவில்லை.
31 ஜனங்களில் அநேகர் அவரை விசுவாசித்து: கிறிஸ்து
வரும்போது: இவர் செய்கிற அற்புதங்களைப்பார்க்கிலும்
அதிகம் செய்வாரோ என்றார்கள்.
32 ஜனங்கள் அவரைக்குறித்து இப்படி முறுமுறுக்
கிறதைப் பரிசேயர் கேட்டபொழுது, அவரைப் பிடித்
துக்கொண்டு வரும்படிக்குப் பரிசேயரும் பிரதான
33 ஆசாரியரும் சேவகரை அனுப்பினார்கள்.—அப்பொழுது
இயேசு அவர்களை நோக்கி: இன்னும் கொஞ்சக்காலம்
நான் உங்களுடனேகூட இருந்து, பின்பு என்னை
34 அனுப்பினவரிடத்திற்குப் போகிறேன்.—நீங்கள் என்
னைத் தேடுவீர்கள், ஆனாலும் என்னைக் காணமாட்டீர்
கள்; நான் இருக்கும் இடத்திற்கு நீங்கள் வரவும் கூடாது
என்றார்.
35 அப்பொழுது யூதர்கள்: இவரை நாம் காணாதபடிக்கு
எங்கே போவார், கிரேக்கருக்குள்ளே சிதறியிருக்கிறவர்
களிடத்திற்குப் போய், கிரேக்கருக்கு உபதேசம்பண்ணு
36 வாரோ? — நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனாலும்
என்னைக் காணமாட்டீர்கள் என்றும், நான் இருக்கும்
இடத்துக்கு நீங்கள் வரக்கூடாதென்றும், இவர் சொன்ன
வார்த்தையின் கருத்து என்னவென்று தங்களுக்குள்ளே
சொல்லிக்கொண்டார்கள்.



**அவர் கிறிஸ்து என்பதற்கு ஜனங்களது ஆட்சேபனைகள். 7 25-36.**

27. மேசியா திடீரென்று தோன்றுவாரென்றும் அவர் எங்கேயிருந்து வந்தாரென்று சொல்லுவாரின்றி தோன்றுவாரென்றும் யூதர் எண்ணிக்கொண்டார்கள். ஆகையால் இயேசு நாசரேத்தாரானென்று நினைத்து இவர் மேசியாவாயிருக்க முடியாதென்று ஆட்சேபித்தார்கள்.

28. **சத்தமிட்டு**—அல்லது சத்தமாய்க் கூறி அதாவது ஜனங்கள் நன்றாய்க் கவனிக்கும்படி அழுத்திக் கூறி. ஜனங்கள் புறம்பான விஷயமாய் அவரின்னாரென்றும் அவர் எங்கேயிருந்து வந்தாரென்றும் அறிந்தும் அவரை அனுப்பினவரை அறியவில்லை. அவர் வந்த தின்மய நோக்கம் அவர்களுக்குத் தெரியாமலேயிருந்தது.

**சத்தியமுள்ளவர்** — என்பதற்கு உண்மையாயிருப்பவரென்பது நன்று. என்னை யனுப்பினவர் ஒருவருண்டென்று அர்த்தமாம்.

30–31. அநேகர் அவரை விசுவாசியாமல் அவரைப் பிடிக்க விரும்பினார்கள். இவர்கள் எருசலேம் பட்டணத்தாரென்றறியலாம். (25.)

வேறு சிலரோ அவரை விசுவாசித்தார்கள். இவர்கள் மற்ற நாடுகளிலிருந்து வந்த பிரயாணிகளென்று நினைக்கலாம்.

32. பரிசேயாது பகை கிரியை செய்யத் துவக்கினது. இதுவரைக்கும் அவர்கள் சும்மா விரோதித்தார்கள். இப்போது விரோதமான செய்கைகளைச் செய்யவும் ஆரம்பிக்கிறார்கள்.

**பரிசேயரும் பிரதான ஆசாரியரும்**—இவ்விதமாய் எப்போதும் ஆசிரியன் யூதசங்கத்தைக் குறித்துக் காட்டுகிறான். அதில் பரிசேயர் குலத்துப் பெரியோரும் பிரதான ஆசாரியரது குடும்பத்தலைவரும் ஆகிய இரண்டு வகுப்புகள் இருந்தன.

33. **கொஞ்சக்காலம்**—இன்னும் ஆறுமாத மிருந்தது.

**போகிறேன்**—விட்டுப்போகிறேன் என்றெழுக.

34. **நீங்கள் என்னைத் தேடுவீர்கள்**—ஜனங்கள் அவரைப்பற்றி யோசித்து மனவருத்தத்துடன் இவர் நல்லவரோ அல்லவோ என்று சந்தேகித்தார்கள்.

**நான் இருக்கும் இடத்திற்கு**— அவர் பரம தந்தையுடன் ஐக்கிய சகவாசத்திலிருப்பார். அவர்கள் இவ்வண்ணமாயிருத்தல் கூடாது.

35. **சிதறியிருக்கிறவர்கள்**—உபா $28^{25}$ அப் $15^{21}$ யாக் $1^{1}$ 1 பேது $1^{1}$ காண்க. இந்தப் பெயராலும் சிறைப்பட்டவர்களென்னும் பெயராலும் மற்ற தேசங்களில் போயிருந்த யூதர்களைக் குறித்தார்கள். இயேசுவின் வார்த்தைகளை இப்படிச் சொற்பொருளுக்குட்பட்ட விதமாய்மட்டும் எண்ணினார்கள். அவர் கிரேக்கரிடம் போய்ப் போதிப்பது சிரிப்புக்கிடமாக நினைத்திருந்தும் பிறகு சுவிசேஷ பிரபல்யம் அவ்வண்ணமாகவே சென்றது.

### $7^{37-44}$. இயேசுவே ஜீவ நீர்.

37 பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே
இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால்
38 என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.—வேத
வாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா
யிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்
39 தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.—தம்மை விசுவா
சிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து
இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்
படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்
படவில்லை.
40 ஜனங்களில் அநேகர் இந்த வசனத்தைக் கேட்ட
பொழுது: மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர் என்
41 றார்கள்.—வேறு சிலர்: இவர் கிறிஸ்து என்றார்கள்.
வேறு சிலர்: கிறிஸ்து கலிலேயாவிலிருந்தா வருவார்?—
42 தாவீதின் சந்ததியிலும், தாவீது இருந்த பெத்லகேம்
ஊரிலுமிருந்து கிறிஸ்து வருவார் என்று வேதவாக்
43 கியம் சொல்லவில்லையா என்றார்கள்.—இவ்விதமாக
அவரைக்குறித்து ஜனங்களுக்குள்ளே பிரிவினை யுண்
44 டாயிற்று.—அவர்களில் சிலர் அவரைப் பிடிக்க மனதா
யிருந்தார்கள்; ஆகிலும் ஒருவனும் அவர்மேல் கைபோட
வில்லை.

### கடைசிநாளில் அவர் செய்த பிரசங்கம். $7^{37-44}$.

37. **கடைசிநாளாகிய பிரதானநாளிலே**—பண்டிகை ஏழுநாட்களாய்க் கொண்டாடப்பட்டது. எட்டாம்நாளை ஒரு விசேஷித்த ஓய்வுநாளாகக் கொண்டாடினார்கள். கூடாரப்பண்டிகை இஸ்ரவே



லரது பிரயாணங்களையும் எட்டாம்நாள் அவர்கள் கானான்தேசத்தை யடைதலையும் கொண்டாடினதாகச் சொல்வா ரநேகர். லேவி $23^{36}$ எண் $29^{35}$ நெகே $8^{18}$. இந்தப் பண்டிகைகளில் ஒவ்வொருநாட் காலையில் ஆசாரியரும் ஜனங்களும் சீலோவாம் குளத்திற்குப் போய் அதில் தண்ணீர்மொண்டு தேவாலயத்திற்குச் சந்தோஷபவனியாகக் கொண்டு வந்து பலிபீடத்தின்மேல் ஊற்றினார்களாம். இந்தச் சடங்கு வனாந்தரத்தில் கற்பாறையில் தண்ணீர் வாங்கினதைக்குறித்துக் காட்டினது. தண்ணீர் ஊற்றும்போது ஏசாயா $12^{3}$ பார்க்கிறார்கள். இயேசு சொன்ன வார்த்தைகள் இந்தச் சடங்குடன் சம்பந்தமுள்ளன. கடவுள் எப்படி தெய்வீகமாய் இஸ்ரவேலருக்கு வனாந்தரத்தில் தண்ணீர் கொடுத்தாரோ அவ்வண்ணமாய் இப்போது திருப்தியில்லாத ஜனங்களுக்கு ஆத்தும சந்தோஷத்தை இயேசுமூலமாய்க் கொடுத்துவருகிறாரென்றர்த்தமாம்.

39. இந்த வார்த்தை இயேசுவின் சீஷர் பரிசுத்தாவியைப் பெறுதலைக் குறித்ததாக ஆசிரியன் நினைக்கிறான். இயேசு தமது வேலையை எல்லாம் முடித்தபிறகு சீஷர் இந்த ஆவியைப் பெற்றார்கள். இயேசுவே இந்தச் சமயத்தில் இதெல்லாம் நினைத்தாரென்று எண்ணக் கூடாது. அவ்விதமாய் நடந்ததெனினும் இயேசு இவ்விடத்தில் ஒரு பொதுவான சத்தியத்தைமாத்திரங் கூறினார். என்னவெனில், அவரது ஆவியைப் பெற்றவர் மறுபடியும் அதை உலகத்திற்குக் கொடுப்பவராவார்.

**மகிமைப்படாதிருந்த**—இந்த வார்த்தையால் நம்மாசிரியன் இயேசுவின் மாணுதிகளைக் காட்டுகிறான். $12^{23}$ $13^{31}$ $17^{15}$. பார்க்க.

40–44. ஜனங்களுடைய அபிப்பிராயத்தைப் பார்க்கிறோம்.

42. **வேதவாக்கியம்**—ஏசா $11^{1}$ எரே $23^{5}$ மீகா $6^{2}$. பார்க்க.

### $7^{45-52}$. விரோதமும் பட்சமும்.

45 பின்பு அந்தச் சேவகர் பிரதான ஆசாரியரிடத்திற்
கும் பரிசேயரிடத்திற்கும் திரும்பிவந்தார்கள். இவர்
கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை என் கொண்டு
46 வரவில்லை என்று கேட்டார்கள். — சேவகர் பிரதியுத்
தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும்
47 ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்.—அப்பொழுது

48 பரிசேயர்: நீங்களும் வஞ்சிக்கப்பட்டீர்களா?—அதிகாரி
களிலாவது பரிசேயரிலாவது யாதாமொருவர் அவனை
49 விசுவாசித்ததுண்டா?—வேதத்தை அறியாதவர்களாகிய
இந்த ஜனங்கள் சபிக்கப்பட்டவர்கள் என்றார்கள்.
50 இராத்திரியிலே அவரிடத்திற்கு வந்தவனும் அவர்
களிலொருவனுமாகிய நிக்கொதேமு என்பவன் அவர்
51 களை நோக்கி:—ஒரு மனுஷன் சொல்வதைக் கேட்டு,
அவன் செய்கைகளை அறிகிறதற்கு முன்னே, அவனை
ஆக்கினைக்குட்படுத்தலாமென்று நம்முடைய நியாயப்
52 பிரமாணம் சொல்லுகிறதா என்றான்.—அதற்கு அவர்
கள்: நீரும் கலிலேயனோ? கலிலேயாவிலிருந்து ஒரு
தீர்க்கதரிசியும் எழும்புகிறதில்லை என்பதை ஆராய்ந்து
பாரும் என்றார்கள்.

46. அந்த மனுஷன் பேசுகிறதுபோல் என்பதை யொழித்து எவ
னும் எப்போதும் அப்படிப் பேசவில்லை யென்றெழுதுக.

49. **வேதத்தை அறியாதவர்கள்**—பற்பல வியாக்கியானங்களைப் படித்து அகங்காரங்கொண்ட பரிசேயர் பொது ஜனங்களை இவ்விதமாய் இகழ்ந்து பேசுவது வழக்கம்.

50. நிக்கொதேமு பரிசேயருக்கு நீதியின் சட்டத்தை யெடுத்துக் காட்டுகிறான். நிக்கொதேமு மிக்க தைரியசாலியென்று சொல்ல முடியாதெனினும் அவன் கோழையல்ல என்பது இச்சம்பவத்தால் விளங்கும்.

52. பரிசேயர் தங்களையே காப்பாற்றவேண்டுமென்றும் தங்கள் குலத்திலும் தேசத்திலும் பிறக்காமலும் தங்கள் பாடசாலையில் படிக்காமலுமிருந்த அவனைத் தொலைக்கவேண்டுமென்றும் எப்போதும் விரும்பினார்கள். எனினும் யோனா கலிலேயா தேசத்தானான் என்று பார்க்க. 2 இரா $14^{25}$.

### $7^{53}$–$8^{11}$. இயேசுவின் இரக்கமான நீதி.

53 பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்
கள்.
1,2 இயேசு ஒலிவமலைக்குப் போனார்.—மறுநாள் காலை
யிலே அவர் திரும்பி தேவாலயத்திற்கு வந்தபோது,



ஜனங்களெல்லாரும் அவரிடத்தில் வந்தார்கள். அவர்
உட்கார்ந்து அவர்களுக்கு உபதேசம்பண்ணினார்.
3 அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட
ஒரு ஸ்திரீயை வேதபாரகரும்பரிசேயரும் அவரிடத்தில்
4 கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி:—போதகரே,
இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்
5 கப்பட்டாள்.—இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து
கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்
தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே. நீர் என்ன
6 சொல்லுகிறீர் என்றார்கள்.—அவர்மேல் குற்றஞ்சுமத்து
வதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச்
சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ
குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார்.
7 அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்
கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்
லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன்
8 என்று சொல்லி,—அவர் மறுபடியும் குனிந்து, தரை
9 யிலே எழுதினார்.—அவர்கள் அதைக் கேட்டு, தங்கள்
மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்
முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப் போய்
விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ
10 நடுவே நின்றாள்.—இயேசு நிமிர்ந்து அந்த ஸ்திரீயைத்
தவிர வேறொருவரையுங் காணாமல்: ஸ்திரீயே, உன்
மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும்
உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார்.—
11 அதற்கு அவள்: இல்லை, ஆண்டவரே, என்றாள்.
இயேசு அவளை நோக்கி: நானும் உன்னை ஆக்கினைக்
குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ்
செய்யாதே என்றார்.

### விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீ. $7^{53}$-$8^{11}$.

இந்த வசனங்கள் ஆதிநூலில் வராமல் பிறகு சேர்க்கப்பட்டதென்பதற்குச் சந்தேகமில்லை. வேத வித்துவான்கள் யாவரும் இதை ஒப்புக்கொள்ளுவார்கள். இந்த அபிப்பிராயத்திற்கு வேண்டிய ருஜுக்கள் உண்டு. அவைகளைப் படிக்க விரும்புவோர் இங்கிலீஷ் வியாக்கியான நூல்களைப் பார்க்க. இந்தச் சரித்திரம் மூன்றாம் நூற்றாண்டில்

இந்நூலில் வந்ததுபோலிருக்கிறது. எனினும் பெரும்பான்மையோர் இது உண்மையான சம்பவமாயிருக்கலாமென்று நினைக்கிறார்கள்.

2. இந்தச் சம்பவம் இயேசு கடைசியாக எருசலேமுக்கு வந்த காலத்தில் நடந்ததுபோலிருக்கிறது. லூக் 20, 21 மத் 22. பார்க்க.

3. **வேதபாரகரும் பரிசேயரும்** — இவர்கள் யூதரென்று சொல்லப்பட்டவர்கள்.

5. மரணாக்கினை கொடுக்கவேண்டுமென்று அவர் சொன்னால் அது ரோம அதிகாரத்திற்கு விரோதமாய் நடப்பித்தலாம். அப்படியல்லாமல் மரணாக்கினை அவசியமில்லையெனின், அது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாமென்று எண்ணியிருப்பார்கள்.

6. **எழுதினார்**—தாம் பிறர் சொன்னதையே ஒரு தீர்ப்புபோல் எழுதியிருப்பார் சிலர். வேறு சிலர் தாம் அவர்களைக் கேட்க விரும்பவில்லை என்று காண்பிக்க, சும்மா வெழுதியிருப்பாரென்பார்.

7. இந்தச் சங்கதி நியாயப்பிரமாணத்திற்குரிய சங்கதியல்ல. இது மனச்சாட்சிக்குரியதென்று காண்பிக்கவும், அவர்களது சோதனையை ஜெயிக்கவும் இவ்வண்ணமான உத்தரவு கொடுத்தார்.

11. **நானும் உன்னைத் தீர்க்கிறதில்லை**—இந்த வார்த்தைகள் மன்னிப்பின் வார்த்தைகளல்ல. விடினும் அவர் பிறகு ஒரு உற்சாக வார்த்தையைப் பேசியனுப்பினார். இது மகா அருமையான சரித்திரம். இதில் அதிசயமாய் யூதாது குரோதத்தை ஜெயித்தார். அதிக யுக்தியோடும் அன்போடும் இயேசு இந்தப் பெண்ணுக்கு நன்னெறியைக் காட்டினார்.

### இயேசு திவ்விய அதிகாரமுள்ள போதகர். 8[12-59].

1. அவரே உலகத்துக்குச் சுத்த ஞான சொரூபம். 8[12].
2. அவரது போதனை உண்மையாயிருக்கிறது. 8[13-17].
அதற்குத் தகுந்த அத்தாட்சிகளுண்டு.
3. அவர் இன்னாரென்று அறிவிக்கப்பட்டது. 8[21-29].
யூதர்கள் அவரை ஏற்றுக்கொள்ளாமையால் அவர்கள் அடைந்த பலன் தெரிவிக்கப்பட்டது.
4. உண்மையான சுயாதீனமும் தேவபுத்திரத்துவமும். 8[31-59].
அவைகள் யூதருக்குரியனவல்ல.



### 8[12-30]. இயேசுவே ஞானஒளி.

12 மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: நான் உல
கத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிற
வன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்
பான் என்றார்.
13 அப்பொழுது பரிசேயர் அவனை நோக்கி: உன்னைக்
குறித்து நீயே சாட்சி கொடுக்கிறாய்; உன்னுடைய
சாட்சி உண்மையானதல்ல என்றார்கள்.
14 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைக்
குறித்து நானே சாட்சி கொடுத்தாலும், என் சாட்சி
உண்மையாயிருக்கிறது; ஏனெனில் நான் எங்கே
யிருந்து வந்தேனென்றும் எங்கே போகிறேனென்றும்
அறிந்திருக்கிறேன்; நீங்களோ நான் எங்கேயிருந்து
வருகிறேனென்றும், எங்கே போகிறேனென்றும் அறி
15 யீர்கள். — நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்
கிறீர்கள், நான் ஒருவனையும் நியாயந்தீர்க்கிறதில்லை;—
16 நான் நியாயந்தீர்த்தால், என் தீர்ப்பு சத்தியத்தின்படி
யிருக்கும்; ஏனெனில் நான் தனித்திருக்கவில்லை,
நானும் என்னை அனுப்பின பிதாவுமாக இருக்கிறோம்.—
17 இரண்டுபேருடைய சாட்சி உண்மையென்று உங்கள்
18 நியாயப்பிரமாணத்திலும் எழுதியிருக்கிறதே. — நான்
என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவனாயிருக்கிறேன்,
என்னை அனுப்பின பிதாவும் என்னைக்குறித்துச் சாட்சி
கொடுக்கிறார் என்றார்.
19 அப்பொழுது அவர்கள்: உம்முடைய பிதா எங்கே
என்றார்கள். இயேசு பிரதியுத்தரமாக: என்னையும் அறி
யீர்கள், என் பிதாவையும் அறியீர்கள்; நீங்கள் என்னை
அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிவீர்கள் என்
றார்.
20 தேவாலயத்திலே இயேசு உபதேசம்பண்ணுகிற
போது, தருமப்பெட்டியிருக்கும் இடத்தில் இந்த வச
னங்களைச் சொன்னார். அவருடைய வேளை இன்னும்
வராதபடியினால் ஒருவனும் அவனைப் பிடிக்கவில்லை.
21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நான் போகி
றேன், நீங்கள் என்னைத் தேடி உங்கள் பாவங்களிலே
சாவீர்கள்; நான் போகிற இடத்துக்கு வர உங்களால்
கூடாது என்றார்.

22 அப்பொழுது யூதர்கள்: நான் போகிற இடத்துக்கு
வர உங்களால் கூடாது என்கிறானே, தன்னைத்தான்
கொலைசெய்துகொள்வானோ என்று பேசிக்கொண்டார்
கள்.
23 அவர் அவர்களை நோக்கி: நீங்கள் தாழ்விலிருந்துண்
டானவர்கள், நான் உயர்விலிருந்துண்டானவன்; நீங்
கள் இந்த உலகத்திலிருந்துண்டானவர்கள், நான் இந்த
24 உலகத்திலிருந்துண்டானவனல்ல.—ஆகையால் நீங்கள்
உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச்
சொன்னேன்; நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா
விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.
25 அதற்கு அவர்கள்: நீர் யார் என்றார்கள். இயேசு
அவர்களை நோக்கி: நான் ஆதிமுதலாய் உங்களுக்குச்
26 சொல்லியிருக்கிறவர்தான்.—உங்களைக்குறித்துப் பேச
வும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு.
என்னை அனுப்பினவர் சத்தியமுள்ளவர்; நான் அவரி
டத்தில் கேட்டவைகளையே உலகத்துக்குச் சொல்லுகி
27 றேன் என்றார்.—பிதாவைக்குறித்துப் பேசினாரென்று
அவர்கள் அறியாதிருந்தார்கள்.
28 ஆதலால் இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷ
குமாரனை உயர்த்தினபின்பு, நானே அவரென்றும்,
நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா
எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்
29 என்றும் அறிவீர்கள்.—என்னை அனுப்பினவர் என்னு
டனேகூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவை
களை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்
னைத் தனியேயிருக்க விடவில்லை என்றார்.
30 இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரி
டத்தில் விசுவாசம் வைத்தார்கள்.

12. இயேசுவே உலகத்திற்குச் சுத்த ஞான சொரூபம். அவர் இவ்விதமாய்த் தம்மை தேவாலயத்தில் கூறினார். அவர் ஒளியென்னும் உருவகத்தால் இதை வெளிப்படுத்தினார்.

**மறுபடியும்**—இது $7^{52}$-ம் வசனத்தோடு சம்பந்தமுள்ளது.

**ஒளி**—இந்தக் கூடாரப்பண்டிகையில் அவர்கள் தேவாலயத்திலும் வீதிகளிலும் பற்பல தீபங்களை வைத்துக் கொளுத்தினார்கள். இது தீபாவளி பண்டிகைபோலிருந்தது. இந்தத் தீபங்களினால்



வனாந்தரத்தில் வழிநடத்தின தீபஸ்தம்பத்தைச் சுட்டிக் காட்டினார்கள். அவரே தம்மைச் சார்ந்தோர்க்கு ஞானவொளியாகி அவர்களது அஞ்ஞானவிருளை யகற்றுகிறவர்.

"சற்குருவாகிய கிறிஸ்து ஆத்துமாவினிருளை நீக்கி ஞானவெளிச்சமுண்டாக்கி கடவுளுடன் சேர்க்க வல்லவரென்றறிக." (பாரகந்தர்.)

சிவஞானசித்தியார் பின்வருமாறு பாடினதைக் கேட்க.

அருளது சத்தி யாகு மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச் சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு மிரவியைப் போல வீசன். (a)

சுத்தமாஞ் சத்தி ஞானச் சுடராகுஞ் சிவமொ ழிந்தச்
சத்திதா னின்று முன்னைத் தகவிலா மலங்கள் வாட்டி
யத்தனை யருளு மெங்கு மடைத்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும் வானொளி போன்ம ழிந்தே (b)

என்று சிவப்பிரகாசர் சொன்னதையும் பார்க்க.

## அவரது போதனை உண்மையாயிருக்கிறது. $8^{13-19}$.

பரிசேயர் அவர் போதனையை மறுக்கிறார்கள். ஆகையால் இயேசு தாம் போதித்த அதிகாரத்தைக் காண்பித்தார். அவரது சாட்சி உண்மை. ஏனெனின், அவர் தம்மை யறிவார். $8^{13, 14}$.

அவருடைய தந்தையுங்கூட சாட்சி கொடுக்கிறார். $8^{15-18}$.

யூதர்கள் அவரையும் அவருடைய தந்தையையும் அறியாமையால் அவரது போதனையை ஏற்றுக்கொள்ளவில்லை. $8^{19}$.

---

(a) அருளானது கடவுளது சத்தியாமே. கடவுளுக்கு அருளில்லாவிடின் தெளிந்த சித்தானந்தமுமில்லை. அந்தச் சித்தானந்தமின்றியே சத்தியுமிராது. கண்களது இருளைத் தனது கிரணங்களால் அகற்றிவிடும் சூரியனைப்போல் பகவான் அஞ்ஞானத்தை அருளால் நீக்கி மனிதர்க்கு அருளைத் தருவான்.

(b) பரிசுத்த சத்தியானது ஞானவொளியாம். சிவத்தை யொழிந்து சத்தி தனித்தாகமாட்டாது. எங்கும் மூடுகிற இருளை யகற்றி சூரியனைக் காட்டும் பேரொளியைப்போல் முன்னமே மயக்கின இமைகளை நீக்கிச் சிவனைக் காட்டும்.

19. **உம்முடைய பிதா எங்கே**—இது சிரிப்புக்கிடமாகச் சொல்லப்பட்டது. அவர்க ளிப்படி உண்மையான மனத்துடன் கேட்கவில்லை.

20. **தருமப்பெட்டி யிருக்கும் இடத்தில்**—இந்த இடத்தில் ஜனங்களெல்லாரும் தங்கள் காணிக்கைகளைக் கொண்டுவந்து போட்டார்கள். இது ஸ்திரீகளின் பிராகாரத்தின் பக்கத்திலிருந்தது. அந்தப் பிராகாரத்தில் அவர்கள் விளக்குத்தண்டுகள் வைத்து இந்தப் பண்டிகையில் விசேஷமாய்க் கொளுத்தினார்கள். யூதப் பிரதான சங்கம் அதற்குச் சமீபமாய்க் கூடினது.

## அவரின்னாரென்று காண்பிக்கப்பட்டது. ௮ 21-29.

யூதர்களது பயங்கரமான நிலைமை. அவர்கள் லௌகீக குணத்தாராதலின் அவரை இன்னாரென்று அறியாமலிருந்தார்கள். ௮ 21-24.

அவர் உண்மையாய்த் தந்தையிடத்திலிருந்து வந்தவர். ௮ 25-27.

அவர் செய்கை யாவும் தந்தையின் சித்தத்திற் கிசைவுள்ளன. ௮ 28. 29.

21. **மறுபடியும்**—தமது வாழ்நாள் சீக்கிரத்தில் முடிவு பெறுமென்றறிந்து அவரவர்களுக்கு எச்சரிக்கை சொன்னார். அவர்கள் பாவம் செய்து மரணமடைதல் பயங்கரமானதென்று காண்பித்தார்.

23. அவர்களுக்கும் தமக்குமுள்ள குணவிபரீதத்தைக் காண்பித்தார். அவர்கள் விரோதத்திற்கும் அறியாமைக்கும் அவிசுவாசத்திற்கும் இந்த விபரீதமே காரணம். அவர்களது ஜீவியத்தின் மூலாதாரம் லௌகீகப் பொருளிலேயே யிருந்தது. அவர்கள் லௌகீக நோக்கங்களைக்கொண்டே ஜீவித்தார்கள்.

24. ஜீவனுக்கு விசுவாசம் அவசியமென்றும், அவிசுவாசமிருந்தால் அவர்கள் பாவத்துடன் சாவார்களென்றும் திட்டமாய் அவர்களுக்கு எச்சரிக்கை பண்ணினார்.

25. **நீர் யார்** — நானே அவரென்று இயேசு இரகசியமாய்ச் சொன்னார். நானே மேசியாவென்று அவர் சொல்லும்படி அவர்கள் இவ்விதமாய்க் கேட்டார்கள்.

**நான் ஆதிமுதலாய் உங்களுக்குச் சொல்லியிருக்கிறவர்தான்**—மூலபாஷைக்கு இரண்டு மொழிபெயர்ப்புகள் சொல்லப்பட்டன.



(1) நான் உங்களுக்கு ஆதிமுதலாய்ச் சொன்னதுதானே. என்னவெனில், நான் யாரென்று நீங்கள் அறிய விரும்பினா லென் உபதேசத்தை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்பதும்.

(2) நான் உங்களுடன் பேசுவானேன்? நீங்கள் முற்றிலு மென்னை யறியாதிருக்கிறீர்கள். ஆகையால் நான் உங்களுடன் பேசுவதால் பிரயோஜனமேது என்பதும்.

26. அவர் சொன்னது எல்லாம் தாமே சுயம்பாகச் சொல்லாமல் பரம தந்தையிடமே பெற்றுக் கட்டாயமாய்ச் சொல்லவேண்டியதாயிற்று.

28. **நீங்கள்** — அவர்களே தம் மரணத்தில் பங்குபெறுவார்களென்று காட்டுகிறார். அதற்குப்பிறகு அவரது உண்மையான தன்மையும் பரம தந்தையுட னிராகின்ற அவரது ஐக்கியப்பாடும் விளங்கும்.

29. பரம தந்தை யவரை அனுப்பினதுடன் எப்போது மவருடன் கூட இருக்கிறார்.

30. அவர் இவ்வளவு தெளிவாய்ப் பேசினபோதிலும் அநேகரவரை விசுவாசித்தது அவர் மாசில்லா குணத்திற்குச் சரியான அத்தாட்சி. இவர்களி லநேகருடைய விசுவாசம் ஆழ்ந்த கருத்துள்ளதல்லவென்று பின்நடந்த சங்கதியா லறியலாம்.

## உண்மையான சுயாதீனமும் தேவ புத்திரத்துவமும். ௮ 31-59.

கிறிஸ்துவின் சீஷருக்கு உண்மையான விடுதலையுண்டு. ௮ 31. 32.

பாவம் செய்பவனுக்கு விடுதலையில்லை. ௮ 34-36.

மேன்மையான வம்சத்தின் தன்மை செய்கையிலே தோன்றுகிறது. ௮ 37-41.

யூதர்கள் ஆபிரகாமுக்குரிய கிரியைகளைச் செய்யாமையால் அவர்கள் அவரது சந்ததியல்ல.

கடவுளின் வம்சத்தார் இயேசுவை விரும்புவார்கள். ௮ 42-47.

யூதர்கள் சத்தியத்தை விரும்பாமையால் பிசாசின் சந்ததியானார்கள்.

கிறிஸ்து பரமதந்தையை மகிமைப்படுத்துகிறார். ௮ 44-55.

பரமதந்தை கிறிஸ்துவை மகிமைப்படுத்துகிறார்.

இயேசு முன்காலங்களில் எப்போது மிருந்திருப்பவர். ௮ 56-58.

இதிலே இயேசு தமது உன்னத நிலைமையை அதிகத் தெளிவுடன் விவரித்துக் காண்பித்தார்.

## 8[31-47]. சுயாதீனமும் தேவ புத்திரத்துவமும்.

31 இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி:
நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யா
32 கவே என் சீஷராயிருப்பீர்கள்;—சத்தியத்தையும் அறி
வீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.
33 அவர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: நாங்கள் ஆபி
ரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும்
ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை; விடுதலையா
வீர்களென்று நீர் எப்படிச் சொல்லுகிறீர் என்றார்கள்.
34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: பாவஞ்
செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கி
றான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்
35 சொல்லுகிறேன். — அடிமையானவன் என்றைக்கும்
வீட்டிலே நிலைத்திரான்; குமாரன் என்றைக்கும் நிலைத்
36 திருக்கிறார்.—ஆகையால் குமாரன் உங்களை விடுதலை
37 யாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.—நீங்கள்
ஆபிரகாமின் சந்ததியாரென்று அறிவேன்; ஆனாலும்
உங்களுக்குள்ளே என் உபதேசம் இடம்பெறாதபடி
38 யால், என்னைக் கொலைசெய்யத் தேடுகிறீர்கள்.—நான்
என் பிதாவினிடத்தில் கண்டதைச் சொல்லுகிறேன்,
நீங்களும் உங்கள் பிதாவினிடத்தில் கண்டதைச் செய்
கிறீர்கள் என்றார்.
39 அதற்கு அவர்கள்: ஆபிரகாமே எங்கள் பிதா என்
றார்கள்.
இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின்
பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்
40 வீர்களே.—தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை
உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்
லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்
41 லையே.—நீங்கள் உங்கள் பிதாவின் கிரியைகளைச் செய்
கிறீர்கள் என்றார்.
அதற்கு அவர்கள்: நாங்கள் வேசித்தனத்தினால் பிறந்
தவர்களல்ல; ஒரே பிதா எங்களுக்குண்டு, அவர் தேவன்
என்றார்கள்.
42 இயேசு அவர்களை நோக்கி: தேவன் உங்கள் பிதாவா
யிருந்தால் என்னிடத்தில் அன்பாயிருப்பீர்கள். ஏனெ
னில் நான் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறேன்;



நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பி
43 னார். — என் வசனத்தை நீங்கள் ஏன் அறியாமலிருக்கி
றீர்கள்? என் உபதேசத்தைக் கேட்க மனதில்லாதிருக்
44 கிறதினால் அல்லவா?—நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசா
சானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய
இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன்
ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாயிருக்கி
றான்; சத்தியம் அவனிடத்தி லில்லாதபடியால் அவன்
சத்தியத்திலே நிலைநிற்கவில்லை; அவன் பொய்யனும்
பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால் அவன் பொய்
பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்.-
45 நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்லுகிறபடியி
46 னாலே நீங்கள் என்னை விசுவாசிக்கிறதில்லை.—என்னி
டத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக்
குற்றப்படுத்தக்கூடும்? நான் சத்தியத்தைச் சொல்லி
யிருக்க, நீங்கள் ஏன் என்னை விசுவாசிக்கிறதில்லை.—
47 தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்க
ளுக்குச் செவிகொடுக்கிறான்; நீங்கள் தேவனால் உண்
டாயிராதபடியினால் செவிகொடாமலிருக்கிறீர்கள் என்
றார்.

**31.** இயேசு இப்பொழுது வேறே ஆட்களைப் பார்த்து பிரசங்கம் பண்ணுகிறார். ஒருவேளை அவர்முன்னே பிரசங்கித்த பிரயாணிகள் எருசலேமை விட்டுப் போய்விட்டிருக்கலாம். ஏனென்றால், அவர் இப்போது பார்த்துப் பேசுகிறவர் யூதர்கள். அதாவது எருசலேம் பட்டணத்தார். ஒருவேளை இது மறுநாளில் பிரசங்கிக்கப்பட்டிருக்கலாம். இயேசு இப்போது தம்மை விசுவாசித்தோருக்கு இன்னம் ஆழ்ந்த போதனையைக் கொடுக்கிறார். அவர்கள் இவரை உண்மையாய் விசுவாசிப்பார்களோ இல்லையோ என்பது இதினாலேயே தெரியவரும்.

**நிலைத்திருந்தால்** — அவரது உபதேசத்தில் நிலைபெற்று மனம் வைத்துத் தியானஞ்செய்து வரவேண்டும். இதனால்மாத்திரம் அவர்கள் இயேசுவின் சீஷராகக்கூடும்.

**32.** அப்படிச் செய்தால் சிறந்த சத்தியத்தை யடைவார்கள். அதை அடைந்தவுடன் உண்மையான சுயாதீனமுடையவர்களாவார்கள். கிரேக்கு சாஸ்திரிகள் ஞானமுள்ளவன்மட்டுமே சுயாதீனமுடையவ

னென்றார்கள். மற்றப்படி யவர்கள் ஆத்ம விடுதலை யடையாமல் அஞ்ஞானத்தின் அடிமைத்தனத்தி லிருப்பார்கள். இது சித்தாந்த போதனை. இவன் முத்தன் என்னப்பட்டவன், அதாவது பூரண ஞானமுள்ளவன்.

> "திரிமல மறுத்துப் பண்டைச் சிற்றறி வொழிந்து ஞானம்
> பெருகிநா யகன்றன் பாதம் பெறுவது சுத்த மாமே" (a)

என்று சிவஞானசித்தியார் பாடியதைக் காண்க.

33. யூதர்கள், பாபிலோன் அசீரியா ரோமை முதலிய தேசங்களுக்குக் கீழடங்கிப்போனபோதிலும் அவர்கள் இச்சமயத்தில் இவைகளைப்பற்றி நினைக்காமல் தங்கள் பொதுஜனவிஷயமாய் அடிமைகளா யிருக்கமாட்டார்களென்று நினைத்தே சொன்னார்கள். அவர்கள் வம்சத்தின் கர்வம் ஏறிப் பொங்கினது. இஸ்ரவேலர் தங்களை இராஜாக்களின் மக்கள் என்றார்கள்.

பாவஞ்செய்வோனுக்கு விடுதலையில்லை. 8[34-36].

லௌகிகப் பிரகாரமாய் அடிமைத்தன மில்லாவிடினும் ஆத்மப் பிரகாரமான அடிமைத்தன மிருக்கலாம்.

பாவஞ்செய்தலால் பாவத்துக்கு அடிமையாதலுண்டு. 8[34].

கடவுளது சிலாக்கியங்களும் ஆசீர்வாதங்களும் புத்திரருக்கு எப்போதும் இருப்பதேயொழிய அடிமைகளுக்குக்* கிடைக்காமல் போகும். 8[35].

தேவகுமாரனால் விடுதலை பெற்றால் அது உண்மையான சுயாதீனமாம். 8[36].

35. **வீட்டிலே** — வீடு என்றலால் கடவுள் குடும்பத்திற்குரிய ஆசீர்வாதங்களையும் சிலாக்கியங்களையுங் காண்பித்தார்.

யூதர்கள் தங்களைக் கடவுள் குடும்பத்தாரென்றெண்ணி அதற்குரிய பாக்கியங்கள் யாவும் எப்போதும் அவர்களுடையதென்று கர்வத்துடன் நம்பினார்கள்.

---

(a) திரிமலங்களை நீக்கி பழைய அஞ்ஞானம் ஒழிந்து ஞானம் பெருகிக் கடவுளது பாதங்களை யடைவது சுத்த நிலைமையாம்.



36. **மெய்யாகவே** — இப்போது தங்களுக்கு விடுதலை யுண்டென்றெண்ணினது உண்மையானதல்ல. வீட்டுக்குச் சொந்தமானவனாகிய புத்திரனே உண்மையான விடுதலையைக் கொடுக்கக்கூடும்.

மேன்மையான வம்சத்தின் தன்மை செய்கையிலே தோன்றுகிறது. 8[37-41].

யூதர்கள் தங்களை ஆபிரகாமின் மக்கள் என்றார்கள். அதற்கு இயேசு வம்சம் செய்கையிலே காணப்படும் என்றார்.

சரீரப்பிரகாரமாய் அவர்கள் வம்சம் ஆபிரகாமின் வம்சம். 8[37].

யாவரும் வம்சத்துக்கேற்ற செய்கைகளைச் செய்வார்கள். 8[33].

அவர்கள் ஆபிரகாமுக்குரிய செய்கைகளைச் செய்யாமையால் அவர்களை ஆபிரகாமின் மக்களென்று சொல்லக்கூடாது. 8[37-40].

ஆகையால் இவர்கள் வேறே வம்சத்தாராயிருக்கவேண்டும். 8[41].

38. **என் பிதாவினிடத்தில் கண்டதை** — இயேசுவுக்குக் கடவுளைக் கண்ட தரிசனம் இருந்ததாக அடிக்கடி இந்நூலில் சொல்லப்பட்டது. இதினால் அவருக்கும் யூதருக்கும் அதிக வித்தியாசமுண்டு. இப்போது அவர் அவர்களுடைய தந்தை இன்னாரென்று சொல்லவில்லை. பிறகு திட்டமாய்ச் சொன்னார்.

41. **ஒரே பிதா** — இப்பொழுது சரீரப்பிரகாரமாய்த் தாங்கள் எப்படிச் சுத்தமாய் ஆபிரகாமின் வம்சத்தார்களானார்களோ அப்படியே சின்மயவிதமாய்த் தாங்கள் சுத்தமாய்க் கடவுள் வம்சத்தாரென்று சாதிக்கிறார்கள்.

கடவுள் வம்சத்தார் இயேசுவை விரும்புவார்கள். 8[42-47].

கடவுள் வம்சத்தாருக்கு விசேஷித்த குறிப்பு யாதெனில்.

இயேசுவை விரும்புதல்தானே. ஏனென்றால் இயேசுவே கடவுளா லனுப்பப்பட்டவர். 8[42].

அவர்கள் அவர் சொன்னதைக் கேளாமையால் கடவுள் வம்சத்தாரல்ல. 8[43].

பிசாசின் வம்சத்தாருக்குரிய குறிப்புகளாகிய கொலையும் பொய்யும் அவர்களுக் கிருந்ததால் அவர்கள் பிசாசின் வம்சத்தார்களானார்கள். 8[44-46].

இக்காரணத்தினால்தான் அவர்கள் தேவ வார்த்தைகளைக் கேட்கிறதில்லை. 8[47].

42. இயேசு நன்னெறிக்குரிய பிரமாணத்தால் அவர்களது வார்த்தைகளைப் பரிசோதித்தார்.

44. இப்போது இயேசு அவர்களுடைய தந்தை இன்னுரென்று திட்டமாய்ச் சொல்லுகிறார். அவனுக்குப் பொய் உண்டாக்குதல் இயற்கையாயிருக்கின்றது.

**46. என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்**—அவருக்குக் குற்றமிருக்குமிடத்து அவர்கள் இவரது வார்த்தைகளைச் சமுசயத்துடன் கேட்க இடமுண்டு.

**நான் சத்தியத்தைச் சொல்லியிருக்க**—நான் சத்தியத்தைச் சொல்லின் என்றிருப்பது நல்லது. ஜனங்கள் ஒன்றையும் பேசாமையானது அவரிடத்தில் குற்றமில்லையென்று சம்மதிப்பதற்குச் சரியாயிருந்தது.

**47. நீங்கள் தேவனால் உண்டாயிராதபடியினால்**—அவர்களது அவிசுவாசத்திற்கு இதுவே காரணமென்று சாதித்தார். அவர்கள் மனங் கடவுளுக் குரியதல்லாததால் இயேசு சொல்லுகிற கடவுளது வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாம லிருக்கிறார்கள்.

## §48-59. தந்தையின் மகிமையும் கிறிஸ்துவின் மகிமையும்.

48 அப்பொழுது யூதர்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக:
உன்னைச் சமாரியனென்றும், பிசாசுபிடித்தவனென்
றும் நாங்கள் சொல்லுகிறது சரிதானே என்றார்கள்.
49 அதற்கு இயேசு: நான் பிசாசு பிடித்தவனல்ல,
நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன், நீங்கள்
50 என்னைக் கனவீனம்பண்ணுகிறீர்கள்.—நான் எனக்கு
மகிமையைத் தேடுகிறதில்லை; அதைத் தேடி நியாயந்
51 தீர்க்கிறவர் ஒருவர் இருக்கிறார்.—ஒருவன் என் வார்த்
தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்
கும் மரணத்தைக் காண்பதில்லை என்று மெய்யாகவே
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
52 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: நீ பிசாசு
பிடித்தவனென்று இப்பொழுது அறிந்திருக்கிறோம்;
ஆபிரகாமும் தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள். நீயோ:
ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால் என்
றென்றைக்கும் மரணத்தை ருசிபார்ப்பதில்லை என்கி



53 றாய்.—எங்கள் பிதாவாகிய ஆபிரகாமிலும் நீ பெரிய
வனோ? அவர் மரித்தார், தீர்க்கதரிசிகளும் மரித்தார்கள்;
உன்னை நீ எப்படிப்பட்டவனாக்குகிறாய் என்றார்கள்.
54 இயேசு பிரதியுத்தரமாக: என்னை நானே மகிமைப்
படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா
என்னை மகிமைப்படுத்துகிறவர், அவரை உங்கள் தேவ
55 னென்று நீங்கள் சொல்லுகிறீர்கள்.—ஆயினும் நீங்கள்
அவரை அறியவில்லை, நான் அவரை அறிந்திருக்கி
றேன்; அவரை அறியேன் என்று சொல்வேனாகில் உங்
களைப்போல நானும் பொய்யனாயிருப்பேன்; அவரை
நான் அறிந்து, அவருடைய வார்த்தையைக் கைக்
56 கொண்டிருக்கிறேன்.—உங்கள் பிதாவாகிய ஆபிரகாம்
என்னுடைய நாளைக் காண ஆசையாயிருந்தான்; கண்டு
களிகூர்ந்தான் என்றார்.
57 அப்பொழுது யூதர்கள் அவரை நோக்கி: உனக்கு
இன்னும் ஐம்பது வயதாகவில்லையே, நீ ஆபிரகாமைக்
கண்டாயோ என்றார்கள்.
58 அதற்கு இயேசு: ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்
னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.
59 அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை
எடுத்துக்கொண்டார்கள். இயேசு மறைந்து, அவர்கள்
நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போனார்.

## கிறிஸ்து பரம தந்தையை மகிமைப்படுத்துகிறார். §48-55.

**48. சமாரியனென்றும் பிசாசுபிடித்தவனென்றும்**—இது வழக்க மொழியைப்போலிருக்கிறது. சமாரியர் யூதருக்குப் பகைஞராக எண்ணப்பட்டார்கள்.

இயேசு தமக்கல்லாமல் பரம தந்தைக்கே மகிமையுண்டாக்கத் தேடுகிறார். §49. 50.

இயேசுவின் வார்த்தையைப் பெறுதல் நித்தியஜீவனுக் கேதுவாம். §51.

இயேசு தம்மையே மகிமைப்படுத்தாமல், தந்தையே அவரை மகிமைப்படுத்துகிறார். அவர் இன்னாரென்று இயேசு அறிகிறார். §54. 55.

49. நான் பேசினது பிசாசாலேயல்லாமல் என் தந்தைக்கு மகிமை யுண்டாக்கும்படியே பேசுகிறேன் என்பது.

50. அந்த அவமானம் எனக்குக் காரியமல்ல, ஏனெனில், என் மகிமையை நான் தேடுகிறதில்லை. வேறொருவ ரதைக் கவனித்து நியாயந்தீர்ப்பாரென்க.

51. அதற்கெதிரிடையாக தமது வார்த்தைகளைக் கைக்கொள்பவர் நித்தியஜீவனை யடைவாரென்று சொன்னார்.

**கைக்கொண்டால்**—காத்துக்கொண்டால் என்பது நல்ல மொழி பெயர்ப்பு. இந்நூலில் இந்த வார்த்தை யடிக்கடி வருகிறது. $14^{15-23}$ 1 யோவா $2^{3}$ வெளி $2^{26}$.

**மரணத்தைக் காண்பதில்லை** — மரணத்தைப் பார்க்கமாட்டா னென்றும் மரணமடையமாட்டானென்றும் அர்த்தமல்லாமல் அதில் நிலைத்திருக்கமாட்டானென்றர்த்தமாம்.

52. யூதர் எதைத் திட்டமாகவே யெண்ணி மூல அர்த்தத்தை வைத்ததாலே அவர்கள் அந்த வார்த்தைகளைப் பிசகாய் எண்ணினார்கள்.

54. யூதர்கள் சொன்ன குற்றத்தை இயேசு மறுத்து நான் என்னை வேறொருவ ராக்குகிறதில்லையென்று சொல்லித் தமது வார்த்தையின் உண்மையைச் சாதித்தார்.

55. **அவருடைய வார்த்தையைக் கைக்கொண்டிருக்கிறேன்**— இது $8^{51}$–ல் எழுதியிருக்கிற மொழிதான். அதாவது பாதுகாக்கிறேன் என்க.

இயேசு முன்காலங்களில் எப்போது மிருந்திருப்பவர். $8^{56-58}$.

ஆபிரகாம் என்னைக் காண எதிர்பார்த்தான். $8^{56}$.

ஆபிரகாம் இராததற்கு முன்னே இயேசு இருக்கிறார். $8^{57, 58}$.

இயேசுவின் காலம் எக்காலமுமாயிருக்கிறது.

56. ஆபிரகாம் எதிர்பார்த்து விசுவாசித்த இரட்சகர் இயேசுவே. ஆதி $15^{5, 6}$ $22^{17, 18}$ எபி $11^{13}$. பார்க்க.

அதுமாத்திரமல்ல அவனிப்போது உயிரோடிருத்தலின் அதைக் கண்டான் என்க. வேறு சிலர் ஆபிரகாம் ஒரு தரிசனத்தில் இயேசுவின் வெளிப்படுத்தலைக் கண்டான் என்று விஸ்தரிக்கிறார்கள்.



57. **ஐம்பது வயதாகவில்லையே**— இந்த வசனத்தால் இயேசுவுக்கு ஐம்பது வயது சமீபமானதாகச் சொல்லமுடியாது. யூதர்கள் சுமார் இந்த எண்ணை எடுத்துக்கூறி இயேசு இன்னம் பூரண மனுஷப் பருவம் அடையவில்லை என்பதைக் காட்ட விரும்பினார்கள் என்க.

58. இயேசு ஆழ்ந்த கருத்துடன் இவ்வார்த்தையைச் சொன்னார். அவரது முன்னிருப்பை திட்டமாய்ச் சாதித்துச் சொன்னார்.

59. யூதர்கள் இது தேவதூஷணமென்றெண்ணி அவரைக் கல்லெறிய ஆரம்பித்தார்கள். ஏனெனில், அவரது அறிக்கை சாதாரண மனிதனுக்கேற்றதல்ல.

**இயேசு தமது மேலான அதிகாரத்தைக் காண்பித்தது.** $9^{1}$–$10^{21}$.

(b) இயேசு பெதஸ்தாகுளத்தில் கிடந்த வியாதிக்காரனைச் சொஸ்தமாக்கி பரிசேயருக்கு விரோதமுண்டாகச் செய்தார். அந்த விரோதத்தின் வளர்ச்சியும் அதினாலுண்டான பற்பல அபிப்பிராயங்கள் எழும்பி விழுந்ததையுங் கண்டோம். மறுபடியும் யூதரது பாரம்பரியத்திற்கு நேர்விரோதமான இன்னொரு செய்கை நடப்பித்தார். இதற்கு நியாயஞ் சொல்லும்படியாக யூதர் பாரம்பரைக்கு மேலான தமது அதிகாரத்தை வெளிப்படுத்தினார். இதினாலே யூதர் அவரைக் கொலைசெய்யத் தீர்மானம்பண்ணி அதைச் செய்யும் வகையையுந் தேடினார்கள்.

பாரம்பரையை நீக்கிய சம்பவம். $9^{1-34}$.

இதற்குரிய சில சிந்திப்புகள். $9^{35-37}$.

இயேசு ஒரு பிரசங்கத்தில் தமது மேலான அதிகாரத்தைக் காண்பித்தது. $10^{1-21}$.

## $9^{1-12}$. கடவுளின் மகிமையைக் காண்பித்த அடையாளம்.

1 அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய
2 ஒரு மனுஷனைக் கண்டார். — அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன் செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள்.
3 இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல; தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்

4 பொருட்டு இப்படிப் பிறந்தான். — பகற்காலமிருக்கு
மட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைக
ளைச் செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்
5 கூடாத இராக்காலம் வருகிறது.—நான் உலகத்திலிருக்
கையில் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்றார்.
6 இவைகளைச் சொல்லி, அவர் தரையிலே துப்பி,
உமிழ்நீரினால் சேறுண்டாக்கி, அந்தச் சேற்றைக் குரு
7 டனுடைய கண்களின்மேல் பூசி: — நீ போய், சீலோ
வாம் குளத்திலே கழுவு என்றார். சீலோவாம் என்ப
தற்கு அனுப்பப்பட்டவன் என்று அர்த்தமாம். அப்ப
டியே அவன் போய்க் கழுவி, பார்வையடைந்தவனாய்த்
திரும்பிவந்தான்.
8 அப்பொழுது அயலகத்தாரும், அவன் குருடனாயி
ருக்கையில் அவனைக் கண்டிருந்தவர்களும்: இவன் உட்
கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவனல்லவா என்
கிறார்கள்.—சிலர்: அவன்தான் என்றார்கள். வேறு சிலர்:
அவனுடைய சாயலாயிருக்கிறான் என்றார்கள். அவனோ:
நான்தான் அவன் என்றான்.
10 அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: உன் கண்
11 கள் எப்படித் திறக்கப்பட்டது என்றார்கள். — அவன்
பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்
டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோ
வாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான்
12 போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான்.—அப்
பொழுது அவர்கள்: அவர் எங்கே என்றார்கள். அவன்:
எனக்குத் தெரியாது என்றான்.

1. **அப்புறம் போகையில்**—இது கூடாரப்பண்டிகையில் நடந்ததோ வேறு சமயத்தில் நடந்ததோ என்பதை நாம் நிஜமாய்ச் சொல்ல முடியாது. அதற்கும் பிரதிஷ்டைப்பண்டிகைக்கும் மத்தியிலுள்ள வேறு சமயத்தில் நடந்ததாகத் தோன்றுகிறது.

2. **யார் செய்த பாவம்** — பாவத்திற்கும் வியாதிக்கும் சரியான சம்பந்தமுள்ளதென்பது யூதர்களின் கோட்பாடு. அவனவன் துன்பம் அவனவன் தாமொருகாலத்தில் செய்த பாவத்தினாலுண்டானதென்று அபிப்பிராயப்பட்டார்கள். யோபின் ஆகமத்தில் இதைப் பார்க்கிறோம். சில சமயங்கள், முற்பிறப்பில் செய்த பாவத்தினால் உண்டானதென்று சிலர் சொன்னார்கள். இயேசு எப்போதும் இப்



படிப்பட்ட கோட்பாட்டை மறுத்துவிட்டார். லூக் $13^{1-5}$. சீஷர்கள் இந்தக் கோட்பாடறிந்து இவன் பிறவிக்குருடன் என்று எண்ணி மயங்கி இத்துன்பம் எப்படி வந்ததென்று சந்தேகித்துக் கேட்டார்கள்.

3. இயேசு உத்தரங்கொடுத்து இந்தப் போதனையை மறுத்துத் துன்பமெல்லாம் கடவுள் மகிமை விளங்குவதற்கு இடமாம் என்று துன்பத்திற்கு ஒரு ஆறுதலைக் காண்பித்தார். எனினும், எல்லாத் துன்பத்திற்கும் இதுவே காரணமென்று அவர் சாதிக்கவில்லை.

4. நாம் கடவுள் செய்கைகளைச் செய்யக்கூடிய பற்பல சமயங்கள் நமக்குக் கிடைக்கிறது. நாம் அவைகளைக் கைவிடாமல் நமக்குக் கொடுக்கப்பட்ட காலமாகிய பகலில் அவைகளைச் செய்யப் பிரயாசைப்படவேண்டும். இந்தப் பிரமாணம் இயேசுவுக்குரியதுமல்லாமல் நமக்கு முரியதென்று காட்ட விரும்பி நாம் என்றார்.

**இராக்காலம்**—பகலென்றால் கிரியை செய்வதற்கு நியமிக்கப்பெற்ற காலம். இராக்காலமென்றால் கிரியை செய்ய மனிதருக்கு சமயம் வாய்க்காத காலம்.

5. **உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்**—தாம் செய்யப்போகும் அற்புதத்தின் அடியாய்ப் பிறந்த உருவகம் யாதெனில், அவர் சின்மயக் கண்களை உடையோர்க்கு உபதேசம் கொடுக்கக்கூடியதல்லாமலும் அக்கண்கள் இல்லாதார்க்கு பார்க்கும் சக்தியைக் கொடுக்கக்கூடிய வருமானவரென்க. தாம் முன்னே பிரசங்கித்த இப்பொருளை இப்பொழுது ஒரு விசேஷித்த அடையாளத்தில் காண்பித்தார்.

6. இயேசு செய்த காரியங்கள் அந்த மனிதனுக்கு விசுவாசத்தை உண்டாக்கத்தக்கதாகச் செய்தாரென்று நினைக்கலாம். உமிழ்நீருக்கு விசேஷித்தவல்லமையுண்டென்று நினைத்தார்கள். அதுமாத்திரமல்ல, அந்த மனுஷனோ ஒன்றைச் செய்யவேண்டியதாயிற்று. அவன் போய்க் கண்களின் மண்ணைக் கழுவவேண்டும். ஆகையால் அது அவன் விசுவாசத்திற்குப் பரீட்சையுமாயிற்று.

7. **சீலோவாம்**—ஜனங்கள் அதிகப் பிரியத்துடன் வந்து நீராடின குளம் இது. ஒரு கீழ்வாய்க்காலின் மூலமாய் இதற்குத் தண்ணீர் பிரயோகிக்கப்பட்டது. அதினால் ‘அனுப்பப்பட்டது’ என்னும் பெயர் பெற்றது.

8. **அயலகத்தாரும்**—அவன் தன் வீட்டுக்குப் போனதாகத் தோன்றுகிறது. இது ஒருவேளை மறுநாளில் நடந்திருக்கலாம். 14-ம் வசனத்தையும் பார்க்க. அந்த மனிதனிடத்தில் ஆசிரியன் இந்தச் சம்பவத்தின் சரித்திரத்தைப் பெற்றுக்கொண்டான்போலிருக்கிறது. நுட்பமான சங்கதிகளையும் அவன் தெளிவாய் விவரித்து எழுதினான்.

11. **இயேசு என்னப்பட்ட ஒருவர்**—இது சரியான மொழிபெயர்ப்பல்ல. இயேசு என்னப்பட்ட மனிதன் என்பது நன்று. இயேசு என்னப்பட்டவர் யாவருக்கும் தெரிந்தவர். • அன்னவனே என்று சொல்லியாயிற்று.

இந்த அடையாளத்தைப்பற்றிப் பற்பல அபிப்பிராயங்கள். $9^{13-34}$.

இந்த அடையாளத்தின்விஷயமாய் விசுவாசமும், அவிசுவாசமும் எழும்பியுள்ளதைப் பார்க்கிறோம். நாம் பரிசேயரைப் பார்க்குமிடத்து அவர்கள் முதலாவது ஆட்சேபித்துப் பின்பு இயேசு நல்லவரல்லவென்று நிதானித்துக் கடைசியாக அந்த மனிதனையும் தள்ளிப்போட்டார்கள் என்றும், அந்த மனிதனைப் பார்க்குமிடத்து அவன் முதலாவது இயேசுவைப்பற்றிச் சந்தேகித்துப் பின்பு அவர் தீர்க்கதரிசியென்று நினைத்துக் கடைசியாக அவரை மேசியாவென்று நம்பி அறிக்கையிட்டான் என்றும் அறிவோம்.

## $9^{13-34}$. பயமும் விரோதமும் விசுவாசமும்.

13 குருடனாயிருந்த அவனைப் பரிசேயரிடத்திற்குக்
14 கொண்டுபோனார்கள்.—இயேசு சேறுண்டாக்கி, அவன்
15 கண்களைத் திறந்த நாள் ஓய்வுநாளாயிருந்தது.—ஆகை
யால் பரிசேயரும் அவனை நோக்கி: நீ எப்படிப் பார்வை
யடைந்தாய் என்று மறுபடியும் கேட்டார்கள். அதற்கு
அவன்: அவர் என் கண்களின்மேல் சேற்றைப் பூசி
னார், நான் கழுவினேன், காண்கிறேன் என்றான்.
16 அப்பொழுது பரிசேயரில் சிலர்: அந்த மனுஷன்
ஓய்வுநாளைக் கைக்கொள்ளாததினால் அவன் தேவனி
டத்திலிருந்து வந்தவனல்ல என்றார்கள். வேறு சிலர்:
பாவியாயிருக்கிற மனுஷன் இப்படிப்பட்ட அற்புதங்
களை எப்படிச் செய்வான் என்றார்கள். இவ்விதமாய்
17 அவர்களுக்குள்ளே பிரிவினையுண்டாயிற்று.—மறுபடி
யும் அவர்கள் குருடனை நோக்கி: உன் கண்களைத் திறந்



தானே, அவனைக்குறித்து நீ என்ன சொல்லுகிறாய்
என்றார்கள். அதற்கு அவன்: அவர் தீர்க்கதரிசி
என்றான்.
18 அவன் குருடனாயிருந்து பார்வையடைந்ததை யூதர்
கள் நம்பாமல், பார்வையடைந்தவனுடைய தாய் தகப்
19 பன்மாரை அழைப்பித்து,—அவர்களை நோக்கி: உங்
கள் குமாரன் குருடனாய்ப் பிறந்தான் என்று சொல்லு
கிறீர்களே, அவன் இவன்தானா? இவனானால், இப்பொ
ழுது இவன் எப்படிப் பார்வையடைந்தான் என்று
20 கேட்டார்கள்.—தாய் தகப்பன்மார் பிரதியுத்தரமாக:
இவன் எங்கள் குமாரன்தான் என்றும், குருடனாய்ப்
21 பிறந்தான் என்றும் எங்களுக்குத் தெரியும்.—இப்பொ
ழுது இவன் பார்வையடைந்த வகை எங்களுக்குத் தெரி
யாது; இவன் கண்களைத் திறந்தவன் இன்னான் என்
பதும் எங்களுக்குத் தெரியாது; இவன் வயதுள்ளவனா
யிருக்கிறான், இவனைக் கேளுங்கள், இவனே சொல்லு
வான் என்றார்கள்.
22 அவனுடைய தாய் தகப்பன்மார் யூதர்களுக்குப் பயந்
ததினால் இப்படிச் சொன்னார்கள். ஏனெனில் இயே
சுவைக் கிறிஸ்து என்று எவனாவது அறிக்கைபண்ணி
னால் அவனை ஜெபஆலயத்துக்குப் புறம்பாக்கவேண்டு
மென்று யூதர்கள் அதற்கு முன்னமே கட்டுப்பாடு
23 செய்திருந்தார்கள்.—அதினிமித்தம்: இவன் வயதுள்ள
வனாயிருக்கிறான், இவனையே கேளுங்கள் என்று அவன்
தாய் தகப்பன்மார் சொன்னார்கள்.
24 ஆதலால் அவர்கள் குருடனாயிருந்த மனுஷனை இரண்
டாந்தரம் அழைத்து: நீ தேவனை மகிமைப்படுத்து;
இந்த மனுஷன் பாவியென்று நாங்கள் அறிந்திருக்கி
25 றோம் என்றார்கள்.— அவன் பிரதியுத்தரமாக: அவர்
பாவியென்று எனக்குத் தெரியாது; நான் குருடனா
யிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்று
தான் எனக்குத் தெரியும் என்றான்.
26 அவர்கள் மறுபடியும் அவனை நோக்கி: உனக்கு
என்ன செய்தான், உன் கண்களை எப்படித் திறந்தான்
27 என்றார்கள்.—அவன் பிரதியுத்தரமாக: முன்னமே உங்
களுக்குச் சொன்னேன், நீங்கள் கேளாமற்போனீர்கள்;
மறுபடியும் கேட்கவேண்டியதென்ன? அவருக்குச் சீஷ
ராக உங்களுக்கும் மனதுண்டோ என்றான்.

28 அப்பொழுது அவர்கள் அவனை வைது: நீ அவ
னுடைய சீஷன், நாங்கள் மோசேயினுடைய சீஷர்.—
29 மோசேயுடனே தேவன் பேசினாரென்று அறிவோம்,
இவன் எங்கேயிருந்து வந்தவனென்று அறியோம் என்
றார்கள்.
30 அதற்கு அந்த மனுஷன்: அவர் என் கண்களைத்
திறந்திருந்தும், அவர் எங்கேயிருந்து வந்தவரென்று
நீங்கள் அறியாதிருக்கிறது ஆச்சரியமான காரியம்.—
31 பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று
அறிந்திருக்கிறோம்; ஒருவன் தேவபக்தியுள்ளவனாயி
ருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச்
32 செவிகொடுப்பார்.—பிறவிக்குருடனுடைய கண்களை
ஒருவன் திறந்தானென்று உலகமுண்டானதுமுதல்
33 கேள்விப்பட்டதில்லையே.—அவர் தேவனிடத்திலிருந்து
வராதிருந்தால் ஒன்றும் செய்யமாட்டாரே என்றான்.
34 அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: முழுவதும்
பாவத்தில் பிறந்த நீ எங்களுக்குப் போதிக்கிறாயோ
என்று சொல்லி, அவனைப் புறம்பே தள்ளிவிட்டார்கள்.

13. **பரிசேயரிடத்திற்கு**—பரிசேயர் இயேசுவின் காரியங்களெல்லாவற்றையும் தொடர்ந்தேற்றியாய் விசாரித்துப் பார்த்திருப்பார்களென்று நினைக்கலாம். ஆகையால் இந்தக் காரியம் நடந்தவுடனே அந்த மனிதனைப் பரிசேயருக்கு முன்பாகக் கொண்டுபோகும்படி ஏற்பாடாயிற்று.

14. **ஓய்வுநாள்**—இயேசு செய்த இந்தக் கிரியை ஓய்வுநாள் பிரமாணங்களுக்கு நேர்விரோதமா யிருந்தது. அந்தப் பிரமாணங்களைப் பரிசேயர் வெகு திட்டப்படுத்தினார்கள். சேறுக்கலும் உமிழ்நீர் வைத்தலும் அந்நாளில் கூடாதகாரியங்க ளாயினவாம்.

15. அந்த மனிதன் மிதமிஞ்சின கேள்விகளைப் பொறுக்காமல் துடுக்கெனப் பேசினான்.

16. **பிரிவினையுண்டாயிற்று**—ஜனங்களுக்குள்ளே பிரிவினை உண்டானதுபோல் (7⁴³) இப்பொழுது பரிசேயருக்குள்ளும் பிரிவினையுண்டாயிற்று. சிலர் நியாயப்பிரமாணத்தின் மீறுதலைமாத்திரங் கவனித்தார்கள். வேறு சிலர் அந்தக் கிரியையைப் பார்த்து நல்லதென்று நிதானித்துச் சொன்னார்கள்.



17. பிரிவினையுண்டாதலின், அந்த மனிதனிடம் கேள்வி கேட்டார்கள்.

**அவர் தீர்க்கதரிசி** — தீர்க்கதரிசி என்றால் கடவுள் வார்த்தை பேசுபவனும் கடவுளுடைய பிரதிநிதியுமானவனென் றர்த்தமாம்.

18. யூதர்கள் இதை நம்ப விரும்பாமல் இவனுக்கும் இயேசுவுக்கும் சம்பந்தமிருக்கலாமென்று நினைத்து, இவன் உண்மையாய்ப் பிறவிக்குருடனாவென்றறியப் பெற்றோர்களை அழைத்தார்கள்.

22. **புறம்பாக்கவேண்டும்** — இந்தப் பழக்கம் இத்தேசத்தில் ஜாதியிலிருந்து நீக்குதல்போலிருக்கிறது. யூதருக்குரிய சிலாக்கியங்கள் அவ்வாறு நீக்கப்பட்டவனுக்கு இருக்கமாட்டா.

24. **நீ தேவனை மகிமைப்படுத்து** — சத்தியம் முழுவதுமாய்ச் சொல்லு என்க. அவன் சத்தியஞ்சொல்லி கடவுளைக் கனப்படுத்த வேண்டும். யோசு $7^{19}$ 1 சாமு $6^{5}$ எரே $13^{16}$. பார்க்க.

29. **எங்கேயிருந்து வந்தவன்**—மோசே பெற்ற அதிகாரம் இன்னதென்று நன்கறிந்தீர்கள். இயேசுவோ எப்படி அதிகாரமடைந்தாரென்று அறியவில்லை யென்பது.

32. சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்தில் பிறவிக்குருடன் ஒருவன் வைத்திய வித்தையால் பார்வையடைந்ததாயிற்று.

33. இதுவே பொதுவான ஜனங்களது நிதானிப்பென்று நினைத்துப் பரிசேயரது கோபம் இன்னுமதிகமாய் எழும்பினது.

34. அவன் பிறவிக்குருடனாதலால் பிறந்ததுமுதலாய் பெரும் பாவியானனென்று அவர்கள் குற்றஞ்சாற்றித் தள்ளிப்போட்டார்கள்.

### $9^{35-41}$. இயேசுவின் அன்பும் குருடனின் பக்தியும்.

35 அவனை அவர்கள் புறம்பே தள்ளிவிட்டதை இயேசு
கேள்விப்பட்டு, அவனைக் கண்டபோது: நீ தேவனு
டைய குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறாயா என்
36 றார். — அதற்கு அவன்: ஆண்டவரே, அவரிடத்தில்
நான் விசுவாசமாயிருக்கும்படிக்கு அவர் யார் என்
37 றான். — இயேசு அவனை நோக்கி: நீ அவரைக் கண்
டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான்

38 என்றார்.—உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கி
றேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்
டான்.
39 அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியா
கவும், காண்கிறவர்கள் குருடாகும்படியாகவும் நியா
யத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்.
40 அவருடனேகூட இருந்த பரிசேயரில் சிலர் இவைக
ளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்
றார்கள்.
41 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்
தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள் காண்கிறோம்
என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலைநிற்
கிறது என்றார்.

**35. அவனைக் கண்டபோது** — அவனைத் தேடிக் கண்டடைந்தபோது என்க. இயேசு அவன்மேல் மனதுருகித் தேடினார்.

**நீ**—நீயேயென் றெழுதுக. மற்றவர்கள் நம்பாதிருக்க நீயே யென்று சொல்லி இயேசு அவனைப் பிரித்துக் கேட்டார்.

**தேவனுடைய குமாரனிடத்தில்**—தேவகுமாரனென்பது மேசியாவின் பேர்களில் ஒன்றாதலின் அந்த மனிதன் இந்தக் கேள்வியின் அர்த்தமறிந்திருப்பான்.

**36. அவர் யார்**—அவன் உண்மையான நம்பிக்கையுடன் இப்படிக் கேட்டான்.

**38. நான் விசுவாசிக்கிறேன்**—தேவகுமாரனின்னாரென் றறியுமறிவு சொற்பமெனினும், உண்மையான நம்பிக்கை தோன்றிற்று. இயேசுவை வணங்கி அந்த நம்பிக்கையைத் தெளிவாய்க் காட்டினான்.

**39.** இயேசு இவ்விஷயமாய் சிந்தித்துக்கொண்டவைகளைப் பார்க்கிறோம். இயேசு நேராகப் பிரசங்கிக்காமல் தமக்கென்றே வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டார்.

**காணாதவர்கள்**—அதாவது தாங்க ளறிவீனரென் றுணர்ந்தவர்கள்; அன்னவருக்கு இயேசு தெய்வீக அறிவைத் தருவார்.

**காண்கிறவர்கள்** — அதாவது தாங்கள் போதுமான அறிவடைந்தவர்களென்று எண்ணிக்கொள்பவர்கள்; இயேசு அவர்களுக் கறி



வில்லை யென்பதை அன்னவருக்குத் தெரிவிப்பார். மத் $11^{25}$ வசா $6^{10}$. பார்க்க.

**40. பரிசேயரில் சிலர்** — இயேசுவின் சீஷர்களாய் அவரைச் சேர்ந்தவரென்பார் சிலர். இயேசுவைக் கவனித்துப் பார்க்கத் தொடர்ந்தவரென்பார் வேறு சிலர். இயேசு கொடுத்த உத்தரவு முன் சொல்லப்பட்டவருக் கேற்றதல்லாததால் அதை மறுக்க. பரிசேயர் கர்வத்துடன் கேட்டார்கள், குருடரோ என்றதற்கு மெய்யறிவில்லாதவர்களென் றர்த்தமாம்.

**41. நீங்கள் குருடராயிருந்தால்**—நீங்கள் (39–வச. பார்க்க.) முன் சொல்லப்பட்ட அறிவில்லாதவர்களானால் உங்கள் தப்பிதம் அறிவீனத்தாலுண்டாகும், அப்போது உங்களுக்குப் பாவமில்லை. அல்லது அப்படிப்பட்ட அறிவீனராயின் நீங்கள் மெய்யொளியாகிய கிறிஸ்துவைத் தள்ளும் பாவத்தைச் செய்யமாட்டீர்களென்றும் வியாக்கியானஞ் செய்யலாம். அவர்கள் தங்களை அறிவுடையோரென்று கர்வத்துடன் சொன்னதால் மெய்யறிவாகிய இயேசுவைத் தள்ளுதல் நேரிட்டிருந்தது, அதுவே அவர்கள் செய்த பாவம்.

### $10^{1-18}$. இயேசுவே நல்ல மேய்ப்பன்.

1 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச்
சொல்லுகிறேன்; ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல் வழி
யாய்ப் பிரவேசியாமல், வேறு வழியாய் ஏறுகிறவன் கள்
2 ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்.—வாசல் வழி
யாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனாயி
3 ருக்கிறான்.—வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்
கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கி
றது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர் சொல்லிக்
கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டு
4 போகிறான்.—அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே
விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகி
றான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியி
5 னால் அவனுக்குப் பின்செல்லுகிறது.—அந்நியருடைய
சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்
குப் பின்செல்லாமல், அவனை விட்டோடிப்போம்
என்றார்.
6 இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்

னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை
அறியவில்லை.
7 ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி:
நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்
8 யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். — எனக்கு
முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்
காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவி
9 கொடுக்கவில்லை.—நானே வாசல், என் வழியாய் ஒரு
வன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்,
அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்ட
10 டைவான்.—திருடன் திருடவும் கொல்லவும் அழிக்க
வும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.
நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது
11 பரிபூரணப்படவும் வந்தேன். — நானே நல்ல மேய்ப்
பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக்
12 கொடுக்கிறான்.—மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்
குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வரு
கிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்
பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்
13 கும். — கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனானப
யால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்
14 படான். — நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை
அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்
15 கிறதுபோலவும்,—நான் என்னுடையவைகளை அறிந்
தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கி
றேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்.-
16 இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடு
களும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு
வரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவி
கொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்
17 பனுமாகும்.—நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்து
கொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா
18 என்னில் அன்பாயிருக்கிறார்.—ஒருவனும் அதை என்
னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே
அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு
அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ள
வும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை
என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்.



இயேசு ஒரு பிரசங்கத்தில் தமது மேலான அதிகாரத்தைக் காண்பித்தது. $10^{1-21}$.

யூதரால் தள்ளுண்டவர்களின் ஆறுதலாகவும் யூதர்களுக்குப் போதனையாகவும் இயேசு பிரசங்கஞ்செய்தார்.

I. உண்மையான மேய்ப்பனுக்கும் கள்ள மேய்ப்பனுக்குமுள்ள வித்தியாசங்கள். $10^{1-5}$.

இயேசு முதலாவது இவைகளைப் பொதுவாயும் உவமையாயுங் காண்பிக்கிறார்; பிறகு ஒவ்வொன்றையும் வெவ்வேறாக எடுத்து விவரிக்கிறார்.

கிறிஸ்துவே பட்டிக்கு வாசல். $10^{7-10}$. வேறு வழியாய்ப் போனவர் யாவரும் திருடர்.

கிறிஸ்துவே மந்தைக்கு நல்ல மேய்ப்பன். $10^{11-18}$.

மற்றோர் யாவரும் கூலியாட்கள். இயேசுவுக்கும் கூலியாட்களுக்குமுள்ள வித்தியாசங்கள் காண்பிக்கப்பட்டிருக்கின்றன.

உண்மையான மேய்ப்பனுக்கும் கள்ள மேய்ப்பனுக்குமுள்ள வித்தியாசங்கள் பின்வருபவை. $10^{1-5}$.

| மேய்ப்பன். | மேய்ப்பனல்லாதவன். |
|---|---|
| (1) கதவுமூலமாய் வருகிறவன். | வேறுவழியாய் ஏறுகிறவன். |
| (2) ஆடுகள் அவன் சத்தமறியும். | ஆடுகள் அவன் சத்தமறியா. |
| (3) அவன் ஆடுகளைப் பெயர்பெயராகக் கூப்பிடுவான். | |
| (4) அவைகளை வெளியே நடத்துகிறவன். | அவைகளைப் பிடிக்க வருகிறவன். |
| (5) ஆடுகள் அவனைத் தொடரும். | அவனைவிட்டு ஓடிப்போகும். |

இவைகளே மெய்ப்போதகருக்கும் பொய்ப்போதகருக்குமுள்ள வித்தியாசங்களென்று உருவகமாய்க் காண்பித்தார்.

1. **ஆட்டுத்தொழுவம்** — அதாவது பட்டி. பலஸ்தீன தேசத்தில் பட்டிகளுக்குச் சுவரிருந்தது. வாசல் வழியாய் வராமல் வேறு வழியாய் ஏறுகிறவன் ஆடுகளைக் காக்க வராமல் அவைகளைத் திருடவும் கொல்லவும் வந்திருப்பான்.

4. ஆடு இடையனது சத்தம் அறிந்து வருவதேயொழிய மற்றோர் சத்தத்தைக் கேட்டால் வெளியே வரமாட்டாதென்று யாவருக்குந் தெரிந்தது.

கிறிஸ்துவே பட்டிக்கு வாசல். $10^{7-10}$.

இதிலே மேய்ப்பனுக்கும் மேய்ப்பனல்லாதவனுக்கும் வித்தியாசம் வெளிப்பட்டது.

கிறிஸ்துவே வாசல். $10^{7}$.

மேய்ப்பரல்லாதவர்கள் கிறிஸ்து என்னும் வாசலில் வராதவர்களும் ஆடுகளால் அறியப்படாதவர்களுமானவர். $10^{8}$.

உண்மையான மேய்ப்பன் வசத்திலிருந்தவர்களது நிலைமை. $10^{9}$.

மேய்ப்பனுக்கும் மற்றவனுக்கும் இன்னொரு வித்தியாசமாவது. மேய்ப்பன் பூரணஜீவனை ஆடுகளுக்குக் கொடுக்கவும் மற்றவன் அவைகளைத் திருடவும் அழிக்கவும் வந்தான். $10^{10}$.

7. கேட்டோர் தமது அர்த்தத்தை யறியாமையால் அந்த உருவகத்தை விவரித்துக் காண்பிக்கவேண்டியதாயிற்று.

**நானே ஆடுகளுக்கு வாசல்**—ஆகையால் அவரே ஆடுகளெல்லாம் க்ஷேமத்தை யடையக்கூடிய வழியாம். அதென்னவெனில் கடவுளது கிருபை வரும் வழி அவரே.

8. தங்களை மேசியாவென்றும் கடவுள் தூதன் என்றும் சொல்லி ஜனங்களை வஞ்சித்து இழுத்தவர்களையாவது தாங்கள் தெய்வ அதிகாரம்பெற்று நீதி சட்டங்களை ஏற்படுத்தி ஜனங்களைக் கட்டாயப்படுத்தி நடத்தின பரிசேயர்களையாவது குறிப்பித்து முன்வந்தவர்களென்றார்.

9. இதிலே அவர் மேய்ப்பனோடு ஆடுகளிருக்கும் நிலைமையைக் காண்பிக்கிறார். கிறிஸ்துவின் மூலமாய்ப் பூரிப்பும் விடுதலையும் க்ஷேமமுங் கிடைக்கும்.

**கிறிஸ்துவே உத்தம மேய்ப்பனானவர்**—$10^{11-18}$. கள்ள மேய்ப்பனுக்கு விபரீதமான உத்தம மேய்ப்பனது லட்சணங்களையும் காண்பிக்கிறார். யூதர்கள் அடிக்கடி கடவுளை மேய்ப்பனென்று உவமித்துச் சொன்னதுண்டு. சங் 23; $80^{1}$ ஏசா $40^{11}$ எசே $34^{11-16}$. பார்க்க.

உத்தம மேய்ப்பன் தன் உயிரை ஒப்புக்கொடுப்பான். $10^{11-13}$. பிறவுயிரைத் தன் உயிரென்றெண்ணுவான். அதற்கு விபரீதமாகக் கள்ள மேய்ப்பன் தன் உயிருக்காக ஆடுகளை அழியுகக்கு விட்டுவிடுவான்.

உத்தம மேய்ப்பன் ஆடுகளை அறிந்தவனும் ஆடுகளால் அறியப்பட்டவனுமாவான். $10^{14-16}$.



இயேசு தம்முயிரைக் கொடுப்பது அதாவது அவரது பிராணத்தியாகம் இலவசமானது. $10^{17, 18}$.

11. **தன் ஜீவனைக் கொடுக்கிறன்**—யோவானுக் கெழுதிய நூற்களில் அடிக்கடி வருகிற வாக்கியம் ஒப்புக்கொடுக்கிறானென்றெழுதுக.

13. **கள்ளமேய்ப்பன்** — ஆடுகளைப்பற்றிய கவலையில்லாமல் கூலியை விரும்புகிறவன்.

14. ஒருவர் பலஸ்தீனா தேசத்தில் ஓரிடையனைப் பார்த்து இராத்திரிதோறும் ஆடுகளை எண்ணிப் பார்க்கிறாயாவென்று கேட்டதற்கு நானப்படிச் செய்கிறதில்லை, என் கண்களை மூடி எந்த ஆட்டையாவது கொண்டுவரும்பட்சத்தில் ஏனதோ இல்லையோவென்று உடனே சொல்லுவேனென்று சொன்னதாக ஒரு பிரயாணி சொன்னதாலே அத்தேசத்தின் இடையரது அறிவு இன்னதென்று அறிக.

15. இயேசு தாமும் தமது ஆடுகளும் ஒருவரையொருவர் அறியுமறிவு இன்னதென்று காண்பிக்கக் கடவுளும் தாமும் ஒருவரையொருவர் அறிகிறமாதிரியை எடுத்துக் காட்டுகிறார்.

16. **வேறே ஆடுகளும்**—யூதரல்லாத புறஜாதியாரும்.

**ஒரே மந்தை**—ஒரு பட்டி என்றதல்ல. சபையின் பிரதான ஒழுங்கு ஒன்றாகு மென்பதல்ல. சபைகள் யாவும் பற்பல இடங்களிலிருந்து பற்பல ஒழுங்குகளை யனுசரித்தாலும் மெய்யான சபை ஒரே மேய்ப்பனைச் சேருதலால் ஒன்றான தன்மையுடையதென்க.

17. ஆகையால் என்பது பின்வருமாறு வருவிக்க. ஆகையால் என் தந்தை என்னை நேசிக்கிறார். ஏனெனில், நான் என் ஜீவனைக் கொடுக்கிறேன். இயேசு மனுமக்களுக்கு மேய்ப்பனாகி அவர்களை ஒரு மந்தையாக நடத்துபவராதலே கடவுள் அவரை நேசிக்குங்காரணம். தான் தமது உயிரை ஒப்புக்கொடுத்தலே இதில் விசேஷித்த விஷயம்.

18. அவர் தமது இலவசமான சித்தத்தைச் சாதிக்கிறார். எனினும் இதுவும் பரம தந்தையின் சித்தத்திற்குரியது. ஆகையால் பிதாவுங் குமாரனும் ஒரே சிந்தையானவர்கள்.

$10^{19-21}$. **நிந்தையும் சந்தேகமும்.**

19 இந்த வசனங்களினிமித்தம் யூதருக்குள்ளே மறுபடி
20 யும் பிரிவினையுண்டாயிற்று.—அவர்களில் அநேகர்:
இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்; ஏன் இவ

21 னுக்குச் செவிகொடுக்கிறீர்கள் என்றார்கள்.—வேறே
சிலர்: இவைகள் பிசாசு பிடித்தவனுடைய வசனங்க
ளல்லவே. குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக்
கூடுமா என்றார்கள்.

### இந்தப் பிரசங்கத்தின் பலன். $10^{19-21}$.

அநேகர் அவரது கருத்தை யறியாமல் நிந்தித்தார்கள். வேறு சிலர் அவர் செய்த கிரியைகளை நினைவுகூர்ந்து அதிசயப்பட்டார்கள்.

**(c) பிரதிஷ்டை பண்டிகையில் இயேசு கடவுளோடு தமக்குள்ள சம்பந்தத்தை வெளிப்படுத்தினது. $10^{22-42}$.**

முன்வந்த பிரசங்கத்திற்கும் இதற்கும் நடுவில் இரண்டு மூன்று மாதங்கள் கழிந்ததாக பெரும்பான்மையோர் சொல்வார். கூடாரப் பண்டிகைக்கும் பிரதிஷ்டைப் பண்டிகைக்கு மிடையில் இவ்வளவு காலமிருந்தது. அந்தக் காலத்தில் லூக்கா 10–$13^{22}$-ல் எழுதியவைகள் நடந்தனவென்று சொல்லுகிறார்கள். வேறு சிலர் கூடாரப் பண்டிகையின் விஷயங்கள் 8-ம் அதிகாரத்தில் முடிவுபெற்று பிரதிஷ்டை பண்டிகையின் சங்கதிகள் ஒன்பதாம் அதிகாரத்தில் தாவக்குகின்றன வென்பார். அதுநிற்க இதிலே யூதர்கள் இயேசுவினிடம் தம்மைக்குறித்த திட்டமான உத்தரவு வாங்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் கேள்விக்கு உத்தரமாக இயேசு தந்தையுடன் தமக்குள்ள ஒற்றுமையான சம்பந்தத்தைத் தெளிவாய்க் காட்டுகிறார்.

கேள்விகள். $10^{22-24}$.

யூதர்கள் இயேசுவின் வார்த்தைகளையாவது கிரியைகளையாவது நம்பமாட்டார்கள். $10^{25}$.

அந்த அவிசுவாசத்திற்குக் காரணம். $10^{26}$.

அவரது ஆடுகளுக்கடுத்த தன்மை. $10^{27, 28}$.

தந்தையோடு அவர்க்குள்ள ஒற்றுமையே எல்லாவற்றிற்குங் காரணம். $10^{29}$.

வாக்குவாதங்கள். $10^{32, 33}$.

கடவுளது வார்த்தை கொஞ்சமாய்ப் பிரகாசித்த பக்தர். கடவுளுடன் ஒற்றுமை பெற்றோரெனின், கடவுளால் அனுப்பப்பட்ட யான் ஒற்றுமையுடையோன் என்றதற்கு குற்றம் யாது என்பது. $10^{34-36}$.



அவர் செய்யுங் கிரியைகள் அவரது தன்மைக்கு அத்தாட்சிகளாம். $10^{37, 38}$.

### $10^{22-29}$. இயேசுவின் ஆடுகள்.

22 பின்பு எருசலேமிலே தேவாலயப் பிரதிஷ்டை பண்
23 டிகை வந்தது; மாரிகாலமுமாயிருந்தது. — இயேசு
தேவாலயத்தில் சாலொமோனுடைய மண்டபத்திலே
24 உலாவிக்கொண்டிருந்தார். — அப்பொழுது யூதர்கள்
அவரைச் சூழ்ந்துகொண்டு: எதுவரைக்கும் எங்கள்
ஆத்துமாவுக்குச் சந்தேகமுண்டாக்குகிறீர், நீர் கிறிஸ்து
வானால் எங்களுக்குத் தெளிவாய்ச் சொல்லும் என்
றார்கள்.
25 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: அதை உங்
களுக்குச் சொன்னேன், நீங்கள் விசுவாசிக்கவில்லை;
என் பிதாவின் நாமத்தினாலே நான் செய்கிற கிரியை
26 களே என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.—ஆனா
லும், நான் உங்களுக்குச் சொன்னபடியே, நீங்கள்
என் மந்தையின் ஆடுகளாயிராதபடியினால் விசுவாசியாம
27 லிருக்கிறீர்கள்.—என் ஆடுகள் என் சத்தத்துக்குச் செவி
கொடுக்கிறது; நான் அவைகளை அறிந்திருக்கிறேன்,
28 அவைகள் எனக்குப் பின்செல்லுகிறது.—நான் அவை
களுக்கு நித்தியஜீவனைக் கொடுக்கிறேன்; அவைகள்
ஒருக்காலும் கெட்டுப்போவதில்லை, ஒருவனும் அவை
களை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை.—
29 அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும்
பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின்
கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.

**22. பிரதிஷ்டை பண்டிகை** — இது யூதாஸ் மக்கபீயஸ் தேவாலயத்தைப் பரிசுத்தம்செய்து பிரதிஷ்டை பண்ணினதைக் கொண்டாடினது. அந்தியோகு முன்னே அதைத் தீட்டுப்பண்ணினான். (கி. மு. 164.) இந்தப் பண்டிகை டிசம்பரில் நடந்து கொஞ்சநாட்களாய்க் கொண்டாடப்பட்டது.

**24.** யூதர்களது ஆத்திரத்தைக் கவனிக்க. அவர்கள் கிறிஸ்துவுக்குள்ளிருக்குந் தன்மையை வேறுவிதமாய் எண்ணினதால் அவர் தெளிவாய் வெளிப்படுத்தல் கூடாமற்போய்விட்டது.

**25. அதை உங்களுக்குச் சொன்னேன்**—அவர் தமது சாதாரண போதனை முழுவதையுங் குறிக்கிறார். தாம் மேசியாவென்று அவர் திட்டமாய் அவர்களிடஞ் சொல்லவில்லை.

26. அவர்கள் சீஷருக்குரிய மனமுடையவர்களல்லாததால் அவரது போதனையை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த வார்த்தை முன் சொன்ன உவமையோடு சம்பந்தமுள்ளது. இதினால் ஒருவேளை ஆசிரியன் இந்தப் பிரசங்கத்தை அதற்குப் பக்கத்தில் வைத்திருப்பான் போல் தோன்றுகிறது.

27, 28. இப்பொழுது சீஷனுக்குந் தமக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டுகிறார்.

**என் ஆடுகள்**—என் சத்தத்தைக் கேட்டு, என்னைத் தொடர்ந்து, அழியாம லிருக்கும் என்பதும்,

**நான்** — அவைகளை யறிந்து, அவைகளுக்கு நித்தியஜீவனைக் கொடுப்பேன் என்பதும்,

**என் கையிலிருந்து**—அவைகளைப் பறித்துக்கொள்ளும்படி விடாம லிருப்பேன் என்பதும் தொடர்ச்சியாக வருகிறது.

### $10^{30-38}$. இயேசுவும் பரம தந்தையும்.

30 நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்றார்.
31 அப்பொழுது யூதர்கள் மறுபடியும் அவர்மேல் கல்
லெறியும்படி, கல்லுகளை எடுத்துக்கொண்டார்கள்.
32 இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே
அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன்,
அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்
33 லெறிகிறீர்கள் என்றார்.—யூதர்கள் அவருக்குப் பிரதியுத்
தரமாக: நற்கிரியையினிமித்தம் நாங்கள் உன்மேல் கல்
லெறிகிறதில்லை; நீ மனுஷனாயிருக்க, உன்னை தேவன்
என்று சொல்லி, இவ்விதமாக தேவதூஷணஞ் சொல்
லுகிறபடியினால் உன்மேல் கல்லெறிகிறோம் என்றார்
கள்.
34 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: தேவர்களா
யிருக்கிறீர்கள் என்று நான் சொன்னேன் என்பதாய்
35 உங்கள் வேதத்தில் எழுதியிருக்கவில்லையா? — தேவ
வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களை தேவர்கள்



என்று அவர் சொல்லியிருக்க, வேதவாக்கியமும் தவறா
36 ததாயிருக்க,—பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டும், உல
கத்தில் அனுப்பப்பட்டும் இருக்கிற நான் என்னை தே
வனுடைய குமாரன் என்று சொன்னதினாலே தேவ
தூஷணஞ் சொன்னாய் என்று நீங்கள் சொல்லலாமா?
37 என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால்,
38 நீங்கள் என்னை விசுவாசிக்கவேண்டியதில்லை.—செய்
தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தா
லும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை
நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை
விசுவாசியுங்கள் என்றார்.

**30. ஒன்றாயிருக்கிறோம்**—அதிகாரத்திலும் சிந்தையிலும் ஒற்றுமையென்க.

31. ஜனங்கள் இதைப்பற்றி நினைத்தமாதிரியைப் பார்க்கிறோம். தமக்குங் கடவுளுக்குமுள்ள ஒரு விசேஷித்த சம்பந்தத்தைக் காட்டுகிறதாகவெண்ணி அதை தேவதூஷணமென் றபிப்பிராயப்பட்டார்கள்.

34, 35. சங் $82^6$. யூத ராஜாக்கள் தேவர்களென்னப்பட்டார்கள். ஏனென்றால் அவர்கள் யேகோவாவின் பிரதிநிதிகளானார்கள். அப்படியிருக்க கடவுள் என்னைப் பிரதிஷ்டை செய்து அனுப்பியதால் நான் அவருடனிராநின்ற என்னொற்றுமையைக் கூறுவது நியாயம்.

37, 38. அவர்கள் அவரது வாக்கை அவர் செய்யுங் கிரியைகளால் பரிசோதிக்கலாம். அந்தக் கிரியைகளை உண்மையாக அறிந்தால் அந்த ஒற்றுமையையும் அறிவார்கள்.

### $10^{39-42}$. ஆவலும் விசுவாசமும்.

39 இதினிமித்தம் அவர்கள் மறுபடியும் அவரைப் பிடிக்
கத் தேடினார்கள், அவரோ அவர்கள் கைக்குத் தப்பி,—
40 யோர்தானுக்கு அக்கரையிலே, முன்னே யோவான்
ஞானஸ்நானங் கொடுத்துக்கொண்டிருந்த இடத்துக்குத்
41 திரும்பிப்போய், அங்கே தங்கினார்.—அநேகர் அவரி
டத்தில் வந்து: யோவான் ஒரு அற்புதத்தையும் செய்ய
வில்லை; ஆகிலும் இவரைக்குறித்து யோவான் சொன்ன
42 தெல்லாம் மெய்யாயிருக்கிறது என்றார்கள்.—அவ்விடத்
திலே அநேகர் அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களா
னார்கள்.

39. ஜனங்களுக்குண்டான பயனைப் பார்க்கிறோம்.

40, 42. அவர்களது அவிசுவாசத்தால் அவர் யோர்தானுக் கப்புறம் போய்விட்டார். அங்கே யோவான்ஸ்நானகன் செய்த பிரசங்கத்தின் இயக்கத்தாலும் தாம் முன்செய்த கிரியைகளாலும் அநேகரவரை விசுவாசித்தார்கள். இந்த விசுவாசம் யூதர்களது அவிசுவாசத்திற்கு விபரீதமாய் வெளிப்படுகிறது. அவர்கள் பரிசேயரின் பாரம்பரைகளில் மனக்கடினப்படாதவர்களாய்க் கடவுளது வார்த்தையைக் கேட்க ஆயத்தமானவர்களானார்கள்.

## (iv) ஒரு அற்புதத்தால் தமது வல்லமையை விளக்கினது. $11^{1-57}$.

இந்நூலாசிரியன் ஏழு அற்புதங்கள் எழுதியிருக்கிறான். இது அவைகளில் கடைசியானது. இந்தப் பெருத்த அதிசயம் திரியனுபந்த சுவிசேஷங்களில் எழுதியிராததால் இது உண்மையான சரித்திரமன்று என்பார் சிலர். அப்படிச் சொல்பவர் இதை உருவகக் கதையென்றாவது பாரம்பரைக் கதையென்றாவது பரம வாக்கைக் காண்பிக்கும் திருஷ்டாந்தமென்றாவது தனவானும் லாசருவும் என்னும் உவமையைக்குறித்த திருஷ்டாந்தமென்றாவது எண்ணுகிறார்கள். இவைகளை ஆராயின் இந்த அபிப்பிராயங்கள் நமக்குத் தெரிந்த காரியங்களுடன் பொருந்தாது என்பது விளங்கும்.

### $11^{1-16}$. துருவும் மயங்கின சீஷரும்.

1 மரியாளும் அவள் சகோதரியாகிய மார்த்தாளும்
இருந்த பெத்தானியா கிராமத்திலுள்ளவனாகிய லாசரு
2 என்னும் ஒருவன் வியாதிப்பட்டிருந்தான்.—கர்த்தருக்
குப் பரிமள தைலம் பூசி, தன் தலைமயிரால் அவரு
டைய பாதங்களைத் துடைத்தவள் அந்த மரியாளே;
அவளுடைய சகோதரனாகிய லாசரு வியாதியாயிருந்
3 தான்.—அப்பொழுது அவனுடைய சகோதரிகள்: ஆண்
டவரே, நீர் சிநேகிக்கிறவன் வியாதியாயிருக்கிறான்
என்று சொல்ல, அவரிடத்திற்கு ஆள் அனுப்பினார்கள்.
4 இயேசு அதைக் கேட்டபொழுது: இந்த வியாதி
மரணத்துக்கு ஏதுவாயிராமல் தேவனுடைய மகிமை
விளங்குவதற்கு ஏதுவாயிருக்கிறது; தேவனுடைய குமா
ரனும் அதினால் மகிமைப்படுவார் என்றார்.



5 இயேசு மார்த்தாளிடத்திலும் அவளுடைய சகோதரி
யினிடத்திலும் லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார்.—
6 அவன் வியாதியாயிருக்கிறதாக அவர் கேள்விப்பட்ட
பொழுது, தாம் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு
7 நாள் தங்கினார்.—அதன்பின்பு அவர் தம்முடைய சீஷரை
நோக்கி: நாம் மறுபடியும் யூதேயாவுக்குப் போவோம் வா
8 ருங்கள் என்றார்.—அதற்குச் சீஷர்கள்: ரபீ, இப்பொழு
துதான் யூதர் உம்மைக் கல்லெறியத் தேடினார்களே, மறு
படியும் நீர் அவ்விடத்திற்குப் போகலாமா என்றார்கள்.
9 இயேசு பிரதியுத்தரமாக: பகலுக்குப் பன்னிரண்டு
மணிநேரம் இல்லையா? ஒருவன் பகலிலே நடந்தால்
அவன் இந்த உலகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறபடி
10 யினால் இடறமாட்டான்.—ஒருவன் இரவிலே நடந்தால்
தன்னிடத்தில் வெளிச்சம் இல்லாதபடியினால் இடறு
வான் என்றார்.
11 இவைகளை அவர் சொல்லியபின்பு அவர்களை நோக்கி:
நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்தி
ருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்
12 றார்.—அதற்கு அவருடைய சீஷர்கள்: ஆண்டவரே,
நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்.—
13 இயேசுவானவர் அவனுடைய மரணத்தைக்குறித்து
அப்படிச் சொன்னார்; அவர்களோ நித்திரைசெய்து
இளைப்பாறுகிறதைக்குறித்துச் சொன்னாரென்று நினைத்
14 தார்கள்.— அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி:
லாசரு மரித்துப்போனான் என்று வெளிப்படையாய்ச்
15 சொல்லி;— நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாச
முள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்
தம் சந்தோஷப்படுகிறேன்; இப்பொழுது அவனிடத்
திற்குப் போவோம் வாருங்கள் என்றார்.
16 அப்பொழுது திதிமு என்னப்பட்ட தோமா மற்றச்
சீஷர்களை நோக்கி: அவரோடேகூட மரிக்கும்படி நா
மும் போவோம் வாருங்கள் என்றான்.

ஆகையால் இது உண்மையான சம்பவமென்றே ஒப்புக்கொள்ள வேண்டும். இதற்குச் சாதகமாகப் பின்வருமாறு சொல்லலாம்.

(1) இந்தச் சரித்திரம் திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்பெற்ற சம்பவத் தொடர்ச்சியில் வருவதில்லையாதலால் அவைகளில் எழுதியிருப்பதாக எதிர்பார்க்குவது நியாயமன்று.

(2) இந்தச் சம்பவத்தால் யூதர்களது பகை அதிகமாய் மூண்டதால் முதல் அப்போஸ்தலர் அதை அதிகமாய் விவரித்துக் காட்டமாட்டார்கள் என்று நினைக்கலாம். மத்தேயு, மாற்கு என்பவைகளில் இந்தக் குடும்பத்தார் பேர் சொல்லப்படவேயில்லை. லூக்கா ஊரின் பெயரை வெளியிடவில்லை.

(3) திரியனுபந்த சுவிசேஷங்களில் இதைப்போன்ற அதிசயங்களிருத்தலால் இதையும் எழுத அவசியமில்லை. மத் $9^{18}$ லூக் $7^{11-13}$ பார்க்க.

(4) இயேசுவின் உயிர்த்தெழுதலை வெகு முக்கியமாய் எண்ணினதினாலே இதை அவ்வளவு பெருத்த அதிசயமென்று கூறமாட்டார்கள்.

(5) சரித்திர வரலாறு உண்மையான தோற்றமுடையதுமாய் வெகு திட்டமாயும் தெளிவாயும் எழுதியிருக்கிறது.

(6) இது மற்ற சம்பவங்களுடன் சரியாய்ப் பொருந்துகிறதாதலால் நாம் இதன் உண்மையை மறுத்து இது கட்டுக்கதையென்று சாதித்தற்குக் காரணம் யாதொன்றுமில்லை. மேலும் இது உண்மையான சரித்திரம் என்பதை மறுக்கக்கூடாத ஆட்சேபனையன்று. யூதர் காண்பித்த மிகுந்த பகையினால் இயேசு யூதேயாவை விட்டுத் தனிமையாகப் பெரேயா நாட்டிற்குப் போய்விட்டார். இவ்விடத்தி லவர் சீஷர்களுக்குப் போதனை செய்துவந்தார்.

1. **பெத்தானியா**—எருசலேமுக்கு இரண்டுமைல் தூரமான ஒரு சிறு ஊர். ஒலிவமலையின் அடிவாரத்திலிருந்தது. இப்போதும் அந்த இடத்திற்கு லாசருவின் வீடு என்ற பெயரிருக்கிறது.

**லாசரு**—உவமையில் சொல்லியிருக்கிற லாசரு என்பவனும் ஆஸ்தியுள்ள பிரபுவும் இவனேயென்று சொல்லத்தக்கதன்று.

2. **மரியாள்** — இயேசுவுக்குத் தைலமூற்றின சம்பவம் ஆதிக்கிறிஸ்தவர் யாவர்க்கும் தெரிந்திருந்தது. ஆகையால் லாசருவை அவளுடைய சகோதரனென்று ஆசிரியன் சொல்லுகிறான்.

மகதலேனா மரியாளாவது (லூக் $7^{37}$), ஏழு பிசாசுகளுடைய மரியாளாவது இவளே என்பதற்கு நியாயமொன்றுமில்லை. லூக் $8^{2}$.

3. **நீர் நேசிக்கிறவன்**—இந்த பதம் பொதுவான அன்பில்லாமல் விசேஷித்த நேசமாயிற்று. 5-ம் வசனத்தில் வருகிற வார்த்தை பொதுவான அன்பைக் குறிக்கிறது.



4. **மகிமைப்படுவார்** — இயேசு தமது வல்லமையைக் காண்பிக்கப் போவதாலும் அவரை மரணத்திற்குட்படுத்தின சம்பவங்களில் இது ஒன்றாதலாலும் இதினாலவர் மகிமைப்படுவார். 9, 10. இயேசு தமக்குக் கொடுக்கப்பட்ட காலத்தில் பயமின்றி வேலைசெய்யலாம். யாவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்ட காலத்தில் தங்கள் வேலைசெய்து முடித்தல்வேண்டும். வேலைசெய்யாமல் காலத்தை நீட்டுவது முடியாத காரியம்.

11. **நம்முடைய சிநேகிதன்**—தம்மை எல்லோரோடும் சேர்த்துச் சிநேகிதன் என்றதைப் பார்க்க.

15. **அவனிடத்திற்கு** — 11-ம் வசனத்திலும் இதிலும் லாசரு இன்னும் உயிரோடிருந்தாற்போல் பேசினதைப் பார்க்க.

16. **அவரோடேகூட மரிக்கும்படி** — நீங்கள் விசுவாசிக்கும்படியென்று இயேசு சொன்னதற்கும் தோமா விசுவாசமின்றி இப்படிப் பேசினதற்குமுள்ள வித்தியாசத்தைக் காண்க. மற்ற இடங்களில் இவனுக்கு இதே மனமிருத்தலைக் காண்க. $14^{5}$ $20^{25}$.

பேதுருவைப்பற்றி ஒன்றும் சொல்லப்படாமையால் அவனிச் சமயத்தில் மற்றவர்களுடன் இல்லையென்று அனுமானிக்கலாம் என்பார் சிலர்.

### $11^{17-35}$. இயேசுவும் விசனமுள்ள ஸ்திரீகளும்.

17 இயேசு வந்தபோது அவன் கல்லறையில் வைக்கப்
பட்டு நாலுநாளாயிற்றென்று கண்டார்.
18 பெத்தானியா ஊர் எருசலேமுக்குச் சமீபமாய் ஏறக்
19 குறைய இரண்டுமைல் தூரத்திலிருந்தது.—யூதரில்
அநேகர் மார்த்தாள் மரியாள் என்பவர்களுடைய சகோ
தரனைக்குறித்து அவர்களுக்கு ஆறுதல் சொல்லும்படி
20 அவர்களிடத்தில் வந்திருந்தார்கள்.—இயேசு வருகிறார்
என்று மார்த்தாள் கேள்விப்பட்டபோது, அவருக்கு
எதிர்கொண்டு போனாள்; மரியாளோ வீட்டிலே உட்
கார்ந்திருந்தாள்.
21 மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே,
நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்
22 டான்.—இப்போதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக்
கொள்வதெதுவோ அதை தேவன் உமக்குத்தந்தருளுவா
ரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

23 இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்
24 தெழுந்திருப்பான் என்றார்.—அதற்கு மார்த்தாள்: உயிர்த்
தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்
தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள்.
25 இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும்
ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன்
26 மரித்தாலும் பிழைப்பான்;—உயிரோடிருந்து என்னை
விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாம
லும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா என்றார்.—
27 அதற்கு அவள்: ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வரு
கிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான்
விசுவாசிக்கிறேன் என்றாள்.
28 இவைகளைச் சொன்னபின்பு, அவள் போய், தன்
சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து:
போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார் என்
29 றாள்.— அவள் அதைக் கேட்டவுடனே, சீக்கிரமாய்
30 எழுந்து, அவரிடத்தில் வந்தாள்.—இயேசு இன்னும்
கிராமத்துக்குள் வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த
31 இடத்திலே இருந்தார்.—அப்பொழுது வீட்டிலே அவளு
டனேகூட இருந்து அவளுக்கு ஆறுதல் சொல்லிக்
கொண்டிருந்த யூதர்கள், மரியாள் சீக்கிரமாய் எழுந்து
போகிறதைக் கண்டு: அவள் கல்லறையினிடத்தில் அழு
கிறதற்குப் போகிறாள் என்று சொல்லி, அவளுக்குப்
பின்னே போனார்கள்.
32 இயேசு இருந்த இடத்தில் மரியாள் வந்து, அவரைக்
கண்டவுடனே, அவர் பாதத்தில் விழுந்து: ஆண்டவரே,
நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்க
33 மாட்டான் என்றாள்.—அவள் அழுகிறதையும் அவளோ
டேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்ட
34 போது ஆவியிலே கலங்கித் துயரமடைந்து:—அவனை
எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே, வந்து
35 பாரும் என்றார்கள்.—இயேசு கண்ணீர் விட்டார்.

17. பெத்தானியாவுக்கும் பெரோயாவுக்கும் இருபத்தைந்து மைல் தூரம். அது ஒருநாள் பயணம். ஆகையால் சமாசாரம் இயேசுவுக்குக் கிடைத்ததற்குமுன்னே லாசரு இறந்துபோயிருப்பான்.

19. ஏழு நாட்களாய்த் துக்கங்கொண்டாடுவது யூதர் வழக்கம். இந்தக் காலத்தில் சிநேகிதர் வந்து ஆறுதல் சொல்லுவார்கள்.



24 யூதர்களுக்குள்ளே உயிர்த்தெழுதலைப்பற்றித் திட்டமான நம்பிக்கையில்லை. கடைசிநாளில் கடவுள் யாவரையு மெழுப்புவாரென்று அநேகர் நினைத்தபோதிலும் பாக்கியமுள்ள மோட்சத்தைப் பெறுவதாக அவர்கள் நம்பவில்லை.

25. இயேசு தாம் உயிர்ப்பிக்கும் சக்தியுள்ளவரென்று அறிந்து சாதிக்கிறார். தாமினிமேல் உயிர்த்தெழுதலைக் கொடுப்பதாகச் சொல்லாமல் தாமே உயிர்த்தெழுதலும் நித்தியமாயிராநின்ற ஜீவனுமானவர் என்று கூறுகிறார். அவரைச் சார்ந்தவன் நித்தியஜீவனை யுடையவன்.

27. **விசுவாசிக்கிறேன்**—விசுவாசித்திருக்கிறேன் என்பது சரியான மொழிபெயர்ப்பு. இயேசு மேசியாவாயிருக்கிறார் என்னும் நம்பிக்கை அவளுக்கு முன்னமே இருந்தது.

23. மரியாள் இனி நடக்கப்போகிற செய்கையின் அர்த்தத்தை நன்குணரும்படி இயேசு முன்னே அவளுடன் பேசவேண்டுமென்கிற நோக்கத்தோடே அவளைக் கூப்பிட்டதாக நினைக்கலாம்.

31. **அழுகிறதற்கு**—அழுது துக்கம் கொண்டாடுவதற்கென்று எழுதுக. 25-ம் வசனத்தில் வருகிற வார்த்தை இதல்ல, அது வேறே.

33. **ஆவியிலே கலங்கித் துயரமடைந்து**—அவரது மனதில் உக்கிரம் ஏறினது. பாவத்தின் பயனாகிய மரணத்தைக் கண்டு அதை எதிர்க்க மனம் விரைந்து நின்றாவது, யூதரது பொய் யழுகையைக் கண்டு மனவெறுப்புப் பெற்றாவது இவ்வாறு உக்கிரம் பெற்றிருப்பார். இவ்வுக்கிரத்தால் மனம் நடுநடுங்கிற்று. 28-ம் வசனத்தையும் பார்க்க.

34. **எங்கே வைத்தீர்கள்**—வேறெந்தவிடத்திலும் தாமறியவில்லை யென்பொருட்டு அவர் கேள்வியைக் கேட்டதாகச் சொல்லப்படவில்லை.

35. **கண்ணீர் விட்டார்**—அவர் துக்கம் மாற்றப்போன சமயத்திலே துக்கப்படுவோருடன் அனுதாபப்பட்டுக் கண்ணீர்விட்டது இயேசுவின் மெய் மனுஷீகத்தையும், அனுதாப சிந்தையையுங் காட்டுகிறது.

## $11^{36-44}$. இயேசுவும் மரணமும்.

36 அப்பொழுது யூதர்கள்: இதோ, இவர் அவனை எவ்
37 வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்!—அவர்களில் சிலர்:
குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச்
சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள்.

38 அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்
கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார். அது ஒரு குகை
யாயிருந்தது; அதின்மேல் ஒரு கல் வைக்கப்பட்டிருந்
39 தது.—இயேசு: கல்லை எடுத்துப்போடுங்கள் என்றார்.
மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரை
நோக்கி: ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு
நாளாயிற்றே என்றாள்.
40 இயேசு அவளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனு
டைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச்
41 சொல்லவில்லையா என்றார்.—அப்பொழுது மரித்தவன்
வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப்போட்
டார்கள்.
இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே,
நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உமக்கு ஸ்தோத்
42 திரிக்கிறேன். — நீர் எப்பொழுதும் எனக்குச் செவி
கொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும்
நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள்
விசுவாசிக்கும்படியாக அவர்கள் நிமித்தம் இதைச்
சொன்னேன் என்றார்.
43 இவைகளைச் சொன்னபின்பு: லாசருவே, வெளியே
44 வா என்று, உரத்தசத்தமாய்க் கூப்பிட்டார்.—அப்பொ
ழுது, மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்
களும் கைகளும் பிரேதச்சீலைகளினால் கட்டப்பட்டி
ருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்
தது. இயேசு அவர்களை நோக்கி: இவனைக் கட்ட
விழ்த்துவிடுங்கள் என்றார்.

37. யூதர்கள் அனுதாபப்பட்டு இந்த வார்த்தைகளைப் பட்சமாய்ச் சொன்னார்கள் என்பார் சிலர். வேறு சிலர் அவர்மேல் குற்றஞ் சுமத்த அவர்கள் பரிகாசமாய்ச் சொன்னார்களென்பார். பிறவிக்குருடனைப் பார்க்கப்பண்ணின அற்புதம் அவர்களுக்குத் தெரிந்திருக்கும்.

39. **நாலுநாளாயிற்று**—ஆத்துமா மூன்றுநாட்களாய்க் கல்லறையைச் சுற்றித்திரிந்து பிறகு முகமாறினதைக் கண்டு பிணத்தை விட்டுவிடும் என்பது ஓர் முதுமொழி.

42. பரம தந்தையோடுள்ள இயேசுவின் சம்பந்தத்தை இதிலே பார்க்கிறோம். பரம தந்தையின் வல்லமையால் இச்செய்கையைச் செய்தற்கு அவர் செய்த ஜெபம் விளம்பரமான அறிக்கை. வேண்டுகோ



ளால் கடவுளது சித்தமின்னதென்று உணரக்கூடுமென்று நூலாசிரியர் ஒருவர் எழுதியிருக்கிறார். இச்சம்பவத்தில் காணப்படும் மார்த்தாள் மரியாள் என்பவர்களின் லட்சணங்கள் இரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லப்பட்டதற்கு ஒத்திருக்கின்றன. லூக் 10[38-43]. ஒத்துப்பார்க்க. மனப்பதற்றமும் ஊக்கமும் (20), மனத்தை வெளியிடுதலும் (27), தர்க்கிக்கும் மனமும் (24–39), உலக யுக்தியும் (28–39) ஆகிய இவைகள் மார்த்தாளிடம் தோன்றின குணங்களாம்.

அமைதலும் (20), அன்புள்ள சிந்தையும் (32), சும்மா அழுதலும் (32) ஆகிய இவைகள் மரியாளிடம் தோன்றின குணங்கள்.

### 11[45-57]. இயேசுவும் பகைவரும்.

45 அப்பொழுது மரியாளிடத்தில் வந்திருந்து, இயேசு
செய்தவைகளைக் கண்டவர்களாகிய யூதர்களில் அநேகர்
46 அவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்.—அவர்
களில் சிலர் பரிசேயரிடத்தில் போய், இயேசு செய்த
வைகளை அவர்களுக்கு அறிவித்தார்கள்.
47 அப்பொழுது பிரதான ஆசாரியரும் பரிசேயரும்
ஆலோசனைச் சங்கத்தைக் கூடிவரச்செய்து, நாம்
என்னசெய்கிறது? இந்த மனுஷன் அநேக அற்புதங்
48 களைச் செய்கிறானே. — நாம் இவனை இப்படி விட்டு
விட்டால், எல்லாரும் இவனை விசுவாசிப்பார்கள்; அப்
பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தானத்தையும்
ஜனத்தையும் அழித்துப்போடுவார்களே என்றார்கள்.
49 அப்பொழுது அவர்களில் ஒருவனும் அந்த வருஷத்
துப் பிரதான ஆசாரியனுமாகிய காய்பா என்பவன்
அவர்களை நோக்கி: உங்களுக்கு ஒன்றுந் தெரியாது;—
50 ஜனங்களெல்லாரும் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனு
ஷன் ஜனங்களுக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்கு
மென்று நீங்கள் சிந்தியாமலிருக்கிறீர்கள் என்றான்.—
51 இதை அவன் சுயமாய்ச் சொல்லாமல், அந்த வருஷத்
துப் பிரதான ஆசாரியனானபடியினாலே இயேசு யூத
52 ஜனங்களுக்காக மரிக்கப்போகிறாரென்றும், — அந்த
ஜனங்களுக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனு
டைய பிள்ளைகளை ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவும் மரிக்
கப்போகிறாரென்றும், தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

53 அந்நாள்முதல் அவரைக் கொலைசெய்யும்படிக்கு
54 ஆலோசனைபண்ணினார்கள்.—ஆகையால் இயேசு அதன்
பின்பு வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல்;
அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீபமான இடமா
கிய எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப் போய், அங்
கே தம்முடைய சீஷருடனேகூடத் தங்கியிருந்தார்.
55 யூதருடைய பஸ்காபண்டிகை சமீபமாயிருந்தது.
அதற்கு முன்னே அநேகர் தங்களைச் சுத்திகரித்துக்
கொள்ளும்பொருட்டு நாட்டிலிருந்து எருசலேமுக்குப்
56 போனார்கள்.—அங்கே அவர்கள் இயேசுவைத் தேடிக்
கொண்டு தேவாலயத்தில் நிற்கையில், ஒருவரையொரு
வர் நோக்கி: உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது,
அவர் பண்டிகைக்கு வரமாட்டாரோ என்று பேசிக்
57 கொண்டார்கள்.—பிரதான ஆசாரியரும் பரிசேயரும்
அவரைப் பிடிக்கும்படி யோசித்து, அவர் இருக்கிற
இடத்தை எவனாவது அறிந்திருந்தால், அதை அறிவிக்க
வேண்டுமென்று கட்டளையிட்டிருந்தார்கள்.

**கடைசியாக இவ்வற்புதத்தின் பயன்கள் காண்பிக்கப்பட்டன. $11^{45-57}$.**

அவைகளாவன:

(1) யூதரநேகருக்கு நம்பிக்கையுண்டாதல்.

(2) பரிசேயர் அவரைக் கொல்ல உறுதியான தீர்மானஞ்செய்தல்.

(3) இயேசு விலகிப்போதல்.

(4) மரியாள் அதிக அன்புகாட்டல்.

(5) ஜனங்கள் மிக்க டம்பமாய் அவரை வாழ்த்திக் கொண்டாடுதல் என்பவைகளே.

46. **அறிவித்தார்கள்** — விரோதத்தினாலோ, பட்சத்தினாலோ, அது நமக்குத் தோன்றுகிறதில்லை.

47. **ஆலோசனைச்சங்கம்** — அதாவது சனீடிரின் என்னும் யூதரது நியாயசங்கம்.

48. இயேசுவின் போதனை யூதரது சடங்காசாரங்களையும் ஆசாரியர்களையும் வணக்கத்துடன் எண்ணாதபடி ஜனங்களைத் தூண்டிவிடுவதால் ஆசாரியக் கூட்டத்தாரின் பெருமையும் சிலாக்கியங்களும் அழிந்துபோய்விடுமென்பது.



49. **காய்பா** — இவன் அன்னாவுக்கு மருமகன். பொந்தியுபிலாத்துவுக்கு முந்தின அதிபதி அவனைப் பிரதான ஆசாரியனாக நியமித்தான். விற்தேலியு இராயன் அவனை கி. பி. 37–ல் நீக்கிவிட்டான். அவனே சபையைத் துன்பப்படுத்தினவன். அப். $5^{17-21, 27}$ $7^{1}$, $9^{1}$ அவன் சதுசேய சமயத்தான். இந்தச் சமயத்தார் முக்கியமாய் இயேசுவைக் கொல்ல வகைதேடினார்கள்.

51. காய்பா தான் அறியாமலே இயேசுவின் மரணத்தாலுண்டாகும் பொதுவான பயனை இதிலே வெளிப்படுத்தினான். இப்படி மொழிந்தது நூலாசிரியனது எண்ணம்.

54. எப்பிராயீம் பெத்தேலுக்கு 4 மைல் தூரமான இடம்.

55. **தங்களைச் சுத்திகரித்துக்கொள்ளும்படிக்கு** — இப்பண்டிகை கொண்டாடுமுன்னே தீட்டு முழுவதும் நிராகரிக்கவேண்டும்.

57. **பிரதான ஆசாரியர்** — இயேசுவை இம்சைபடுத்துவதில் ஆசாரியராகிய சதுசேயபட்சத்தார் முதன்மையானவர்கள். இது திரியனுபந்த சுவிசேஷத்தினாலும் தெரியவருகிறது.

**4. அந்தப் பொதுவான வெளிப்படுத்தலின் முடிவுகள். $12^{1-50}$.**

நூலாசிரியன் கடைசியாக சாசரவென்று சித்திரப்படங்களைப் போல இயேசுவின் சீஷர் கொண்ட விசுவாசத்தையும், யூதர் கொண்ட பகையையும், பொதுவான ஜனங்களது மனவெழுச்சியையும், அந்நிய தேசத்தார் அடைந்த ஆவலையும், இயேசுவின் நோக்கத்தையும், தன் அபிப்பிராயத்தையும், ஒன்றின்பின் ஒன்றாய் வெளிப்படுத்திக் காட்டுகிறான். முன்னே சொல்லியபடி இந்நான்காம் சுவிசேஷத்தில் ஜனங்கள் கொண்ட நோக்கங்கள் வெளிப்படையாயுள்ளன. அதற்குதாரணமாக இந்த அதிகாரத்தில் தொகுப்பாக அநேகரது நோக்கங்கள் வெளியிடப்பெற்றன. கடைசியாக இவைகளுடன் இயேசுவின் நோக்கமும் நூலாசிரியனது அபிப்பிராயமும் வெளிப்பட்டன. இந்தச் சம்பவங்கள் யாவும் சிலுவையிலடையும் மரணத்தையே நோக்கி நடந்தன.

**$12^{1-11}$. சிறந்த அன்பும் தீராத பகையும்.**

1 பஸ்காபண்டிகை வர ஆறுநாளைக்கு முன்னே இயேசு
தாம் மரணத்திலிருந்து எழுப்பின லாசரு இருந்த பெத்
2 தானியாவுக்கு வந்தார்.—அங்கே அவருக்கு இராவி

ருந்து பண்ணினார்கள்; மார்த்தாள் பணிவிடை செய்
தாள்; லாசருவும் அவருடனேகூடப் பந்தியிருந்தவர்
களில் ஒருவனாயிருந்தான்.
3 அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற களங்க
மில்லாத நளதம் என்னும் தைலத்தில் ஒரு இராத்தல்
கொண்டுவந்து, அதை இயேசுவின் பாதங்களில் பூசி,
தன் தலைமயிரால் அவருடைய பாதங்களைத் துடைத்
தாள்; அந்த வீடு முழுவதும் தைலத்தின் பரிமளத்தினால்
நிறைந்தது.
4 அப்பொழுது அவருடைய சீஷரில் ஒருவனும் அவ
ரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனுமாகிய சீமோனு
5 டைய குமாரனை யூதாஸ்காரியோத்து: — இந்தத்
தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திருக்
6 குக் கொடாமற்போனதென்ன என்றான். — அவன்
தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்
லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை
வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்
கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான்.
7 அப்பொழுது இயேசு: இவளை விட்டுவிடு, என்னை
அடக்கம்பண்ணும் நாளுக்காக இதை வைத்திருந்தாள்.—
8 தரித்திரர் எப்பொழுதும் உங்களிடத்தில் இருக்கிறார்
கள்; நான் எப்பொழுதும் உங்களிடத்தில் இரேன்
என்றார்.
9 அப்பொழுது யூதரில் திரளான ஜனங்கள் அவர் அங்
கேயிருக்கிறதை அறிந்து, இயேசுவினிமித்தமாகமாத்
திரம் அல்ல, அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின லாச
10 ருவைக் காணும்படியாகவும் வந்தார்கள். — லாசருவி
னிமித்தமாக யூதர்களில் அநேகர் போய், இயேசுவினி
11 டத்தில் விசுவாசம் வைத்தபடியால் — பிரதான ஆசாரி
யர்கள் லாசருவையும் கொலைசெய்ய ஆலோசனைபண்
ணினார்கள்.

**(i) அவரை நேசித்த மரியாளது அன்பு. 12¹⁻⁸.**

**2. இராவிருந்து பண்ணினார்கள்** — இது அவர் செய்த ஊழியத்திற்குக் கௌரவமாக அந்த ஊர் ஜனங்களால் கொடுக்கப்பட்டது. குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் நடந்தது. மத் 26⁶ மாற் 14³. பார்க்க.



**மார்த்தாள் பணிவிடை செய்தாள்** — இதுவே கிரியனுபந்த சுவிசேஷங்களில் காணப்படும் மார்த்தாளின் குணத்திற்கு சரியாயிருக்கிறது.

**3. மரியாள்** — மத்தேயு, மாற்குகளில் இவர்கள் பேர் சொல்லப்படவில்லை. லூக் 7³⁸-ல் எழுதப்பட்டது வேறே சம்பவம்.

**பரிமளத்தினால் நிறைந்தது** — சம்பவத்தைக் கண்டவன்மாத்திரம் இதை எழுதக்கூடும். இது மற்றச் சுவிசேஷங்களில் சொல்லப்படவில்லை.

**4. சீமோனுடைய குமாரனை** — இதை ஒழிக்க.

**5. முந்நூறு பணத்துக்கு** — ஒரு பணம் ஒரு நாள் கூலியாயிற்று. அக்காலத்தில் அது சுமார் 8½ அணா. யூதாஸ் பணப்பெட்டியை வைத்துக்கொண்டு செலவு செய்தான்.

**6. சுமக்கிறவன்** — பறித்தவன் என்று எழுதுக. அவன் அதிலிருந்து திருடிக்கொண்டுபோனதாக அர்த்தமாயிருக்கிறது.

7. இந்த வசனத்தின் மொழிபெயர்ப்பைப்பற்றிச் சற்றுச் சந்தேகிக்கிறார்கள். இது என் அடக்கத்திற்கு ஞாபகக்குறிப்பும், அன்புள்ள பிரதிஷ்டையுமாக நடந்தது என்றது இதற்குப் பொழிப்புரை என்பது திண்ணம்.

“தர்மோபகாரத்திற்கேற்ற ஏழைகளைக் கண்டடைதல் லேசான காரியமாயிருக்க நான் போனபின் ஆத்மபக்தி செய்யத்தக்க கிறிஸ்து உங்களுக்கு எங்கே கிடைக்கலாம் என்றர்த்தமாம்.” (பாரகந்தர்.)

**(ii) பிரதான ஆசாரியரது பகை. 12⁹⁻¹¹.**

பொதுவான ஜனங்கள் அவரை விசுவாசித்தார்கள். பிரதான ஆசாரியக் கூட்டத்தார் லாசருவையுங் கொல்ல நினைத்தார்கள். எப்படியாவது இந்தப் புதிய சமயத்தைத் தொலைக்கவேண்டுமென்பது அவர்களது எண்ணம்.

### 12¹²⁻²². கலிலேயரது மகிழ்ச்சியும் கிரேக்கரது ஆவலும்.

12 மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று
பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்
13 பட்டு, — குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவ
ருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா,

கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின்
ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்.
14 அல்லாமலும்: சீயோன் குமாரத்தியே, பயப்படாதே,
உன் ராஜா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறார்
15 என்று எழுதியிருக்கிற பிரகாரமாக, — இயேசு ஒரு
கழுதைக்குட்டியைக் கண்டு அதின்மேல் ஏறிப்போனார்.
16 இவைகளை அவருடைய சீஷர்கள் துவக்கத்திலே
அறியவில்லை. இயேசு மகிமையடைந்தபின்பு, இப்
படி அவரைக்குறித்து எழுதியிருக்கிறதையும், தாங்கள்
இப்படி அவருக்குச் செய்ததையும் நினைவுகூர்ந்தார்கள்.
17 அன்றியும் அவருடனேகூட இருந்த ஜனங்கள் அவர்
லாசருவைக் 'கல்லறையிலிருந்து வெளியே வரவழை
த்து, அவனை உயிரோடே எழுப்பினாரென்று சாட்சி
18 கொடுத்தார்கள். — அப்படிப்பட்ட அற்புதத்தை அவர்
செய்தார் என்று ஜனங்கள் கேள்விப்பட்டதினால் அவர்
19 கள் அவருக்கு எதிர்கொண்டுபோனார்கள். — அப்பொ
ழுது பரிசேயர் ஒருவரையொருவர் நோக்கி: நீங்கள்
செய்கிறதெல்லாம் வீணென்று அறிகிறதில்லையா?
இதோ, உலகமே அவனுக்குப் பின்சென்று போயிற்றே
என்றார்கள்.
20 பண்டிகையில் ஆராதனைசெய்ய வந்தவர்களில் சில
21 கிரேக்கர் இருந்தார்கள். — அவர்கள் கலிலேயா நாட்டுப்
பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து:
ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவ
22 னைக் கேட்டுக்கொண்டார்கள். — பிலிப்பு வந்து, அதை
அந்திரேயாவுக்கு அறிவித்தான்; பின்பு அந்திரேயாவும்
பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள்.

**(iii) ஜனங்கள் கொண்ட மனவெழுச்சி. $12^{12-19}$.**

லாசருவை எழுப்பின அதிசயத்தால் ஜனங்களுக்கு அதிக மகிழ்ச்சியுண்டாகி மிகக் கொண்டாட்டமாய் இயேசுவைப் புகழ்ந்தார்கள். ஜனங்களது மனங்கள் இதினால் மிகவும் பொங்கி அவர்கள் இயேசுவை மெச்சினார்கள். லூக் $19^{37}$–ல் அவர்கள் பார்த்த வல்ல கிரியைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறது.

**12. மறுநாளிலே**—இது ஞாயிற்றுக்கிழமை. விருந்து சனிக்கிழமையாகிய ஓய்வுநாளின் சாயரட்சையில் நடந்திருக்கும். ஓய்வுநாள் ஆறுமணிக்கு முடிந்தது.



**திரளான ஜனங்கள்**—பெரும்பான்மையோர் பிரயாணிகளாயிருப்பார்கள். அநேகர் கலிலேயா தேசத்தாராகி அவர் செய்த கிரியைகளைக் கண்டு விசுவாசித்தாரென்று நினைக்கலாம்.

**13. ஓசன்னா** — இப்போது இரட்சிப்பாயாக என்றர்த்தமுள்ள ஒரு எபிரெய வாசகம். சங் $118^{25}$–லிருந்து எடுக்கப்பட்டது. இது இயேசுவை மேசியாவாக அறிக்கையிடுகிறது.

**19.** இதில் பரிசேயரது மனத்தளர்ச்சியைக் காண்கிறோம்.

**(iv) புறஜாதியார் கொண்ட ஆவல். $12^{20-22}$.**

இது பஸ்காபண்டிகை கொண்டாடும் முன்னாளில் நடந்தது போலும்.

**20. கிரேக்கர்**—அதாவது யூதமார்க்கத்தைச் சேர்ந்த கிரேக்கர்.

**21. பிலிப்பு**—இது கிரேக்கப் பெயராதலால் அவன் கிரேக்கனாயிருந்து அந்த கிரேக்கரை யறிந்தவனாயிருக்கலாம்.

**இயேசுவைக் காண**—அவர்கள் புறஜாதியாராதலின், கிறிஸ்து என்னாமல் இயேசு என்றார்கள்.

**22. அந்திரேயா**—அவனும் பிலிப்புவும் ஒரே ஊரார். இயேசு புறஜாதியாருக்கு ஊழியஞ்செய்யாமையால் சீஷர்கள் இந்த வேண்டுகோளைப்பற்றி ஆலோசனைபண்ணுகிறார்கள். பிறகு இருவர் போய் இயேசுவிடஞ் சொன்னார்கள்.

**$12^{23-36}$. சிறந்த மகிமையும் ஒளியுள்ள நடக்கையும்.**

23 அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மனுஷ
24 குமாரன் மகிமைப்படும்படியான வேளை வந்தது. — மெய்
யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லு
கிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து
சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த
25 பலனைக் கொடுக்கும். — தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன்
அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை
வெறுக்கிறவனோ அவன் அதை நித்திய ஜீவகாலமாய்க்
26 காத்துக்கொள்ளுவான். — ஒருவன் எனக்கு ஊழியஞ்
செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான்
எங்கேயிருக்கிறேனோ, அங்கே என் ஊழியக்காரனும்
இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவ
னைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்.

27 இப்பொழுது என் ஆத்துமா கலங்குகிறது, நான்
என்ன சொல்லுவேன். பிதாவே, இந்த வேளையி
னின்று என்னை ரட்சியும் என்று சொல்வேனோ; ஆகி
28 லும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன்.—பிதா
வே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார்.
அப்பொழுது: மகிமைப்படுத்தினேன், இன்னமும்
மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து
29 உண்டாயிற்று.—அங்கே நின்றுகொண்டிருந்து, அதைக்
கேட்ட ஜனங்கள்: இடிமுழக்கமுண்டாயிற்று என்றார்
கள். வேறு சிலர்: தேவதூதன் அவருடனே பேசினான்
என்றார்கள்.
30 இயேசு அவர்களை நோக்கி: இந்தச் சத்தம் என்னி
மித்தம் உண்டாகாமல் உங்கள் நிமித்தமே உண்டா
31 யிற்று.—இப்பொழுதே இந்த உலகத்துக்கு நியாயத்
தீர்ப்பு உண்டாகிறது; இப்பொழுதே இந்த உலகத்தின்
32 அதிபதி புறம்பாகத் தள்ளப்படுவான்.—நான் பூமியி
லிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும்
என்னிடத்தில் இழுத்துக்கொள்ளுவேன் என்றார்.—
33 தாம் இன்னவிதமான மரணமாய் மரிக்கப்போகிறா
ரென்பதைக் குறிக்கும்படி இப்படிச் சொன்னார்.
34 ஜனங்கள் அவரை நோக்கி: கிறிஸ்து என்றென்றைக்
கும் இருக்கிறார் என்று வேதத்தில் சொல்லியதை நாங்
கள் கேட்டிருக்கிறோம், அப்படியிருக்க மனுஷகுமா
ரன் உயர்த்தப்படவேண்டியதென்று எப்படிச் சொல்
லுகிறீர்; இந்த மனுஷகுமாரன் யார் என்றார்கள்.
35 அதற்கு இயேசு: இன்னும் கொஞ்சக்காலம் ஒளி
உங்களிடத்தில் இருக்கும்; இருளில் நீங்கள் அகப்படா
தபடிக்கு ஒளி உங்களோடிருக்கையில் நடவுங்கள்; இரு
ளில் நடக்கிறவன் தான் போகிற இடம் இன்னதென்று
36 அறியான்.—ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளி
யின் பிள்ளைகளாகும்படிக்கு, ஒளியினிடத்தில் விசுவா
சமாயிருங்கள் என்றார்.
இவைகளை இயேசு சொல்லி, அவர்களை விட்டு
மறைந்தார்.

(v) இயேசு கடைசியாகச் செய்த பிரசங்கம். $12^{23-36}$.

(a) இயேசுவின் மகிமை. $12^{23-33}$.

கிரேக்கர் அதற்கு அத்தாட்சி கொடுத்தார்கள். $12^{23}$.



ஆத்மதியாகஞ்செய்வது மகிமையடையும் வழி. $12^{21-27}$.

கடவுள் அதற்கு அத்தாட்சி கொடுத்தார். $12^{28-30}$.

அந்த மகிமை இயேசுவின் மரணத்தால் விளங்கும். $12^{31-33}$.

(b) எச்சரிக்கை. $12^{34-36}$.

கிறிஸ்து உலகத்திற்கு ஒளியாதலின் ஜனங்கள் அந்த ஒளியில் நடக்கவேண்டும்.

23. கிரேக்கரது வருகை இனி உண்டாகப்போகும் சர்வலோக மேன்மைக்கு முன் குறிப்பாகவேயிருந்தது. இத்துடன் இயேசுவின் காலம் நிறைவேறினதற்கு அடையாளமாயிற்று.

24. இது பரம இராஜ்யத்தின் பிரமாணம். ஆத்மதியாகம் உண்மையான மேன்மைக்குக் காரணமாமென்பதே. இது இயேசுவின் ஜீவிய பிரமாணமாகவே காணப்படுகிறது.

25. அந்தப் பிரமாணம் சாதாரண நடக்கைக்கு முரியதாகவேயிருக்கிறது. யாவரும் வாழ்நாளை உத்தமமாய் உபயோகிப்பதற்கு வழியாம். மத் $10^{38}$ $16^{24}$ மாற் $8^{35}$ லூக் $9^{23}$ $14^{26}$ $17^{32}$. பார்க்க.

ஜீவன் என்பது மனுஷரது சாதாரண உயிரைக் குறிக்கிறது. ஜீவனை நேசித்தலென்பது தன்னயமென்றர்த்தமாம். ஜீவனை வெறுத்தல் என்றால், ஆத்மதியாகமாகிய சுயவெறுப்பு என்று அர்த்தமாம். பாரகந்தர் இவ்வார்த்தைக்கு நேர்த்தியான பொருளைக் குறிப்பித்துச் சொல்லுகிறார். என்னவெனில், “எவன் இம்மையில் லௌகீக ஜீவனை விட்டுவிடுவானோ அவன், தான் கிறிஸ்துவை யடையுமட்டும் அதைக் காத்து அடக்கிக்கொள்ளுவான்” என்பதே.

26. அதே பிரமாணத்தின்படி கிறிஸ்துவின் சீஷர்கள் அவருக்கு ஊழியம் பண்ணவேண்டும். ஆத்மதியாக வழியில் நடந்தால்மட்டும் கிறிஸ்துவின் மகிமையைப் பெறுவார்கள்.

27, 28. இயேசு தாம் செய்யவேண்டிய ஆத்மதியாகத்தைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டு சற்றுநேரமாய் மனங்கலங்கினார். அப்பொழுது அதின் நோக்கத்தைத் தெளிந்தறிந்து உறுதிபெற்றார். இதில் இயேசுவின் உண்மையான மனுஷீகத்தைக் காண்கிறோம். கடைசியாக இந்த மனக்கலக்கத்தை ஜெயித்து, கடவுளின் மகிமையை உயர்த்திக் கூறினார்.

சத்தம்—இந்தச் சத்தம் தெய்வீக அதிசயமாய் உண்டாயிற்று. மற்றோர் இவ்வார்த்தைகளைக் கேளாமலிருக்க, இயேசு தம்முடைய தந்தையின் உறுதிமொழியைக் கேட்டார்.

31. முடிவான வெற்றியைப்பற்றி இயேசு கடவுளது வாக்கைப் பெற்று நிச்சயமடைந்தார்.

உலகம்—அதாவது பிரபஞ்சம். இந்த வார்த்தைக்கு இவ்வாசிரியன் எழுதிய நூற்களில் பின்வரும் விசேஷித்த அர்த்தமுண்டு. என்னவெனில் கடவுள் ஆவியில்லாத பிரபஞ்ச ஆவியுடையதெல்லாமென்பதே. இதற்குப் பிரபு சாத்தானே. யூதர்கள் அவனைப் பிரபஞ்சத்தின் பிரபு என்றார்கள்.

32. உயர்த்தப்பட்டிருக்கும்போது—ஆசிரியன் மறு வசனத்தில் இதைச் சிலுவையி லறைதலென்று சொல்லுகிறான். எனினும், இயேசுவோ தாம் பூரணமாய் மகிமையடைதலைப்பற்றியே இவ்விதமாய்ப் பேசினாரென்று சொல்லவேண்டும். ஆசிரியனுக்கு இயேசுவின் மரணமே விசேஷமாதலின் இவ்விதமாய் அதைப் பிரித்து விசேஷிக்கிறான்.

34. அவர்கள் மேசியாவைப்பற்றிய வார்த்தைகளை எப்போதும் பிரபஞ்ச மகிமைக்குரியவிதமாய் உணர்ந்ததாலேயே இயேசு காண்பித்த மனுஷகுமாரனின் ஆத்மீக இயல்பை அவர்க ளறியாதிருந்தார்கள்.

36. ஒளியின் பிள்ளைகள் — கிறிஸ்துவின் சீஷர்கள் ஒளியின் தன்மை யுடையவர்களாதலால் அவர்கள் ஒளியின் மக்களாவார்கள். லூக் $16^{8}$ எபே $5^{8}$ 1 தெச $5^{5}$. பார்க்க.

### $12^{37-43}$. இயேசு செய்த வேலைக்குப் பயன்கள்.

37 அவர் இத்தனை அற்புதங்களை அவர்களுக்கு முன்பாகச்
செய்திருந்தும், அவர்கள் அவரை விசுவாசிக்கவில்லை.-
38 கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசு
வாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்
பட்டது என்று ஏசாயா தீர்க்கதரிசி சொன்ன வசனம்
39 நிறைவேறும்படி இப்படி நடந்தது.—ஆகையால் அவர்
கள் விசுவாசிக்கமாட்டாமல் போனார்கள். ஏனெனில்
40 ஏசாயா பின்னும்:—அவர்கள் கண்களினால் காணாமலும்,
இருதயத்தினால் உணராமலும், குணப்படாமலும் இருக்
கும்படிக்கும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமல்
இருக்கும்படிக்கும், அவர்களுடைய கண்களை அவர்
குருடாக்கி, அவர்கள் இருதயத்தைக் கடினமாக்கினார்
41 என்றான்.—ஏசாயா அவருடைய மகிமையைக் கண்டு,
அவரைக்குறித்துப் பேசுகிறபோது இவைகளைச் சொன்
னான்.
42 ஆகிலும் அதிகாரிகளிலும் அநேகர் அவரிடத்தில்
விசுவாசம் வைத்தார்கள். அப்படியிருந்தும் ஜெபஆல
யத்துக்குப் புறம்பாக்கப்படாதபடி, பரிசேயர் நிமித்தம்
43 அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள்.—அவர்கள் தேவ
னால் வருகிற மகிமையிலும் மனுஷரால் வருகிற மகி
மையை அதிகமாய் விரும்பினார்கள்.



### (vi) நூலாசிரியன் கொண்ட நிதானிப்பு. $12^{37-43}$.

இயேசு முன்குறிக்கப்பட்ட மேசியாவெனினும் முன்குறிக்கப்பட்ட பிரகாரமாய் யூதரவரை விசுவாசிக்கவில்லை. நெஞ்சின் கடினத்தாலும் மனிதரது புகழ்ச்சியை விரும்பினதாலும் அவ்வண்ணஞ் செய்தார்களென்பதே.

37. இத்தனை அற்புதங்களை—அடையாளங்களென் றெழுதுக. ஆசிரியன் ஏழு அடையாளங்களைமட்டும் எழுதியிருக்கிறான் எனினும், பல இடங்களில் இன்னும் அநேகம் நடந்தன வென்பது குறிப்பாகத் தோன்றுகிறது. $3^{2}$ $7^{31}$ $11^{47}$ $20^{30}$. பார்க்க.

38. நிறைவேறும்படி—யூதரெப்போதும் கடவுள் நோக்கத்தைக் கவனித்து அவரது கருத்து நிறைவேறிவருவதற்கு எதிர்ப்பார்ப்பார்கள். அந்த வார்த்தைகள் நிறைவேறும்பொருட்டாகவே இவ்விதமாய் நடந்ததென்று தாம் சொல்லப்புகாமல் அந்த வார்த்தைகளில் காணப்படும் சத்தியம் இந்தக் கிரியைகளில் விளங்குகிறதென்று அர்த்தமாகவேண்டும். அப்படிப் பேசுவது எபிரெய மாதிரி. அவ்வண்ணமாய் மத்தேயுவிலும் இந்நூலிலும் விசேஷமாய்க் காண்கிறோம்.

39. அவர்கள் அதிககாலமாய்ச் சத்தியத்தைத் தள்ளி தற்புகழ்ச்சியில் முழுகிப்போனதால் சத்தியத்தை உணரும் உணர்ச்சி அற்றுப் போய்விட்டது. இதுவே இயற்கைப் பிரமாணம்.

41. ஏசாயா பூரணமாயறியாவிடினும் மேசியாவின் மகிமையைக் கண்டான்.

42. $3^{1}$ $7^{25}$. பார்க்க.

### $12^{44-50}$. இயேசுவின் அதிகாரமுள்ள போதனை.

44 அப்பொழுது இயேசு சத்தமிட்டு: என்னிடத்தில்
விசுவாசமாயிருக்கிறவன் என்னிடத்தில் அல்ல, என்னை
45 அனுப்பினவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறான்.—என்
னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கி
46 றான்.—என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனெவனும்
இருளில் இராதபடிக்கு, நான் உலகத்தில் ஒளியாக வந்
47 தேன்.—ஒருவன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவா
சியாமற்போனால், அவனை நான் நியாயந்தீர்ப்பதில்லை;
நான் உலகத்தை நியாயந்தீர்க்க வராமல், உலகத்தை
48 ரட்சிக்க வந்தேன்.—என்னைத் தள்ளி என் வார்த்தை
களை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றி
ருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி
49 நாளில் நியாயந்தீர்க்கும்.—நான் சுயமாய்ப் பேசவில்லை,
நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க
வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின
50 பிதாவே எனக்குக் கட்டளையிட்டார்.— அவருடைய
கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்;
ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச்
சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.

### (xii) இயேசுகொடுத்த போதனையின் சுருக்கத் தொகுதி. $12^{44-50}$.

இயேசு இந்த வார்த்தைகளை இப்போது புதிதாய்ச் சொல்லாமல் ஆசிரியன் இயேசு போதித்த முக்கியமான தாற்பரியங்களைத் திரட்டி எழுதியிருக்கிறான்போலிருக்கிறது.

இயேசுவே கடவுளின் பிரதிநிதி. $12^{44, 45}$.

இயேசுவால் உலகத்திற்கு ஞானஒளி உண்டாகும். $12^{46}$.

இயேசுவின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுவது ஆக்கினைக்கு விலகுதலும் அவைகளைத் தள்ளுதல் ஆக்கினைக்குட்படுதலுமாம். $12^{47, 48}$.

இயேசு பரம தந்தையால் சகலத்தையும் பேசுகிறவர். $12^{49, 50}$.

உலகத்திற்கு நித்தியஜீவன் கிடைக்கவேண்டுமென்பதே இயேசு வந்த நோக்கம். $12^{50}$.



## III. இயேசு சீஷருக்குக் கொடுத்த விசேஷித்த வெளிப்படுத்தல். $13^{1}$–$17^{26}$.

இயேசு வளர வளர போதனையாலுஞ் செய்கையாலும் ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்தின வரலாற்றைப் படித்தோம். அந்தப் பொதுவான வெளிப்படுத்தல் முந்தின அதிகாரத்துடன் முடிவுபெற்றது. இன்னம் அவர் விசேஷமாய்த் தம்மைச் சீஷருக்கு வெளிப்படுத்தி அவர்களுக்குத் தமது இராஜ்யத்தைப்பற்றிச் சில விசேஷமான போதனைகளைக் கொடுக்கிறதைப் பார்ப்போம். இந்த விசேஷித்த போதனை இந்நான்காம் சுவிசேஷத்தில்மாத்திரம் எழுதப்பட்டிருக்கிறது.

### $13^{1-17}$. அன்புள்ள ஊழியத்தின் மேன்மை.

1 பஸ்காபண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுல
கத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான
தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வு
லகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு
வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில்
2 அன்புவைத்தார்.—சீமோனின் குமாரனாகிய யூதாஸ்கா
ரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசான
வன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள்
3 போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்;—தம்முடைய
கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்
பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும்,
தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;—
4 போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றி
வைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்
5 கொண்டு,—பின்பு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து,
சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்
டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.
6 அவர் சீமோன்பேதுருவினிடத்தில் வந்தபோது,
அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்க
7 ளைக் கழுவலாமா என்றான்.—இயேசு அவனுக்குப் பிரதி
யுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொ
ழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.
8 பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்
களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப்

பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்
9 னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார். — அதற்குச்
சீமோன்பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திர
மல்ல, என் கைகளையும் என் தலையையுங்கூட கழுவ
வேண்டும் என்றான்.
10 இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்க
ளைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி
அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்களும் சுத்த
மாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.-
11 தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்த
படியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல
என்றார்.
12 அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு,
தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப
உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச்
13 செய்ததை அறிந்திருக்கிறீர்களா? — நீங்கள் என்னைப்
போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள்,
14 நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.—ஆண்
டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக்
கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை
15 ஒருவர் கழுவக்கடவீர்கள்.—நான் உங்களுக்குச் செய்த
துபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக்
16 காண்பித்தேன்.-மெய்யாகவே மெய்யாகவே நான் உங்க
ளுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமா
னிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை
17 அனுப்பினவரிலும் பெரியவனல்ல.—நீங்கள் இவைகளை
அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களா
னால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

**(1) அன்புள்ள ஊழியத்தின் மேன்மை. 13$^{1-17}$.**

இயேசு ஒரு சிறந்த செய்கை செய்து தமது ஜீவியத்தின் தன்மை யின்னதென்று காண்பித்து சீஷர்கள் அன்புடன் தாழ்மையாய் ஊழியஞ்செய்வது சிறந்த மேன்மையென்பதைக் காட்டினார். செய்கை 13$^{1-11}$. போதனை 13$^{12-17}$.

**1. பஸ்காபண்டிகைக்கு முன்னே**—இந்தச் சுவிசேஷம் பஸ்கா பண்டிகை ஆசரிக்கப்படவேண்டிய நாளில் இயேசு மரித்ததாகச் சொல்லுகிறது. ஆகையால் இந்த விருந்து பஸ்காபண்டிகைக்கு முந்தினநாளில் நடந்ததாகத் தெரியவருகிறது. திரியனுபந்த சுவிசேஷங்களில் இயேசு இராப்போஜனத்தை யளித்தநாள், பஸ்காபண்டிகை ஆசரித்தநாளாயிற்றென்று சொல்லப்பட்டது. இந்த வித்தியாசத்தைக்குறித்து :-ம் அனுபந்தத்தைப் பார்க்க.



**தம்முடைய வேளை**—நமது ஆசிரியன் சரித்திரம் முழுவதிலும் தெய்வீக நியமத்தைக் காட்டுகிறான்.

**முடிவுபரியந்தமும்** — மட்டின்றி என்றெழுதுக. அவர் அந்த அன்பை இந்தக் கடைசிநேரத்தில் பல அன்பான குறிப்புகளால் காண்பித்தார். யோவானது ஞாபகத்தில் இது மிகவும் உறுதியாய் நிலைத்திருந்ததாகத் தோன்றுகிறது.

**3. எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தார்**—இயேசு இந்த அறிவைப் பூரணமாய்ப் பெற்றும் இந்தத் தாழ்ந்த செய்கையை அப்போதே செய்திருக்கிறார் இந்த அறிவு முன்னே இயேசுவுக்குப் பூரணப்படாததுபோலிருக்கிறது. யோவான் இயேசுவினிடத்தில் இந்தக் காரியத்தை அறிந்துகொண்டானோ, தானாகவே அப்படி நினைத்தானோ, அது சொல்லமுடியாது.

**4. போஜனத்தை விட்டெழுந்து** — இந்தச் செய்கை எப்போது நடந்ததென்று கேட்கிறோம். போஜனம் செய்யுமுன்னே கால் கழுவுதல் வழக்கம். ஒருவேளை இந்த வேலை யார் செய்யவேண்டுமென்பதைப்பற்றிச் சீஷருக்குள் வழக்கு நடந்ததால் இயேசு தக்க சமயத்தில் அவர்களுக்கு உண்மையான மேன்மை இன்னதென்று காண்பிக்க இவ்வண்ணஞ் செய்திருக்கலாம். லூக் 22$^{27}$. பார்க்க.

**5. பாத்திரத்தில்**—இந்த வேலைக்கே அங்கே பானை ஆயத்தமாயிருந்தது. ஆசிரியன் தாழ்ந்த செய்கைகளை விவரித்துக் காட்டுதலைக் கவனிக்க.

6. ஒருவேளை யோவானது கால்களை முதலில் கழுவியிருக்கலாம். அவன் பேதுருவுக்கு முன்னமே உட்கார்ந்திருந்ததாகத் தெரிந்தது. இயேசு இந்தத் தாழ்ந்த செய்கை செய்தது பொருத்தமல்லவென்று பேதுரு எண்ணிப் பதட்டமாய்ப் பேசினான்.

**7. நீ அறியாய்**—தனக்கு இயேசுவின் விஷயங்களைப்பற்றிப் பூரண அறிவில்லையென்று அவனறியவேண்டும்.

**8. உனக்குப் பங்கில்லை** — நீ இந்த ஊழியத்தைத் தாழ்ந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளாவிட்டால் எனது சிநேகத்தையும் இழந்து போவாயென்பது. இயேசுவின் சிநேகம் விரும்புவோன் முதலாவது தன்னை இயேசுவுக்கு ஒப்புக்கொடுத்தல்வேண்டும்.

9. பேதுரு இதைத் திடமென்றுணர்ந்து மனமாறி இயேசுவினிடம் அதிகமாய் வேண்டிக்கொண்டான். திரியனுபந்த சுவிசேஷங்களில் காணப்பட்ட பேதுருவின் குணத்திற்கு இந்தச் சம்பவம் சரியாயிருக்கிறது.

10. விருந்துக்குப் போகுமுன்னமே குளிப்பது வழக்கமே. ஆகையால் விருந்தாளிகளின் கால்களைக் கழுவவேண்டியதேயொழிய முழுவதுமாய் ஸ்நானம்பண்ணுவது அவசியமின்று. அவர்கள் பொதுவாய்ச் சுத்தமாகவேயிருப்பார்கள். அதுபோல் சீஷர்களும் பொதுவாய்ச் சுத்தமாகவேயிருந்தார்கள். எப்படியெனில், அவர்கள் பெரும்பான்மையாய் இயேசுவுக்கு உண்மையான பற்றுடைய சீஷர்களானார்கள். ஒருவனே அப்பற்றிலான். பேதுருவும் மற்றோரும் பெரும்பான்மையாய்ச் சுத்தமானவர்கள் எனினும், சில விஷயங்களில் திருத்தம் பெறுதல்வேண்டும். இயேசு பேதுருவுக்கு அப்பேர்ப்பட்ட விஷயத்தைக் காண்பித்தார். $13^{36-38}$. காண்க.

**12. திரும்ப உட்கார்ந்து**—இதினால் விருந்து இன்னும் முடிவு பெறவில்லை யென்றறிக.

இயேசு இந்தச் செய்கையின் பொருளை வெளிப்படுத்தினார். $13^{12-17}$.

அதென்னவெனில் தன்னை ஒப்புக்கொடுக்கும் ஊழியமாகிய சுயவெறுப்புக்குரிய ஊழியமே சிறந்தது. இயேசுவின் சீஷர் இத்தன்மையான ஊழியத்தைச் செய்ய ஆசைப்படவேண்டும். "ஈசனுக்கன்பிலார் அடியவர்க் கன்பிலார்" என்று பெரியபுராணத்தில் பாடியிருக்கிறதைக் காண்க. மெய்யான மேன்மை தாழ்மையான ஊழியஞ்செய்வதி லடங்கும்.

**15. மாதிரியை**—திருஷ்டாந்தத்தை என்றெழுதுக. பொதுவாய் ஜீவியத்தின் மாதிரியைக் குறிப்பிக்காமல் அவர் இந்தச் செய்கையின் திருஷ்டாந்தத்தைமாத்திரம் சுட்டிக் காட்டுகிறார். இக்கட்டளையைத் திட்டமாய் நிறைவேற்றும்பொருட்டு சிலர் மத்தியகால சபையில் ஏழைகளின் கால்களைக் கழுவுவது வழக்கமாயிருந்தது. நாம் இவ்விதமாய்ச் செய்யாமல் சின்மயவிதமாய்த் தாழ்ந்து மற்றோர்க்குக் கேவலமான ஊழியஞ்செய்தலே இதின் உத்தம நிறைவேறுதலாம்.



**(2) கடைசி இராப்போசனம். $13^{18-38}$.**

## $13^{18-30}$. துரோகத்தின் கேடுபாடு.

18 உங்களெல்லாரையுங்குறித்து நான் பேசவில்லை, நான்
தெரிந்துகொண்டவர்களை அறிவேன்; ஆகிலும் வேத
வாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே அப்பம்
புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கி
19 னான். — அது நடக்கும்போது நானே அவரென்று
நீங்கள் விசுவாசிக்கும்பொருட்டு, இப்பொழுது அது
நடப்பதற்கு முன்னமே அதை உங்களுக்குச் சொல்லு
கிறேன்.
20 நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்
ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகி
றான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்
சொல்லுகிறேன் என்றார்.
21 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, ஆவியிலே
கலங்கி: உங்களில் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்
பான் என்று, மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்
22 சொல்லுகிறேன் என்று சாட்சியாகச் சொன்னார்.—அப்
பொழுது யாரைக்குறித்துப் பேசுகிறாரோ என்று சீஷர்
கள் ஐயப்பட்டு, ஒருவரையொருவர் நோக்கிப் பார்த்தார்
23 கள். — அந்தச் சமயத்தில் அவருடைய சீஷரில் இயே
சுவுக்கு அன்பானவனாயிருந்த ஒருவன் இயேசுவின்
24 மார்பிலே சாய்ந்துகொண்டிருந்தான்.-யாரைக்குறித்துச்
சொல்லுகிறாரென்று விசாரிக்கும்படி சீமோன்பேதுரு
25 அவனுக்குச் சைகை காட்டினான்.-அப்பொழுது அவன்
இயேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு: ஆண்டவரே,
26 அவன் யார் என்றான்.—இயேசு பிரதியுத்தரமாக: நான்
இந்தத் துணிக்கையைத் தோய்த்து எவனுக்குக் கொடுப்
பேனோ, அவன்தான் என்று சொல்லி, துணிக்கையைத்
தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதாஸ்காரியோத்துக்
27 குக் கொடுத்தார்.— அந்தத் துணிக்கையை அவன் வாங்
கினபின்பு, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். அப்

பொழுது இயேசு அவனை நோக்கி: நீ செய்கிறதைச் சீக்
கிரமாய்ச் செய் என்றார்.
28 அவர் இப்படி அவனுடனே சொன்னதின் கருத்
தைப் பந்தியிருந்தவர்களில் ஒருவனும் அறியவில்லை.—
29 யூதாஸ் பணப்பையை வைத்துக்கொண்டிருந்தபடியி
னால், அவன் போய்ப் பண்டிகைக்குத் தேவையானவை
களைக் கொள்ளும்படிக்காவது, தரித்திரருக்கு எதாகி
லும் கொடுக்கும்படிக்காவது, இயேசு அவனுடனே
30 சொல்லியிருப்பார் என்று சிலர் நினைத்தார்கள்.—அவன்
அந்தத் துணிக்கையை வாங்கினவுடனே புறப்பட்டுப்
போனான்; அப்பொழுது இராக்காலமாயிருந்தது.

**(i) யூதாசின் துரோகத்தை அறிவித்தது. 13[18-30]**

18. **அறிவேன்**—நான் தெரிந்துகொண்டபோது அறிந்தேனென்று சொல்லாமல் இப்போது நானவனை அறிவேன் என்பதே. அவன் செய்யுந் துரோகத்தால் தாம் உலகத்திற்கு வந்த நோக்கம் முழுவதுமாய்க் கெட்டுப்போகும் என்று சீஷர் நினையாதபடி இயேசு இவ்வண்ணம் பேசினார். 6[70]. பார்க்க.

கடவுளது நோக்கமும் எப்போதும் நிறைவேறுமென்று வேதாகம மொழி காண்பிக்கிறது.

20. சீஷர்கள் மனந்தளராதபடி இயேசு தமது மேன்மையை மறுபடியுங் காண்பித்தார்.

21. பிறகு அந்தத் துரோக சீஷன் விட்டுப் போகும்படி இயேசு திட்டமாய் அக்காரியத்தை விளக்கினார்.

**ஆவியிலே கலங்கி** — இயேசுவின் உண்மையான மனுஷீகத்தைக் காண்க.

22. **ஒருவரையொருவர் நோக்கி** — இது இந்தச் சம்பவத்தைக் கண்டறிந்தவனுக்கேற்ற குறிப்பு.

23. **இயேசுவின் மார்பிலே**—எல்லாரும் மெத்தைகளின்மேல் இடதுபக்கம் கீழ்கிடக்க சாய்ந்துகொண்டிருந்தார்கள். ஆகையால் ஒருவனது தலை அடுத்தவனது மார்பின் பக்கத்திலிருக்கும். இயேசு யோவானுக்கும் பேதுருவுக்கும் நடுவிலிருந்திருப்பார். பேதுரு பின்புறத்திலும் யோவான் முன்புறத்திலு மிருந்தார்களென்று நினைக்கலாம். பின்புறம் முன்புறத்திலும் மேலானது. ஆகையால் பேதுரு



மேலான ஸ்திதியிலிருந்திருப்பான். இயேசு இப்படி உட்கார்ந்ததால் சுலபமாய் யோவான் காதில் மற்றவர்க்குத் தெரியாமல் இந்த வார்த்தைகளைச் சொல்லலாம்.

**இயேசுவுக்கு அன்பானவன்**—இவன் யோவான். 51–ம் பக்கம் பார்க்க.

ஆசிரியன் இந்தப் பெயரைக்கொண்டு தன்னைக் குறிப்பித்தது இது முதல் சமயம். அவன் இந்தப் பயங்கரமான வெளிப்படுத்தலைப் பெற்ற இச்சமயத்திலே இப்படிச் சொன்னது பொருத்தம்.

26. **துணிக்கை**—துணிக்கை கொடுப்பது கண்ணியக் குறிப்பு. ஆகையால் இயேசு இதனாலும் யூதாசின் சிந்தை மாற்றப் பார்த்தார் என்றறிக. யூதாஸ் அதற் கிடங்கொடாமல் முழுவதுமாய்த் தன்னைச் சாத்தானுக் கொப்புக்கொடுத்து நல்லெண்ணமில்லாதவனானானென்பது இதினால் விளங்குகிறது.

27. இயேசு சீஷர்களுடன் தனிமையாய்ப் பேச விரும்பினார்.

30. **இராக்காலமாயிற்று** — யோவான் ஒளி இருளென்னும் வார்த்தைகளை சின்மயப்பொருளுடையவைகளாக உபயோகித்து எழுதினபடியால் இதிலும் சின்மயப்பொருளுண்டென்று நினைத்தல் தகுதி. வெளியே இருட்டானதுபோல் யூதாசின் இருதயத்திலும் ஒளியின் கிரணங்களெல்லாம் நீங்க, தோஷ இருள் மூடினதென்க.

இந்த விருந்தும் திரியனுபந்த சுவிசேஷங்களில் சொல்லியிருக்கிற விருந்தும் ஒன்றோ வேறோ என்பதைப்பற்றியும் இது பஸ்காவிருந்தோ அல்லவோ என்பதைப்பற்றியும் பிறகு பார்ப்போம் 2–ம் அனுபந்தம் பார்க்க.

**13[31-35]. அன்பின் கட்டளை.**

31 அவன் புறப்பட்டுப் போனபின்பு இயேசு: இப்பொ
ழுது மனுஷகுமாரன் மகிமைப்படுகிறார், தேவனும் அவ
32 ரில் மகிமைப்படுகிறார்.—தேவன் அவரில் மகிமைப்பட்
டிருந்தால், தேவன் அவரைத் தம்மில் மகிமைப்படுத்து
33 வார், சீக்கிரமாய் அவரை மகிமைப்படுத்துவார்.—பிள்
ளைகளே, இன்னும் கொஞ்சக்காலம் நான் உங்களுடனே
கூட இருப்பேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனா

லும் நான் போகிற இடத்துக்கு நீங்கள் வரக்கூடா
தென்று நான் யூதரோடே சொன்னதுபோல இப்பொ
ழுது உங்களோடும் சொல்லுகிறேன்.
34 நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான்
உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரி
லொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்ட
35 ளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்.—நீங்கள் ஒருவரி
லொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்
கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து
கொள்வார்கள் என்றார்.

**(ii) பரமஇராஜ்யத்திற்கேற்றகட்டளையைக்கொடுத்தது. $13^{31-35}$.**

**31.** இப்போது இயேசுவின் மகிமை விளங்கப்போகிறது. அவருடைய வேலை முடிவுபெறுகிறது. அவரிதெல்லாம் உணர்ந்து யூதாஸ் போனதில் முடிவைப் பார்த்து சந்தோஷித்துக்கொண்டார். இனி நடக்கும் சம்பவங்கள் இயேசுவுக்கு மகிமையை யுண்டாக்கும் சம்பவங்கள்.

**34. புதிதான கட்டளை** — புதிய சபைக்குக் கொடுக்கப்பட்டதாலும் இயேசுவின் அன்பென்னும் புதிய சார்புகொண்டதாலும் இது புதிய கட்டளை. கிறிஸ்தவர்களுக்குள்ளே இயேசு நம்மை நேசித்த அன்புபோன்ற அன்பே விசேஷித்த லக்ஷணமாகும்.

$13^{36-38}$. பேதுருவின் பதற்றமும் பலவீனமும்.

36 சீமோன்பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே, நீர்
எங்கே போகிறீர் என்றான். இயேசு அவனுக்குப் பிர
தியுத்தரமாக: நான் போகிற இடத்துக்கு இப்பொழுது
நீ என் பின்னே வரக்கூடாது, பிற்பாடு என் பின்னே
37 வருவாய் என்றார்.—பேதுரு அவரை நோக்கி: ஆண்ட
வரே, நான் இப்பொழுது உமக்குப் பின்னே ஏன்
வரக்கூடாது? உமக்காக என் ஜீவனையும் கொடுப்பேன்
என்றான்.
38 இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: எனக்காக உன்
ஜீவனைக் கொடுப்பாயோ? சேவல் கூவுகிறதற்கு
முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று,
மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்
என்றார்.



**(iii) பேதுருவின் பலவீனத்தை முன்னறிவித்தது. $13^{36-38}$.**

**36. நீர் எங்கே போகிறீர்**—இவன் இயேசு பிரிந்துபோதலைப் பற்றியே சிந்தித்து நீங்கள் அவ்வழி வரக்கூடாதென்று இயேசு சொன்னதைச் சம்மதியாமல் இவ்விதமாய்க் கேட்கிறான். பேதுருவைப்பற்றி பின்வரும் நேர்த்தியான கதை சொல்லியிருக்கிறது. துன்பகாலத்தில் பேதுரு ரோமாபுரியை விட்டு ஓடிப்போனதாகவும் அவன் சரேலென்று இயேசுவுக்குத் தென்பட்டு நீ எங்கே போகிறீர் என்றதற்கு இயேசு மறுபடியும் சிலுவையிலறையப்படும்பொருட்டு போகிறேனென, உடனே பேதுரு வெட்கப்பட்டுத் திரும்பி ரோமாவை அடைந்து ரத்தச்சாட்சியாக சிலுவையில் மரணமடைந்ததாகவும் என்பதே.

**38.** இயேசு பேதுருவின்குணமின்னதென்று நன்கறிந்து அவன் சோதனையிலகப்பட்டு விழுவதைப்பற்றித் திட்டமாய் முன்னறிவித்தார். இயேசுவின் தெய்வீக அறிவைக் கவனிக்க.

**(3) கடைசியான போதனைகள். $14^{1}-16^{33}$.**

இயேசு இப்போது தம்முடைய சீஷர்களுக்கு தாம் விட்டுப்போவதற்குரிய சில விசேஷித்தக் காரியங்களைப் போதிக்கிறார். இந்தப் போதனைகள் யாவும் சீஷர்கள் துக்கத்தை ஆற்றவும் அவர் பிரிந்துபோன விஷயத்திற்குரிய சின்மயப்பொருட்களை விளக்கிக் காட்டவும் பின்வரும் சங்கதிகள் அவர்களை ஆயத்தப்படுத்தவுஞ் சொல்லப்பட்டன.

பின்வருமாறு சேர்த்துப் பொருள் கொள்ளலாம்.

(i) ஆறுதலுக்குரிய விஷயங்கள். $14^{1-31}$.

(ii) இயேசுவுடன் சின்மய ஐக்கியம். $15^{1-17}$.

(iii) இயேசுவின் சீஷரும் உலகத்தாரும். $15^{18}-16^{3}$.

(iv) தாம் விட்டுப்போவதால் உண்டாகும் சந்தோஷங்கள். $16^{4-33}$.

**ஆறுதலுக்குரிய விஷயங்கள். $14^{1-31}$.**

(1) இயேசுவுக்கும் தந்தைக்குமுரிய சம்பந்தத்தைக் குறித்தவைகளாவன. $14^{1-11}$.

இயேசு தந்தையிடம் போதலும் ($14^{1-4}$) அவரே தந்தையை அடையும் வழியாதலும் ($14^{5-7}$) அவர் தந்தையின் வெளிப்படுத்தலும். ($14^{8-11}$.)

(2) சீஷர்களுக்கு இருக்கும் சிலாக்கியங்களாவன. ($14^{12-24}$.)

பெரிய செய்கைகளைச் செய்தலும் ($14^{12-15}$) தேற்றரவாளனைப் பெறுதலும் ($14^{16, 17}$) இயேசுவுடனிருத்தலும் ($14^{18, 19}$) இயேசுவைப் பற்றிப் பூரணமாய் அறிதலும் ($14^{20, 21}$) இயேசுவின் வார்த்தைகளைக் கைக்கொள்ளலும் இயேசு கூடவிருத்தலும். ($14^{22-24}$.)

(3) சில ஆறுதல்களாவன. $14^{25-31}$.

தேற்றரவாளன் வருதலும். $14^{25, 26}$. சமாதானம் பெறுதலும் $14^{27}$. எல்லாம் தந்தையின் செய்கையாதலும். $14^{28-31}$.

### $14^{1-11}$. இயேசுவுக்குந் தந்தைக்குமுள்ள சம்பந்தங்கள்.

1 உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்
தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமா
2 யிருங்கள்.—என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்த
லங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்க
ளுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்க
3 ளுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.—நான் போய்
உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு,
நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி,
நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்
4 துக்கொள்ளுவேன்.—நான் போகிற இடத்தை அறிந்தி
ருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்கள் என்றார்.
5 தோமா அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் போகிற
இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி
6 அறிவோம் என்றான்.—அதற்கு இயேசு: நானே வழி
யும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்
7 லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.—என்னை
அறிந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள்;
இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டும்
இருக்கிறீர்கள் என்றார்.
8 பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை
எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும்
என்றான்.
9 அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம்
நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறிய
வில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்;
அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும்



10 என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்?—நான் பிதாவிலும்,
பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்
லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை
என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமா
யிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்து
11 வருகிறார்.—நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்
கிறதை நம்புங்கள்; அப்படியில்லாவிட்டாலும் என் கிரி
யைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள்.

1. **கலங்காதிருப்பதாக**—சீஷர்கள் ஒருவனது துரோகத்தைப் பற்றியும் பேதுருவின் அவிசுவாசத்தைப்பற்றியும் மனக்கலக்கமுற்றார்கள்.

**தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள்** — அதாவது கடவுள் நன்மை சித்திக்க எல்லாச் சம்பவங்களையும் நடத்துவாரென்பதை நம்புங்கள்.

**என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்**—அதாவது நான் தேவ பலனும் மகிமையுமுள்ளவரென்றும் நம்புங்கள்.

2. **அநேக வாசஸ்தலங்கள்**—சர்வ ஜனங்களுக்கும் போதுமான இருப்பிடமென்பது.

3. **மறுபடியும் வந்து**—பரிசுத்தாவியிலாவது தமது அதிரிசனமான பிரசன்னத்தினாலாவது தாம் எப்போதும் வருவதைக் காட்டுகிறது.

4. நான் எங்கே போகிறேனோ அதற்கு வழியை அறியீர்கள் என்றெழுதுக.

5. தோமா பல காரியங்களைப்பற்றிச் சந்தேகங்கொண்டு அதைத் தீர்த்துக்கொள்ள இயேசு போகிற இடத்தைப்பற்றி விசாரித்தான். இவன் சின்மயவிதமாய்ப் பேச விரும்பாமல் உலக சம்பவங்களைப் பற்றிப் பேச விரும்பினான்.

6. இயேசு இன்னமும் சின்மயவிதமாய்ப் பேசி தாம் தந்தையிடம் போவதாகவும் தாமே அவரைச் சேரும் சின்மய வழியானதாகவும் சொன்னார். கிறிஸ்துவை அனுசரித்தல் என்னும் நூலில் நான் வழியும் சத்தியமும் ஜீவனுமாகிறேன். வழியின்றிப் போதலும் சத்தியமின்றி யறிதலும் ஜீவனின்றி ஜீவித்தலு முடியாது. நீ அனுசரிக்க

வேண்டிய வழி நானே, நீ விசுவாசிக்கவேண்டிய சத்தியம் நானே, நீ எதிர்பார்க்கவேண்டிய ஜீவன் நானே என்று எழுதியிருக்கிறது.

**வழி**—கடவுளும் மனிதனும் ஐக்கியமாகும் வழியென்பது.

**சத்தியம்**—உலகத்திலிருக்கிற நித்திய தத்துவ சொரூபம் என்பது.

**ஜீவன்**—எல்லா உயிர்களுக்கும் உயிரும் காரணமுமான பொருளென்பது.

**7.** இயேசுவைக் கண்டறிதல் தந்தையையே அறிவதாம். இயேசுவில் தந்தையைக் காணுதவர் இயேசுவையே அறியாதவராம்.

8. பிலிப்புவும் தோமாவும் அநேகத்தில் சமான குணமுள்ளவர்கள் என்பதைப் பார்க்க.

9. பேரிட்டுச் சொன்னதால் அவர் இந்தக் கேள்வியால் பெற்ற துக்கத்தை யறியலாம்.

10. முன்னே ஜனங்களுக்கு இந்தப் போதனையை அதிக தெளிவாய்க் காட்டினுர்.

11. **கிரியைகள்**—செய்த அற்புதங்களல்லாமல் நடக்கை முழுவதும் இவ்வார்த்தையால் குறிக்கப்படுகிறது.

### 14[12-24]. சீஷர்களின் சிலாக்கியங்கள்.

12 மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்
லுகிறேன்: நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற
படியினுல், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற
கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கி
13 லும் பெரிய கிரியைகளையும் செய்வான்.—நீங்கள் என்
நாமத்தினலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா
14 மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன். — என்
நாமத்தினலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான்
செய்வேன்.
15 நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்ப
16 னைகளைக் கைக்கொள்ளுங்கள்.—நான் பிதாவை வேண்
டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும்
உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியா
கிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்
17 தருளுவார். — உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக்
காணமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப்
பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வா



சம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள்
அவரை அறிவீர்கள்.
18 நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்க
19 ளிடத்தில் வருவேன்.—இன்னும் கொஞ்சக்காலத்திலே
உலகம் என்னைக் காணுது, நீங்களோ என்னைக் காண்
பீர்கள்; நான் பிழைக்கிறபடியினுல் நீங்களும் பிழைப்
20 பீர்கள். — நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும்,
நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள்
21 அறிவீர்கள். — என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு
அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில்
அன்பாயிருக்கிறுன், என்னிடத்தில் அன்பாயிருக்கிற
வன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவ
னில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்ப
டுத்துவேன் என்றுர்.
22 ஸ்காரியோத்தல்லாத யூதா என்பவன் அவரை நோக்
கி: ஆண்டவரே, நீர் உலகத்துக்கு உம்மை வெளிப்படுத்
தாமல் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப்போகிற
23 காரணமென்ன என்றுன்.—இயேசு அவனுக்குப் பிரதி
யுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன்
என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என்
பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து
24 அவனேடே வாசம்பண்ணுவோம்.—என்னில் அன்பா
யிராதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளமாட்டான்.
நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்
னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்கிறது.

12. **பெரிய கிரியைகளையும்**— அகலமாய்ப் பரம்பும் சின்மயச் செய்கையாகிய சபையின் விரிவான வளர்ச்சியைக் குறிப்பித்துக் காட்டுகிறது.

**போகிறபடியினுல்**—இயேசு பரமதந்தையிடம் போவதால் அவரை மட்டுப்படுத்தினதெல்லாம் ஒழிந்துபோய், அவர் மட்டில்லாத வல்லமையுடன் தம் சீஷருக்கு உதவிசெய்து பலங்கொடுக்கக் கூடியவராவார்.

13. **என் நாமத்திலே**—வேதத்தில் நாமமென்பது ஒருவனது குணதிசயங்களின் தொகுதியைக் குறிப்பிக்கிறது. ஆகையால் இயேசுவின் நாமத்தினல் கேட்பது எப்படியென்றுல், இயேசுவின் மனவியல்பை நன்குணர்ந்துகொண்டு அதற்கேற்றதாகவே கேட்பதென்க.

**15.** கீழ்ப்படிதல் அன்பின் பலனும்.

**16. தேற்றரவாளன்**—இந்த மொழிபெயர்ப்படைந்த கிரேக்கு பாஷையின் வார்த்தையாகிய பரக்லீட்டாஸ் என்பது யோவான் இயற்றின நூற்களிலல்லாமல் புதிய ஏற்பாட்டில் வேறிடங்களில் வராது. இது சுவிசேஷத்தில் நான்குமுறை வருகிறது ($14^{16, 26}$ $15^{26}$ $16^{7}$.). இவ்விடங்களில் தேற்றரவாளன் என்னும் மொழிபெயர்ப்படைந்தது. முதல் நிருபத்தில் ஒருவிசை வருகிறது ($2^{1}$); அவ்விடத்தில் பரிந்து பேசுகிறவரென்பது மொழிபெயர்ப்பாம். பரிந்துபேசுகிறவரென்பது எல்லா விடங்களிலும் சரியான மொழிபெயர்ப்பென்க. மனிதன் பக்ஷத்தில் வந்து வக்கீலாகவேயிருந்து சாத்தானுக்கெதிரே கடவுளுக்கு முன்பாக மனிதனுக்காக பரிந்துபேசுபவர் என்றர்த்தமாம்.

**வேறொரு**—இன்னொரு என்றெழுதுக. 1 யோவா $2^{1}$–ல் இயேசுவைப் பரிந்துபேசுகிறவர் என்று சொல்லுகிறான்.

**சத்திய ஆவி**—அதாவது சத்தியத்தை வெளிப்படுத்துவோர். இந்த சத்தியம் சின்மயத்தன்மையுள்ளதாதலின், பிரபஞ்சம் அதை ஏற்றுக்கொள்ளாது.

**17.** அந்தச் சின்மய ஆவி இதுவரைக்கும் கிறிஸ்துவில் இருந்தது. இனிமேல் அவர்களிலேயுமிருக்கும்.

**18. திக்கற்றவர்களாக**—அநாத பிள்ளைகளாக என்றெழுதுக.

**வருவேன்**—வருகிறேன் என்றெழுதுக. எப்போதும் வந்து கொண்டேயிருக்கிறேன் என்று விரித்துரைக்க. அவர் சின்மய சொரூபியாய் எப்போதும் தம்முடைய சீஷர்களிடம் வருகிறவராகவேயிருக்கிறார்.

**21.** கிறிஸ்தவ அனுபோகத்தின் வளர்ச்சி இந்த வசனத்தில் காணப்படுகிறது. அது எப்படியெனின்.

(i) கிறிஸ்துவுக்கு அன்புடன் கீழ்ப்படிதல்.

(ii) தந்தை தன்னை நேசிக்கிற அன்பு இன்னதென்று அதிகமாய் உணர்தல்.

(iii) கிறிஸ்து கடவுளை வெளிப்படுத்துபவரென்றறிதல் என்பவைகளே.

**22. யூதா**—யாக்கோபின் மகனாகிய ததேயுவாகிய லெபேயு. லூக் $6^{16}$ அப் $1^{13}$ மத் $10^{3}$ மாற் $3^{18}$. பார்க்க.



இயேசு தம்மை விளம்பரமாய் மேசியாவாக வெளிப்படுத்துவார் என்று எதிர்நோக்கிக்கொண்டார்கள்.

**23.** இயேசு கொடுக்கும் வெளிப்படுத்தல் சின்மயத்தன்மையுடையது.

**அவனோடே வாசம்பண்ணுவோம்**—நாம் தினந்தோறும் அவனுக்கு விருந்தாளிகளாய் வீட்டிலும் சாப்பிடும்போதும் அவனோடேகூட இருப்போமென்று லுத்தர் விரித்தெழுதினார்.

### $14^{25-31}$. சீஷர்களுக்குரிய ஆறுதல்கள்.

25 நான் உங்களுடனே தங்கியிருக்கையில் இவைகளை
26 உங்களுக்குச் சொன்னேன்.—என் நாமத்தினாலே பிதா
அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான்
உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு
நினைப்பூட்டுவார்.
27 சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்,
என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்
கிறேன்; உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்
குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும்
28 பயப்படாமலும் இருப்பதாக.—நான் போவேன் என்
றும், திரும்பி உங்களிடத்தில் வருவேன் என்றும் நான்
உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்களே. நீங்கள்
என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால் பிதாவினிடத்
திற்குப் போகிறேனென்று நான் சொன்னதைக்குறித்
துச் சந்தோஷப்படுவீர்கள், ஏனெனில் என் பிதா என்
29 னிலும் பெரியவராயிருக்கிறார்.—இது நடக்கும்போது
நீங்கள் விசுவாசிக்கும்படியாக, நடப்பதற்கு முன்னமே
இதை உங்களுக்குச் சொன்னேன்.
30 இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவ
தில்லை. இந்த உலகத்தின் அதிபதி வருகிறான், அவ
31 னுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.—நான் பிதாவில்
அன்பாயிருக்கிறேன் என்றும், பிதா எனக்குக் கட்டளை
யிட்டபடியே செய்கிறேன் என்றும், உலகம் அறியும்
படிக்கு இப்படி நடக்கும். எழுந்திருங்கள், இவ்விடம்
விட்டுப் போவோம் வாருங்கள் என்றார்.

25. இயேசு போதித்தது முடிவுபெறாதது. ஏனென்றால், பரிந்து பேசுபவர் இன்னும் வெகு தெளிவாய் அவர் போதனையை எடுத்து விஸ்தரிப்பார்.

26. **பரிசுத்த ஆவி**—இந்த வார்த்தை இந்நூலில் மூன்றுவிசை மட்டுமே வருகிறது (1[33] 20[22].). திரியனுபந்த சுவிசேஷங்களில் அடிக்கடி வருகிறது.

**என் நாமத்தினாலே**—இயேசு தந்தை நாமத்தினால் வந்து அவரை வெளிப்படுத்ினதுபோலவே பரிசுத்தாவி இயேசுவின் நாமத்தினால் வந்து அவரையே வெளிப்படுத்துவார். 13-ம் வசனத்தைக் காண்க.

முன் விளங்காது இயேசு சொன்ன வார்த்தைகளை சீஷர்கள் பிறகு நினைவுகூர்ந்து இவராலே நன்குணர்ந்துகொள்ளுவார்கள்.

27. **சமாதானம்**—அவர் சீஷர்களிடம் வைத்துவிட்ட பொருள் இதுவே. சலாமென்று சொல்லிவிடுகிற வழக்கத்தைக் குறிப்பிக்கிறது.

**என்னுடைய சமாதானத்தை**—அவர் தந்தையுடன் அனுபவிக்கிற சமாதான நிலைமையைத் தம் சீஷர்களுக்கும் கொடுப்பார். இந்தச் சமாதானம் சின்மயத்தன்மையுள்ளது.

28. **என்னில் அன்புள்ளவர்களாயிருந்தால்**—அதாவது நீங்கள் உங்களைப்பற்றியே சிந்தையுள்ளவர்களல்லாமல் என் நோக்கங்களைக் கவர்ந்து சிந்தித்தால் என்பது.

30. **உலகத்தின் அதிபதி**—பிரபஞ்ச கர்த்தா என்று எழுதுக. தீமையெல்லாம் தலைவன் ஒருவனிடமே இருப்பதாக நினைக்கிறார். அவன் சாத்தானே. இயேசுவின் மாற்றாதிகள் அவனைத் தாக்கி அடித்தலாயிருந்தது. இயேசுவில் அவனுக்குச் சம்பந்தமானதொன்றும் இல்லையென்று பார்க்கிறோம். அவர் தமக்கு மாசில்லா மனம் உண்டென்று அறிதலைப் பார்க்க.

31. அவர் தம்மை இலவசமாய்த் தந்தையின் கட்டளைக்கு ஒப்புக்கொடுத்தலால் தாம் தந்தையிடம் இராநின்ற சம்பந்த மின்னதென்று உலகமறியும்.

**எழுந்திருங்கள்**—இயேசு இப்போது மேலறையை விட்டு வெளியே புறப்பட்டுப் போனதுபோலிருக்கிறது. அவர் தோட்டத்திற்குப் போனவழியிலே பின்வரும் மூன்று அதிகாரங்களில் எழுதிய வார்த்தைகள் சொல்லப்பட்டதாகத் தோன்றுகிறது. சிலரோ இயேசு



அறையை விடுமுன்னே மறுபடியும் பேசப்புகுந்து அங்கேயே எல்லாம் பேசி முடித்தார் என்பார்.

## 15[1-17]. சீஷனுக்கும் இயேசுவுக்குமுள்ள ஐக்கியம்.

1 நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்
2 சத்தோட்டக்காரர்.—என்னில் கனிகொடாதிருக்கிற
கொடி எதுவோ அதை அவர் அறுத்துப்போடுகிறார்;
கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிக
ளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.—
3 நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள்
4 இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.—என்னில் நிலைத்
திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்; கொ
டியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது
தானாய்க் கனிகொடுக்கமாட்டாததுபோல, நீங்களும்
என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்
5 கள்.—நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒரு
வன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால்,
அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்
6 லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.—ஒருவன்
என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்ட
கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்துபோ
வான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினி
7 யிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்.—நீங்
கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்
திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது
8 உங்களுக்குச் செய்யப்படும்.—நீங்கள் மிகுந்த கனிக
ளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்,
எனக்கும் சீஷராயிருப்பீர்கள்.
9 பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும்
உங்களில் அன்பாயிருக்கிறேன்; என்னுடைய அன்
10 பிலே நிலைத்திருங்கள்.—நான் என் பிதாவின் கற்பனை
களைக் கைக்கொண்டு அவருடைய அன்பிலே நிலைத்
திருக்கிறதுபோல, நீங்களும் என் கற்பனைகளைக் கைக்
கொண்டிருந்தால், என்னுடைய அன்பிலே நிலைத்தி
11 ருப்பீர்கள்.—என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்
திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்
கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

12 நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும்
ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே
13 என்னுடைய கற்பனையாயிருக்கிறது.—ஒருவன் தன்
சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும்
14 அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை.—நான்
உங்களுக்குக் கற்பிக்கிற யாவையும் நீங்கள் செய்வீர்களா
15 னால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.–இனி நான் உங்
களை ஊழியக்காரரென்று சொல்லுகிறதில்லை, ஊழியக்
காரன் தன் எஜமான் செய்கிறதை அறியமாட்டான்.
நான் உங்களைச் சிநேகிதர் என்றேன், ஏனெனில் என்
பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றை
16 யும் உங்களுக்கு அறிவித்தேன்.—நீங்கள் என்னைத்
தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து
கொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக்
கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்
குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்
கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்,
17 நான் உங்களை ஏற்படுத்தினேன்.—நீங்கள் ஒருவரிலொ
ருவர் அன்பாயிருக்கவேண்டுமென்றே இவைகளை உங்
களுக்குக் கற்பிக்கிறேன்.

**சீஷர் இயேசுவுடன் அடையும் சின்மய ஐக்கியம். $15^{1-17}$.**

ஐக்கியத்தின் தன்மை. $15^{1-6}$.

கனிகொடுக்கும் நிபந்தனையும் $15^{1, 2}$, அவசியமும். $15^{3-6}$.

ஐக்கியத்தின் பலன்களும் — வேண்டுகோள் நிறைவேறுதலும், கனிகொடுத்தலும். $15^{7, 8}$.

ஐக்கியத்தின் மூலம் $15^{9, 10}$—அன்பு. தந்தை குமாரனுடன் ஐக்கியமுற்றவர் எப்படியோ இயேசு தம் சீஷருடன் ஐக்கியமுற்றார். ஐக்கியத்தினால் வருபவை $15^{11-13}$—சந்தோஷமும் $15^{11}$, ஒருவரை ஒருவர் நேசிக்கும் அன்பும். $15^{12, 13}$.

ஐக்கியத்தின் கடமைகள் $15^{14-16}$ — இயேசுவின் கிரியைகளைச் செய்தலும் $15^{14, 15}$, கனிகொடுத்தலும். $15^{16}$.

இந்த ஐக்கியமடைந்தோர் தங்களுக்குள்ளே ஐக்கியமுள்ளவராவார். $15^{17}$.

14–ம் அதிகாரத்தில் இயேசு தம் சீஷர்களை விட்டுப் பிரிவதைப் பற்றிப் பேசினார். இப்பொழுது பிரிவிலும் அமைந்துகொள்



ளும் சின்மய ஐக்கியத்தை விளக்கிக் காட்டுகிறார். இயேசு ஏன் திராட்சச்செடியைத் திருஷ்டாந்தமாக எடுத்தோதினார் என்பதைப் பற்றிப் பற்பல அபிப்பிராயங்களுள. சிலர் மேலறையில் செடியிருந்ததாகவும் சிலர் வெளியே போனபோது அதைக் கண்டதாகவும் சிலர் தேவாலயத்தின் வாசலில் வரைந்தெழுதிய திராட்சச்செடியைப் பார்த்துச் சொன்னதாகவுஞ் சொல்வார். இந்த உருவகம் யூதருக்கு நன்கறிந்த உருவகம். தீர்க்கதரிசிகள் இஸ்ரவேல் ஜனத்தை அடிக்கடி அவ்வண்ணம் உருவகஞ்செய்தார்கள். சங் $80^{4}$ ஏசா $5^{1-7}$ எரே $2^{21}$ ஓசி $10^{1}$. பார்க்க.

1. **மெய்யான** — சம்பூரணமான என்றர்த்தமாம். இஸ்ரவேல் ஜனம் இவ்வுருவகத்திற்குக் குறைவான உருவகம். இயேசுவும் அவருடைய சீஷரும் இதன் சம்பூரணமான நிறைவேறுதல் என்று இதனால் அறிக.

2. **சுத்தம்பண்ணுகிறார்**–பிரயோஜனமற்ற கொடிகளையும் செத்த கொம்புகளையும் மிதமிஞ்சி வளர்ந்த தழைகளையும் அறுத்தல் மரம் சிறப்பாய் வளர்வதற்கு அவசியம். மனதின் பயனில்லா வியக்கங்களை விலக்குதலைக் குறிப்பிக்கிறது.

3. சீஷர்களிலே இயேசு சுத்தம்பண்ணுதலாகிய அந்த வேலையை ஆரம்பித்துச் சரியான முடிவுக்குக் கொண்டுவரும் காரணங்களை உண்டுபண்ணினார் என்றறிக.

4. அப்பேர்ப்பட்ட சுத்தம் நிலையாயிருத்தற்கு இயேசுவில் நிலைத்திருத்தல் அவசியமென்பது பொருள்.

5. **ஒன்றும்**—கிறிஸ்து செய்கை ஒன்று என்க.

7. கிறிஸ்தவ ஜெபத்தின் நிபந்தனை ஒன்று இதில் சொல்லப்பட்டது. என்னவெனில் சீஷனது மனமும் கிறிஸ்துவின் மனமும் ஒன்றுபடவேண்டும்.

9. **என்னுடைய அன்பிலே** — என் குணமாகிய அன்பிலே என்க.

10. குமாரன் தந்தைக்குக் கீழ்ப்படிகிறதுபோல் சீஷர் இயேசுவுக்குக் கீழ்ப்படியவேண்டும்.

11. **என்னுடைய சந்தோஷம்**—என் தந்தைக்குக் கீழ்ப்படிந்து அவருடன் நான் சம்பந்தமுள்ளவனாதலின் உண்டான சந்தோஷ

மென்றறிக. இத்துடன் உலகத்தை இரட்சிக்கும் சந்தோஷமு மென்பது. எபி $11^{2}$. பார்க்க.

**13.** இவ்வசனத்தில் அன்பின் சிறந்த தன்மை விளங்குகிறது; ஆத்ம தியாகம் செய்தல் அன்பின் சிறப்பு.

**தன் சிநேகிதருக்காக** — அவர் எல்லா மனிதனரயும் சிநேகித்ராக இவ்விஷயமாய் எண்ணிக்கொள்ளுகிறார்.

**14, 15.** சிநேகிதர்கள் என்னும்பெயரைப் பெறும் நிபந்தனையை இயேசு இவைகளில் வெளிப்படுத்தினார். என்னவெனில், அவர்கள் அவருக்குக் கீழ்ப்படியவேண்டும். அந்தக் கீழ்ப்படிதல் இன்னதென்று காண்பித்தார். எப்படியெனின், இயேசுவின் மனதிற்கிசைந்து கீழ்ப்படிதலே. இதுவரைக்கும் அவரது நோக்கம் அறியாமல் சீஷர்கள் வேலைக்காரரைப்போன்று கீழ்ப்படிந்தார்கள். இனிப் பரிசுத்தாவியின் இயக்கத்தால் அவர்கள் இயேசுவின் மனத்தாற்பரியங்களையறிந்து அவரது வேலையை நடப்பிப்பார்கள்.

**16.** இயேசு அவர்களை நியமித்து அவர்கள் பலனுற்ற வேலையைச் செய்யத்தக்க ஏற்பாடுகள் எல்லாவற்றையும் உண்டுபண்ணினார் என்பது கருத்து.

இதில் ஜெபத்தின் நிபந்தனை இன்னதென்று வெளிப்படுகிறது. $14^{13}$. பார்க்க.

## $15^{18}$–$16^{3}$. சீஷரும் லௌகீகரும்.

18 உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப்
பகைக்கிறதற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று
19 அறியுங்கள்.—நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம்
தன்னுடையதைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தா
ராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து
தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப்
20 பகைக்கிறது.—ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரி
யவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்
தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத்
துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்
படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்
கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்
21 கொள்ளுவார்கள்.—அவர்கள் என்னை அனுப்பினவரை



அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளை
22 யெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்.—நான் வந்து
அவர்களிடத்தில் பேசாதிருந்தேனானால் அவர்களுக்குப்
பாவமிராது; இப்பொழுதோ தங்கள் பாவத்தைக்குறித்
துப் போக்குச்சொல்ல அவர்களுக்கு இடமில்லை.—
23 என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கி
24 றான்.—வேறொருவரும் செய்யாத கிரியைகளை நான்
அவர்களுக்குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்க
ளுக்குப் பாவமிராது; இப்பொழுது அவர்கள் என்னை
யும் என் பிதாவையும் கண்டும் பகைத்துமிருக்கிறார்கள்.—
25 முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்கள் என்று
அவர்களுடைய வேதத்தில் எழுதியிருக்கிற வாக்கியம்
நிறைவேறும்படிக்கு இப்படியாயிற்று.
26 பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்
போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவரு
மாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது,
27 அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார்.—நீங்களும்
ஆதிமுதல் என்னுடனேகூட இருந்தபடியால் எனக்
குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.
1 நீங்கள் இடறலடையாதபடிக்கு இவைகளை உங்க
2 ளுக்குச் சொன்னேன்.—அவர்கள் உங்களை ஜெபஆல
யங்களுக்குப் புறம்பாக்குவார்கள்; மேலும் உங்களைக்
கொலைசெய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டுசெய்
3 கிறவனென்று நினைக்குங் காலம் வரும்.—அவர்கள் பிதா
வையும் என்னையும் அறியாதபடியினால் இவைகளை உங்
களுக்குச் செய்வார்கள்.

## இயேசுவின் சீஷரும் உலகத்தாரும். $15^{18}$–$16^{3}$.

சீஷருக்கும் உலகத்தாருக்கும் பகையுளது.

உலகத்தாரின் பகைக்குக் காரணங்களாவன. $15^{18-21}$.

(i) உலகத்தின் மனம் அவர்களுக்கில்லை. $15^{18}$.

(ii) அவர்கள் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள். $15^{20}$.

(iii) உலகத்தார் கடவுளை அறியார். $15^{21}$.

உலகத்தாரின் குற்றங்களாவன. $15^{22-25}$.

(i) கிறிஸ்துவைப் பகைத்தல் பரம தந்தையையும் பகைத்தற்குச் சமானம். $15^{22, 23}$.

(ii) அவர்களுக்குச் சத்தியம் அறிவிக்கப்பட்டது. $15^{24}$.

(iii) காரணமின்றி பகைத்தார்கள். $15^{25}$.

உலகத்தாரின் பாவத்திற்குச் சாட்சிகளாவன. $15^{26, 27}$.

(i) பரிசுத்தாவியாகிய பரிந்துபேசுகிறவரது சாட்சி. $15^{26}$.

(ii) சீஷரது சாட்சிகள். $15^{27}$.

உலகத்தாரின் தப்பான எண்ணமாவது. $16^{1, 2}$.

சீஷரைப் பகைத்துத் துன்பப்படுத்துதல் கடவுளுக்கு ஊழியஞ் செய்தல் என்பதுவே.

இவைகளின் காரணம் மறுபடியு மெடுத்தோதினர். $16^{3}$.

19. உலகத்திற்குத் தன்னயம் விசேஷித்த குணம்.

21. கிறிஸ்தவர்கள் உலகத்தாராலடையுந் துன்பங்கள் அவரது நாமத்தின் நிமித்தமே வந்திருக்கும். இந்த வார்த்தை எக்காலத்திலும் நிறைவேறிவருகிறது.

23. இயேசு கடவுளைப் பூரணமாய் வெளிப்படுத்தலின் அவரைப் பகைத்தல் தந்தையையும் பகைத்தலாம்.

25. எல்லா நடபடிகளும் முன்னறிவித்தலின்படி நடந்ததென்பது முன்னோர்களின் அபிப்பிராயமே. அந்தத் திட்டமான சம்பவங்கள் ஒவ்வொன்றும் முன்னறிவிக்கப்பட்டனவென்று இப்போது நாம் நினையோமெனினும் அந்த முன்னுரை வார்த்தைகளில் சொல்லிய சின்மய சத்தியம் பிந்தின கிரியையில் விளங்கினது என்றறிக. சங் $69^{4}$ $85^{7}$.

26. தேற்றரவாளன்—பரிந்துபேசுகிறவன் என்றெழுதுக. $14^{16}$.

நான்—இவ்வார்த்தையில் இயேசுவின் தெய்வீகத்தன்மை விளங்குகிறது. $14^{16}$–ல் குமாரன் கேட்டதாலும் $14^{26}$–ல் குமாரன் நாமத்தினாலும் பரிசுத்தாவி அனுப்பப்பட்டது என்று சொல்லியிருக்கிறது. இந்தச் சத்திய ஆவி தந்தையிலிருந்து வருதலால் அவர் சத்தியமுள்ள சாட்சியென்றறியலாம்.

அவர்—என்று சொன்னதால் பரிசுத்தாவி ஒருவர் என்று சொல்லக்கூடிய உயர்திணையுடையதாகச் சொல்லப்படுகிறது.

27. தெய்வீக சாட்சியும் மனுஷீகசாட்சியும் சேர்ந்தன. அப் $5^{32}$ $15^{23}$. பார்க்க.



1. சபையின் சரித்திரத்தில் இந்தக் காரியம் அடிக்கடி நிறைவேறி வந்தது. அப் $26^{9}$.

2. இப்பேர்ப்பட்டவைகளைச் செய்வதற்குப் பரம தந்தையையும் குமாரனையும் அறியாமையே காரணமாம்.

**இயேசு பிரிந்துபோதலினால் வரும் சந்தோஷங்கள். $16^{4-33}$.**

சீஷர்களது விசனம். $16^{4-6}$.

இயேசு சொன்ன வார்த்தைகளால் பின்பு அவர்களது விசனம் கொஞ்சம் தணிந்திருக்கும்.

பரிசுத்தாவி வருவார். $16^{7}$.

பரிசுத்தாவி செய்யும் வேலைகள். $16^{8-15}$. இதில் இயேசுவின் வேலையும் நிறைவேறும்.

(1) உலகத்திற்குச் சத்தியத்தை யுணர்த்தல். $16^{8-11}$.

(2) பரம காரியங்களைச் சீஷர்களுக்குப் போதித்தல். $16^{12, 13}$.

(3) இயேசுவை வெளிப்படுத்துதல். $16^{14, 15}$.

இயேசு பிரிந்துவிடுதல் சீஷருக்கு விளங்கவில்லை. $16^{16-19}$.

சீஷர்களது துக்கம் சந்தோஷமாக மாறும். $16^{20-22}$.

அவர்கள் கேட்பதைப் பெற்றுக்கொள்ளுதல் அந்த சந்தோஷத்திற்கு ஒரு காரணம். $16^{23, 24}$.

பரம தந்தையின் அன்பு. $16^{25-27}$.

அவர் அவைகளில் பிரிந்தால்மாத்திரம் தந்தையிடம் போய்ச் சேரலாம். $16^{28}$.

சீஷர்களது நம்பிக்கை. $16^{29-31}$.

அவர்களுக்குண்டாகும் ஜெயம். $16^{32, 33}$.

இயேசு பிரிந்துபோவதால் அவர்களும் உலகத்தை ஜெயிப்பார்கள்.

### $16^{4-15}$. பரிசுத்தாவி வருதலும் அவரது வேலையும்.

4 அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்க
ளுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி
இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான்
உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே
இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.
5 இப்பொழுது நான் என்னை அனுப்பினவரிடத்திற்
குப் போகிறேன்; எங்கே போகிறீர் என்று உங்களில்

6 ஒருவனும் என்னைக் கேட்கவில்லை. — ஆனாலும் நான்
இவைகளை உங்களுக்குச் சொன்னதினால் உங்கள் இரு
தயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது.
7 நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்;
நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்
கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களி
டத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்க
8 ளிடத்திற்கு அனுப்புவேன்.—அவர் வந்து, பாவத்தைக்
குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்
9 தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.—அவர்
கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்
10 தும்,—நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான்
என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதி
11 யைக்குறித்தும், — இந்த உலகத்தின் அதிபதி நியாயந்
தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்
டித்து உணர்த்துவார்.
12 இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச்
சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள்
13 இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.—சத்திய ஆவியாகிய
அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை
நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல்,
தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப்
போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். —
14 அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்
15 பதினால் என்னை மகிமைப்படுத்துவார்.—பிதாவினு
டையவைகள் யாவும் என்னுடையவைகள்; அதினாலே
அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்
பார் என்றேன்.

4. **இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை** — அவர் முன்னே துன்பங்களைப்பற்றிப் பேசினாரெனினும், பரம தந்தையிடம் போதலும், பரிசுத்தாவி வருதலும், அவர்கள் பெறும் ஜெயமுமாகிய இவைகளைப்பற்றி முன்னே சொல்லாமலிருந்தார். இவைகளைக் கடைசியாகச் சொல்லுவது தகும்.

5, 6. பேதுரு இந்தக் கேள்வி கேட்டார் ($13^{36}$). இயேசு அடையும் மேன்மையான ஸ்தலத்தை அவன் அறிந்திலனாதலால் விசனப்பட்டான்.



7. **உங்களுக்குப் பிரயோஜனம்**—சரீரத்தில் கட்டப்பட்ட இயேசு அவர்களுடனிருப்பதைப்பார்க்கிலும் மேன்மையடைந்த இயேசு சின்மயச்சொரூபியாய் அவர்களுக்குள்ளே கிரியை செய்வது அவர்களுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளது. இயேசுரட்சகர் தமது வேலையை நிறைவேற்றித் தந்தையிடம் மகிமைபெற்றாலொழியப் பரிந்து பேசுகிறவன் வரான்.

8. **உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்**—அவர் கிறிஸ்துவின் வேலையை உலகத்தாரின் மனச்சாட்சிக்கு வெளிப்படுத்தலால் இப்படிச் செய்வார். உலகத்தார் அந்தச் சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுவார்களோ இல்லையோவென்பது விளங்காது. உலகத்தார் யாவரும் மனச்சாட்சிக்கு ஏற்றதாக இவைகளை உணர்ந்துகொள்ளும்படி அவர் தெரிவிப்பார். இவைகளில் பாவம் நீதி நியாயத்தீர்ப்பென்பவைகள் விசேஷித்த காரியங்கள். உலகத்தார் இவைகளைத் தெளிவாய் அறிந்துகொண்டால் நன்மை தீமை இன்னதென்று நிதானித்துக் கொள்ளலாம்.

9. இயேசுவைத் தள்ளுதல் பாவத்தின் மூலத்தன்மையாம். பாவத்திற்கு எதிரிடையான தேவசித்தம் சகலமும் இயேசுவில் வெளிப்பட்டது.

10. இயேசுவின் ஜீவியத்தில் நீதியின் தன்மையெல்லாம் விளங்குகிறது. அவர் தந்தையிடம் போய் மேன்மையடைந்தது அந்த நீதிக்கு ருஜுவாயிற்று. அந்த நீதி அதினால் பூரணமாய் விளங்கிற்று.

11. இயேசுவின் மரணத்தில் நியாயத்தீர்ப்பு முடிவுபெற்றது. அதிலே பாவமும் பாவத்தின் இராஜ்யமும் ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டது. இயேசுவின் ஜெயம் லௌகீகமார்க்கத்தை யழித்தது. ஆகையால் இதில் சொல்லப்பட்ட தீர்ப்பையே பரிசுத்தாவி விளக்கிக் காட்டுவார்.

12–15. இயேசு பாடநுபவிக்குமுன்னே சீஷர்கள் அநேக காரியங்களைப்பற்றி யறியாமையுள்ளவரானார்கள். அதற்குப்பிறகு பரிசுத்தாவியின் ஏவுதலால் அவர்கள் இயேசுவின் கருத்துகளை உணர்ந்தார்கள். ஆகையால் அப்போஸ்தலர் இயேசு சொல்லாத அநேக காரியங்களை எடுத்துப் பேசினார்கள். இத்துடன் இயேசுவின் வார்த்தையி லடங்கிய அர்த்தங்களை அவரது மரணத்தின்மூலமாய் விளக்கிக் காணப்

படவேண்டுமென்றதால் அவரது வார்த்தையின் ஆழ்ந்த கருத்துகளை உணர்ந்தார்கள். இயேசு முன்னே அந்தக் கருத்துகளைத் தெளிவாய்க் காட்டாததால் அவ்வார்த்தைகளில் அக்கருத்துகளில்லை என்று மறுத்தல் பொருந்தாது. அப்போஸ்தலர் அவருக்குரிய புதிய சத்தியங்களை வெளிப்படுத்தற்குக் காரணம் இந்த வசனங்களில் தோன்றும்.

### 16[16-33]. விசனமும் சந்தோஷமும்.

16 நான் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால் கொஞ்
சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடி
யும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள் என்
றார்.
17 அப்பொழுது அவருடைய சீஷரில் சிலர்: நான்
பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், கொஞ்சக்கா
லத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள் என்றும், மறு
படியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள்
என்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதின் கருத்
தென்ன என்று தங்களுக்குள்ளே பேசிக்கொண்டது
18 மன்றி:—கொஞ்சக்காலம் என்கிறாரே, இதென்ன?
அவர் சொல்லுகிறது இன்னதென்று நமக்கு விளங்க
வில்லையே என்றார்கள்.
19 அதைக்குறித்துத் தம்மிடத்தில் கேட்கும்படி அவர்
கள் விரும்புகிறதை இயேசு அறிந்து, அவர்களை நோக்கி:
கொஞ்சக்காலத்திலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறு
படியும் கொஞ்சக்காலத்திலே என்னைக் காண்பீர்கள்
என்று நான் சொன்னதைக்குறித்து நீங்கள் உங்களுக்
20 குள்ளே விசாரிக்கிறீர்களோ?—மெய்யாகவே மெய்யா
கவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள்
அழுது புலம்புவீர்கள், உலகமோ சந்தோஷப்படும்; நீங்
கள் துக்கப்படுவீர்கள், ஆனாலும் உங்கள் துக்கம் சந்தோ
21 ஷமாக மாறும்.—ஸ்திரீயானவளுக்குப் பிரசவகாலம்
வந்திருக்கும்போது அவள் துக்கமடைகிறாள்; பிள்ளை
பெற்றவுடனே ஒரு மனுஷன் உலகத்தில் பிறந்தானென்
கிற சந்தோஷத்தினால் அப்புறம் உபத்திரவத்தை நினை
22 யாள்.—அதுபோல நீங்களும் இப்பொழுது துக்கம
டைந்திருக்கிறீர்கள். நான் மறுபடியும் உங்களைக் காண்
பேன், அப்பொழுது உங்கள் இருதயம் சந்தோஷப்படும்,
உங்கள் சந்தோஷத்தை ஒருவனும் உங்களிடத்திலிருந்து



23 எடுத்துப்போடமாட்டான்.— அந்த நாளிலே நீங்கள்
என்னிடத்தில் ஒன்றுங் கேட்கமாட்டீர்கள். மெய்யாக
வே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்
கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார்.-
24 இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றுங்
கேட்கவில்லை; கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்
தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள்.
25 இவைகளை நான் உவமைகளாய் உங்களுடனே பேசு
கிறேன்; காலம் வரும், அப்பொழுது நான் உவமைக
ளாய் உங்களுடனே பேசாமல், பிதாவைக்குறித்து வெ
26 ளிப்படையாக உங்களுக்கு அறிவிப்பேன்.— அந்த
நாளில் நீங்கள் என் நாமத்தினாலே வேண்டிக்கொள்வீர்
கள். உங்களுக்காகப் பிதாவை நான் கேட்டுக்கொள்வே
னென்று உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை.—
27 நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் தேவனிடத்திலி
ருந்து புறப்பட்டுவந்தேனென்று விசுவாசிக்கிறபடியி
28 னால் பிதா தாமே உங்களைச் சிநேகிக்கிறார்.—நான்
பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு உலகத்திலே வந்
தேன்; மறுபடியும் உலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்
குப் போகிறேன் என்றார்.
29 அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ, இப்
பொழுது நீர் உவமையாய்ப் பேசாமல், வெளிப்படை
30 யாய்ப பேசுகிறீர்.—நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கி
றீர் என்றும், ஒருவன் உம்மை வினாவவேண்டுவதில்லை
யென்றும், இப்பொழுது அறிந்திருக்கிறோம்; இதினா
லே நீர் தேவனிடத்திலிருந்து வந்தீரென்று விசுவாசிக்
கிறோம் என்றார்கள்.
31 இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இப்பொ
32 ழுது நீங்கள் விசுவாசிக்கிறீர்கள்.— இதோ, நீங்கள் சித
றுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய்,
என்னைத் தனியே விட்டுவிடுங் காலம் வரும்; அது இப்
பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன்,
33 பிதா என்னுடனேகூட இருக்கிறார்.—என்னிடத்தில்
உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு
இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில்
உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்
ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்.

17, 18. கொஞ்சக்காலம் இன்னதென்பதும் தந்தையிடம் போவது இன்னதென்பதும் சீஷர்களுக்கு விளங்கவில்லை.

20, 21. இயேசு சிலுவையில் அறையப்படுதல் முதலாவது அதிக விசனத்துக்கேதுவாகிப் பிறகு அதுவே உயர்ந்த சந்தோஷத்திற்குக் காரணமாயிற்று. அந்த மரணமே புதிய ஜீவனுக்குக் காரணமாயிற்றென்று அறிவார்கள்.

*23. **கேட்கமாட்டீர்கள்** — கேள்வி கேட்கமாட்டீர்களென்பது அர்த்தமாம். அப்போது அவர்களுடைய சந்தேகங்கள் யாவும் நீங்கிவிடும். வினவமாட்டீர்களென்றெழுதினால் நலம்.

25. **உவமைகளாய்** — உருவகம் உவமைகளைக்கொண்டு அவர் பெரும்பான்மையாய்ப் போதித்தார். ஏனென்றால் அவர்கள் அவரது உள்ளான நோக்கங்களையும் அவரது ஜீவியத்தின் தாற்பரியங்களையுமறியவில்லை.

27. கிறிஸ்துவாலேயே கடவுளுக்கும் மனுஷனுக்கும் அன்புள்ள சிந்தை உண்டாயிற்று.

28. இதிலே இயேசு சுருக்கமாய்த் தமது முழு சரித்திரத்தையும் தெரிவிக்கிறார்.

30. இயேசு அவர்களது இருதயத்தின் எண்ணங்களை யறிந்து காட்டினதால் அவர்கள் அவரது தெய்வீகத் தன்மையை உணர்ந்தார்கள்.

31. **இப்பொழுது** — இப்பொழுதே என்றெழுதுக. சற்று சந்தேகத்துடன் சொன்னார். இப்பொழுதே விசுவாசமுண்டு. இனி கொஞ்சக்காலத்துக்குள்ளே விசுவாசங் குறைந்துபோகுமென்பது.

33. உலகத்தினால் துன்பமும் குழப்பமும் உண்டாயினும் இயேசுவால் எப்போதும் சமாதானம் அமைந்துகொள்ளும்.

**நான் உலகத்தை ஜெயித்தேன்**—மேற்கொண்டேன் என்றால் நலம். அதாவது எக்காலத்திற்கும் உலகம் கிறிஸ்துவுக்கு அடங்கிப்போனது. கிறிஸ்து அதை மேற்கொண்டார். அவர் மேற்கொண்டது சீஷர் மேற்கொள்ளுதலுக்கும் அச்சாரம்.

### (4) சீஷருக்காக இயேசு செய்த வேண்டுகோள். $17^{1-26}$.

முன்னே சொல்லிய சம்பாஷணைகளும் இந்த விண்ணப்பமும் தேவாலயத்தில் நடந்ததாகவும் பிஷப் வெஸ்காட் அபிப்பிராயப்பட்



டார். இப்பேர்ப்பட்ட விண்ணப்பம் ஆத்ம வியாகுலத்திற்குமுன்னே எப்படி வரலாமென்று சிலர் ஆட்சேபிக்கிறார்கள். அதற்கந்த வித்துவான் "அதிக நெருக்கமான சமயங்களில் சந்தோஷமும் விசனமும் இடையென்று மாறிமாறி வருவது மனுஷரது இயல்பான வழக்கம். இயேசு எல்லாவற்றையு மறிந்ததால் அவ்வண்ணமான அனுபோகம் அவருக்குண்டாகுமென்பதை சுலபமாய் நம்பலாம். அவர் தாமடையும் பூரண வெற்றியையும் அதைப் பெறும் வழியாகிய அதிக வேதனை அடைதலையுமறிந்து ஒன்றன்பின் ஒன்றாக அவைகளுக்குரிய இரண்டு விபரீதமான குணங்களையும் அடைந்திருக்கலாம்" என்றெழுதினார்.

வேண்டுகோளை மூன்று பங்காகப் பிரிக்கலாம். அதாவது,

(i) தமக்கடுத்த ஜெபம். $17^{1-5}$.

தாம் தந்தையை மகிமைப்படுத்தும்படி தந்தை குமாரனை மகிமைப்படுத்தவேண்டும். $17^{1, 2}$.

மனிதர் குமாரனை அறிதலே தந்தைக்கு மகிமை. $17^{3}$.

குமாரன் பூமியில் தந்தையை மகிமைப்படுத்தினதால் தாம் தந்தையிடம் மகிமையைக் கேட்கிறார். $17^{4, 5}$.

(ii) சீஷர்களுக்கடுத்த ஜெபம். $17^{6-19}$.

சீஷர்கள் தாம் கொடுத்த வெளிப்படுத்தலை ஏற்றுக்கொண்டார்கள். $71^{6-8}$.

சீஷர்கள் விசேஷமாய்த் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். $17^{9, 10}$.

சீஷர்களைக்குறித்த இயேசுவின் கவலை. $17^{11-13}$.

சீஷர்கள் உலகத்தில் பரிசுத்தமாயிருத்தல் வேண்டும். $17^{14-19}$.

(iii) திருச்சபைக்கடுத்த ஜெபம். $17^{20-26}$.

சீஷர்களெல்லாரும் ஒன்றாகவேண்டும். $17^{20-23}$.

அவர்கள் குமாரனுடைய மகிமையைக் காணவேண்டும். $17^{24}$.

அவர்களது அன்பு அவர்களில் விளங்கவேண்டும். $17^{25, 26}$.

### $17^{1-5}$. இயேசு தமக்காகச் செய்த ஜெபம்.

1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய
2 கண்களை வானத்துக்கு ஏறெடுத்து:-பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு

மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்
கொடுத்தபடியே, உம்முடைய குமாரன் உம்மை மகி
மைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய குமாரனை மகி
3 மைப்படுத்தும்.—ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மை
யும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறி
4 வதே நித்தியஜீவன்.—பூமியிலே நான் உம்மை மகி
மைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நிய
5 மித்த கிரியையைச் செய்து முடித்தேன்.—பிதாவே, உல
கம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு
உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர்
என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.

1. குமாரனாலே தந்தைக்கு மகிமை வருகிறது. தந்தை குமாரனுக்கு மாணத்தில் வெற்றிதருதலால் தந்தைக்கும் குமாரனுக்கும் மகிமை உண்டாகிறது என்பது.

3. இதிலே நித்தியஜீவன் இன்னதென்று தெரியவருகிறது. அது அறிவின் ரூபமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது.

அறிவது—அறிமுகப்படுவது அல்லது அவர்களுடன் சகவாசப்படுதல். மனத்தினால் கிரகித்துக்கொள்ளுதலேமட்டுமல்ல, சிநேக சம்பந்தமான அறிவையும் இச்சொல் குறிக்கிறது. தந்தையையும் இயேசுவையும் உள்ளபடி இவ்வண்ணமாயறிவதே நித்தியஜீவனாம்.

இயேசுகிறிஸ்துவை—இந்தப் பெயரை நூலாசிரியனே சேர்த்து எழுதினான். இயேசு இப்படிச் சொல்லியிருக்கமாட்டார்.

5. உலகத்தில் வருமுன்னே இயேசுவுக்கு மகிமையுள்ள ஜீவியமிருந்ததாகத் தோன்றுகிறது.

## $17^{6-19}$. சீஷர்களுக்காகச் செய்த ஜெபம்.

6 நீர் உலகத்தில் தெரிந்தெடுத்து எனக்குத் தந்த மனு
ஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்.
அவர்கள் உம்முடையவர்களாயிருந்தார்கள், அவர்களை
எனக்குத் தந்தீர், அவர்கள் உம்முடைய வசனத்தைக்
7 கைக்கொண்டிருக்கிறார்கள்.— நீர் எனக்குத் தந்தவைக
ளெல்லாம் உம்மாலே உண்டாயினவென்று இப்பொ
8 ழுது அறிந்திருக்கிறார்கள்.—நீர் எனக்குக் கொடுத்த



வார்த்தைகளை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்;
அவர்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்
திலிருந்து புறப்பட்டுவந்தேன் என்று நிச்சயமாய்
அறிந்து, நீர் என்னை அனுப்பினீர் என்று விசுவாசித்தி
9 ருக்கிறார்கள்.—நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்
ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர்
எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்;
10 அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே.—என்
னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்மு
டையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான்
11 மகிமைப்பட்டிருக்கிறேன். — நான் இனி உலகத்தி
லிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்
மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்
குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு,
நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்
12 ளும் — நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கை
யில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்
கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்
கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்க
தாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல்,
13 அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை. — இப்
பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன்; அவர்கள்
என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்
தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன்.
14 நான் உம்முடைய வார்த்தையை அவர்களுக்குக்
கொடுத்தேன்; நான் உலகத்தானல்லாததுபோல அவர்க
ளும் உலகத்தாரல்ல; ஆதலால் உலகம் அவர்களைப்
15 பகைத்தது.—நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக்
கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்
களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளு
16 கிறேன். — நான் உலகத்தானல்லாததுபோல. அவர்க
17 ளும் உலகத்தாரல்ல. — உம்முடைய சத்தியத்தினாலே
அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே
18 சத்தியம்.—நீர் என்னை உலகத்தில் அனுப்பினதுபோல,
19 நானும் அவர்களை உலகத்தில் அனுப்புகிறேன்.—அவர்
களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களா
கும்படி, அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்
தமாக்குகிறேன்.

6. **உம்முடைய நாமத்தை**—தந்தை என்னும் நாமமென்றறிக.

7, 8. அவர்கள் இயேசுவுக்கு உண்மையான சீஷர்களாதலின் இயேசுவின் மேலான நிலைமையைக் கண்டறிந்தார்கள்.

9. அவர்கள் தந்தையுடன் இயேசுமூலமாய் விசேஷித்த சம்பந்தமுள்ளவர்களாதலால், இயேசு முதலாவது சீஷர்களுக்காக விசேஷமாய் விண்ணப்பஞ்செய்தார்.

11. அவர் சீஷர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிற காரணமும் பொருளும் இதில் காணப்படுகிறது. அவர் பிரிந்துபோதலே காரணம். அவர் அவர்களில் உண்டுபண்ணின விசுவாசத்தையும் பரிசுத்தத்தையும் காத்து அவர்களை ஒன்றுக்கவேண்டுமென்பதே பொருள்.

**பரிசுத்த பிதாவே** — இயேசு இக்கடைசிநாட்களில் பரிசுத்தத்தைப்பற்றி விசேஷமாய் எண்ணினாரென்று இதினாலறிக.

**நீர் எனக்குத் தந்தவர்கள்**—என்பதற்குப் பதிலாக நீர் எனக்குத் தந்த உமது நாமத்தினாலே என்றெழுதுக. அந்த நாமம் தந்தை என்பதாம்.

**ஒன்றயிருக்கும்படிக்கு**—இதுவே இந்த வேண்டுகோளின் விசேஷித்த நோக்கம். இந்த வேண்டுகோள் தற்காலத் திருச்சபையில் நிறைவேறப்போகிறதாகத் தோன்றுகிறது.

12. இயேசு தாம் செய்த வேலையைப்பற்றி நினைத்துக்கொள்ளுகிறார்.

13. **உலகத்தில்** — அதாவது சீஷர்களுடன் என்க. இருக்கையில் என்பதை ஒழிக்க.

15. சீஷர்களின்னும் உலகத்தில் ஒரு ஊழியஞ் செய்யவேண்டியிருப்பதால் இப்போது அவர்களை எடுத்துவிட முடியாமலிருக்கிறது. அவர்கள் தங்கள் ஊழியத்தைத் தகுதியாய் நிறைவேற்றத்தக்கதாக உலகத்தின் மாசுக்கு நீங்கி இருத்தலவசியம்.

17. **பரிசுத்தமாக்கும்**—பிரதிஷ்டை செய்யும் என்று எழுதினால் நன்று. 10[36]-ல் கடவுள் இயேசுவைப் பிரதிஷ்டை செய்தலைக் குறிக்கிறது. இவ்விடத்தில் சீஷர்களைப் பிரித்து ஒரு விசேஷித்த ஊழியத்திற்கு நியமித்துவைப்பதைக் குறிப்பிக்கிறது.



**சத்தியத்தினாலே**-சத்தியத்தில் என்பது சரியான மொழிபெயர்ப்பு. த்தியமென்னும் வாயுவைச் சுவாசித்து ஜீவிக்கிறதுபோல் என்றறிக.

18. சீஷர்கள் செய்யும் ஊழியம் இதில் சொல்லியிருக்கிறது. இயேசு எப்படிக் கடவுளை வெளிப்படுத்துகிறாரோ அவர்களும் அப்படியே இயேசுவை வெளிப்படுத்துவதே அந்த ஊழியம்.

19. இதிலும் பிரதிஷ்டை செய்வது என்பது பரிசுத்தமாக்குதல் ன்பதற்குப் பதிலாக எழுதவேண்டும். சீஷர்கள் பிரதிஷ்டை டையத்தக்கதாக அவர் மாணத்தினால் தம்மைப் பிரதிஷ்டை செய்கிறார்.

**சத்தியத்தினாலே**—அல்லது உண்மையாகவே.

### 17[20-26]. திருச்சபைக்காகச் செய்த ஜெபம்.

20 நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்
லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசு
வாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.-
21 அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர்
என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக,
நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல
அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்
22 டிக்கொள்ளுகிறேன். — நாம் ஒன்றாயிருக்கிறதுபோல
அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த
23 மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். — ஒரு
மைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்
கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில்
அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்
கிறதையும் உலகம் அறியும்படிக்கும்; நான் அவர்களி
லும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளு
கிறேன்.
24 பிதாவே, உலகத்தோற்றத்துக்குமுன் நீர் என்னில்
அன்பாயிருந்தபடியினால், நீர் எனக்குத் தந்த என்னு
டைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்
படியாக, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே அவர்
25 களும் என்னுடனேகூட இருக்க விரும்புகிறேன்.—நீதி
யுள்ள பிதாவே, உலகம் உம்மை அறியவில்லை, நான்
உம்மை அறிந்திருக்கிறேன்; நீர் என்னை அனுப்பினதை

> 26 இவர்களும் அறிந்திருக்கிறார்கள். — நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்; இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார்.

20. சீஷர் யாவரும் ஒன்றாயிருப்பதுவே இயேசுவின் நோக்கம். அந்த ஐக்கியத்திற்குக் குமாரன் தந்தையுடன் அமைந்த ஐக்கியமே மாதிரி. அந்த ஐக்கியமே உலகத்தின் விசுவாசத்திற்குக் காரணமாம். முதல் நூற்றாண்டில் இந்தக் கிறிஸ்தவர்கள் எவ்வளவு நெருக்கமாய் ஒருவரையொருவர் நேசிக்கிறார்களென்று பரிகாசமாய்ச் சொல்லப்பட்டதிலும் தெரியவருகிறது. 1910–ல் கூடின சர்வ மிஷனெரி சங்கத்திலும் திருச்சபையின் ஐக்கியம் காணப்பட்டது.

23. இந்த ஐக்கியத்தைக் கண்டு இயேசுவின் தெய்வீக குணத்தையும் உலகத்தாரறிவார்கள்.

24. இந்த விண்ணப்பம் சீஷர்கள் மறுமையில் அடையும் ஜீவியத்திற்குரியது. அதிலே இரண்டு காரியங்களுண்டு.

(i) சீஷர்கள் கிறிஸ்துவுடனிருக்கவேண்டுமென்பதும்.

(ii) சீஷர்கள் அந்த தெய்வீக மகிமைக்கேற்ற தன்மையை முற்றிலுங் கண்டறியவேண்டுமென்பதுமே.

25, 26. இந்த வசனங்களில் வேண்டுகோள் முழுவதும் அடங்கியிருக்கிறது. உலகத்தின் அறியாமையும் சீஷர்களது விசேஷித்த நிலைமையும் அவர்களைப்பற்றிய இயேசுவின் நோக்கமும் இவைகளில் தோன்றுகின்றன. இயேசு இன்னுங்கூட கடவுளின் மகிமையை சீஷர்களுக்கு வெளிப்படுத்துவாரென்றறிக.

## IV. இயேசு உலகத்திற்குக் கொடுத்த சிறந்த வெளிப்படுத்தல். $18^{1}$–$19^{42}$.

இயேசு கடைசியாக உலகத்தார் யாவருக்கும் சிறந்த வெளிப்படுத்தலைக் கொடுத்தார். அவர் முதலாவது பொதுவான தன்மையாய்ப் போதனைகளாலும் நடக்கைகளாலும் தம்மை யடைந்த ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்தினதையும், பிறகு விசேஷித்தவிதமாய்த் தம்முடைய சீஷர்களுக்குத் தமது காரியங்களை வெளிப்படுத்தினதையும் நாம் கண்டறிந்து கடைசியாக அவர் சர்வ மாந்தர்க்கும் தமது தெய்வீக மாட்சிமையை மரணத்தின்மூலமாய்க் காண்பித்ததையும் பார்க்கிறோம்.



இதிலே யூதரது பகை நிறைவேறுதலையும் இயேசுவின் வேலை முடிவுபெறுதலையும் காண்கிறோம்.

இச்சுவிசேஷத்தில் சொல்லிய சரித்திரத்தில் பின்வரும் மூன்று விசேஷித்த தாற்பரியங்கள் விளங்கும்.

(i) இயேசு இஷ்டமாய்ப் பாடுபட்டார். $18^{4-8}$ $19^{28}$.

(ii) கடவுளின் கருத்து நிறைவேறிற்று. $18^{4.9}$ $19^{11.24.28}$.

(iii) எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் மாட்சிமை காணப்பட்டது. $18^{6.37}$ $19^{11}$.

திரியனுபந்த சுவிசேஷங்களின் சரித்திரத்திலெழுதிய அநேக சம்பவங்கள் இந்தச் சுவிசேஷத்தில் எழுதாமல் விடப்பட்டிருக்கின்றன. தோட்டத்தின் வியாகுலம், துரோகமுத்தம், இராவில் நடந்த விசாரணை, விடியற்கால விசாரணை, ஏரோதின் விசாரணை, காண்போரும் கள்ளரும் நிந்தித்தல், அந்தகாரம், தேவாலயத்தின் திரை கிழிதல், நூற்றுக்கதிபதியின் அறிக்கை, பூமியதிர்ச்சி முதலியவைகள் எழுதப்பட்டிருக்கவில்லை.

நம்மாசிரியன் மற்ற நூற்களிலில்லாத சில சம்பவங்களை எழுதியுள்ளான். அவைகள் என்னவெனின்,

அன்னாவின் விசாரணை, பிலாத்துவின் தனிமையான விசாரணை, முதல் பரிகாசம், விலாவைக் குத்தல், நிக்கொதேமு செய்த ஊழியம் என்பவைகளாம்.

பின்வரும் விஷயங்கள் எல்லாச் சுவிசேஷங்களிலும் சமமாய் வருகின்றன.

(i) பிரதான ஆசாரியரது இயக்கம்.

(ii) குற்றஞ்சாட்டின வழியாவது — முதலாவது ராஜதுரோகம், இரண்டாவது தேவதூஷணம். இவைகளில் அதிகாரிகள் இயக்கஞ்செய்தல்.

(iii) இயேசு மௌனமாயிருத்தல்.

(iv) பரிகாச நடத்தை.

(v) பிலாத்துவின் கெட்ட குணம் என்பனவகளே.

### 18[1-11]. இயேசு கண்டுபிடிக்கப்பட்டது.

1 இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய
சீஷருடனேகூட கெதரோன் என்னும் ஆற்றுக்கு அப்
புறம் போனார்; அங்கே ஒரு தோட்டம் இருந்தது,
அதிலே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்
2 கள்.— இயேசு தம்முடைய சீஷருடனேகூட அடிக்கடி
அங்கே போயிருந்தபடியினால், அவரைக் காட்டிக்கொ
டுக்கிற யூதாசும் அந்த இடத்தை அறிந்திருந்தான்.—
3 யூதாஸ் போர்ச்சேவகரின் கூட்டத்தையும் பிரதான ஆசா
ரியர் பரிசேயர் என்பவர்களால் அனுப்பப்பட்ட ஊழி
யக்காரரையும் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடும் தீவட்
டிகளோடும் ஆயுதங்களோடும் அவ்விடத்திற்கு வந்தான்.
4 இயேசு தமக்கு நேரிடப்போகிற எல்லாவற்றையும்
அறிந்து, எதிர்கொண்டுபோய், அவர்களை நோக்கி:
5 யாரைத் தேடுகிறீர்கள் என்றார்.— அவருக்கு அவர்கள்
பிரதியுத்தரமாக: நசரேயனாகிய இயேசுவைத் தேடுகி
றோம் என்றார்கள். அதற்கு இயேசு: நான்தான் என்
றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும் அவர்களுட
6 னேகூட நின்றான்.—நான்தான் என்று அவர் அவர்க
ளிடத்தில் சொன்னவுடனே, அவர்கள் பின்னிட்டுத்
தரையிலே விழுந்தார்கள்.
7 அவர் மறுபடியும் அவர்களை நோக்கி: யாரைத் தேடு
கிறீர்கள் என்று கேட்டார். அவர்கள்: நசரேயனாகிய
8 இயேசுவைத் தேடுகிறோம் என்றார்கள்.— இயேசு பிரதி
யுத்தரமாக: நான்தான் என்று உங்களுக்குச் சொன்
னேனே; என்னைத் தேடுகிறதுண்டானால், இவர்களைப்
9 போகவிடுங்கள் என்றார்.— நீர் எனக்குத் தந்தவர்களில்
ஒருவனையும் நான் இழந்துபோகவில்லையென்று அவர்
சொல்லிய வசனம் நிறைவேறத்தக்கதாக இப்படி நடந்
தது.
10 அப்பொழுது சீமோன்பேதுரு, தன்னிடத்திலிருந்த
பட்டயத்தை உருவி, பிரதான ஆசாரியனுடைய வே
லைக்காரனை வலதுகாதற வெட்டினான்; அந்த வேலைக்
11 காரனுக்கு மல்குஸ் என்று பெயர்.— அப்பொழுது
இயேசு பேதுருவை நோக்கி: உன் பட்டயத்தை உறை
யிலே போடு; பிதா எனக்குக் கொடுத்த பாத்திரத்தில்
நான் பானம்பண்ணாதிருப்பேனோ என்றார்.



### (1) இயேசுவைக் கண்டுபிடித்தது. 18[1-11].

1. **அப்புறம் போனார்**—பட்டணத்தை விட்டுப்போனாரென்றறிக.

**கெதரோன் ஆறு** — ஆறு என்பதற்கு அருவியென் றெழுதுக. கெதரோன் என்பதற்கு கரியோனென்றர்த்தமாம். அது ஒரு ஆழ்ந்த பள்ளத்தாக்கில் ஓடினதால் தண்ணீர் கரிய நிறமுள்ளது.

**தோட்டம்**—கெத்செமனே என்னும் பண்ணையிலுள்ள ஒரு கனித் தோட்டம். இதிலே ஆசிரியன் வியாகுலத்தைப்பற்றி எழுதாமல் விட்டான்.

2. இயேசு அடிக்கடி இங்கே வந்ததாக இந்நூலில்மாத்திரம் தெரிய வருகிறது.

3. **கூட்டம்**—பட்டாளத்தின் பத்தாம்பாகம் அதாவது அறுநூறு பெயர் பந்தங்களோடும் தீவட்டிகளோடும் வந்தார்களென்பது இந் நூலில்மாத்திரம் சொல்லியிருக்கிறது.

4. இயேசு இலவசமாய்ச் சுதாவாய்த் தம்மை ஒப்புக்கொடுத்ததைக்காண்க.

9. இயேசு 17[12]–ல் இவ்வார்த்தை சொன்னார். சீஷர்கள் தங்களுக்கு நியமிக்கப்பட்ட ஊழியஞ்செய்யும்படி காக்கப்படவேண்டும் என்பதைப்பற்றி ஆசிரியன் சொன்னான்.

10. இந்தச் சம்பவம் எல்லாச் சுவிசேஷங்களிலும் வருகிறது. இந்நூலில்மாத்திரம் பேதுருவின் பெயரும், மல்குவின் பெயரும் சொல்லப்படுகின்றன. மற்றச் சுவிசேஷங்கள் பலஸ்தீனாதேசத்தில் முன்னமே எழுதப்பட்டதால் அவைகளில் இவர்களது பெயர் தெரிவிக்காமல் விடப்பட்டுள்ளது.

அவன் பிரதான ஆசாரியனுக்கு வேலைக்காரனென்பது இந் நூலினால்மாத்திரம் தெரியவருகிறது.

11. ஆத்ம வியாகுலத்தின் பாத்திரத்தைப்பற்றிப் பேசினதைக் காண்க. மத் 26[39].

### 18[12-27]. யூதர் பகையின் நிறைவேறுதல்.

12 அப்பொழுது போர்ச்சேவகரும், ஆயிரம் போர்ச்சே
வகருக்குத் தலைவனும், யூதருடைய ஊழியக்காரரும்
13 இயேசுவைப் பிடித்து, அவரைக் கட்டி,— முதலாவது

அவனை அன்னா என்பவனிடத்திற்குக் கொண்டுபோ
னார்கள்; அவன் அந்த வருஷத்துப் பிரதான ஆசாரிய
14 னாகிய காய்பாவுக்கு மாமனாயிருந்தான்.—ஜனங்களுக்
காக ஒரே மனுஷன் சாகிறது நலமாயிருக்குமென்று
யூதருக்கு ஆலோசனை சொன்னவன் இந்தக் காய்பாவே.
15 சீமோன்பேதுருவும் வேறொரு சீஷனும் இயேசுவுக்
குப் பின்சென்றார்கள். அந்தச் சீஷன் பிரதான ஆசா
ரியனுக்கு அறிமுகமானவனாயிருந்ததினால், இயேசுவு
டனேகூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள்
16 பிரவேசித்தான்.—பேதுரு வாசலருகே வெளியே நின்
றான். அப்பொழுது பிரதான ஆசாரியனுக்கு அறிமுக
மானவனாயிருந்த மற்றச் சீஷன் வெளியே வந்து, வாசல்
காக்கிறவர்களுடனே பேசி, பேதுருவை உள்ளே
17 அழைத்துக்கொண்டுபோனான்.—அப்பொழுது வாசல்
காக்கிற வேலைக்காரி பேதுருவை நோக்கி: நீயும் அந்த
மனுஷனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றாள்.
18 அவன்: நான் அல்ல என்றான்.—குளிர்காலமானபடியி
னாலே ஊழியக்காரரும் சேவகரும் கரிநெருப்புண்
டாக்கி, நின்று, குளிர்காய்ந்துகொண்டிருந்தார்கள்;
அவர்களுடனேகூடப் பேதுருவும் நின்று குளிர்காய்ந்
துகொண்டிருந்தான்.
19 பிரதான ஆசாரியன் இயேசுவினிடத்தில் அவரு
டைய சீஷரைக்குறித்தும் போதகத்தைக்குறித்தும் விசா
20 ரித்தான்.—இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான்
வெளியரங்கமாய் உலகத்துடனே பேசினேன்; ஜெப
ஆலயங்களிலேயும் யூதர்களெல்லாரும் கூடிவருகிற தே
வாலயத்திலேயும் எப்பொழுதும் உபதேசித்தேன்; அந்த
21 ரங்கத்திலே நான் ஒன்றும் பேசவில்லை.— நீர் என்னி
டத்தில் விசாரிக்கவேண்டியதென்ன? நான் சொன்ன
வைகளைக் கேட்டவர்களிடத்தில் விசாரியும்; நான் பே
சினவைகளை அவர்கள் அறிந்திருக்கிறார்களே என்றார்.
22 இப்படி அவர் சொன்னபொழுது, சமீபத்தில் நின்ற
சேவகரில் ஒருவன்: பிரதான ஆசாரியனுக்கு இப்படியா
உத்தரவு சொல்லுகிறது என்று, இயேசுவை ஒரு அறை
23 அறைந்தான்.—இயேசு அவனை நோக்கி: நான் தகாத
விதமாய்ப் பேசினதுண்டானால், தகாததை யொப்புவி;
நான் தகுதியாய்ப் பேசினேனேயாகில், என்னை என்
24 அடிக்கிறாய் என்றார்.—பின்பு அன்னா என்பவன் பிர



தான ஆசாரியனாகிய காய்பாவினிடத்திற்கு அவரைக்
கட்டுண்டவராக அனுப்பினான்.
25 சீமோன்பேதுரு நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்
தான்; அப்பொழுது சிலர் அவனை நோக்கி: நீயும்
அவனுடைய சீஷரில் ஒருவனல்லவா என்றார்கள்.
26 அவன்: நான் அல்ல என்று மறுதலித்தான்.—பிரதான
ஆசாரியனுடைய வேலைக்காரரில் பேதுரு காதறவெட்
டினவனுக்கு இனத்தானாகிய ஒருவன் அவனை நோக்கி:
நான் உன்னை அவனுடனேகூடத் தோட்டத்திலே காண
27 வில்லையா என்றான்.— அப்பொழுது பேதுரு மறுபடி
யும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று.

### (2) ஆசாரியர் செய்த விசாரணை. 18[12-27].

அன்னா செய்த விசாரணைமாத்திரம் இந்நூலில் எழுதியுள்ளது. யூத சங்கத்துக்கு முன்பாக நடந்த விசாரணை மற்றச் சுவிசேஷங்களிலிருந்ததால் நம்மாசிரியன் எழுதிலன். அன்னா கி. பி. 7–14 பிரதான ஆசாரியனா யிருந்தலாலும் யூதர்களில் மிக்க அதிகாரமுடையவனாதலாலும் முதலாவது அவனிடத்தில் இயேசுவைக் கொண்டுபோனார்கள்.

14. காய்பா கி. பி. 18–36 பிரதான ஆசாரியனானான்.

15. **வேறொரு சீஷனும்** — இவன் யோவானாகிய நூலாசிரியனென்று அனுமானிக்கலாம். அவன் பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமானவனைப்பற்றி 57–ம் பக்கம் காண்க.

இந்தச் சம்பவம் அன்னாவின் வீட்டிலோ, காய்பாவின் வீட்டிலோ நடந்ததென்று இந்நூலில் நிஜமாய்க் காணப்படுகிறதில்லை. திரியனுபந்த சுவிசேஷங்களில் காய்பாவின் அரமனைக்குள் நடந்ததென்று சொல்லியிருக்கிறது. ஒருவேளை அன்னாவும் பிரதான ஆசாரியனது அரமனைக்குள்ள சில அறைகளில் வசித்திருந்திருக்கலாம்.

17. பேதுரு ஒருவேளை யோவானுடன் பிரவேசித்திருந்திருப்பான். யோவான் அவர்களுக்குத் தெரிந்தவனாதலால் பேதுருவைப் பார்த்து: நீயும் அவனுக்குச் சீஷனோ என்று எதிர்மறை வினாவாய்க் கேட்டாள். ஆகையால் அவன் அல்ல என்று சொல்லுவது எளிது.

19. **பிரதான ஆசாரியன்**—அன்னாவோ, காய்பாவோ என்பது விளங்கவில்லை. 24–ம், 25–ம் வசனத்தில் பிறகு காய்பாவுக்கு முன்

பாகப் போய் விசாரிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது. எனினும் பிரதான ஆசாரியன் என்னும் பெயர் காய்பாவுக்குக் கொடுக்கப்பட்டதேயொழிய அன்னாவுக்குக் கொடுக்கப்படவே இருக்கமட்டாது. காய்பாவும் அன்னாவுக்கு முன் நடந்த விசாரணையிலும் பங்குபெற்றதாக நினைக்க.

24. அன்னாவுக்கு முன்பாக நடந்த விசாரணை திட்டமான விசாரணையல்லாமல் இரகசியமானதாகத் தோன்றுகிறது. அதில் ஆக்கினைக்குட்படுத்தும் குற்றம் ஒன்றும் தோன்றாததால் காய்பா பகிரங்கமாய் விசாரிக்கும்படி அவரை அனுப்பினான்போலிருக்கிறது.

25. பேதுரு மறுதலித்த சம்பவம் 18-ம் வசனத்திற்குத் தொடர்ச்சியாக எழுதியுள்ளதைக் காண்க. இந்தக் கேள்வியும் எதிர்மறை வினாவாம். இயேசுவை அவ்வழியாய் நடத்திக்கொண்டுபோகையில் அவரது முகத்திலோ பேதுருவின் முகத்திலோ எந்தக் குறிப்பையாவது கண்டு கேட்டிருப்பான். ஆகையால் ஒருவனோவென்றெழுதுக.

26. இந்தக் கேள்வி உடன்பாட்டு வினாவாம். இவைகளில் நூலாசிரியனது திட்டமான அறிவைக் காண்க.

### (3) பிலாத்து செய்த விசாரணை. $18^{28}$–$19^{16}$.

யூதர்கள் இரவில் காய்பாவுக்கு முன்பாக இயேசுவை விசாரணை செய்து அவரைக் கொலைசெய்யும்படி தீர்மானஞ்செய்தார்கள். பிறகு சங்கமெல்லாங் கூடி அந்தத் தீர்மானத்தை உறுதிப்படுத்திவிட்டது. அவ்வண்ணம்செய்தவுடனே பிலாத்துவுக்குமுன்பாகக்கொண்டுபோய் அவனும் அந்தத் தீர்மானத்தை உறுதியாக்கும்படி கேட்டார்கள் $18^{28-32}$. பின்பு பிலாத்து அப்படிச் செய்யாமல் இயேசுவைத் தனிமையாய் விசாரித்தான் $18^{33-38}$. அதின்பேரில் பிலாத்து, அவன் குற்றமில்லாதவனென்று தீர்மானித்து அவரை விடுவிக்க உபாயந் தேடினான். யூதர்கள் இதை ஏற்றுக்கொள்ளாமல் அவரைக் கொலை செய்யவேண்டுமென்று ஜனங்களை ஏவினார்கள் $18^{39, 40}$. பிலாத்து ஜனங்களைப் பிரியப்படுத்த இயேசுவை அழைப்பித்து சேவகரது பரிகாசத்துக்கு ஒப்புக்கொடுத்தான் $19^{1-3}$. ஜனங்கள் அவரைப்பற்றிப் பரிதாபமடையும்படி அவரை வெளியே கொண்டுவந்து அவரை விடுவிக்கப் பிரயாசப்பட்டான். இதன்பேரில் பிலாத்து மறுபடியும்



இயேசுவை விசாரித்தான் $19^{8-11}$. வெளியே வந்து மறுபடியும் இயேசுவை விடுவிக்கப் பார்த்தான். அப்போது யூதர்கள் இராஜதுரோகக் குற்றத்தையும் சாற்றிப் பிலாத்துவைப் பயமுறுத்தினார்கள். இதினால் பிலாத்து அவன் குற்றமுள்ளவனென்று தீர்த்து மரணாக்கினை உறுதிப்படுத்தினான் $19^{12-16}$.

காய்பாவுக்கும் சங்கத்திற்குமுன்பாக நடந்ததை திரியனுபந்த சுவிசேஷங்களில் பார்க்க. பிலாத்துவின் விசாரணை இந்நூலில்மாத்திரம் விவரமாய் எழுதப்பெற்றது. யோவான் இதைக் கண்டறிந்தான்போலிருக்கிறது.

### $18^{28-38}$. பிலாத்துவின் பயமும் இயேசுவின் பெருந்தன்மையும்.

28 அவர்கள் காய்பாவினிடத்திலிருந்து இயேசுவைத்
தேசாதிபதியின் அரமனைக்குக் கொண்டுபோனார்கள்;
அப்பொழுது விடியற்காலமாயிருந்தது. தீட்டுப்படா
மல் பஸ்காவைப் புசிக்கத்தக்கதாக, அவர்கள் தேசாதிப
தியின் அரமனைக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.
29 ஆதலால் பிலாத்து அவர்களிடத்தில் வெளியே வந்து:
இந்த மனுஷன்மேல் என்ன குற்றஞ் சாட்டுகிறீர்கள்
30 என்றான். — அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக:
இவன் குற்றவாளியாயிராவிட்டால், இவனை உம்மிடத்
31 தில் ஒப்புக்கொடுக்கமாட்டோம் என்றார்கள். — அப்பொ
ழுது பிலாத்து அவர்களை நோக்கி: இவனை நீங்களே
கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி
நியாயந்தீருங்கள் என்றான். அதற்கு யூதர்கள்: ஒருவ
னையும் மரண ஆக்கினை செய்ய எங்களுக்கு அதிகார
32 மில்லை என்றார்கள். — தாம் இன்னவிதமான மரணமாய்
மரிக்கப்போகிறாரென்பதைக்குறித்து இயேசு குறிப்
பாய்ச் சொல்லியிருந்த வார்த்தை நிறைவேறத்தக்கதாக
இப்படிச் சொன்னார்கள்.
33 அப்பொழுது பிலாத்து மறுபடியும் அரமனைக்குள்
பிரவேசித்து, இயேசுவை அழைத்து: நீ யூதருடைய
34 ராஜாவா என்று கேட்டான். — இயேசு அவனுக்குப்
பிரதியுத்தரமாக: நீராய் இப்படிச் சொல்லுகிறீரோ?
அல்லது மற்றவர்கள் என்னைக்குறித்து இப்படி உமக்
35 குச் சொன்னார்களோ என்றார். — பிலாத்து பிரதியுத்தர
மாக: நான் யூதனா? உன் ஜனங்களும் பிரதான ஆசாரிய

ரும் உம்மை என்னிடத்தில் ஒப்புக்கொடுத்தார்கள்,
நீ என்ன செய்தாய் என்றான்.
36 இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்
திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதா
னால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு
என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படி
யிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்.
37 அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: அப்படியா
னால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக,
"நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்;" சத்தியத்தைக்
குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்கா
கவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும்
என் சத்தம் கேட்கிறான் என்றார்.
38 அதற்குப் பிலாத்து: சத்தியமாவது என்ன என்றான்.

பிரிட்டோரியத்திற்கு வெளியே நடந்தவை. 18²⁸⁻³².

28. **அரண்மனைக்கு**—இது பிரிட்டோரியமென்னும் ரோமான் பிரதிநிதி வசிக்குமிடம்.

**விடியற்காலம்**—மூன்றுமணியிலிருந்து ஆறுமணிவரைக்குமுள்ள நான்காம் ஜாமமென்றறிக.

**பிரவேசியாதிருந்தார்கள்**—புளித்தமாவுள்ள வீட்டில் பிரவேசிப்பதே பஸ்கா சாப்பிடாதபடி தீட்டு செய்ததாக நினைத்தார்கள்.

29. திரளான ஜனங்கள் கூடுமுன்னே இதை முடிக்கவேண்டுமென்று விரும்பி வெளியே போயிருந்தான்போலிருக்கிறது.

30. யூதர்கள் தங்கள் தீர்ப்பைக் காட்டி இதை உடனே நிறைவேற்றத் துணிந்து கேட்டார்கள். சில வருஷங்களுக்குமுன்னே மரணாக்கினை செய்யும் அதிகாரம் அவர்களிடத்திலிருந்து எடுக்கப்பட்டது. அவர்கள் முதலாவது மதசம்பந்தமான குற்றமாத்திரம் காட்டி மரணாக்கினை கேட்டார்கள்.

31. பிலாத்து அதற்குச் செவிகொடாமல் அவர்களைத் தங்கள் மதப்பிரமாணத்தின்படி தீர்க்கச்சொன்னான். அவர்கள் மரணாக்கினையை விரும்பியதால் அதைச் சம்மதிக்காமல் தங்களுக்கிருந்த குறைந்த அதிகாரத்தை வெளியிட்டார்கள்.

32. 21¹⁹. பார்க்க.



பிரிட்டோரியத்திற்குள்ளே நடந்தவை 18³³⁻³⁸.

33. இந்தக் கேள்வியைப் பிலாத்து பரிகாசமாய்க் கேட்டான். இராயருக்கு விரோதமாய் வேறே இராஜாவை வைப்பதுமாத்திரம் அவன் விசாரிக்கவேண்டிய காரியம்; மற்றக்காரியம் அவனுக்குரியதல்ல.

34. பிலாத்து இதைக் கேட்டிருக்கலாம். இராயர் விஷயமாயாவது, மதவிஷயமாயாவது பிலாத்து அக்கேள்வியைத் திட்டமாய் நினைக்கும்படி இயேசு அவனை இன்னொரு கேள்வி கேட்டார்.

35. யூதருடைய ராஜாவென்னும் பெயர்பெற்றவனை யூதர்கள் எப்படி மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்களென்று அறியவில்லை.

36. இயேசு இப்போது தமது இராஜ்யத்தின் சின்மயத்தன்மையைத் தெளிவாய்க் காண்பிக்க விரும்பி முதலாவது அவரது இராஜ்யம் இந்த உலகத்துக்குரியதல்லவென்றும், இரண்டாவது அது சின்மய சத்தியத்திற்குரியதென்றும் இப்புறத்தேசத்து அதிபதிக்குப் போதித்தார்.

37. இதில் அவரது முன்னிருப்பும் தெய்வ நியமிப்பும் காணப்படுகிறது. சத்தியமென்பது இந்நூலாசிரியனுக்குப் பிரியமான வார்த்தை. சத்தியமுள்ளவர் யாவரும் இயேசுவுக்குரியவராவார்களென்பது அவனது கருத்து.

38. **சத்தியமாவது என்ன**—சத்தியமேது என்றெழுதுக. அவன் அலட்சியமாய்க் கேட்டான். இயேசுவின் இராஜ்யம் சத்தியத்திற்குரியதென்றால் அதைப்பற்றி கவலைப்படவேண்டியதில்லை.

## 18³⁹–19¹⁶. பிலாத்துவின் கோழைத்தனமும் யூதரின் பகையும்.

மறுபடியும் அவன் யூதர்களிடத்தில் வெளியே வந்து:
39 நான் அவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன்.—பஸ்கா
பண்டிகையில் நான் உங்களுக்கு ஒருவனை விடுதலை
பண்ணுகிற வழக்கமுண்டே; ஆகையால் யூதருடைய
ராஜாவை நான் உங்களுக்காக விடுதலைபண்ண உங்க
40 ளுக்கு மனதுண்டா என்றான்.—அப்பொழுது: அவர்க
ளெல்லாரும் இவனையல்ல, பரபாசை விடுதலைபண்ண
வேண்டும் என்று மறுபடியும் சத்தமிட்டார்கள்; அந்தப்
பரபாஸ் என்பவன் கள்ளனாயிருந்தான்.

1 அப்பொழுது பிலாத்து இயேசுவைப் பிடித்து
2 வாரினால் அடிப்பித்தான்.—போர்ச்சேவகர் முள்ளு
களினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேல்
வைத்து, சிவப்பான ஒரு அங்கியை அவருக்கு உடுத்தி:—
3 யூதருடைய ராஜாவே, வாழ்க என்று சொல்லி, அவ
ரைக் கையினால் அடித்தார்கள்.
4 பிலாத்து மறுபடியும் வெளியே வந்து: நான் இவனி
டத்தில் ஒரு குற்றமும் காணேன் என்று நீங்கள் அறி
யும்படிக்கு, இதோ, உங்களிடத்தில் இவனை வெளியே
5 கொண்டுவருகிறேன் என்றான்.—இயேசு, முள்முடியும்
சிவப்பங்கியும் தரித்தவராய், வெளியே வந்தார். அப்
பொழுது பிலாத்து அவர்களை நோக்கி: இதோ, இந்த
மனுஷன் என்றான்.
6 பிரதான ஆசாரியரும் சேவகரும் அவரைக் கண்ட
போது: சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும்
என்று சத்தமிட்டார்கள். அதற்குப் பிலாத்து: நீங்களே
இவனைக் கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள்,
நான் இவனிடத்தில் ஒரு குற்றமும் காணேன் என்
7 றான். — யூதர்கள் அவனுக்குப் பிரதியுத்தரமாக: எங்க
ளுக்கு ஒரு நியாயப்பிரமாணமுண்டு, இவன் தன்னை
தேவனுடைய குமாரனென்று சொன்னபடியினால்,
அந்த நியாயப்பிரமாணத்தின்படியே, இவன் சாகவேண்
டும் என்றார்கள்.
8 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது அதி
9 கமாய்ப் பயந்து,—மறுபடியும் அரமனைக்குள்ளே போய்,
இயேசுவை நோக்கி: நீ எங்கேயிருந்து வந்தவன் என்
றான். அதற்கு இயேசு மாறுத்தரம் ஒன்றும் சொல்ல
வில்லை.
10 அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்
லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகா
ரம் உண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு
அதிகாரம் உண்டென்றும் உனக்குத் தெரியாதா என்
11 றான்.—இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக்
கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதி
காரமுமிராது; ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில்
ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.
12 அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகை
தேடினான். யூதர்கள் அவனை நோக்கி: இவனை விடு



தலை பண்ணினால் நீர் ராயனுக்குச் சிநேகிதனல்ல;
தன்னை ராஜாவென்கிறவனெவனோ அவன் ராயனுக்கு
விரோதி என்று சத்தமிட்டார்கள்.
13 பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபொழுது,
இயேசுவை வெளியே அழைத்துவந்து, தளவரிசைப்ப
டுத்தின மேடை என்றும், எபிரெயு பாஷையிலே
கபத்தா என்றும் சொல்லப்பட்ட இடத்திலே, நியாயா
14 சனத்தின்மேல் உட்கார்ந்தான்.—அந்த நாள் பஸ்காவுக்கு
ஆயத்தநாளும், ஏறக்குறைய ஆறுமணி நேரமுமாயிருந்
தது; அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ,
15 உங்கள் ராஜா என்றான்.—அவர்கள்: இவனை அகற்றும்
அகற்றும், சிலுவையில் அறையும் என்று சத்தமிட்டார்
கள். அதற்குப் பிலாத்து: உங்கள் ராஜாவை நான் சிலு
வையில் அறையலாமா என்றான். பிரதான ஆசாரியர்
பிரதியுத்தரமாக: ராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே
16 ராஜா இல்லை என்றார்கள். — அப்பொழுது அவரைச்
சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்
கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக் கொண்
டுபோனார்கள்.

பிரிட்டோரியத்திற்கு வெளியே நடந்தவை. 18³⁹·⁴⁰.

இச்சமயத்தில் ஏரோதுவின் விசாரணைக்கு அவர் அனுப்பப்பட்டாரென்று லூக் $23^{6-12}$ல் தெரியவருகிறது.

39. இந்த வழக்கத்தைப்பற்றி வேறிடத்தில் ஒன்றும் எழுதப்படவில்லை. இயேசு குற்றமில்லாதவரென்றறிந்தும் பிலாத்து அவரைக் குற்றமுள்ளவரென்பதுபோலவே நடத்துகிறான்.

40. பரபாஸ் என்பவன் ராஜதுரோக கலகத்தையும் கொள்ளையாடலையும் எழுப்பிவிட்டான். ஜனங்கள் இதற்குள்ளே திரளாய்க் கூடினார்கள். இவன் ரோமான் இராஜ்யத்தை எதிர்த்துப் போராடினதாலும் பிரதான ஆசாரியனின் தூண்டுதலாலும் ஜனங்கள் இவனையே தெரிந்துகொண்டார்கள்.

பிரிட்டோரியத்திற்குள்ளே நடந்தவை. $19^{1-3}$.

1. இயேசுவை வாரினால் அடித்தால் ஜனங்கள் திருப்தியடைந்து அவரை விடுவதாக நினைத்துப் பிலாத்து இப்படிச் செய்தான். லூக் $23^{14-16}$. பார்க்க.

2. ஏரோதுவின் சேவகர் முதலாவது இயேசுவுக்குப் பரிகாச வேஷம் போட்டது லூக் 23-ல் தெரியவருகிறது. அடித்தபிறகு பிலாத்துவின் சேவகரும் மறுபடியும் அவ்வண்ணஞ் செய்தார்கள். சேவகர் இவ்விதமாய் இயேசுவுக்கு முட்கிரீடத்தையும் ரத்தாம்பர அங்கியையும் அணிந்தது அவரது சின்மய ராஜரீகத்தை யாவருக்கும் விளக்கக்கூடியது.

பிரீட்டோரியத்திற்கு வெளியே நடந்தவை. $19^{4-9}$.

4. பிலாத்து யூதர் மனமுருகும்படியும் அவர்கள் தாங்கள் செய்யும் அநியாயத்தைப்பற்றி வெட்கமடையும்படிக்கும் இந்தப் பரிதாப நிலைமையடைந்த இயேசுவை ஜனங்களுக்குக் காண்பித்தான்.

7. பிலாத்து பரிகாசமாய் யூதர்களே அறையும்படி சொன்னபோது யூதர்கள் தங்கள் நியாயத்தைக் காட்டிப் பிலாத்து அதின்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்கள். இயேசு தன்னைத் தேவகுமாரன் என்று சொன்னதால் அவன் சாகவேண்டும் என்பது யூதர்களது பிரமாணம். முன்னே இந்தக் குற்றத்தைச் சாற்றவில்லை போலிருக்கிறது.

பிரீட்டோரியத்திற்குள்ளே நடந்தவை. $19^{8-11}$.

8. இந்தப் புதுக் காரியம் ரகசியமுள்ளதாய்ப் பிலாத்துவின் மனதுக்குப் பயமுண்டாக்கினது.

9. இப்பேர்ப்பட்ட கேள்வி பிலாத்துவின் அதிகாரத்துக்குரியதல்லாததாலும் அவன் நீதியற்றவனல்லாததாலும் இயேசு பேசாமலிருந்தார்.

11. இயேசு இப்போது தாம் மேலான நியாயாதிபதியாகப் பிலாத்துவையும் மற்றோரையும் நியாயந்தீர்க்கிறார். யூத அதிபதிகளின் பிரதிநிதியாகிய காய்பா என்பவன் யூத மேசியாவை ரோமான் அதிகாரிக்கு ஒப்புக்கொடுத்ததாலும் அவரை நீதியில்லாமல் கொல்ல ஏற்பாடு செய்ததாலும் அவனுக்கே பெரிய குற்றமிருந்ததாகச் சாதித்தார். இப்படி மேலான நியாயந்தீர்க்கிற மாட்சிமையை அவர் சொன்னபோது பிலாத்துக்கு விளங்கினது.



பிரீட்டோரியத்திற்கு வெளியே நடந்தவை. $19^{12-16}$.

12. யூதர்கள் பிலாத்துவின் பிடிவாதத்தைப் பார்த்து இன்னோருபாயம் செய்தார்கள். எப்படியெனில், திபேரியுராயர் அதிக சந்தேகக்காரன், தேசாதிபதிகள் அவர் அதிகாரத்தைக் கவனிக்காத விஷயத்தைப்பற்றி அவனுக்குக் கேள்விவந்தால் அவனிஷ்டத்துடன் கேட்டு லேசாய் அப்பேர்ப்பட்ட தேசாதிபதியை நீக்குவான். இதோடு பிலாத்து அதிக கெட்ட தேசாதிபதியாகித் தனது சொந்த லாபத்தை மிகவும் பாராட்டினான். ஆகையால் யூதர்கள் ராஜதுரோகக் குற்றங் காட்டினவுடனே பிலாத்து அந்த அநியாயத்திற்கு ஒத்துக்கொள்ள நேரிட்டது.

13. **தளவரிசைப்படுத்தின மேடை**—இது கல் தளவரிசையுடைய ஓர் பிராகாரமென்று சொல்லலாம்.

14. **ஆயத்தநாள்** — ஓய்வுநாளுக்கு முந்தினநாளாகிய வெள்ளிக்கிழமை யென்றறிக.

**ஆறுமணி**—அதாவது பன்னிரண்டுமணி மத்தியானம். மாற்கு மூன்றும்மணி யென்றெழுதினான். அது ஒன்பதுமணியாகும். சாதாரணமாய் அத்தேசத்து ஜனங்கள் நாலாம் ஐந்தாம் மணியென்று சொல்லமாட்டார்கள். ஆகையால் மூன்றும்மணிக்கும் ஆறும்மணிக்கும் மத்தியிலுள்ள நேரத்துக்கு இரண்டையுஞ் சொல்லுவது இந்த வித்தியாசத்திற்குக் காரணமென்பார் சிலர்.

15. யூதர்கள் கடைசியாக யேசுவையும், தாங்கள் இதுவரைக்கும் எதிர்பார்த்த மேசியா ராஜாவையும் மனதாரத் தள்ளிப்போட்டார்கள். ஜனங்களும் இதில் சேர்ந்தவர்கள்.

## $19^{17-30}$. பகையின் முடிவும் பெருந்தன்மையின் சிறப்பும்.

17 அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு,
எபிரெயு பாஷையிலே கொல்கொதா என்று சொல்லப்
படும் கபாலஸ்தலம் என்கிற இடத்திற்குப் புறப்பட்டுப்
18 போனார்.—அங்கே அவரைச் சிலுவையில் அறைந்தார்
கள்; அவரோடேகூட வேறிரண்டுபேரை இரண்டு பக்
கங்களிலும் இயேசுவை நடுவிலுமாகச் சிலுவைகளில்
அறைந்தார்கள்.

19. பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி, சிலுவையின்
மேல் போடுவித்தான். அதில் நசரேயனாகிய இயேசு
20 யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது.—இயேசு சிலு
வையில் அறையப்பட்ட இடம் நகரத்திற்குச் சமீபமா
யிருந்தபடியினால், யூதரில் அநேகர் அந்த மேல்விலா
சத்தை வாசித்தார்கள்; அது எபிரெயு கிரேக்கு லத்தீன்
21 பாஷைகளில் எழுதியிருந்தது.— அப்பொழுது யூதரு
டைய பிரதான ஆசாரியர் பிலாத்துவை நோக்கி: யூதரு
டைய ராஜா என்று நீர் எழுதாமல், தான் யூதருடைய
ராஜா என்று அவன் சொன்னதாக எழுதும் என்றார்
22 கள்.—பிலாத்து பிரதியுத்தரமாக: நான் எழுதினது எழு
தினதே என்றான்.
23 போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்த
பின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு
சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலுபங்காக்கினார்கள்;
அங்கியையும் எடுத்தார்கள், அந்த அங்கி தையலில்லா
மல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதா
24 யிருந்தது.—அவர்கள்: இதை நாம் கிழியாமல், யாருக்கு
வருமோ என்று இதைக்குறித்துச் சீட்டுப் போடுவோம்
என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.
என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என்
உடையின்மேல் சீட்டுப்போட்டார்கள் என்கிற வேத
வாக்கியம் நிறைவேறத்தக்கதாகப் போர்ச்சேவகர் இப்ப
டிச் செய்தார்கள்.
25 இயேசுவின் சிலுவையினருகே அவருடைய தாயும்,
அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியா
ளும், மகதலேனா மரியாளும் நின்றுகொண்டிருந்தார்
26 கள்.— அப்பொழுது இயேசு தம்முடைய தாயையும்
அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீஷனையும்
கண்டு, தம்முடைய தாயை நோக்கி: ஸ்திரீயே, அதோ,
27 உன் மகன் என்றார்.—பின்பு அந்தச் சீஷனை நோக்கி:
அதோ, உன் தாய் என்றார். அந்நேரமுதல் அந்தச்
சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்றுக்கொண்டான்.
28 அதன்பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு
அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக: தாகமா
29 யிருக்கிறேன் என்றார்.— காடி நிறைந்த பாத்திரம்
அங்கே வைக்கப்பட்டிருந்தது; அவர்கள் கடற்காளா
னைக் காடியிலே தோய்த்து, ஈசோப்புத்தண்டில் மாட்டி,



30 அவர் வாயினிடத்தில் நீட்டிக் கொடுத்தார்கள்.—இயேசு
காடியை வாங்கினபின்பு, முடிந்தது என்று சொல்லி,
தலையைச் சாய்த்து, ஆவியை ஒப்புக்கொடுத்தார்.

### (4) சிலுவையில் அறைந்த மரணம். $19^{17-37}$.

17. குற்றவாளி தனது சிலுவையைச் சுமந்துபோதல் வழக்கம். இயேசு அதைத் தாங்க முடியாமல் விழுந்ததாகவும் சீமோன் அதற்கு உதவிசெய்ததாகவும் இச்சுவிசேஷத்தில் சொல்லியிருக்கவில்லை.

19. குற்றவாளியை மரணத்திற்குக் கொண்டுபோனபோது அவன் செய்த குற்றம் பலகையில் எழுதிக் கழுத்தில் கட்டிக் காண்பிப்பது வழக்கம். இச்சமயத்தில் பிலாத்துவோ யூதருக்குப் பரிகாசமாக எழுதிவைத்தான்.

20. இது இந்த மூன்று பாஷைகளில் எழுதியுளதால் வாசிக்கக் கூடியவர் யாவரும் வாசிப்பார்கள். கிரேக்குபாஷை சாதாரணமாய் படிப்பாளிகள் பேசுவார்கள்.

21-27. வசனங்களில் பக்கத்தில் நின்றவர்களின் எண்ணங்களைப் பார்க்கிறோம்.

21, 22. பிரதான ஆசாரியனது கோப எண்ணம் தோன்றுகிறது. தனக்கு இப்போது மோசம் நேரிட முடியாததாலே பிலாத்து ஆசாரியர்களுக்குக் கிஞ்சித்தும் இடங்கொடுக்கமாட்டான்.

23, 24. சேவகர் கவலையில்லாமல் இயேசுவின் வஸ்திரங்களைப் பகுத்து வாங்கினார்கள். இதுவும் வழக்கமே.

அங்கி — பஞ்சு, பட்டு, சணல் முதலியவைகளால் செய்யப்பட்டுச் சிறு சட்டைக்குமேலே போட்டுக்கொள்ளப்பட்டது. அது கால்வரைக்கும் நீளமுள்ளதாய் நடுவில் கச்சையால் கட்டப்பட்டது.

25-27. இயேசுவின் உறவினர்—இவர்கள் சிலுவைக்குச் சமீபமாய் நின்றார்கள்போலிருக்கிறது. மற்ற சில ஸ்திரீகள் தூரத்தில் நின்றார்களென்பதாகத் தோன்றுகிறது. இவர்கள் மூவரென்பதைப்பற்றிக் கொஞ்சஞ் சந்தேகமுண்டு. சிலர் இயேசுவினுடைய தாயின் சகோதரியும் கிலெயோப்பா மரியாளும் ஒருத்தியென்றும், சிலர் இருவரென்றும் சொல்வார். இருவரானால் தாயின் சகோதரி சலோமி என்பவளாவாள். மாற்கு சுவிசேஷத்தில் சலோமி சிலுவை பக்கத்

தில் இருந்ததாகச் சொல்லியிருக்கிறு மாற் $15^{40}$. பெரும்பான்மை யோர் இவ்வண்ணஞ் சொல்லுவார்.

26. ஸ்திரீயே — தமக்கு உலக ம்பந்தங்கள் கழிந்ததாக இவ் வார்த்தையால் விளங்குகிறது. எனினும், இயேசு தம்முடைய தாயா ரைப்பற்றி இன்னும் கவலைப்படுதலைக் காண்க.

இந்த அதிகாரத்தில் நான்கு வியப்புச் சுட்டுச் சொற்கள் வரு கின்றன. இதோ மனிதனே என்பதும் (5), இதோ உங்கள் ராஜா என்பதும் (14), அதோ உன் மகன் என்பதும் (26), அதோ உன் தாய் என்பதும் (27) இவைகளைக் கவனித்துப்பார்த்தால் இயேசு வின் மனவியல்பு சிறப்பாய் விளங்கும்.

27. யோவான் ஒருவேளை உடனே அவளைக் கூட்டிக்கொண்டு போய்ப் பிறகு தனிமையாய்த் திரும்பி வந்திருப்பான்.

28. இந்நூலாசிரியன் எப்போதும் முன்னறிவித்தலைக் காண் பிக்கிறான். யூதர்களில் பெரும்பான்மையோர் மேசியாவைக்குறித்த வார்த்தைகள் என்று சொல்லப்பட்டவைகளையே எடுத்துக் கூறி னான். இவைகளுடன் ஆதிக்கிறிஸ்தவர்கள் இன்னும் சில வார்த் தைகளை இவருக்குரியனவாக எண்ணினார்கள்.

29. ஈசோப்பு—இது ஒரு செடியின் புல் என்பார் சிலர். இந் தச் செடியின் தாள் மூன்று நாலு அடியுள்ளது. சேவகர் முன்னே பரிகாசமாகக் காடியைக் குடிக்கக் கொடுத்தபோதிலும் ($19^{23-36}$.) இப்போது இரக்கத்தினாலேயே ஈசோப்பைக் கொடுக்கிறார்கள்.

30. தலையைச் சாய்த்து — லூக்கா எழுதி குறிக்கின்ற கடைசி வாக்கியங்களை இச்சமயத்தில் சொல்லியிருப்பார். லூக் $23^{46}$.

ஒப்புக்கொடுத்தார்—இலவசமாய் ஜீவனை விட்டாரென்பதைக் காண்க.

## $19^{31-42}$. அன்பிற்கேற்ற கடைசிக் கிரியைகள்.

31 அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்
தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைக
ளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில்
போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்ப
டிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு
32 கேட்டுக்கொண்டார்கள். — அந்தப்படி போர்ச்சேவகர்



வந்து, அவருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்ட
முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய
33 காலெலும்புகளையும் முறித்தார்கள்.—அவர்கள் இயேசுவி
னிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு,
34 அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.—ஆகிலும்
போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய
விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும்
புறப்பட்டது.
35 அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனு
டைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்
கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன்
36 அறிந்திருக்கிறான். — அவருடைய எலும்புகளில் ஒன்
றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறை
37 வேறும்படி இவைகள் நடந்தது.—அல்லாமலும் தாங்கள்
குத்தினவரை நோக்கிப் பார்ப்பார்கள் என்று வேறொரு
வேதவாக்கியம் சொல்லுகிறது.
38 இவைகளுக்குப் பின்பு அரிமத்தியா ஊரானும், யூத
ருக்குப் பயந்ததினால் இயேசுவுக்கு அந்தரங்க சீஷனு
மாகிய யோசேப்பு இயேசுவின் சரீரத்தை எடுத்துக்
கொண்டு போகும்படி பிலாத்துவினிடத்தில் உத்தரவு
கேட்டான்; பிலாத்து உத்தரவு கொடுத்தான். ஆகை
யால் அவன் வந்து, இயேசுவின் சரீரத்தை எடுத்துக்
39 கொண்டுபோனான்.—ஆரம்பத்திலே ஒரு இராத்திரியில்
இயேசுவினிடத்தில் வந்திருந்த நிக்கொதேமு என்ப
வன், வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து
40 ஏறக்குறைய நூறு இராத்தல் கொண்டுவந்தான்.—அவர்
கள் இயேசுவின் சரீரத்தை எடுத்து, யூதர்கள் அடக்கம்
பண்ணும் முறைமையின்படியே அதைச் சுகந்தவர்க்
கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டினார்கள்.
41 அவர் சிலுவையில் அறையப்பட்ட இடத்தில் ஒரு
தோட்டமும், அந்தத் தோட்டத்தில் ஒருக்காலும் ஒருவ
னும் வைக்கப்பட்டிராத ஒரு புதிய கல்லறையும் இருந்
42 தது.—யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும், அந்தக்
கல்லறை சமீபமாயிருந்தபடியினாலும், அவ்விடத்திலே
இயேசுவை வைத்தார்கள்.

31. பெரிய ஓய்வுநாள்—பஸ்காபண்டிகையின் ஓய்வுநாளாத லாலும் பஸ்காபண்டிகையின் முதல்நாளாதலாலும் அது விசே ஷித்த நாளாயிற்று.

34. இரத்தமும் தண்ணீரும்—ஏன் இவ்விதமாய் வந்ததென்று சொல்லமுடியாது. 35–ல் நூலாசிரியன் தனது சாட்சியைக் கண்டவனது சாட்சி என்று உறுதியாய் எழுதியிருக்கிறான். இதிலிருந்து இயேசுவின் சரீரம் உண்மையான சரீரமென்பதும், அதோடு அது அதிசய மரணமடைந்ததென்பதும் தோற்றப்படுகிறது. யோவானிதை முன்னறிவித்தலின் நிறைவேறுதலாய் எண்ணிக்கொள்ளுகிறான். தண்ணீரும் ரத்தமும் கலந்து வந்ததற்கு இயற்கையான காரணமுண்டோ இல்லையோ என்பதைப்பற்றித் தற்காலத்தில் சொல்லலாகாது. இதைப்பற்றி அதிக தர்க்கமுண்டு. நூலாசிரியன் எடுத்த வேத வாக்கியங்களை யாத் $12^{46}$ சங் $34^{30}$ சகரி $12^{10}$. காண்க. முந்தின வார்த்தைகள் பஸ்கா ஆட்டைக் குறித்தன.

(5) இயேசுவை அடக்கஞ்செய்தல். $19^{38-42}$.

38. யோசேப்பு—அவன் தனவான், யூத சங்கத்தாரில் ஒருவன், கடவுளின் ராஜ்யத்தை எதிர்பார்த்தவன், பக்தியுள்ளவன். மத் $27^{57}$ மாற் $15^{43}$ லூக் $23^{51}$. பார்க்க. மாற் $15^{43}$–ல் அவன் முன்னே அந்தரங்க சீஷனுகலைக்குறித்துத் தைரியமாய்க் கேட்டதாகச் சொல்லியிருக்கிறது.

39. நிக்கொதேமுவும் யோசேப்பினால் தைரியம்பெற்றுத் தன் பயங்களைத் துறந்துவந்தான்.

நூறு இராத்தல்—இது பிரேதத்தை மூடிக் கல்லறையையும் நிரப்பப் போதுமாகும். இதற்கு அதிகச் செலவுண்டாயிருக்கும்.

41. கல்லறை யோசேப்பினுடையதாக மத் $27^{60}$–ல் வெளிப்படுகிறது.

42. ஆயத்தம்—பஸ்காபண்டிகை அனுசரிப்பதற்கு ஆயத்தம்பண்ணவேண்டும்; அன்று மாலை பஸ்காபண்டிகை கொண்டாடும் நாள் துவக்கினது.

## V. இயேசு உயிரோடெழுந்து நமது முந்திய வெளிப்படுத்துதல்களை உறுதிப்படுத்தல்: $20^{1}$–$21^{22}$.

இப்போது இயேசு முன்னே தம் சீஷர்களுக்கு அறிவித்த ஜெயம் அவர் உயிர்த்தெழுதலில் பூரணப்பட்டது. இயேசு மரணத்தில் பெற்ற ஜெயம் அவரது உயிர்த்தெழுதலால் விளங்கிற்று. ஆகையால் யோவான் முதலாவது உயிர்த்தெழுதல் உண்மையாய் நடந்ததென்றும், இரண்டாவது அதனால் சீஷருக்குண்டான பயனின்னதென்றும் காண்பித்திருக்கிறான். இயேசு சீஷருக்குக் கொடுத்த தரிசனங்களும் அவைகளில் விளங்கின சத்தியங்களும் இந்த இரண்டு கடைசி அதிகாரங்களில் எழுதியிருக்கின்றன. சீஷர்களுக்குண்டான விசுவாசத்தின் வளர்ச்சியைப் பார்க்கிறோம்.



### $20^{1-10}$. வியப்புக்குரிய உயிர்த்தெழுதல்.

1 வாரத்தின் முதல்நாள் காலையில், அதிக இருட்
டோடே, மகதலேனா மரியாள் கல்லறையினிடத்திற்கு
வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப்போட்
2 டிருக்கக் கண்டாள்,—உடனே அவள் ஓடி, சீமோன்
பேதுருவினிடத்திலும் இயேசுவுக்கு அன்பாயிருந்த
மற்றச் சீஷனிடத்திலும் போய்: கர்த்தரைக் கல்லறையி
லிருந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள், அவரை
வைத்த இடம் எங்களுக்குத் தெரியவில்லை என்றாள்.
3 அப்பொழுது பேதுருவும் மற்றச் சீஷனும் கல்லறை
யினிடத்திற்குப் போகும்படி புறப்பட்டு, இருவரும் ஒரு
4 மித்து ஓடினார்கள்.—பேதுருவைப்பார்க்கிலும் மற்றச்
சீஷன் துரிதமாய் ஓடி, முந்திக் கல்லறையினிடத்தில்
5 வந்து,—அதற்குள்ளே குனிந்துபார்த்து, சீலைகள் கிடக்
கிறதைக் கண்டான்; ஆனாலும் அவன் உள்ளே போக
6 வில்லை.–சீமோன்பேதுரு அவனுக்குப் பின்னே வந்து,
7 கல்லறைக்குள்ளே பிரவேசித்து, — சீலைகள் கிடக்கிற
தையும், அவருடைய தலையில் சுற்றியிருந்த சீலை மற்றச்
சீலைகளுடனே வைத்திராமல் தனியே ஒரு இடத்திலே
8 சுருட்டி வைத்திருக்கிறதையும் கண்டான்.—முந்திக் கல்
லறையினிடத்திற்கு வந்த மற்றச் சீஷனும் அப்பொழுது
9 உள்ளே பிரவேசித்து, கண்டு விசுவாசித்தான்.— அவர்
மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவேண்டும் என்கிற வே
தவாக்கியத்தை அவர்கள் இன்னும் அறியாதிருந்தார்
10 கள்.—பின்பு அந்தச் சீஷர்கள் தங்களுடைய இடத்திற்
குத் திரும்பிப்போனார்கள்.

(1) உயிர்த்தெழுந்ததைக்குறித்த செய்தி. $20^{1-10}$.

1. பெண்கள் சுகந்தவர்க்கங்கொண்டு விடியற்காலத்தில் வந்ததாகத் திரியனுபந்த சுவிசேஷங்களில் வாசிக்கிறோம். கல் பெயர்க்கப்பட்டதைப்பற்றி மாற்கு சுவிசேஷத்திலும் சொல்லியிருக்கிறது.

2. சீமோன்பேதுரு முதன்மையான சீஷனாக எண்ணப்பட்டானென்றறிக. இந்தச் சுவிசேஷம் பேதுருவின் முதன்மையை மறுத்து அவனைத் தாழ்த்துகிறதென்று சிலர் சொல்வதை இதினால் மறுக்க.

**எங்களுக்கு** — இதினால் மற்றப் பெண்களும் அவளுடன் கல்லறைக்குப் போனதாகத் தெரியவருகிறது.

3. பேதுரு முந்திப் போனதாகக் கவனிக்க. இருவர் கூடி ஓட ஆரம்பித்தார்கள். யோவான் பேதுருவைவிட வாலிபனானதலால் முந்தி ஓடினான்.

5. யோவான் பயபக்தியுடையவனானதலால் உள்ளே பிரவேசிக்கவில்லை.

7. பேதுரு வந்து சரேலென்று பார்த்துப் போனான். பேதுரு உள்ளே புகுந்து எல்லாஞ் சுற்றிப்பார்த்துப் பலகாரியங்களைக் கவனித்தான. இவைகளைக் கண்டவன் இதை எழுதினானென்பது இச்சரித்திரத்திலிருந்து தோன்றுகிறது. துணிகளெல்லாம் வைக்கப்பட்டிருந்த மாதிரியைத் திட்டமாய்க் காட்டுகிறான்.

8. பிறகு யோவானும் பிரவேசித்துச் சகலத்தையும் கவனித்துக் கண்டறிந்தான். கண்டு அதன் அர்த்தம் அறிந்தான் என்று தாம் எழுதியிருக்கிற வார்த்தைகளால் அனுமானிக்கலாம். பேதுருவுக்கு விசுவாசம் உண்டாகும்படி தரிசனம் வேண்டியதாயிற்று. யோவான் விசேஷித்த தரிசனமின்றி விசுவாசித்தானென்று இந்த வசனத்தாலறியலாம். துணிகளெல்லாம் கழற்றிப் பத்திரமாய் வைக்கப்பட்டது. பகைவராவது சிநேகிதராவது அந்தப் பிரேதத்தைக் கொண்டுபோகவில்லை யென்பதற்கு இது போதுமான சாட்சி.

9. சீஷர்கள் உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கவில்லையென்று இதினாலறிக. அது அவர்களுக்கும் அதிசயமாம்.

## $20^{11-18}$. பேரன்புடையாட்குக் கொடுக்கப்பட்ட முதலாந் தரிசனம்.

11 மரியாள் கல்லறையினருகே வெளியே நின்று அழு
துகொண்டிருந்தாள்; அப்படி அழுதுகொண்டிருக்கை
யில் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து,—
12 இயேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே
வெள்ளுடை தரித்தவர்களாய் இரண்டு தூதர்கள், தலை



மாட்டில் ஒருவனும் கால்மாட்டில் ஒருவனுமாக, உட்
13 கார்ந்திருக்கிறதைக் கண்டாள். — அவர்கள் அவளை
நோக்கி: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அத
ற்கு அவள்: என் ஆண்டவரை எடுத்துக்கொண்டு போய்
விட்டார்கள், அவரை வைத்த இடம் எனக்குத் தெரிய
14 வில்லை என்றாள்.—இவைகளைச் சொல்லிப் பின்னாகத்
திரும்பி, இயேசு நிற்கிறதைக் கண்டாள்; ஆனாலும்
அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்.
15 இயேசு அவளைப் பார்த்து: ஸ்திரீயே, ஏன் அழுகி
றாய், யாரைத் தேடுகிறாய் என்றார். அவள், அவரைத்
தோட்டக்காரனென்று எண்ணி: ஐயா, நீர் அவரை
எடுத்துக்கொண்டு போனதுண்டானால், அவரை வைத்த
இடத்தை எனக்குச் சொல்லும், நான் போய் அவரை
16 எடுத்துக்கொள்ளுவேன் என்றாள். — இயேசு அவளை
நோக்கி: மரியாளே என்றார். அவள் திரும்பிப்பார்த்து:
ரபூனி என்றாள்; அதற்குப் போதகரே என்று அர்த்த
17 மாம்.—இயேசு அவளை நோக்கி: என்னைத் தொடாதே,
நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போக
வில்லை; நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான்
என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும்,
என் தேவனிடத்திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும்
ஏறிப்போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு என்
றார்.
18 மகதலேனா மரியாள் போய், தான் கர்த்தரைக் கண்
டதையும், அவர் தன்னுடனே சொன்னவைகளையும்
சீஷருக்கு அறிவித்தாள்.

### (2) மரியாள் கண்ட முதல் தரிசனம். $20^{11-18}$.

இயேசு மரியாளுக்கு முதலாம் தரிசனத்தைக் கொடுத்தார். இது கட்டுக்கதையானால் தாயாவது பிரதான சீஷர்களில் ஒருவனாவது முதல் தரிசனம் பார்த்ததாகச் சொல்லியிருக்கும்.

11. மரியாள் இரண்டு சீஷர்களுக்கு அறிவித்து பின்பு கல்லறைக்குத் திரும்பி வந்தாள்.

13. **என் ஆண்டவரை** — இயேசு தனக்கே ஆண்டவராக எண்ணிக்கொள்ளுதலைக் கவனிக்க.

14. மரியாள், இயேசு உயிரோடிருப்பாரென்று எதிர்பாராததாலும் அவரது ரூபம் மாறினதாலும் அவரை அறியவில்லை.

16. இயேசு இப்போது அவள் பேர்சொல்லி அவளைக் கூப்பிட்டார். அந்த வார்த்தையில் அவரது அன்பும் அனுதாபமும் அறிவும் விளங்கி மனக்கவர்ச்சி யுண்டாயிருந்தது. அவளது குருட்டு விசனம் நீங்கி இயேசு முன்னே இருந்தபிரகாரமாய் அவரை மனதில் நினைவுகூர்ந்து தெளிவடைந்து அவள் திரும்பி உற்றுப்பார்த்து அவரின்னாரென்று நன்கறிந்துகொண்டாள்.

17. மரியாள் இயேசுவின் பாதங்களைத் தொட்டு முன்போலவே இயேசு திரும்பிவந்ததாக எண்ணி, மறுபடியும் அவரோடு சரீரத்திற்குரிய சகவாசம் பெறலாமென்று நினைத்ததால் இயேசு அந்த எண்ணத்தை நிறுத்தி இப்போது முந்தின சகவாசமிருக்கக்கூடாது. நான் பரத்திற்கேறினபிறகு புதியவிதமான சகவாசம் என் சீஷர் யாவருக்கு மிருக்குமென்று தெரிவிக்க இயேசு இப்படிச் சொன்னார்.

இயேசு தஞ் சீஷர்களைச் சகோதரர்களாக எண்ணினதையும் தந்தையுடன் தமக்குள்ள சம்பந்தத்திற்கும் அவர்களுக்குள்ள சம்பந்தத்திற்கும் வித்தியாசமுள்ளதையும் இயேசுவின் வார்த்தைகளாலறிக.

### $20^{19-29}$. சீஷர்கள் தரிசனங்களைக் கண்டு உறுதியான விசுவாசம் அடைதல்.

19 வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்
காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில்,
யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கை
யில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமா
20 தானம் என்றார்.—அவர் இப்படிச் சொல்லித் தம்மு
டைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்
பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்
டார்கள்.
21 இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச்
சமாதானமுண்டாவதாக; பிதா என்னை அனுப்பினது
போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்
22 லி,—அவர்கள்மேல் ஊதி: பரிசுத்தஆவியைப் பெற்றுக்
23 கொள்ளுங்கள்;—எவர்களுடைய பாவங்களை மன்னிக்
கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும்,
எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ
அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்
றார்.



24 இயேசு வந்திருந்தபோது பன்னிருவரில் ஒருவனா
கிய திதிமு என்னப்பட்ட தோமா என்பவன் அவர்
25 களுடனேகூட இருக்கவில்லை.—மற்றச் சீஷர்கள்: கர்த்
தரைக் கண்டோம் என்று அவனுடனே சொன்னார்கள்.
அதற்கு அவன்: அவருடைய கைகளில் ஆணிகளினா
லுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே
என் விரலை இட்டு, என் கையை அவருடைய விலா
விலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்
றான்.
26 மறுபடியும் எட்டுநாளைக்குப்பின்பு அவருடைய
சீஷர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள்; தோமாவும்
அவர்களுடனேகூட இருந்தான்; கதவுகள் பூட்டப்பட்
டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று:
27 உங்களுக்குச் சமாதானம் என்றார்.—பின்பு அவர் தோ
மாவை நோக்கி: நீ உன் விரலை இங்கே நீட்டி, என்
கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே
போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்
28 றார்.—தோமா அவருக்குப் பிரதியுத்தரமாக: என் ஆண்
29 டவரே! என் தேவனே! என்றான்.—அதற்கு இயேசு:
தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசித்தாய்,
காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்
என்றார்.

### (3) சீஷர்கள் கண்ட இரண்டு தரிசனங்கள். $20^{19-29}$.

இதில் இரண்டு தரிசனங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. எப்போதும்போல நூலாசிரியன் சீஷர்கள் கொண்ட எண்ணங்களைத் தெளிவாய்க் காண்பிக்கிறான்.

19. **அன்றையத்தினம்**—எம்மாவிலிருந்து அந்த இரண்டு சீஷர்கள் திரும்பி வந்தபிறகு இந்தத் தரிசனம் நடந்தது. லூக் $24^{36}$. பார்க்க.

**கதவுகள் பூட்டியிருக்கையில்**—இது இந்தச் சுவிசேஷத்தில்மாத்திரம் சொல்லப்பட்டது. இயேசுவின் சரீரம் சூட்சம ரூபமானதென்று இதினால் தோன்றுகிறது. அது எத்தன்மையுள்ளதென்று நாம் திட்டமாய்ச் சொல்ல முடியாது.

**சமாதானம்**—சலாம் என்பது. இந்தச் சமயத்தில் சீஷர்களது மனம் மிகவும் கலக்கமுற்றிருந்தது. இயேசு அவர்களுக்குச் சமாதானமருளி அவர்கள் மனம் அமரும்படி இந்த வார்த்தையைப் பேசினார்.

20. சிலுவையில் அறையப்பட்ட இயேசு தாமேயென்று அவர்களறியும்படி அவர் தமது விலாவையும் கைகளையுங் காண்பித்தார். இந்த அறிகுறிகள் எப்போதுமிருந்ததென்று தோன்றுகிறதில்லை. அவர்களுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்திசெய்யக் காணப்பட்டனபோலிருக்கிறது. அவரிப்போதடைந்த சரீரம் சூட்சமரூபத்தை யுடையதென்று சுவிசேஷ சரித்திரத்தினால் வெளிப்படுகிறது.

21. இயேசு எப்படித் தந்தையைச் சார்ந்து தமது நியமகத்தை நிறைவேற்றவேண்டியதோ அவ்வாறே அவருடைய சீஷர்களும் அவர் மூலமாகவே தங்களுக்கு நியமிக்கப்பட்ட காரியத்தை நிறைவேற்றவேண்டும். அதோடு இயேசுவின் வேலை இன்னும் முடியவில்லை யென்பதும் அவருடைய சீஷர் அதை யெடுத்து முடிக்கவேண்டுமென்பதும் புலப்படுகிறது.

22. ஊதி—கடவுள் இவ்வுலகத்தில் உயிரை உண்டாக்கினவிதமாக இயேசு சின்மய உயிரை அவருடைய சீஷர்களுக்கருளினார். ஆதி 2[7]. பார்க்க. இரண்டிலும் அதேவார்த்தை வருகிறது.

**பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்**—இயேசு அச்சாரமாகத் தமது ஆவியை சீஷர்களுக்குக் கொடுக்கிறார். பரிசுத்தாவியின் வல்லமை பின்னாளில் அவர்களுக்குப் பூரணமாய்க் கிடைக்கும். உடனே அவர்கள் புதிய ஜீவியத்தின் தன்மையைப் பெறவேண்டுமென்று அவர், அவர்களுக்கு இந்தப் புதிய ஆவியை யூற்றினார். பெந்தெகொஸ்தே வருமுன்னே அவர்களுக்குள் இந்தப் புதிய ஜீவனிருந்ததாக அவர்களது சந்தோஷத்திலும் ஜெபத்திலும் சபை ஒழுங்கிலும் தோன்றப்பட்டது. இச்சமயத்தில் அச்சாரமாகவும் பெந்தெகொஸ்தே நாளுக்கு ஆயத்தமாகவும் இயேசு அந்த ஆவியை அவர்களுக்குக் கொடுத்தார். அதை அந்நாளில்தான் பூரணமாய்ப் பெற்றார்கள்.

23. அவர்களுக்கு இந்தப் புதிய ஆவி கிடைத்ததால் அந்த ஆவியின் வல்லமையாலும் ஞானத்தாலும் அவர்கள் புதிய அதிகாரங்களையும் செலுத்துவார்கள். இந்த அதிகாரங்கள் விசேஷித்தவர்களுக்கில்லாமல் கிறிஸ்துவின் ஆவியால் அவரது வேலையை இயற்றும் கிறிஸ்துவின் பொதுச்சபைக்குரியனவாகத் தெரியவருகிறது. இந்த வார்த்தைகளின் அர்த்தம் யாதெனில், என்னுடைய சபையாகிய உங்



களுக்கும் எப்போதுமிருக்கும் என் உண்மையான சபைக்கும் பாவமன்னிப்பின் ஊழியம் அருளப்பட்டது. ஒருவன் தனக்கருளப்பெற்ற இந்தச் சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டால் அவனது பாவங்கள் அப்போதே மன்னிக்கப்பட்டிருக்கின்றன. ஒருவன் அந்தச் சுவிசேஷத்தைத் தள்ளினால் அவனது பாவங்கள் நிலைத்திருக்கின்றன. பரிசுத்தாவியின் மூலமாய்ப் பாவமன்னிப்பின் போதனையை மற்றோர் மனச்சாட்சிகளுக்கு வெளிப்படுத்திக் காட்டுவது சபையின் வேலையாம்.

25. தோமா கண்சாட்சியுடன் கையினால் தொடும் சாட்சியையும் கேட்கிறான். அவன் எவ்வளவு மனவியாகுலத்துடன் இயேசுவின் காயங்களைத் தியானித்துக்கொண்டானென்பதை அறிக.

26. இயேசு ஞாயிற்றுக்கிழமையில் மறுபடியும் தரிசனங்கொடுத்ததைக் காண்க. அதற்கிடையில் சீஷர்கள் என்ன செய்தார்களோ அதை அறியோம். ஞாயிற்றுக்கிழமை முன்போலவே மறுபடியும் கூடினார்களென்பது திண்ணம். இவ்விதமாய் அவர்கள் உடனே அந்த விசேஷித்தநாளைக் கொண்டாட ஆரம்பித்தார்களென்று தெரிகிறது.

28. தோமா தான் முன்னே சொன்னபிரகாரம் செய்யாமல் கையினால் தொடும் சாட்சியின்றி பூரணமாயும் சிறந்தவிதமாயும் நம்பிக்கையையடைந்தான். அவன் விசுவாசத்தின் மலையுச்சியில் ஏறி இயேசுவை அவனுடைய ஆண்டவராகவும் கடவுளாகவும் ஒப்புக்கொண்டதைக் காண்க. இந்த வார்த்தையே இந்நூலின் உயர்ந்த சிகரம். சீஷர்கள் கொண்ட விசுவாசம் இதுவரைக்குங் கொஞ்சங்கொஞ்சமாக வளர்ந்தேறிவந்ததைக் கண்டோம். இப்போது இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த வெளிப்படுத்தல் தெளிவாயும் பூரணமாயுமிருக்கிறது.

29. இயேசு தோமாவின் விசுவாசத்தைச் சந்தோஷித்து ஏற்றுக்கொண்டார். அதோடு இன்னும் அதிலும் பெரிய விசுவாசமொன்றைக் காண்பித்தார். யாதெனில் கண்சாட்சியின்றி பிற்காலங்களில் தம்மை விசுவாசிப்போர் பெற்றுக்கொள்ளும் விசுவாசமே.

## VI. முடிவுரை. $20^{30}$–$21^{25}$.

ஆசிரியன் முதலாவது எழுதினது இருபதாம் அதிகாரத்தோடு முடிந்ததென்று தோன்றுகிறது. அது சீஷர்கள் பூரணமான விசு

வாசத்தையடைந்த சரித்திரத்துடன் முடிவுபெற்றது. பிறகு தான் 21-ம் அதிகாரத்தைச் சேர்த் தெழுதியுள்ளான். ஒருவேளை தன் மரணத்தைப்பற்றிச் சபைகளிலுண்டான பேச்சை நீக்கவேண்டுமென்னும் நோக்கத்தோடு அதை எழுதியிருப்பானென்று $21^{28}$ ஆல் அனுமானிக்கலாம்.

மேலும் பேதுரு இயேசுவை மறுதலித்ததை எழுதினதால் இத்துடன் இயேசு பேதுருவுக்கு மன்னித்து விசேஷித்த ஊழியத்துக்கு அவனை அழைத்ததையும் எழுதவேண்டுமென்று விரும்பிச் சேர்த்ததாக நினைக்கலாம்.

இந்த முடிவுரைக்கு மூன்று பாகங்களுண்டு.

(1) முதலாம் முடிவுரை — இச்சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கம். $20^{30, 31}$.

(2) பேதுருவை மன்னித்தலும் அழைத்தலும். $21^{1-22}$.

(3) கடைசி வார்த்தைகள். $21^{23-25}$.

### $20^{30, 31}$. நூலாசிரியனது நோக்கம்.

30 இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்
புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்
31 தார்.—இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து
என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து
அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்
படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது.

30. நம்முடைய நூலாசிரியன் அநேக சம்பவங்களிலிருந்து சிலவற்றைமாத்திரம் எடுத்ததாகத் தெளிவாய்த் தெரியவருகிறது. மற்றச் சுவிசேஷ சரித்திரங்களையும் அவனறிந்திருந்தானென்று நாம் அறியவேண்டும்.

அற்புதங்களையும் — இவைகள் உயிர்த்தெழுந்தபின் காண்பித்த தரிசனங்களல்ல. அவரது ஜீவியத்தில் நடந்த எல்லா அதிசயங்களென்க.

31. இதிலே நூலாசிரியனது நோக்கம் தெரியவருகிறது. இதன் விரித்துரைக்கு 23, 24-ம் பக்கம் காண்க.



இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து— இந்த வார்த்தை அவரது மனுஷீகத்தையும், தெய்வீகத்தையும், யூதர் எதிர்பார்த்த மேசியா தத்துவத்தையும் குறித்துக் காட்டுகிறது.

ஜீவனை — இயேசு முன்சொன்ன அந்தப் பூரணமான ஜீவனென்க. $3^{15}$ $5^{24}$. பார்க்க.

### $21^{1-14}$. கடைசியான அற்புதமான அடையாளம்.

1 இவைகளுக்குப் பின்பு இயேசு திபேரியா கடற்
கரையிலே மறுபடியும் சீஷருக்குத் தம்மை வெளிப்படுத்
2 தினார்; வெளிப்படுத்தின விவரமாவது; — சீமோன்
பேதுருவும், திதிமு என்னப்பட்ட தோமாவும், கலிலே
யாநாட்டிலுள்ள கானா ஊரானாகிய நாத்தான்வேலும்,
செபெதேயுவின் குமாரரும், அவருடைய சீஷரில்
3 வேறு இரண்டுபேரும் கூடியிருக்கும்போது,—சீமோன்
பேதுரு மற்றவர்களை நோக்கி: மீன்பிடிக்கப்போகிறேன்
என்றான். அதற்கு அவர்கள்: நாங்களும் உம்முடனே
கூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப்
போய், உடனே படவேறினார்கள். அந்த ராத்திரி
யிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.
4 விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்
றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்
5 கள்.— இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்
கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார்.
6 அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள்.— அப்
பொழுது அவர்: நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலை
யைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்ப
டும் என்றார்: அப்படியே அவர்கள் போட்டு, திரளான
மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்கமாட்டாதி
7 ருந்தார்கள்.— ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த
சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான்.
அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே,
தான் வஸ்திரமில்லாதவனாயிருந்தபடியினால், தன் மேற்
சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான்.—
8 மற்றச் சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறு முழத்
தூரத்தில் இருந்தபடியினால் படவிலிருந்துகொண்டே
மீன்களுள்ள வலையை இழுத்துக்கொண்டு வந்தார்கள்.
9 அவர்கள் கரையிலே வந்திறங்கினபோது, கரிநெருப்

புப் போட்டிருக்கிறதையும், அதின்மேல் மீன் வைத்
10 திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.—இயேசு
அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்க
ளில் சிலவற்றைக் கொண்டுவாருங்கள் என்றார். —
11 சீமோன்பேதுரு படவில் ஏறி, நூற்றைம்பத்துமூன்று
பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்
தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை,-
12 இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம்
பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்
கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார்
13 என்று கேட்கத் துணியவில்லை.—அப்பொழுது இயேசு
வந்து அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக்
14 கொடுத்தார்.—இயேசு மரித்தோரிலிருந்தெழுந்தபின்பு
தம்முடைய சீஷருக்கு அருளின தரிசனங்களில் இது
மூன்றாவது தரிசனம்.

## பேதுருவுக்கு மன்னிக்கப்பட்டல். $21^{1-22}$

1. இயேசு கலிலேயாவிலே சீஷர்களுக்குத் தம்மைக் காண்பித்த தாகத் திரியனுபந்தச் சுவிசேஷங்களும் சொல்லுகின்றன. மத் $28^7$ மாற் $16^7$ 1 கொரி $15^6$. பார்க்க.

2. **நாத்தான்வேல்.** $1^{45}$. பார்க்க.

**வேறு இரண்டுபேரும்**— இவர்கள் அந்திரேயாவும், பிலிப்பும் என்பார் சிலர். பன்னிருவரைத் தவிர்த்த வேறு சீஷர்கள் என்பார் பெரும்பான்மையோர்.

3. இன்னும் சீஷரது வேலை குறிக்கப்படாமையால் அவர்கள் யாதொரு நோக்கமின்றி அலைந்தார்கள். இதிலும் பேதுரு தலைமை பெற்றதைக் கவனிக்க.

**ஒன்றும் பிடிக்கவில்லை** — இது சாதாரணமான காரியமன்று என்று தோன்றுகிறது.

4. **சீஷர்கள் அறியாதிருந்தார்கள்**—அவர்களறியாமைக்குக் காரணம் யாதென்பதைச் சந்தேகமறச் சொல்லிமுடியாது. அவரது ரூபம் அதிகமாய் மாறினதும், சீஷர்கள் அவரைக் காணும்படி எதிர்பார்க்காமல் தங்கள் வேலையில் முழு சிந்தையுமாயிருந்ததும் காரணங்களாக நினைக்கலாம்.



5. **பிள்ளைகளே** — இது பசங்களே என்னும் வழக்கச்சொல்லுக்கொக்கும். இயேசு அவர்களுக்கு அறியப்படாததால் இவ்விதமாய்ச் சொன்னார்.

6. **வலதுபுறமாக**—முன்னே இடதுபுறமாய்ப் போட்டார்கள் போலிருக்கிறது.

7. இந்த வசனத்தில் இவ்விருவர் தந்தம் குணங்களுக்குத் தக்கபடியே செய்தார்கள். யோவான் உற்றுநோக்கும் சிந்தையுள்ளவனாய் இயேசுவை யறிந்தான். பேதுரு பதற்ற செய்கையுடையவனாய் உடனே இயேசுவிடம் போனான்.

9. நெருப்பும் ஆகாசமும் தற்செயலாக வந்ததுபோலிருக்கிறது.

11. யோவான் திட்டமாய் அந்த மீன்களின் தொகையை நினைவு கூர்ந்திருக்கலாம். இந்த எண்ணிலே வேறே இரகசியமான அர்த்தம் கண்டுபிடிக்கப் பார்த்தல் விருதா. இவைகள் யாவும் பெரும் மீன்களாம். வலை கிழியாமலிருந்ததைப்பற்றி லூக் $5^6$ ஒத்துப்பார்க்க.

13. சீஷர்கள் அதிக சமீபத்து வந்ததில்லைபோலிருக்கிறது. அவர்கள் இயேசுவைப் பயபக்தியுடன் கண்டார்கள். இயேசு இவ்வண்ணம் செய்தல் அவர் தமது சீஷர்களது தேவைகளுக்கு உதவுவதையும், அவர்கள் ஊழியத்துக்குப் பலன் தருவதையும் காண்பிக்கும் அடையாளச் செய்கையென்றெண்ணலாம்.

14. **சீஷர்** — அதாவது முன்கூட்டத்தில் சேர்ந்த சீஷர்களென்க. மரியாளுக்கும் பேதுருவுக்கும் பிரத்தியேகமாய்த் தரிசனங் காண்பித்ததாக அறிவோம்.

## $21^{15-22}$. பேதுருவுக்கும் திருச்சபைக்கும் நியமிக்கப்பட்ட வேலை.

15 அவர்கள் போஜனம்பண்ணினபின்பு, இயேசு சீமோ
ன்பேதுருவை நோக்கி: யோனாவின் குமாரனாகிய
சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில்
அன்பாயிருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம்
ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறி
வீர் என்றான், அவர்: என் ஆட்டுக்குட்டிகளை மேய்ப்
பாயாக என்றார்.
16 இரண்டாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின்
குமாரனாகிய சீமோனே, நீ என்னிடத்தில் அன்பாயி

ருக்கிறாயா என்றார். அதற்கு அவன்: ஆம் ஆண்ட
வரே, உம்மை நேசிக்கிறேன் என்பதை நீர் அறிவீர்
என்றான். அவர்: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்றார்.
17 மூன்றாந்தரம் அவர் அவனை நோக்கி: யோனாவின்
குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா என்
றார். என்னை நேசிக்கிறாயா என்று அவர் மூன்றாந்தரம்
தன்னைக் கேட்டபடியினாலே, பேதுரு துக்கப்பட்டு:
ஆண்டவரே, நீர் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறீர்;
நான் உம்மை நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்
என்றான். இயேசு: என் ஆடுகளை மேய்ப்பாயாக என்
18 றார்.—நீ இளவயதுள்ளவனாயிருந்தபோது உன்னை
நீயே அரைகட்டிக்கொண்டு, உனக்கு இஷ்டமான
இடங்களிலே நடந்து திரிந்தாய்; நீ முதிர்வயதுள்ளவ
னாகும்போது உன் கைகளை நீட்டுவாய், வேறொரு
வன் உன் அரையைக் கட்டி, உனக்கு இஷ்டமில்
லாத இடத்துக்கு உன்னைக் கொண்டுபோவான் என்று,
மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்
19 என்றார்.—இன்னவிதமான மரணத்தினாலே அவன்
தேவனை மகிமைப்படுத்தப்போகிறானென்பதைக் குறிக்
கும்படியாக இப்படிச் சொன்னார். அவர் இதைச்
சொல்லியபின்பு, அவனை நோக்கி: என்னைப் பின்பற்
றிவா என்றார்.
20 பேதுரு திரும்பிப் பார்த்து, இயேசுவுக்கு அன்பாயி
ருந்தவனும், இராப்போஜனம் பண்ணுகையில் அவர்
மார்பிலே சாய்ந்து: ஆண்டவரே, உம்மைக் காட்டிக்
கொடுக்கிறவன் யார் என்று கேட்டவனுமாகிய சீஷன்
21 பின்னே வருகிறதைக் கண்டான்.—அவனைக் கண்டு,
பேதுரு இயேசுவை நோக்கி: ஆண்டவரே, இவன் காரி
22 யம் என்ன என்றான்.—அதற்கு இயேசு: நான் வருமள
ளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால், உனக்
கென்ன, நீ என்னைப் பின்பற்றிவா என்றார்.

15. **யோனாவின் குமாரனாகிய சீமோனே**—இந்நூலில் ஆசிரியன் எப்போதும் பேதுருவை சீமோன்பேதுரு என்கிறான். இயேசு அவனைக் கூப்பிடும்போதெல்லாம் பேதுரு என்னும் பெயர் உபயோகிக்காமல் சீமோனென்றே சொல்லுகிறார். இக்குறிப்பிலும் திரியனுபந்த சுவிசேஷங்களும் ஒத்துள்ளன. மத் $16^{17}$ $17^{25}$ மாற் $14^{37}$ லூக் $22^{31}$. பார்க்க.



**இவர்களிலும்**—அவன் முன்னே தன் அன்பை மிகவும் மேன்மை பாராட்டின விஷயம் சொல்லப்பட்டது ($13^{37}$). சிலர் இவைகளிலுமென்றெழுதவேண்டுமென்று படகு வீடு முதலியவைகளைக் குறித்துப் பேசினாரென்பார். என்னில் என்பதற்குத் தேற்றம் இல்லாததால் இந்த அர்த்தம் பொருந்தாது.

**அன்பாயிருக்கிறாயா**—இதன் மூலவார்த்தை பக்தியுள்ள அன்பைக் குறிக்கிறதென்றறிக. பேதுரு கொடுத்த உத்தரவில் அவனது தாழ்ந்த மனம் தெரியவரும்படி சாமானிய அன்பைக் குறிக்கும் வேறே பதத்தை உபயோகித்தான். அந்த மறுதலிப்பை நினைப்பூட்டுவதற்கும் தாம் அதை மன்னித்து அவனுக்கு விசேஷித்த வேலை நியமித்துக் கொடுப்பதற்கும் இயேசு இப்படி பேதுருவைப் பரிசோதித்துப் பேசினார். பேதுரு தனது பாவத்தை எண்ணி[illegible] அதைப் பற்றி அனுதாபப்பட்டு மிக்க தாழ்மையுடன் உத்தரவு கொடுத்தான். தான் தன் சொந்த அறிவை நம்பாமல் இயேசுவை நோக்கி நீரே அறிவீரென்றான். இத்துடன் அன்பாயிருக்கிறேன் என்னாமல் சாதாரணமான நேசத்தைக் குறிக்கும்படி நேசிக்கிறேனென்றான்.

**மேய்ப்பாயாக**—இவ்விடத்தில் மேய்ப்பாயாக என்றெழுதாமல் போஷிப்பாயாக என்றெழுதுக. பேதுரு தம்மை நேசித்த நேசத்துக்காக அவனுக்கு இயேசு ஒரு வேலை நியமித்தனர். அது வாலிப சீஷர்களைப் போஷித்தலே.

16. **இரண்டாந்தரம்** — இயேசு கேட்டபோது பேதுருவின் பதற்ற வார்த்தையை நினைப்பூட்டத்தக்கதாகிய இவர்களிலும் என்னும் பதத்தை அவர் சொல்லாமல் விட்டார். இதற்கும் பேதுரு அதே உத்தரவு கொடுத்தான். அப்போது இயேசு இன்னும் விசாலமான வேலை கொடுத்தார். வாலிபர்களையன்றியும் பெரியோர்களையும் காப்பாற்றி நடத்தவேண்டுமென்றார். இவ்விடத்தில் மேய்ப்பாயாக என்றெழுதுவது சரி.

17. **மூன்றாந்தரம்** — இயேசு பேதுரு உபயோகித்த நேசிக்க என்னும் வார்த்தையை இச்சமயத்தில் உபயோகித்துக் கேட்டார். இயேசு தனது அன்பைச் சந்தேகித்தாரென்றெண்ணி பேதுரு மிகவும் விசனப்பட்டு ஒன்றையும் சாதிக்காமல் இயேசுவின் சர்வஞானத்தை அறிக்கையிட்டு அந்த அறிவின்பேரில் சார்ந்துகொண்

டான். அப்பொழுது இயேசு பேதுரு பெரிய சீஷர்களைப் போஷிக்க வேண்டுமென்று சொன்னார். ஆத்துமபோஜனத்தை எல்லா சீஷர்களுக்கும் கொடுப்பது போதகரது உயர்ந்த வேலையாம்.

மேய்ப்பாயாக—என்றதற்குப் பதிலாக இவ்விடத்திலும் போஷிப்பாயாக என்றெழுதுக.

இயேசு இந்த நியமகத்தைப் பேதுருவுக்கு மாத்திரமல்ல, அவன் மூலமாய் எல்லா போதகன்மாருக்கும் கொடுத்திருக்கிறார் என்றறிக.

18. இயேசு பேதுரு அடையப்போகும் மரணத்தைக்குறித்துக் காட்டினார். அது சிலுவையிலறையப்பட்ட மரணந்தானே. அவன் முப்பது வருஷமான பிறகு ரோமாபுரியில் சிலுவையி லறையப்பட்டானென்பது பாரம்பரை. இதுவே பேதுருவினது அழைப்பின் முடிவாம்.

19. இயேசு மறுபடியும் பேதுருவுக்கு அழைப்புக்கொடுத்தார். இப்போது அதினர்த்தத்தைப் பேதுரு உணர்ந்துகொண்டான். பேதுரு இயேசுவுடன் போயிருந்ததாகத் தோன்றுகிறது. இயேசு இவ்விதமாய்த் தாம் காட்டின முடிவுக்கு வரும்படி பேதுருவை அழைத்தார்.

20. யோவான் கூடப் பின்சென்றான். பேதுருவுக்கும் யோவானுக்கும் அதிக சம்பந்தமிருத்தலால் பேதுரு அவனைப்பற்றி இப்படிக் கேட்டான்.

22. இயேசு முதலாவது தமது இராஜரீகத்தைக் காண்பித்தார் பிறகு யோவான் இனி அதிககாலம் பூமியில் உயிரோடிருப்பதாகக் குறிப்பித்துக் காட்டினார். இரண்டாம் வருகை என்றது எருசலேம் இடிந்தனவற்றைக் குறித்தது. யோவான்மாத்திரம் இதைப் பார்த்தான். பேதுரு பதற்றமாய் மற்றவர்களது காரியத்தில் பிரவேசித்ததால் இயேசு அவனைக் கண்டித்தார்.

### $21^{23-25}$. முடிவுரைகள்.

23 ஆகையால் அந்தச் சீஷன் மரிப்பதில்லையென்கிற
பேச்சு சகோதரருக்குள்ளே பரம்பிற்று. ஆனாலும்,
அவன் மரிப்பதில்லையென்று இயேசு சொல்லாமல்,
நான் வருமளவும் இவனிருக்க எனக்குச் சித்தமானால்
உனக்கென்னவென்று சொன்னார்.



24 அந்தச் சீஷனே இவைகளைக் குறித்துச் சாட்சிகொடுத்து இவைகளை எழுதினவன்; அவனுடைய சாட்சி
மெய்யென்று அறிந்திருக்கிறோம்.
25 இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு;
அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும்
புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன்.
ஆமென்.

23. இந்த வார்த்தைகளால் யோவானைப்பற்றி தப்பான அபிப்பிராயம் சபைகளுக்குள்ளே பரவிற்று. இப்படிப்பட்ட பேச்சு யோவான் சாகுமுன்னமேயே உண்டாகவேண்டுவதேயொழிய அவன் செத்தபிறகு வராது. ஆகையால் நூலாசிரியன் இந்தத் தப்பான பேச்சை அகற்றினது யோவான் இன்னும் சாகவில்லை என்பதற்கு நல்ல சான்றாம்.

24, 25. இந்த இரண்டு வசனங்கள் வேறொருவனால் சேர்க்கப்பட்டதாகத் தோன்றுகிறது. இந்தச் சுவிசேஷத்துக்கு அத்தாட்சி கொடுக்க யாராவது இவைகளை எழுதிச் சேர்த்திருக்கவேண்டும். ஒருவேளை எபேசு சபையிலுள்ள ஒரு மூப்பன் எழுதியிருப்பான். நாம் என்று சொல்லியிருத்தலால் இவ்வண்ணமாய் நினைக்கவேண்டும். நாம் அறிவோமென்றலால் யோவானை அறிந்தோர் இவ்வசனங்களை எழுதினார்களென்பது அறிவு.

25-ம் வசனம் இன்னும் வேறொருவனால் எழுதப்பட்டிருக்கிறதாகத் தோன்றுகிறது.

முற்றிற்று.

# அநுபந்தங்கள்.

## I. யூத விசாரணைக்குரிய ஒழுங்குகள்.

நியாயசாஸ்திர புஸ்தகங்களில் யூத விசாரணைக்கு வேண்டிய ஒழுங்குகள் கட்டளையிட்டுள்ளன. இயேசுவின் விஷயமாய் யூதர்கள் இந்த ஒழு[illegible]ங்குகளின்படி செய்யவில்லையென்பது விளங்கும்.

அவ்வொழு[illegible]ங்குகளாவன:—

(1) மரணத்துக்[illegible]த்தும் குற்றங்களில் சங்கத்தார் 23 பேர் கூடி விசாரிக்கவேண்டும். கள்ளத் தீர்க்கதரிசியை விசாரிப்பதற்கு 71 பேராகிய பெரிய சங்கம் ஒழுங்காய்க் கூடவேண்டும்.

(2) சாட்சிகளை[illegible] தனித்தனியாக அதிக ஜாக்கிரதையாய் விசாரித்துக் கேட்கவேண்டும். ஒவ்வொரு குற்றத்தையும் உறுதியாக்கும் பொருட்டு இரண்டு[illegible]பர் சரிசமான சாட்சியைக் கொடுக்கவேண்டும். மரணத்திற்குட்[illegible]த்தும் விஷயங்களில் சாட்சிகளை எச்சரித்துக் கேட்ட லவசியம்.

(3) நியாயாதிபதிகள் யாவரும் பாதி வட்டத்தில் அமைந்து உட்காரவேண்டும்.

(4) மரணத்திற்குட்படுத்துங் குற்றங்களைப் பகல்காலத்தில்மாத்திரம் விசாரிக்கவேண்டும். விசாரிக்கும்நாளில் அல்ல மறுநாளிலே அக்கினைத்தீர்ப்புச் சொல்ல லவசியம்.

(5) தேவதூஷண வார்த்தைகளுக்குரிய விசாரணையில் சாட்சிகளை அதிக ஜாக்கிரதையுடன் கேட்டு யாதொரு சந்தேகமிருந்தால் அதைத் தள்ளிப்போடவேண்டும்.

யூதர்கள் இயேசுவை விசாரித்தபோது இவைகளுக்கு நேர்விரோதமாய் நடப்பித்தார்களென்பது தெளிவு.



## II. இயேசு மரித்தநாளும் கடைசி இராப்போஜனமும்.

இயேசு வெள்ளிக்கிழமையில் மரித்தது நாலு சுவிசேஷகருக்கும் சம்பந்தம். எனினும் அது பஸ்காபண்டிகை திருநாளோ அல்லவோ என்பதைப்பற்றி விகற்பமுண்டு.

இந்தச் சுவிசேஷத்தின்படி அந்த வெள்ளிக்கிழமை நீசான் 14-ம் தேதியாயிற்று. யூதர்களுக்கு ஒருநாள் சாயந்தரம் 6 மணிமுதல் ஆரம்பமென்றறிக. பஸ்காபண்டிகை நீசான் 14-ம் தேதி சாயந்தரம் துவக்கினது. அப்போது 4, 5 மணிநேரத்தில் ஆட்டுக்குட்டியைச் சாப்பிடுவார்கள். அது வெள்ளிக்கிழமை சாயந்தரம் ஆகையால் நான்காம் சுவிசேஷத்தின்படி இயேசு சரியானநாளில் பஸ்கா ஆட்டைச் சாப்பிடாமல் அதற்கு முந்தினநாளில் இராப்போஜனத்தைப் பெற்றார். கடைசி இராப்போஜனம் வியாழக்கிழமையில் சாப்பிட்டார்களென்று இதினால் தோன்றுகிறது. யோவா $13^{1}$ $18^{28}$ $19^{14, 31}$. பார்க்க.

இயேசு சிலுவையில்றையப்பட்ட நாள் பஸ்காபண்டிகைத் திருநாள். அன்று சாயந்தரமே பஸ்கா சாப்பிடவேண்டும். அதினால் யூதர்கள் சிலுவையிலறையப்பட்டவர்களது கால்களை உடைக்கவேண்டுமென்று கேட்டார்கள். ஏனென்றால் பஸ்கா ஆசரிக்குமுன்னே அதெல்லாம் முடிக்கவேண்டுமென்பது நாலாம் சுவிசேஷத்தின் சரித்திரம்.

இப்போது திரியனுபந்த சுவிசேஷங்களைப் பார்த்தால் கொஞ்ச வித்தியாசமுண்டு என்று காணப்படுகிறது. இயேசு ஆசரித்த இராப்போஜனத்தைப் பஸ்கா போஜனமாகக் காண்பிக்கிறார்கள். மாற் $14^{12}$. அவைகளின்படி நீசான் 14-ம் தேதி இராப்போஜனம் நடந்தது. 15-ம் தேதி இயேசு சிலுவையில் அறையப்பெற்றார். இதற்கு ஒரு பலத்த ஆட்சேபனையுண்டு. பஸ்கா ஆட்டைச் சாப்பிட்டதோடு பரிசுத்தநாட்கள் ஆரம்பித்தன. நீசான் 15-ம் தேதியில் ஒரு வேலையுஞ் செய்யக்கூடாது. ஆயினும் இக்கொள்கைக்கிசைய அந்தநாளில் யூதர்கள் இயேசுவைப் பிடித்து விசாரித்து பிலாத்துவிடம் கொண்டு

போனதும் சீமோன் வேலையிலிருந்து வந்ததும் மாற் $15^{21}$, அரிமத்தேயா யோசேப்பு துணி வாங்கினதும் மாற் $15^{46}$, பெண்கள் தூபங்களை ஆயத்தப்படுத்தினதும் லூக் $23^{56}$ ஆகிய இவைகள் யாவும் அந்நாளில் செய்யக்கூடாதவைகளாய் நடந்தன. அதுமாத்திரமல்ல யூதர்களும் அப்படிச் செய்யவேமாட்டார்கள்.

திரியனுபந்த சுவிசேஷங்களில் கடைசி இராப்போஜனம் சரியான பஸ்கா போஜனமாகக் காணப்படுகிறது. நாலாம் சுவிசேஷத்தில் இந்தக் கடைசி இராப்போஜனம் ஒழுங்கான பஸ்கா போஜனமாகக் காண்பிக்கப்படாமல் முந்தினநாளில் நடந்ததாகத் தெரியவருகிறது. திரியனுபந்த சுவிசேஷத்தின் செய்தி இந்தக் கடைசி இராப்போஜன விஷயத்தில தப்பிதமுள்ளதாகத் தோன்றுகிறது. இவ்விரண்டு சரித்திரங்களைச் சந்தேகமறச் சமாதானப்படுத்துதல் அரிதாயினும் ஒருவாறு சமாதானத்திற்குக் கொண்டுவரலாம். திரியனுபந்த சுவிசேஷகர் இயேசு சரியான பஸ்காபண்டிகையை முந்தினநாளில் சாப்பிட்டதைக் காண்பிக்கிறார்களென்றும் யூதர்கள் அவரைப் பிடிக்க விரும்பினதால் இவ்விதமாய் நடந்ததென்றுஞ் சொல்லுவார் சிலர். வேறு சிலர் அந்த ஆட்டுக்குட்டியைச் சாப்பிடாமல் மறுநாளுக்கு அதை வைத்துவிட்டிருப்பார்களென்பார். இந்த விபரீதங்களிருப்பினும் திரியனுபந்த சுவிசேஷங்களுக்கும் நான்காம் சுவிசேஷத்திற்கும் நேர் விரோத மிதன்று என்பது தோன்றுகிறது. நான்காம் சுவிசேஷத்தின் சரித்திரம் சரியாயிருக்கிறதென்று சொல்லலாம். திரியனுபந்த சரித்திரம் இதில் தப்பிதமுள்ளதென்பதைத் தெளிவாய்க் காட்டுவதற்கு யோவான் இச்சரித்திரத்தைத் திட்டமாய் எழுதினனென்பார் அநேகர்.

## III. உயிர்த்தெழுதல்.

### 1. நடபடிகளின் தொடர்ச்சி.

சனிக்கிழமை—மாலை 6 மணிக்குப் பின்பு மகதலேனாமரியாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும் தூபவர்க்கங்களை வாங்குதல். மாற் $16^{1}$.



ஞாயிற்றுக்கிழமை விடியுமுன்னே — உயிர்த்தெழுதல், பூமியதிர்ச்சி, தேவதூதர் இறங்குதல், கல்லறை திறத்தல். மத் $28^{2-4}$.

காலை 5 மணிக்கு—மகதலேனாமரியாளும் யாக்கோபின் தாயாகிய மரியாளும் சலோமி முதலிய பெண்களும் கல்லறைக்கு வந்தது. மகதலேனாமரியாள் முந்தி வந்தது. உடனே பேதுரு யோவானுக்குத் தெரிவிக்கப் போனது. யோவா $20^{1}$.

$5\frac{1}{2}$ மணிக்கு—மற்றப் பெண்கள் கல்லறைக்கு வந்து சேர்ந்தது. மாற் $16^{2}$. தேவதூதன் காணப்பட்டது. சீஷர்களுக்குச் செய்தியனுப்பினது. மத் $28^{5}$ மாற் $16^{5}$.

6 மணிக்கு—யோவன்னாள் முதலியோர் வந்தது, இரண்டு வாலியரைப் பார்த்தது. லூக் $24^{1-4}$.

$6\frac{1}{2}$ மணிக்கு—பேதுருவும் யோவானும் வந்தது. யோவா $20^{3-10}$.

மகதலேனாமரியாள் இரண்டு தேவதூதர்களைக் கண்டது. யோவா $20^{11-13}$.

பெண்கள் சீஷருக்குத் தெரிவித்தது. லூக் $24^{10}$.

7 மணிக்கு—மகதலேனாமரியாளுக்குத் தரிசனம். யோவா $20^{14-18}$ மாற் $16^{9}$. கல்லறைக்குத் திரும்பவந்த பெண்களுக்குத் தரிசனம். மத் $28^{9}$.

மாலை 4 முதல் 6 மணிவரைக்கும் — எம்மாவுக்குப் போன இரண்டு சீஷர்களுக்குத் தரிசனம். லூக் $24^{13}$ மாற் $16^{12}$.

4 மணிக்குப் பின்பு—பேதுருவுக்குத் தரிசனம். லூக் $24^{34}$ 1 கொரி $15^{5}$.

8 மணிக்கு—11 சீஷர்களுக்குத் தரிசனம். லூக் $24^{36}$ யோவா $20^{19}$.

### 2. உயிர்த்தெழுதலின் சரித்திர உண்மைக்குச் சாட்சிகளின் விதம்.

(i) மூலநூலில் இல்லாததால் மாற்கின் சாட்சி பிரயோஜனமற்றது. மாற் $16^{9-20}$.

(ii) லூக்காவின் சாட்சி நல்லது. அந்த விஷயங்களெல்லாம் கண்டவனொருவன் லூக்காவுக்குத் தெரிவித்தான்போலிருக்கிறது. ஒரு

வேளை யோவன்னாள் அவனுக்கு இந்தச் சங்கதிகளைத் தெரிவித்தாள். லூக் $8^{3}$ $24^{1-12}$, $24^{10}$. பார்க்க.

(iii) எம்மாவுக்குப் போன சீஷர்கள் கண்ட தரிசனத்தையும் இவர் சொல்லியிருக்கலாம். கிலெயோப்பாவும் ஏரோதின் வீட்டிலுள்ளவனாயிருக்கலாம். லூக் $24^{13}$. பார்க்க.

(iv) பவுலின் சாட்சி விசேஷித்தது. 1 கொரி $15^{5}$ 1 தெச $1^{10}$ $4^{14}$.

சீஷர்களுக்குள்ளே பேதுரு முதலாவது தரிசன மடைந்ததாக லூக்காவாலும் பவுலாலும் தெரியவருகிறது.

(v) லூக்கா யோவான் சுவிசேஷங்கள் விசேஷமாய் ஒற்றுமையுள்ளன. லூக் $24^{35}$ யோவா $20^{19}$.

## ப. நாலு சுவிசேஷங்களிலும் ஒத்திருக்கின்ற விஷயங்களாவன.

(i) இயேசு உயிரோடெழுந்த செய்கையை விவரிக்காமல் எழுதுதல்.

(ii) விசுவாசிகளே தரிசனைகளைக் கண்டது.

(iii) பிரத்தியேகமான பேர்களுக்கும் சீஷர் கூட்டங்களுக்கும் தரிசனங்கள் காணப்பெற்றன.

(iv) இயேசு தமக்கிஷ்டமான நேரத்தில் தரிசனஞ்செய்தல்.

(v) முதலாவது சீஷர்கள் சந்தேகத்துடன் அதைக் கேட்டல்.

(vi) மற்றவர்களது வெறும் பேச்சைமாத்திரம் அவர்கள் நம்பாதிருத்தல்.

(vii) தரிசனங்களைக் கண்டதால் இயேசு உயிரோடிருக்கிறாரென்று உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உண்டாதல்.

(viii) பெண்கள் முதலாவது கல்லறைக்கு வருதல்.

(ix) கல் பெயர்க்கப்பட்டிருத்தல்.

(x) முதலாவது தேவதூதர்கள் தோன்றுதல்.

(xi) மகதலேனாமரியாளுக்கு முதல் தரிசனங் கிடைத்தது.

(xii) கல்லறை காலியாயிருத்தல்.



## 4. உயிர்த்தெழுதலைப்பற்றிய அபிப்பிராயங்களாவன.

(i) உயிர்த்தெழுதலேயில்லை. கதையெல்லாம் சீஷர்களது வஞ்சகப்பேச்சு என்பது பரிசேயரது அபிப்பிராயம்.

**மறுத்தல்**—(a) உலகம் எங்கும் பிரபல்யம்பெற்று அநேக நற்குணங்களுக்குக் காரணமாகிய இந்தக் கிறிஸ்துமதம் பொய்யாயுண்டாதல் என்று நினைக்கலரிது.

(b) சீஷர்கள் உயிர்த்தெழுதலை உண்மையாய்ச் சந்தேகமற நம்பினார்கள் என்பது தெளிவாய்க் காணப்படுகிறது.

(ii) இயேசு உண்மையாய் மரிக்காமல் பலத்த மயக்கம்பெற்று மரித்தவனைப்போலிருந்து கல்லறையில் வைக்கப்பட்டு மூன்றாம்நாள் புத்தி தெளிந்தெழுந்தார் என்பது.

**மறுத்தல்**—(a) இது எல்லாவிஷயங்களிலும் சரித்திரத்துக்கு நேர் விரோதமாதலின் இப்படிப்பட்ட சரித்திரம் அவ்வகையான நடபடிகளால் எழுதப்பட்டிருக்கமாட்டாது.

(b) அப்பேர்ப்பட்ட வேதனையடைந்தபின் எப்படி மூன்று நாட்களில் பூரண சுகத்தோடும் பலத்தோடும் வரக்கூடும்? என்கிற கேள்விக்கு உத்தரவில்லை.

(iii) கடவுளே அந்தப் பிணத்திற்கு ஒருவாறுன உயிர்கொடுத்து மறுபடியும் எழுப்பிக் கொஞ்சநாளாக உயிருள்ளவனைப்போலக் காப்பாற்றினார் என்பது.

**மறுத்தல்**—இது கடவுள் வஞ்சகம் பண்ணினதாயிற்று. கடவுள் எப்படி வஞ்சகம் செய்வார்? வஞ்சகமில்லாத மார்க்கம் வஞ்சகத்தில் எப்படி நிலைக்கும்?

(iv) தரிசனங்கள் சீஷர்கள் மனக்கலக்கத்தினால் கண்ட மனோபாவனைகளாயின என்பது. சிலர் மகதலேனாமரியாளாலும் சிலர் பவுலாலும் இவ்வித மனோபாவனைகள் முதலாவது வந்தன என்பார்.

**மறுத்தல்**—(a) இப்பேர்ப்பட்ட மனோபாவனையின்மேல் வைக்கப்பட்ட விசுவாசம் நாட் செல்லச்செல்ல நிலைக்காமல் வாடிப் போகும். சீஷர்களது விசுவாசமோ நாட் செல்லச்செல்லப் பலப்பட்டது.

(ப) சீஷர்கள் உயிர்த்தெழுதலைச் சிறிதேனும் எதிர்நோக்காததால் இவ்வண்ணமான மனோபாவனைகள் தானாகவே உண்டாக மாட்டா.

இயேசு குற்றவாளியாக மரணமடைந்ததைப்பற்றிச் சீஷர்கள் அதிக விசனப்பட்டு மேசியாவைக்குறித்த எல்லா வேத வார்த்தைகளையும் தியானித்துக்கொண்டதால் உயிர்த்தெழுதல் உண்டாகவேண்டும் என்னும் நம்பிக்கை பெற்றார்கள். பிறகு அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்த மனத்தரிசனம் அவர்களுக்குக் காண்பிக்கப்பட்டது என்பது.

**மறுத்தல்**—(a) உயிர்த்தெழுதல் உண்டாகும் என்னும் நம்பிக்கையே உயிர்த்தெழுதல் நடந்தது என்னும் விசுவாசத்தையும் அதின் சரித்திரத்தையும் உண்டாக்க முடியாது.

(b) சீஷர்கள் முதலாவது உயிர்த்தெழுதலை நம்பவேயில்லையென்று காணப்படுகிறது.

(c) மேசியாவைக் குறித்த வாசகங்களில் இந்த நம்பிக்கை காணப்படுதலரிது. அப்படிக் காணப்படுதல் உண்மையான உயிர்த்தெழுதலுக்கொத்த அதிசயம்.

(vi) சீஷர்கள் கலிலேயாவிலிருந்தபோது இயேசுவின் நடபடிகள் எல்லாம் நினைத்ததால் உயிர்த்தெழுதல் உண்டாயிற்று என்னும் நம்பிக்கையைப் பெற்றார்கள். பிறகு இதற்கத்தாட்சியாக மனத்தரிசனங்கள் காண்பிக்கப்பட்டன என்பது.

**மறுத்தல்**—(a) இது எழுதப்பட்ட சரித்திரத்திற்குப் பொருந்தாது.

(b) ஐந்தாவதற்கு சொன்ன மறுத்தலைக் காண்க.

(vii) எல்லாம் பாரம்பரைக் கதைகளாம் என்பது.

**மறுத்தல்**—(a) இவைகள் பாரம்பரைக் கதைகளின் லட்சணங்களுடையவையல்ல.

(b) அப்படியானால் கிறிஸ்து சபை சரித்திரமுழுவதும் பாரம்பரைக் கதையாதல் வேண்டும். இதுவாகிலும் நிலைக்காது.

உயிர்த்தெழுதலைப்பற்றிய சந்தேக அபிப்பிராயங்களாகிய இவைகளைத் தள்ளுவது நியாயம். அவைகள் பொருந்தா. ஆகையால்



அந்த உயிர்த்தெழுதல் மெய்மையென்னும் அபிப்பிராயமே அன்றியொழிய ஒப்புக்கொள்ளப்படத்தக்க அபிப்பிராயம் வேறில்லை என்பது தெளிவு.

## 5. உயிர்த்தெழுதல் மெய்யென்பதற்கு நியாயங்களாவன.

(i) சரித்திரம் மெய்யான சரித்திரத்தின் லட்சணங்களை உடையது.

(ii) இயேசுவை உண்மையாய்ப் பார்த்ததொன்றே சீஷர்களின் திட்டமான நம்பிக்கையை உண்டாக்கக்கூடியது. அவர்கள் அதை எதிர்பார்க்கவில்லை. மேசியாவின் முன்னறிவிப்பில் உயிர்த்தெழுதல் ஒரு பங்கல்ல. யூதர்கள் திட்டமாய்ப் பொதுவான உயிர்த்தெழுதலையும் நம்பவுமில்லை. மனிதர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள் என்பது சிலருக்குமாத்திரம் நம்பிக்கை.

(iii) இயேசுநாதர் நிஜமாகவே உண்மையான சரீரத்துடன் உயிர்த்தெழுந்தார் என்பது சுவிசேஷத்தின் பொருள். அப்போஸ்தலரும் ஆதிக்கிறிஸ்தவர் யாவரும் இதை நம்பினார்கள். ஆதிச்சபையின் சரித்திரத்தில் இதை மறுத்தற்குரிய யாதொன்றுமில்லை.

(iv) கல்லறை காலியாயிருந்தது. இதற்குச் சரியான சாட்சியுண்டு.

(v) இந்த நம்பிக்கை உண்மையில்லாவிட்டால் அதை உண்டாக்குவதற்கு மூன்றுநாள் போதாது. மனோபாவனையுள்ள தரிசனத்தால் மூன்றுநாட்களில் நம்பிக்கை உண்டாகாது.

(vi) இது பொய்யானால் இயேசு பாத்திரகேறின சரித்திரமும் பொய்யாயிருக்கும்.

(vii) இயேசுவின் உயிர்த்தெழுதல் அவரது ஜீவியத்தின் தகுந்த முடிவாயிற்று. உயிர்த்தெழுதலில்லாவிடின் அவரது ஜீவியமும் நம்பத்தக்கதல்லவே. அந்த ஜீவியம் மேற்கூரையில்லா வீட்டைப்போலிருக்கும்.

இவ்வுலகத்தில் மனிதரது விவேகத்துக்கு விளங்காத யாதொரு அதிசயம் நடக்கக்கூடாது என்னும் மனப்பிரமாணம் வைத்தாலொழிய நம்பக்கூடாத காரணங்கள் இயேசுவின் உயிர்த்தெழுதலைப்பற்றிய

சரித்திரத்தில் இல்லை என்பது தெளிவு. அதிசய சரித்திரங்கள் யாவும் கட்டுக்கதைகள் என்பதற்கு நியாயங்காண்பித்து இதை மறுக்க முயற்சித்தல் விருதா. இயேசுவின் சரித்திரத்தில் அவ்வண்ணக் காரியங்கள் நடத்தல் பொருத்தமுள்ளதென்றால் உயிர்த்தெழுதலின் சரித்திரத்தையும் மறுக்கத்தக்க நியாய மொன்றுமில்லை என்பது திண்ணம்.

இந்தக் காரியம் நான்காம் சுவிசேஷத்தில் விசேஷித்ததாதலின் இதைப்பற்றி இவ்வளவு திட்டமாய் எழுதினோம். இதைத் தான் கண்ணாரக் கண்டவன் என்று நூலாசிரியன் சந்தேகமறச் சாதிக்கிறான். இந்த முடிவு வராவிட்டால் அவர் இயற்றின நூல் பொருத்தமில்லாததாகக் காணப்படும். ஆகையால் இந்தச் சரித்திரம் மற்ற நியாயங்களால் உண்மையென்று தெரிந்தால் இந்நூலின் சரித்திர உண்மைக்கும் அது பலத்த சாட்சியாம்.

PRINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS—1913


# ENGLISH BOOKS ON RELIGION

**THE LIFE OF MUHAMMAD.** By the Rev. Canon Sell, D.D., M.R.A.S. 238 pp. Stiff Cover Rs 1-6-0. Cloth Rs 1-14-0.

A careful, accurate and impartial biography of the founder of Islam, with quotations from and references to the original authorities.

**SELECTIONS FROM THE QUR'AN.** By the Rev. Canon Sell, D.D., M.R.A.S. 8vo. 232 pp. As 12.

Upwards of five hundred of the most important passages are given, with headings explanatory notes, where necessary, and a classified index. An introduction treats of the Qur'án, its divisions, sources, etc.; the creed, duties, sects and feasts of Islam. The review shows the testimony of the Qur'án to the Christian Scriptures; its claim to inspiration is examined; with an address to enlightened Muslims. Throughout extracts are given from standard works on the subject.

**BUDDHIST IDEALS.** By K. J. Saunders, M.A. Paper covers As 10.

This book is a valuable and interesting study of the ethics of modern Buddhism in Ceylon and Burma written with scholarly fairness. There are several striking illustrations.

**A PRIMER OF HINDUISM.** By J. N. Farquhar, M.A. With illustrative extracts from Hindu Sacred Books, and many illustrations. As 6. In cloth As 12.

A reliable, scientific and very clear account of the evolution of modern Hinduism.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Memorial Hall, P. O Box 3, Madras

DIALOGUES ON HINDU PHILOSOPHY. By the late Rev. K. M. Banerjea. 8vo. 448 pp. reduced to As 8.

A MIRROR OF THE HINDU PHILOSOPHICAL SYSTEMS. By Nehemiah Nilakantha Sastri Goreh, translated from the original Hindi, printed and manuscript, by Fitz-Edward Hall, D. C. L., Oxon., H. M.'s Inspector of Public Instruction for the Central Provinces. Rs 1-14.

THE RELIGION OF JESUS. By the Rev. N. Macnicol, M.A. Crown 8vo. 278 pp. As 12.

KARMA AND REDEMPTION. An Essay toward the Interpretation of Hinduism and the Restatement of Christianity. By A. G. Hogg, M.A. 128 pp. As 8.

CHRIST'S MESSAGE OF THE KINGDOM. A series of studies in the practice of the Christ-like life. By A. G. Hogg, M.A. As 8.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Memorial Hall, P. O. Box 3. Madras



THE HISTORICAL CHARACTER OF THE GOSPEL. Established from Non-Christian Sources. By a member of the Brotherhood of the Imitation. Edited by the Rev. C. F. Andrews, M.A. Crown 8vo. 68 pp. As 6.

NEW WICKS FOR OLD LAMPS or helps to the understanding of the Old Testament. By the Rev. J. Paul S. R. Gibson, M.A. 2 As. Special edition on hand-made paper. As 3.

## TAMIL BOOKS

**The New Testament and Its Writers.** By the Rev. Alfred Smith, 126 pages, 4 annas.

A concise and careful handbook of New Testament introduction, prepared for the use of vernacular preachers and bible-women.

**Eli, Samuel and Saul.** 90 pages, 3 annas.

A clear account of the period with some of its plain lessons.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Memorial Hall, P. O. Box 3, Madras

**A Tamil Bible Dictionary.** Compiled by the Rev. A. C. Clayton. Part I and II, 352 pages, now ready. Price 8 annas each.

**India and Missions.** By the Rev. V. S. Azariah, 90 pages, 4 annas.

**The Life of Service.** By the Rev. D. J. Fleming, M. SC. Translated by the Rev. J. P. Jones, D. D. 60 pages, 3 annas.

**The Treasury of Illustrations.** A useful volume for Tamil Preachers. Rs 2.

**Christian Evidences.** By the late W. Howard Campbell, M. A. Translated from Telugu. [*In the Press.*

---

திருஷ்டாந்த பொக்கிஷம் **(The Treasury of Illustrations).** பிரசங்கம் செய்யும்போது தாங்கள் சொல்லும் புத்தி போதனைகளைப் பெரியோர்களும் சிறியோர்களும் மனதிற் கிரகித்துக் கொள்ளும்பொருட்டு அவைகளோடு திருஷ்டாந்தங்களைக் கலந்து போதிப்பது மிகுந்த பிரயோஜனமாயிருக்கும் என்பது பிரசங்கிமாருக்குத் தெரிந்த காரியமே. இந்தத் திருஷ்டாந்த பொக்கிஷத்தில் கிரேக்கர், ரோமர், அங்கிலேயர் முதலிய அநேகருடைய இதிகாசங்களிலும், கதைப்புத்தகங்களிலும், இன்னும் பல சன்மார்க்க நூல்களிலுமிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட எழுநூறு கதைகளும் உவமைகளும் அடங்கியிருக்கின்றன. விலை ரூபா 2.





நான் கிறிஸ்தவனான காரணம் **(Why I Became A Christian).** கனம். A. S. அப்பாசாமிபிள்ளையவர்கள் இந்துமார்க்கத்திற் பிறந்து வளர்ந்து, அதில் தமது ஆத்துமாவுக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடிய போதனைகள் இல்லை என்று தீர்மானித்து, அதிலுள்ள வேதாந்த சித்தாந்த கொள்கைகளை விட்டு, கிறிஸ்தவ மார்க்கத்தை அநுசரித்து யாவருக்கும் பெரும் நன்மை விளைக்கும்பொருட்டு இந்தப் புத்தகத்தில் சாட்சியைக் கூறுகிறார். இப்புத்தகம் யாவரும் லேசாய் வாசித்தறியக்கூடிய நடையில் புராண இதிகாச கவிகளோடும் அவற்றின் பொழிப்புரையோடும் எழுதியிருக்கிறது. பக்கம் 112, விலை அணா 4.

ஜான் உவெஸ்லி ஐயர் செய்த பன்னிரண்டு பிரசங்கங்கள் **(Twelve Sermons by John Wesley).** இவை அப்பிரசங்கி, கல்மனமும் கசிந்துருகுமாறு செய்த நூற்றுநாற்பத்தொரு பிரசங்கங்களினின்றும் பிரித்தெடுக்கப்பட்டு, கனம். கிளெ[illegible]றன் ஐயர், கனம் டேவிட் ஐயர், கனம். தேவசகாயம் ஐயர் இவர்களால் மொழிபெயர்க்கப்பட்டவை. சுவிசேஷ பிரசங்கிகளுக்கு மிகவும் உபயோகமானது. விலை ரூபா 1-8-0.

ஆயனும் ஆடும் **(The Shepherd and the Sheep).** பல நூல்களுக்கும் ஆக்கியோனாகிய நாகர்கோவில் கனம். C. அருமைநாயகம் 'ஆயனும் ஆடும்' என்னுமோர் புத்தகம் புதிதாய் எழுதியிருக்கிறார். இதில் அவர் சில சபையாருக்கும் போதகர்மாருக்குமிடையில் நடந்த சில சங்கதிகளை வாசிப்போர் பிரியத்தோடு கவனிக்கத்தக்கவிதமாய்ச் சொல்லியிருக்கிறார்.

கண்ணாடி முகத்தைத் தெளிவாய்க் காட்டுவதுபோல் இந்தப் புத்தகம் வாசிக்கிறவர்களின் அந்தக்கரணத்தை அவர்களுக்குத் துலாம்பரமாய்க் காட்டும். இதிற் சொல்லியிருக்கும் நற்பொருள் அடங்கிய உவமைகளினால் நாம் விலக்கவேண்டிய துர்க்குணங்களையும் அநுசரிக்கவேண்டிய நற்குணங்களையும் அறிவோம். பக்திக்குரிய புத்தி

போதனைகள் உள்ள கதைகள் அநேகம் நமது மனதில் பதியுமாறு இதில் எழுதப்பட்டிருக்கின்றன. பக்கம் 146, விலை அணா 10.

இல்லற இன்ப இரகசியம் (**The Secret of a Happy Home**). M. A. P. சாமுவேல் அம்மாளால் இயற்றப்பட்டது. இல்வாழ்க்கையைப் பாழ்ப்படுத்தும் தோஷங்களைக் களைதலும், இல்வாழ்வை மேன்மைப்படுத்தும் அனுகூலங்களை அறிதலும் ஆகிய இவைகளை இந்நூல் காட்டுகின்றது.

பொருள் அட்டவணை: சிசு விவாகம், பெண்களை அல்லது மாப்பிள்ளைகளைத் தெரிந்துகொள்ளுதல், இல்லற ஆயத்தம், நல்ல புருஷன், நல்ல மனைவி, புருஷனும் மனைவியும், பாக்கியமுள்ள குடும்பம், விருத்தியடைகிற புருஷன், செட்டிமையுள்ள மனைவி, நமதருமைப் பாலர் சுகம், பிள்ளைகளைப் பயிற்றுவித்தல். பக்கம் 196, விலை அணா 4.

கிறிஸ்துவில் நிலைத்திரு (**Abide in Christ**). தேவகுமாரனோடு உறவாடி ஞான ஐக்கியம் செய்வதால் வரும் இன்ப ஜீவியத்தைப் பற்றிய இத்தியானங்களை. இயற்றியவர் அந்திரேயர் மரே (Andrew Murray) போதகர். இந்நூலை மொழிபெயர்த்தவர் சங். ஞா. தேவசகாயம் போதகர்.

கிறிஸ்துமார்க்கம் வெறும் போதகமல்ல, வாய்ச்சாலமல்ல, புறநடிப்பல்ல; அது ஆழங்காண முடியாத ஜீவன், அளவு சொல்லற்கரிய பெலன். அதை அப்படி அனுபவிப்பவனே கிறிஸ்தவன்; மற்றவன் வேஷதாரி. இவ்வுண்மை இந்நூல் முழுமையும் செறிந்துள்ளது. பக்கம் 301, விலை அணா 8.

ஜப்பானும் இந்தியாவும் (**Japan and India**). இது ஜப்பான் தேசத்து ஜனங்கள், இராஜாங்கம், கல்வி, வர்த்தகம், மதம் முதலிய விஷயங்களைக்குறித்து விபரமாய்க் கூறுவதோடு இந்தியா தேசத்தார் ஜப்பான்தேசத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியது இன்னதென்பதையும் நன்கு விளக்கும் ஓர் சிறந்த நூல். கனம். ஜீ. எஸ். எடி ஐயர் இயற்றியது. விலை அணா 4.

---





பொன்னூல் (**The Gold Thread**). இப்புத்தகத்தில் [illegible] ராஜகுமாரன் தான் நடக்கவேண்டிய வழியைக் காண்பிக்கும் 'பொன்னூல்' ஒன்றைத் தன் தகப்பனிடமிருந்து பெற்றுக்கொண்டு அதையாதாரமாகப் பிடித்தவனாய்ச் சில ஊர்களைப் பார்க்கும்படி புறப்பட்டுப் போகும்போது விநோத விளையாட்டுகளிற் பிரியப்பட்டு அப்பொன்னூலைக் கைதவறவிட்டதினால் தான் போகும்வழி தெரியாமல் காடு மேடெல்லாம் அலைந்து திரிந்து கள்ளர் கையில் அகப்பட்டுத் தான் செய்த குற்றத்தினிமித்தம் மனஸ்தாபப்பட்டு அழுது நிற்கையில் சம்மனசானவோர் அம்மாளின் உதவியினால் மறுபடியும் அந்தப் பொன்னூலைப் பிடித்துக்கொண்டு வழியிற் சிங்கத்தைக் கண்டும் அதற்குப் பயப்படாமல் பத்திரமாய்த் தன் வீடுபோய்ச் சேர்ந்ததைப் பற்றி எழுதியிருக்கிறது. சிறியவர்கள் கஷ்டமில்லாமல் வாசிக்கத் தக்கதாய்த் தெளிவான அட்சரங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. பக்கம் 78, விலை அணா 2.

கிறிஸ்துவின் போதகம் (**The Teaching of Jesus Christ in His own words**). 1872–76-ம் வருஷம் இந்தியாவுக்கு ராஜப்பிரதிநிதியாயிருந்த நோர்துபுரூக் (Northbrook) பிரபு 'இயேசுகிறிஸ்துவின் போதகம்' என்னும் இந்தச் சிறிய புத்தகத்தில் நாலு சுவிசேஷங்களிலும் சொல்லியிருக்கும் இயேசுவின் திவ்விய வாக்குகளை வெவ்வேறு விஷயங்களாக ஒழுங்குபடுத்தி யாவரும் அறியத்தக்க வண்ணமாய்க் காட்டியிருக்கிறார். இப்புத்தகம் சுவிசேஷகர்களும் வேதாகமஸ்திரீகளும் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றி அறியாதவர்களுக்கு வாசித்துக்காட்டிப் போதிக்கிறதற்கு அதிக உபயோகமுள்ளது. பக்கம் 129, விலை அணா 1.

இயேசுகிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் (**Jesus Christ and His Disciples**) இது இயேசுவினுடைய ஜீவிய சரித்திரத்தை நாற்பத்தெட்டு அதிகாரங்களில் விஸ்தரித்துக் கூறுகிறது. பற்பல வேதசாஸ்திர பண்டிதர்கள் இயேசுவின் சரித்திரத்தை ஆங்கில பாஷையில் எழுதி இருந்தாலும் இதுபோலும் புத்தகம் தமிழில் கிடைப்பது அரிது. இது கனம். கிலேற்றன் ஐயர் இயற்றியது. விலை அணா 3.

---

சென்னைக் கிறிஸ்தவ கல்வி அபிவிருத்திச் சங்கத்தார்

அச்சிட்ட புத்தகங்களில் சில

## THE TAMIL BIBLE DICTIONARY

By A. C. Clayton

# வேத அகராதி

அந்தந்தத் தேசங்களில் கண்டுபிடித்த கற்றூண்கள், செங்கற் பலகைகள், சாசனங்கள், அட்சராதிகள் இவற்றைக்கொண்டு அக்காலத்திருந்த ஜனங்களின் சரித்திரத்தை வேதசாஸ்திரிகள் அதிக திட்பநுட்பமாய் ஆராய்ந்தறிந்து எத்தியர் ஸ்தாபித்த ஊர்கள், பாபிலோனியர் ராஜாக்கள் கற்பித்த நியாயப்பிரமாணம், உயிர்த்தெழுதலைப்பற்றிய எகிப்தியரின் எண்ணம், அசீரியா ராஜாக்களின் அரமனைகள், யோசுவா ஜெயித்த ஜனங்கள், தேவாலயம், நமது ஆண்டவர் சந்தித்த ஊர்கள், பவுல் பிரயாணம் செய்த தேசங்கள், இன்னும் கணக்கற்ற எத்தனையோ காரியங்களைப்பற்றிய வேதப்பொருளை தெளிவாய் எழுதியிருக்கிறார்கள். இவர்கள் புதிதாய் எழுதின புத்தகங்களை உதவியாகக்கொண்டு தமிழில் ஒரு வேத அகராதியை சங். ஏ. ஸி. கிளேற்றன் எழுதியிருக்கிறார். இது நாலு புத்தகங்கள் உள்ளது. ஒவ்வொரு புத்தகத்துக்கு விலை அணா 8. இலங்கையில் விலை சதம் 50.

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA
Memorial Hall, P. O. Box 3, Madras